# அது சரி... அப்புறம்?



சிவசங்கரி

# 1



## அது சரி, அப்புறம்?

உறக்கம் கலைந்து விட்டது.

கண்களைத் திறக்காமல் அப்படியே படுத்து, எங்கோ உற்சாகமாய் கத்தும் அணிலின் குரலை, ஒலிக்கும் சைக்கிள் மணி சப்தத்தை, யார் வீட்டிலிருந்தோ எழும் குழந்தையின் அழுகையை, அம்மா பூஜையை முடித்து விட்டதற்கு அடையாளமாய் சன்னமாக நாசியில் ஏறிய ஊதுபத்தியின் வாசனையை அனுபவித்தபடி இருக்கையில், மனசு ரொம்ப சந்தோஷமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

இவற்றோடு, முதல்நாள் வேலையை ஸ்திரப்படுத்திக் கைக்கு வந்த கடிதமும்கூட இத்தனை சந்தோஷத்துக்கும் காரணம் என்பதை உணர்ந்தபோது, பெருமையாகவும் இருந்தது.

பின்னே?

அவனவன், அவளவள் - வருஷங்கள் இரண்டாகியும் இன்னும் வேலை நிரந்தரமாக்கப்படாமல், தற்காலிகப் பிரிவுக்குள் அடங்கி வேலைபார்க்கும்போது, இவளுக்கு மட்டும் டாண் என்று சரியாக ஒன்றரை

வருஷத்துக்குள் 'கன்ஃபர்ம்' ஆகிவிட்டது பெரிய சமாச்சாரம் இல்லையா?

மூன்றுமணி சுமாருக்கு பர்ஸனல் மானேஜர் கூப்பிட்டனுப்பியபோது கூட, கன்ஃபர்மேஷன் கடிதத்தைக் கையில் தர அழைக்கிறார் என்று வாஸ்தவமாய் எண்ணவில்லை.

"மானேஜ்மெண்டுக்கு உங்க வேலைல திருப்தி உண்டாயிருக்கு. மிஸ் நந்தினி... க்ளரிகல் டிபார்ட்மெண்ட்லேந்து 'டிக்கெட்டிங்' செக்ஷனுக்கு உங்களை மாத்தறதோட, வேலையும் கன்ஃபர்ம் பண்ணச் சொல்லி உத்தரவு போட்டிருக்காங்க! இந்தாங்க லெட்டர்... கங்க்ராட்ஸ்... அண்ட் ஆல் தி பெஸ்ட்!"

நந்தினி புரண்டு படுத்தாள்.

டிக்கெட்டிங் செக்ஷன்...

புன்சிரிப்பு மாறாத முகத்தோடு, பொறுப்பாக, பொறுமையாக வேலை செய்யத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இடம் தரும் செக்ஷன்...

மடிப்பு கலையாத புடவையில், சற்றே தூக்கலான கொண்டையுடன், தாழ்ந்த குரலில் பேசி, ஆயிரம் சந்தேகங்களுடன் எதிரில் அமர்ந்திருக்கும் வாடிக்கையாளரை திருப்தியுடன் அனுப்பும் ஜானா மாதிரி, இனிமேல் தானும் நடந்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணம் சந்தோஷத்தை அதிகமாக்க, நந்தினி கண்களைத் திறந்தாள்.

எழுந்தாள்.



படுக்கையைச் சுற்றி கட்டில் அடியில் தள்ளிவிட்டு, கலைந்திருந்த புடவையைச் சரிபண்ணிக்கொண்டு, பின் வராந்தாவுக்குப் போனாள்.

பிரஷ்ஷில் பேஸ்டை இழுத்த பின்னர், மொட்டை மாடிக்குச் சென்று சுவரில் சாய்ந்தவாறு பல் விளக்க ஆரம்பித்தாள்.

ராட்சஸக் குடையாய் உயர்ந்து கவிழ்ந்து, 'கொல்' லென்று பூத்திருந்த மாமரத்தின் பூக்கள், தரை பூராவும் வாரி இறைந்திருந்தன.

அந்தப் பூக்களில் நிறைந்திருந்த தேனை நாடி வரும் எறும்புக் கூட்டங்கள்...

துணி உலர்த்தவெனக் கட்டியிருந்த கம்பியில் அமர்ந்திருந்த அண்டங்காக்காய், வெகு கம்பீரமாக கழுத்தைச் சாய்த்து இவளை ஒன்றரைக் கண் பார்வையாய் பார்த்தது.

இன்னமும் சூரியன் பூரணமாய் பூமியை உதைத்துக் கொண்டு கிளம்பவில்லை என்பதால், காற்றில் குளுமை நிறைந்திருந்தது.

பூப்போட்ட ஆர்கெண்டி புடவை அணிந்து, சற்றே முன்னால் சாய்ந்து, தடிமனாய் கண்ணாடி, கையில் ப்ரீஃப் கேஸுடன் எதிரில் அமர்ந்திருக்கும் நபரிடம், 'எஸ் சார்... வாட் கான் ஐ டு ஃபார் யூ?' என்று சன்ன த்வனியில் புன்னகை மாறாமல் தான் கேட்பதை கற்பனை பண்ணிப் பார்க்க முடிந்தது.

மாருதி ட்ராவல்ஸில் வேலை என்றால் சும்மாவா?

இந்தியாவிலுள்ள அனைத்து பெரிய நகரங்களிலும் தன் காலை ஊன்றிக்கொண்டு பிரபலமாய் படர்ந்துவிட்ட ஸ்தாபனம் என்பதோடு, சம்பளம், உபரிச் சலுகைகள் தாராளமாகவே கொடுப்பார்கள் என்பதால், அதில் வேலைக்குச் சேருபவர்களிடையே போட்டி அதிகம்தான்.

இவள் எங்கே வேலை பார்க்கிறாள் என்று கேட்டு, பதில் கிடைத்ததும், கண்களை அகல விரிப்பார்கள்.

- மாருதி ட்ராவல்ஸ்லயா வேலை பார்க்கிறே? தேவலையேம்மா! - என்பார்கள்.

- அதுல வேலைபார்க்கற ப்யூனுக்குக்கூட, வருஷா வருஷம் குடும்பத்தோட இந்தியாவுல எங்க வேணா விமானத்துல போயிட்டுவர்ற சலுகை உண்டாமே, நிஜமா? - என்பார்கள்.

- ஏ.ஸி. ஆஃபீஸ்; உடம்பு வருத்திக்காம வேலை; எக்கச் சக்க சம்பளம்! ஹூம்... இருந்தா உங்களை மாதிரி இருக்கணும்! - என்பார்கள்.

இப்போது இவள் ஸ்திரப்படுத்தப்பட்டுவிட்டாள்; டிக்கெட்டிங் செக்ஷனுக்கு மாற்றப்பட்டுவிட்டாள்; இனி இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை இலவசமாக வெளிநாட்டுக்குச் செல்வதுகூட இவளுக்கு சாத்தியம்தான் என்றால், பொருமல்களும், ஆற்றாமையும் இன்னும் அதிகமாகத்தான்போகின்றான்.

வாயைக் கொப்பளித்து, தலைப்பில் முகத்தைத் துடைத்துக்கொண்டவளுக்கு, அங்கேயே ஒருபக்கமாய் ஸ்ருதிப் பெட்டியுடன் உட்கார்ந்து, அந்த காலைப்



பொழுதை அனுபவித்தபடி மோகன ராகத்தை ஆலாபனை செய்தால் எத்தனை சுகமாக இருக்கும் என்று தோன்றியது.

ஸ-ரி-க-ப-த-ஸ-

ஸ-த-ப-க-ரி-ஸ-

நன்னு பாலிம்ப?

மோக ராமா?

மயில்வாகனா?

மனசு கடைசி பாட்டுக்குப் பச்சைக்கொடி காட்டியது.

'மயில்வாகனா... வள்ளி மனமோகனா...'

பாபநாசம் சிவன் இயற்றிய அருமையான பாடல்.

அடுக்கடுக்காய் சங்கதிகள் எழுகையில் மோகன ராகம் குழைந்து, நெளிந்து, கைக்கொட்டி ஆர்ப்பரிப் பதில், பாடுபவரின், கேட்பவர்களின் நெஞ்சில் குதூகலம் அலை அலையாய் எழுந்து, சுழன்று, ஒருவித பரவசத்தை உண்டாக்கும்.

பாட வேண்டும் என்கிற நினைப்பு பரபரப்பைத் தர, நந்தினி உள்ளே சென்றாள்.

சமையல் கட்டில் எட்டிப்பார்த்து, "அம்மா.. காபி", என்று குரல்கொடுத்துவிட்டு, ஸ்ருதிப் பெட்டியை எடுக்கக் கூடத்துக்கு வந்தாள். ஜன்னல் விளிம்பில் புத்தகமும் கையுமாய் உட்கார்ந்திருந்த தங்கையைப் பார்த்ததும் ஏதோ நினைவுக்கு வர, நின்றாள்.

பத்தாவது படிக்கும் கல்பனாவுக்கு, இன்னும் எட்டு நாட்களில் பெரிய பரிட்சை ஆரம்பம்... நல்ல மதிப் பெண்கள் வாங்க வேண்டும் என்கிற ஆர்வத்தில் ராப்பகலாக கண்விழித்துப் படிக்கிறாள்... இவள் கவனம் வேறு எந்தவிதமாகவும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் அத்தனை பேரும் தீர்மானமாகச் செயல்படுவதில், பதி னைந்து நாட்களாய் வீட்டில் டி.வி.கூட வைப்பதில்லை.

இப்போது பாட உட்கார்ந்தால், புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, 'பூபாளம் பாடுக்கா... நீ பாடி ரொம்ப நாளாச்சு' என்று பக்கத்தில் வந்து அமர்ந்துகொள்வாள்.

பாட நினைத்த நினைப்பை மாற்றிக்கொண்டவள், தங்கையை ஏறிட்டுப் புன்னகைத்தாள்.

"என்ன படிக்கறே, கல்பனா?"

"எகனாமிக்ஸ்க்கா..."

"நிதானமா படி... சந்தேகம் வந்தா, கேளு..."

கால்நிமிடம் அப்படியே நின்றுவிட்டுத் திரும்பிய வளை, கல்பனா அழைத்தாள்.

"அக்கா..."

"ம்?"

"வேலை கன்ஃபர்ம் ஆனதுக்கு ட்ரீட் கிடை யாதாக்கா?"

நந்தினி சிரித்தாள்.

"நேத்து வர்றப்போ காட்பரீஸ் சாக்லெட் வாங் கிட்டு வந்தேனே, கல்பனா?"



"அவ்வளவுதானா?"

"வேற?"

"எனக்கு ஒரு ரிஸ்ட் வாட்ச் வேணுங்கா... என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் கட்டிக்கிட்டிருக்காங்க..."

"க்ரான்டெட்... வாங்கிட்டா போச்சு!"

கல்பனா ஜன்னலிலிருந்து குதித்து இவளிடம் ஓடி வந்தாள்.

"நிஜமாவாக்கா?"

"நிஜம்ம்மா... அடுத்த சம்பளம் வந்ததும், அப்பா பர்மிஷன் குடுத்தார்னா, கடைக்குப் போய் வாங்கிட லாம்..."

நியாயமான எந்தக் கோரிக்கையையும் அப்பா நிராகரிக்க மாட்டார் என்பதால், மகிழ்ச்சியுடன் கல்பனா அக்காவைக் தழுவிக் கொண்டாள். கன்னத்தில் முத்தமிட்டாள்.

"தாங்க்ஸ்க்கா..."

"என்ன கொஞ்சல், அக்கா, தங்கச்சி நடுவுல...?" காபியுடன் வந்து நின்ற அம்மா சிரிப்புடன் வினவ, கல்பனா அக்காவை விட்டுவிட்டு அம்மாவை நெருங்கி கட்டிக் கொண்டாள்.

"அடுத்த ஒண்ணாம் தேதி சம்பளம் வாங்கினதும், அக்கா எனக்கு ரிஸ்ட் வாட்ச் வாங்கித்தரேன்னு சொல்லி இருக்கும்மா..."

"ஏய்... ஏய்... வாட்ச் கிடைக்கப்போற சந்தோஷத்துல போட்டு என் கைய உலுக்காத... காபி சிந்திடப் போகுது... இந்தா நந்து, இத வாங்கு..."

அம்மாவின் சீண்டலும் தங்கையின் மகிழ்ச்சியும் ரசிக்கும்படியாக இருக்க, சிரிப்பு மாறாத முகத்துடன் நந்தினி காபியை வாங்கினாள். மெல்ல உறிஞ்சினாள்.

"சர்க்கரை போதுமா? சூடு சரியா இருக்கா?"

இதுதான் அம்மா...

நித்தமும், இத்தனை வருஷங்களாகப் பார்த்துப் பார்த்து அத்தனை காரியங்களைச் செய்பவளாக இருந்தும், கூடவே கரிசனத்துடன் 'சரியாக இருக்கிறதா?' என்ற கேள்வியைக் கேட்டு, இவர்கள் 'இருக்கிறது' என்று தலையசைத்தால்தான் திருப்தி.

காலையில் ஐந்தரைக்கெல்லாம் எழுந்திருக்கும் பழக்கம் அப்பாவுக்கு உண்டு என்பதால், நான்கரைக்கே எழுந்து டிகாக்ஷன் போட்டுவிட்டு, அப்பாவுக்கு தலையும் வேஷமுமாய் நின்றால் பிடிக்காது என்பதற்காக குளித்துத் தலை சீவி, பூ வைத்து, சாமி விளக்கை ஏற்றி, சரியாக ஐந்தரைக்குள் 'என்னங்க'... என்று சின்னதாய் குரல்கொடுத்து உறங்கும் அப்பாவை எழுப்பிவிட்டு, அவர் முகம் கழுவி வருவதற்குள் நுரைக்கும் காபி, உதட்டில் புன்னகையுடன் தயாராய் நிற்கும் அம்மா...

நினைவு தெரிந்த நாளாய் நித்தமும் இப்படி கணவனுக்காக உருகும் அம்மாவையும், 'ஹ, என் பொண்டாட்டி!' என்கிற அகம்பாவம் முகத்தில் வெளிப்படையாகத் தாண்டவமாடும் அப்பாவையும்தான் நந்தினி பார்த்துவருகிறாள்.



அப்பா, அம்மா இடையில் காணப்பட்ட அற்புதமான பிணைப்பு எப்போதும்போல இப்போதும், நன்கு மலர்ந்த மல்லிகைப் பூக்களை முகர்ந்துபார்த்த இன்பத்தைத் தர, காபி டம்பளரும் கையுமாய் வாசல் அறையில் இருந்த அப்பாவைத் தேடிப் போனாள்.

பேப்பர், சாய்வு நாற்காலி, அப்பா...

தினமும் காலை ஆறு மணி அளவில் காணும் காட்சி தான் என்றாலும், பார்க்கப் பார்க்க அலுக்காத காட்சி.

அப்பா நல்ல உயரம். அதற்கு ஏற்ற பருமனும்கூட முறுக்கிவிடப்பட்ட மீசை. சட்டென்று புதுசாய் பார்க்கிறவர்களிடம் ஒரு பயத்தையே தோற்றுவிக்கும்.

ஆனால், ஐந்து நிமிஷம் பழகினால், அப்பாவின் மென்மையான குணம் உடனே புரிந்துபோய்விடும்.

சிரிக்கத் தயாராக இருக்கும் உதடுகள்... அவை சிரிக்கும் போது தாங்களும் சிரிப்பதை உணர்த்த சட்டென்று வெளிச்சம்போட்டுக்கொள்ளும் கண்கள்... இரண்டுமாகச் சேர்ந்து அத்தனாம் பெரிய உருவத்தையும், அடர்த்தியான முரட்டு மீசையையும் நொடிப் பொழுதில் ஒன்றுமே இல்லாமல் ஆக்கி, 'இந்த மனிதரை நெருங்குவது சுலபம், இவர் வெகுளி, நல்ல மனசுக்காரர்' என்பதை அப்பட்டமாகப் பறைசாற்றுவதில் வெற்றி காண்பது வேடிக்கையான சமாச்சாரம்தான்.

"என்னம்மா, காபி சாப்பிட்டியா?"

"சாப்பிட்டுக்கிட்டேயிருக்கேன்..."

நந்தினி அப்பா பக்கத்தில் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

"அப்பா..."

"என்னம்மா?"

"இன்னிக்கு எனக்கு நூறு ரூபா போல வேணும்பா... ஆபீஸ்ல எல்லாரும் ட்ரீட் குடுக்கணும்னு சொல்லி இருக்காங்க..."

குஞ்சிதபாதம் சிரித்தார்.

"எடுத்துக்க, நந்து-இதுக்கென்ன இத்தன யோசனை?"

"அப்புறம்... வந்துப்பா..."

பேப்பரை மடித்துவிட்டு குஞ்சிதபாதம் முன்னால் சாய்ந்தார்.

"சொல்லும்மா..."

"கல்பனா ரொம்ப நாளாவே ரிஸ்ட் வாட்ச் வேணும்னு ஆசைப்படறா... இப்பக்கூட கேட்டா..."

"நல்லபடியா பரிட்சைகளை எழுதட்டும்... பாக்கலாம்..."

"இல்லேப்பா... வந்து உங்களைக் கேட்டுக்கிட்டு, வர்ற ஒண்ணாம் தேதி வாங்கித்தரேன்னு..."

வாக்கியத்தை முடிக்காமல் நந்தினி நிறுத்த, தன் மாமூல் சிரிப்பொன்றை குஞ்சிதபாதம் சிரித்தார்.

"அட ராமா - இதச் சொல்லவா இத்தனை தயக்கம்? யோசிக்காம வார்த்தை குடுக்கறவ நீ இல்லேனு



எனக்குத் தெரியும், நந்து... சரி, வாங்கிடுவோம், அப்பறம்?"

இதுதான் அப்பா...

எதில் பிடிவாதம் வேண்டும், எதில் வேண்டாம் என்று தெளிவாகப் புரிந்தவர்; எப்போது விட்டுக் கொடுக்க வேண்டும், எப்போது வேண்டாம் என்று புரிந்து செயல்புரிபவர். 'உனக்குத் தெரியாதா? உன் பொறுப்பு, உனக்கில்லாமலா?' என்று கேட்கவேண்டிய விதமாய் கேட்டு, அடுத்த முறை இன்னும் இன்னும் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும் என்கிற தவிப்பை உண்டாக்கிவிடுபவர். ஆனால், தக்க தருணத்தில் தட்டிக்கொடுக்கவும், தழைந்துபோகவும் தயங்காதவர்.

'அதிர்ந்து பேசுவதும், அனாவசியமாய் முகம் சுளிப்பதும், குற்றம் காணுவதும் உன்னால் இயலாத விஷயங்களாய் இருக்கின்றனவே, இப்படி இருப்பது உனக்கு எப்படி சாத்தியமாகிறது?' என்று ஜானாவும் மற்ற நண்பர்களும் அடிக்கடி இவளைக் கேட்கும் போதெல்லாம், இவள் தன்னைப் பெற்றவர்களைத்தான் நினைத்துக்கொள்வாள்.

அப்பாவும், அம்மாவும் இப்படி இயல்பாக அன்யோன்னியம், அன்பு, கரிசனம் நிறைந்தவர்களாக இருப்பதால்தான், எங்களாலும் அவர்கள் அடிச்சுவட்டில் செல்ல முடிகிறதோ?

ட்ரும்... ட்ரும்... ட்ரும்... ட்ரும்...

"நல்ல காலம் வருது... நல்ல காலம் வருது..."

ட்ரும்... ட்ரும்... ட்ரும்... ட்ரும்...

நந்தினி சட்டென்று கலைந்தாள்.

எழுந்து வராந்தா சுவரில் சாய்ந்துகொண்டு பார்வையை வெளியே வீசினபோது, பக்கத்து வீட்டிலிருந்து இவர்கள் வீட்டை நோக்கி ஒரு பூம்பூம் மாட்டுக்காரர் வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

குட்டையான மாடு.

கலர்கலராய் துணிகள்.

கொம்பில் பித்தளைக் கொப்பிகள்.

கழுத்தில் சலங்கை, கறுப்புக் கயிறு.

மாட்டுக்காரர் கேள்வி கேட்டு மேளத்தை வாசிக்க, மாடு தப்பாமல் சலங்கைகள் சப்திக்க தலையை மேலும் கிழுமாய் ஆட்டியது.

இவள் சுவாரஸ்யமாகப் பார்ப்பதைப் பார்த்த மாட்டுக்காரர் தனி உற்சாகத்துடன், "அம்மாவுக்கு நல்ல சேதி வருதா!" என்று கேட்டு மேளத்தை ஓசைப்படுத்த, எதையோ புரிந்துகொண்ட தினுசில் மாடும் வேக வேகமாய் தலையை ஆட்டி ஆமோதித்தது.

"நாலணா காசைக் கொண்டு குடுத்துட்டு வா, நந்து..." அப்பாவின் பேச்சை ஏற்று நந்தினி காலி டம்ளருடன் சமையல்கட்டுக்கு வந்தாள்.

காய்கறி வாங்கவென் அம்மா எப்போதும் கிண்ணத்தில் வைத்திருக்கும் சில்லறையிலிருந்து இருபத்தைந்து பைசாவையும் ட்ரம்மிலிருந்து ஒருபிடி அரிசியையும் எடுத்து இரண்டடி வைத்தவள் நின்று,



பிளாஸ்டிக் கூடையிலிருந்த வாழைப்பழச் சீப்பிலிருந்து இரண்டை பிய்த்துக்கொண்டு கீழே போனாள்.

காசையும் அரிசியையும் மாட்டுக்காரனிடம் கொடுத்து, பழத்தை மாடு தின்னும்வரை கிட்ட நின்று, "அம்மாவுக்கு ரொம்ப சீக்கிரம் நல்ல சேதி ஒண்ணு வரப்போகுதா... தங்கமான சேதி மாப்பிள்ளை ஊட்டுலேந்து வரப்போகுதா... சொல்லு... நல்லா தலையாட்டிச் சொல்லு..." என்று பலக்க மாட்டுக்காரர் கூறி, மேளத்தை அடித்ததையும், பழம் கிடைத்த குஷியில் மாடும் படுவேகத்துடன் தலை ஆட்டியதையும் நின்று ரசித்து, அவர்கள் எதிர்வீட்டைப் பார்க்க நடந்த பின்னர், மாடிக்குப் போகப் படிகளில் கால்களை வைத்தாள்.

நான்கு படிகளை ஏறியிருப்பாள்...

காலைப் பொழுதின் அமைதியைக் கிழித்துக்கொண்டு நாராசமாய் கீழ்வீட்டுக்காரம்மாவின் குரல் வெளிப்பட்டது.

"என்னது? காபியா? ஆமா, அதுக்குக் குறைச்சல் இல்லே! வேளாவேளைக்கு கொட்டிக்கறதைத் தவிர வேற என்ன வேலை உருப்படியா பண்ணறீங்க? காய் வாங்கிட்டு வரச்சொன்னா சொத்தையும், சொள்ளையுமா, ஏமாந்த சோணகிரி நாந்தான்னு எழுதி ஒட்டிக்கிட்டு வாங்கி வரவேண்டியது! நேத்து வாங்கிக்கிட்டுவந்த கத்திரிக்காயிலே பாதிக்கு மேல புழு... மளிகை சாமான் வாங்கிட்டுவரப்போ, எங்க பராக்கு பார்த்துகிட்டு நிப்பீங்களோ, எடைல நூறு, ஐம்பது குறைஞ்சிடும்! வீட்டு வேலைதான் இப்படின்னா, ஆபீஸ்ல அதுக்கு மேல... உங்களோட சேர்ந்தவங்க எல்லாம்..."

அதற்கு மேல் கேட்கப் பிடிக்காத மாதிரி இரண்டிரண்டாகப் படிகளைத் கடந்து நந்தினி மேலே வந்தாள்.

என்ன பெண்மணி இவர்?

பொழுது விடிந்து பொழுது போனால் புருஷனை அப்படி வாட்டிக்கொண்டே இருப்பது, இவர் மனசுக்கே அசிங்கமாகப் படவில்லை?

வெளியில் போய் வேலை பாத்து, சம்பாதித்து, குடும்பம் கௌரவமாக நடக்க உதவும் ஆண்மகனை, இப்படி மரியாதையில்லாமல் நடத்துவது, இவருக்கே தவறாகத் தோன்றவில்லை?

ச்சே...

இந்த மாதிரியும் கணவன் மனைவி இருக்கிறார்களே... அவர்கள் நடத்துவதற்கும் பெயர் தாம்பத்தியம் என்பது தானா? - என்ற கேள்வி சன்னமாகக் கசப்பையும் கோபத்தையும் உண்டாக்க, அதைப் போக்க, தன்னைப் பெற்றவர்கள் பற்றியும், அவர்கள் வாழும் இனிமையான, அழகான வாழ்க்கை பற்றியும் வலுக்கட்டாயமாக நினைக்க முற்பட்டவள், உள்ளே வந்து மாற்றுடை, துண்டை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனாள்.





# 2

புடவையில் கஞ்சி கொஞ்சம் தூக்கலாக இருந்தது.

வாங்கிக்கொண்ட ஐம்பது பைசா காசுக்கு வஞ்சனையில்லாமல் லாண்டரிக்காரர் கஞ்சியை அள்ளிவிட்டிருந்ததில், மடிப்புகள் இயல்பாக விழாமல் விறைத்துக் கொண்டு நின்றன.

கொசுவத்தை மேலே வலக்கையால் தூக்கிப் பிடித்து, இடக்கையை அதன் நீளத்தோடு சரித்து மடிப்புக்களை நீவி ஒழுங்குபடுத்திய பின், வயிற்றை லேசாக எக்கிக்கொண்டு செருகினாள்.

மேலாக்கை திட்டமாக கரை தெரியும்படி சரி செய்த கையோடு, பின்பக்கமாய் 'புஸ்' ஸென்று தூக்கிக் கொண்டு நின்ற புடவையை கீழே இழுத்துவிட்டாள்.

இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்து திருப்தி உண்டானதும், எந்த நெரிசலிலும், எந்த அடிபிடிக் கூட்டத்திலும், கட்டிய புடவை உடுத்தியமேனிக்கு இருக்கவேண்டி, மேல் கொசுவத்தில் ஒரு நீள சேஃப்டி பின்னைக் குத்தினாள்.

ஆள்காட்டி விரலில் பின்னின் முனை ஏறிவிடாமல் கவனத்துடன் குத்துகையில், சென்ற மாசம் கமலிக்கு உண்டான அனுபவம் சட்டென்று நினைவுக்கு வந்தது.

பஸ் வந்து நின்றதும் முண்டிக்கொண்டு, ஆண் பெண் என்று பாராமல் ஏற முற்பட்டதில், யாருடைய

கால் அடியிலோ தழைய உடுத்திய புடவைக் கொசுவம் சிக்கிக் கொண்டுவிட, அதை உணராமல் பஸ்ஸில் ஏறுவதே குறியாய் கமலி படிகளில் ஏற, நைலான் புடவை, வழுக்கலுக்குக் கேட்க வேண்டுமா? கண் மூடித் திறக்கும் நாழிகையில் மேலாக்கைத் தவிர பாக்கி புடவை பூராவும் சரசரவென்று காலடியில் அவிழ்ந்து விழ... இடுப்புக்குக் கீழ் உள்பாவாடை, மேலே அரைகுறைப் புடவை என்று அவள் நின்ற கோலமும், தவித்த தவிப்பும்... எல்லாம் அரை நிமிட காலத்துக்குத்தான் என்றாலும், ச்சே, அவமானம் இல்லையா?

ஏற்கெனவே பக்கப்பதிய கொசுவத்தில் ஒன்று, தோள் பட்டை மேலாக்கில் ஒன்று என்ற கணக்கில் தப்பாமல் பின்களைக் குத்திக்கொள்ளும் வழக்கம் நந்தினிக்கு உண்டு தான் என்றாலும், அன்றிலிருந்து ஒரு தடவைக்கு இரண்டு முறை இடுப்பில் விரலை நகர்த்தி, பின் சரியாக இருக்கிறதா என்று கவனிக்கும் பயம் அதிகமாகியிருக்கிறது.

பொது இடங்களில், நாலு ஆண்கள் பார்க்கும், நிற்கும், பழகும் சந்தர்ப்பங்களில், பெண்கள் கூடுதலான பொறுப்புடன் நடந்து கொள்வதுதானே சிறப்பு? எல்லாவற்றிலும் நிதானம், கவனத்துடன் செயல்படாமல் இருந்துவிட்டு, அந்த ஆண் சுத்த மோசம், முறைக்கிறான்; இந்த ஆண் பார்வையே நன்றாக இல்லை - என்று அங்கலாய்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

புடவையை உடுத்திக்கொண்டவள், தலை முடியை அவிழ்த்து இரண்டு தரம் சீவி, ரப்பர் பேண்டை மாட்டினாள்.



நான்குமாதம் முன்பு வரையிலும், இடுப்பைத் தொட்டுக் கொண்டு தொங்கின முடியை தோள் பட்டைக்கு சற்று தழைய வெட்டிக்கொள்ள, முதலில் அம்மாவும் அப்பாவும் சம்மதிக்கவில்லைதான்.

ஆனால், ஒரு வாரம் போல விடாமல் கெஞ்சி எப்படியோ நந்தினி நினைத்ததைச் சாதித்துக்கொண்டாள்.

- நுனியெல்லாம் கூழை பாய்ஞ்சிபோயிருக்கு... எலி வால் போல அசிங்கமா இருக்கு... ப்ளீஸ்ப்பா...

- டிக்கெட்டிங் செக்ஷன்ல மத்தவங்க எல்லாம் கொண்டை போட்டுக்கறாங்க... எனக்குக் கொண்டை போட விருப்பம் இல்லே... தோள்பட்டையோட வெட்டி, ரப்பர் பேண்ட் போட்டுக்கறேன்... தயவுபண்ணி சரின்னு சொல்லுங்கப்பா...

- பெங்களூர்ல இருக்கற அன்னம்மாகூட இப்படித் தான் வெட்டிக்கிட்டு இருக்கா... தினமும் நாலு தரம் ஜடைபோடற தொந்தரவு இல்லே, புரிஞ்சிக்கங்கப்பா...

அம்மாவின் அண்ணா பெண்ணை உதாரணம் காட்டியும், அவ்வப்போது விடாமல் தழைந்துபோய் கெஞ்சியும் நந்தினி வேண்டியதற்கு, பலன் இல்லாமல் போகவில்லை.

"என்னமோ ஆசைப்படறா... சரினு சொல்லி விட்டுப் போங்க..." என்று அம்மாவே சிபாரிசு செய்ததும், "சரி, போ... உன்னிஷ்டம்!" என்றார் அப்பா.

தோள்பட்டையோடு அடர்த்தியான கொத்து மல்லிக்கட்டாய் தொங்கின முடியும், திட்டமான முக ஒப்பனையும், எளிமையான புடவையுமாய் வேலைக்குப்

போக ஆரம்பித்த பிறகு, தன் கவர்ச்சி கண்ணியமான முறையில் கூடிவிட்டதாகவே நந்தினிக்குத் தோன்றியது.

ஆள் பாதி, அலங்காரம் பாதி என்று சும்மாவா சொன்னார்கள்!

கச்சிதமாய், நமக்குப் பொருந்துகிற விதமாய் காட்சியளிப்பதோடு, நடந்துகொள்கிற பக்குவத்தோடு நடந்துகொண்டால், அடுத்தவரிடமிருந்து மரியாதையும், மதிப்பும், கூடவே பாராட்டும் தன்னால் கிடைக்காதா?

ஏன் கிடைக்காமல்...?

கிட்டத்தட்ட முப்பது ஆண்கள் ஒன்றாக வேலை செய்யும் அலுவலகத்தில், இந்த இரண்டு வருடங்களாய் ஒரு அசிங்கமான, கசப்பான, தரக்குறைவான அனுபவமும் கிட்டவில்லை என்பது நிஜம்தானே?

மரியாதையைக் கொடுத்தால், பதிலுக்கு மரியாதை கிடைக்கிறது. நாம் கண்ணியமாக நடந்துகொண்டால், நாம் பழகுபவரும், அது ஆண், பெண் எவராக இருப்பினும், தானே தன் பங்குக்குக் கண்ணியமாக நடந்து கொள்கிறார்... விஷயம் இவ்வளவுதான்!

**த**னக்குத்தானே யோசனை பண்ணிச் சில கணிப்புக் களை செய்தவாறு தயாராகி, கைப்பையுடன் கூடத்துக்கு வந்தவள், அம்மா அங்கு ஏதோ கணக்கில் மும்முரமாக மூழ்கியிருப்பதைப் பார்த்துக் கிட்டத்தில் சென்றாள்.

"என்னம்மா செஞ்சிட்டிருக்கீங்க?"

"பால் கணக்கைக் கூட்டிக்கிட்டிருக்கேன். நாளைக்கு முதல் தேதி இல்லியா?"



"குடுங்க... நா கூட்டிதரேன்..."

"உனக்கு நாழி ஆகலை...?"

நந்தினி மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தாள்.

எட்டு இருபது...

இவள் போகவேண்டிய பஸ் எட்டு நாற்பதுக்குத் தான் வரும்.

"நேரம் இருக்கு... இன்னிக்கு சீக்கிரமாவே ரெடியா யிட்டேன்.... குடுங்க..."

அம்மா புத்தகத்தை நீட்டிவிட்டு சமையலறையைப் பார்க்க நடக்க, நந்தினி அங்கேயே ஒரு நாற்காலியில் அமர்ந்து கணக்கைக் கூட்டினாள்.

ஒரு நாளைக்கு ஒன்றரை லிட்டர் மேனிக்கு, முப்பது நாட்களுக்கு... ஒன்றரை இன்ட்டு முப்பது... தட் ஈஸ் நாற்பத்தி ஐந்து. லிட்டர் ரூபாய் நான்கு என்றால்? நாலைந்து இருபது, சைபர், பாக்கி இரண்டு, நா நான்கு பதினாறு... ப்ளஸ் இரண்டு, பதினெட்டு.... உபரியாக வாங்கியது ஆறு லிட்டர்... அது இருபத்தி நான்கு... ஆக, இருநூற்றி நான்கா?

அடுத்து பூக்கணக்கையும் கூட்டி எத்தனை ரூபாய் என்று பார்த்தவள், இரண்டும் தனித்தனியாய் எவ்வளவு என்று குறித்துவிட்டு அம்மாவைத் தேடிப் போனாள்.

கல்லுரல் முன் அமர்ந்து பங்கஜம், அதில் எதையோ இடிக்க ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

"என்னம்மா?"

"இட்லி மிளகாய்த்தூள் இல்லே... வறுத்து வெச்சிருக்கேன்... இடிச்சிட்டா, ஒரு வேலை ஆச்சு..."

அம்மியையும், உரலையும் கட்டிக்கொண்டு அம்மா இப்படி மாரடிப்பது, ரொம்ப நாட்களாகவே இவளுக்கு உறுத்தும் சமாச்சாரம்...

நாளைக்கு முதல் தேதி... சம்பளம் வந்த கையோடு வினாயகத்திடம் சொல்லி, ஒரு ஸுமித் மிக்ஸி வாங்கி விட்டால் என்ன? வினாயகத்தின் தம்பிக்கு, ஸுமித் தள்ளுபடி விலையில் கிடைக்கும்.

இதற்கு அப்பாவும், அம்மாவும் ஒப்புக் கொள்வார்களா?

"கன்ஃபர்ம் ஆகி, மாசம் ஆயிரத்து நூறு வருதுனு பேரு... ஆனா முழுசா ஒரு மாசம் கூட அந்தப் பணத்தை பாங்க்ல போட விடாம, மாசாமாசம் ஏதாவது செலவு வந்துடுது! போன மாசம் கூடத்துக்கு ஃபேன், அதுக்கும் முன்னால எங்களுக்கெல்லாம் புதுத்துணி, அதுக்கும் முந்தின மாசம் காஸ் அடுப்பு... இப்படி நாங்களே உன் சம்பளத்தைத் தின்னுத் தீர்த்திட்டா, ஒரு நகை கிகை பண்ணி உனக்குனு வைக்க வேணாமா?"

எப்போதும் தீவிரமாக ஆட்சேபிக்கும் அம்மா, நாளைக்கு ஸுமித் வாங்க முற்படும்போதும் முட்டுக் கட்டை போடுவாள். நைஸாக சமாளித்து எப்படியாவது வாங்கிவிட வேண்டும். 'ப்ளீஸ்ம்மா... இதுதான் கடைசி, அப்புறம் உங்க இஷ்டம் போல செய்யுங்க... ப்ளீஸ்' என்று கெஞ்சி, சம்மதிக்க வைக்க வேண்டும்...



எடுத்த தீர்மானம் நிறைவைத் தர, "போயிட்டு வரேம்மா..." என்று கிளம்பினாள்.

பையை எடுத்துக்கொண்டு நிமிர்ந்த நிமிஷத்தில், "உங்களுக்குத் தபால் வந்திருக்கு..." என்றபடி கீழ்விட்டுப் பெண் நாராயணி மஞ்சள் குங்குமம் தடவின இன்லாண்ட் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

"யார் கிட்டேயிருந்து தபால், நந்து?"

நந்தினி கடிதத்தைப் புரட்டி பின்விலாசத்தைப் படித்தாள்.

"அப்பாக்கும்மா... யாரோ கைலாசம், திருச்சி லேந்து..."

ஆஃபீஸுக்குப் புறப்பட உள்ளறையில் உடை மாற்றிக் கொண்டிருந்த குஞ்சிபாதம், சட்டை பட்டனைப் போடாமல் அவசரமாய் வெளியில் வந்தார்.

"திருச்சியா? கைலாசமா? குடு..."

தபாலைக் கையில் வாங்கியவர் முகத்தில், சட்டென்று சந்தோஷம் பூத்தது.

பிரித்துப் பார்க்கும் முன்னரே, "ஜாதகம் பொருந்தி இருக்குனு திருச்சி வரனுக்கு எழுதிப் போட்டோம் இல்லே, அவங்கதான், பங்கஜம்..." என்றவர், ஆர்வத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டு நிமிர்ந்த போது, மகிழ்ச்சி இன்னும் கூடிப்போயிருந்தது.

"வர்ற புதன்கிழமை பெண்பாக்க வராங்களாம்... பிள்ளைக்கு அப்பா எழுதியிருக்காரு..."

பங்கஜம் இரண்டு கரங்களையும் கூப்பிக் கொண்டாள்.

"இந்த எடமாவது நல்ல விதமா அமையணும்... இந்த முன்ன வந்தவங்க மாதிரி அதக் கொண்டா, இதக் கொண்டானு கேட்டு விலகிப் போகாம இதுவாவது பெண்ணைப் பிடிச்சு, பேச்சுவார்த்தை தகையணும்... நல்லபடியா முடிஞ்சிருச்சின்னா, வடபழனி முருகனுக்கு பால் அபிஷேகம் செய்யறதா வேண்டிகிட்டிருக்கேன்... அந்த முருகன்தான் கருணை காட்டணும்..."

என்னமோ தனக்கு முப்பது வயசாகிவிட்டது போலவும், இதுவரை பையன்கள் எக்கச்சக்கத்துக்கு வந்து, 'வேண்டாம் இந்தப் பெண்' என்று ஒதுக்கி விட்டுப் போனது போலவும் அம்மா வருத்தப்படுவது சிரிப்பை உண்டாக்க, "நாழியாச்சு, நா கிளம்பறேன்..." என்றவாறு நந்தினி புறப்பட்டாள்.

"புதன் கிழமை அரைநாள் லீவு போட்டுடும்மா... மானேஜர்கிட்ட இன்னிக்கே விவரத்தைச் சொல்லி பர்மிஷன் வாங்கிடு..."

படி வரைக்கும் வந்து அம்மா பேசினதற்கு, சரி, சரி என்று தலையாட்டியவள், கீழே வந்து தெருவில் நடந்தாள்.

**மா**டு ஒன்று, அரசியல் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றின போஸ்டரை சுவரிலிருந்து பிய்த்து, சுவரஸ்யமாகத் தின்று கொண்டிருந்தது.

குளித்து மாமாங்கம் ஆன தினுசில் தலையிலிருந்து கால்வரை அழுக்காக இருந்த சின்னப்பையன் ஒருவன், அவனைவிடப் பெரியதாக, அழுக்காக இருந்த கோணியை தோளில் தொங்கவிட்டுக்கொண்டு, குனிந்து ஆங்காங்கே கிடந்த பேப்பர் குப்பைகளைப் பொறுக்கி சாக்கில் திணித்துக்கொண்டு நடந்தான்.



சிக்குப்பிடித்த பரட்டைத் தலையும், கிழிந்த நிஜாருமாய் தன்னைத் தாண்டிச்சென்ற அச்சிறுவனைப் பார்க்கையில், நந்தினிக்கு வருத்தமாக இருந்தது.

இவன் ஒரு தரமாவது, உட்கார்ந்து வயிறு நிறைய சாப்பிட்டிருப்பானோ?

இரண்டு வாளி வெந்நீரை வைத்துக்கொண்டு சோப்பு நுரைக்க, அழுக்குப் போகக் குளித்திருப்பானோ?

பஸ் ஸ்டாண்டில் வழக்கமான கூட்டம் இருந்தது.

தினமும் ஒரே பஸ்ஸில் பயணம் செய்யும் காரணமாய் கொஞ்சம் பரிச்சயமாகியிருந்த நடுத்தர வயதுப் பெண்மணியை ஏறிட்டுப் புன்னகைத்தவள், சற்று தள்ளி நின்றுகொண்டாள்.

பஸ்ஸ்டாண்டில் சுற்றுப்புறத்தை மறந்து அரட்டை அடிப்பது, சிரிப்பது எல்லாம் நந்தினிக்கு அவ்வளவாகப் பிடிக்காத சமாச்சாரங்கள்.

இன்றைக்கு சாதாரணமாய் ஒரு வார்த்தை பேசப் போக, நாளைக்கு அதுவே பத்தாகி வளரும் இவர், அவர் என்று சங்கிலித் தொடராக ஒருவரிடமிருந்து அடுத்தவருக்கு அறிமுகம் ஆகி, வேண்டாத வம்புப் பேச்சு எழ இந்த அனாவசியத் தொடர்புகளே காரணமாகிவிடும்... எதற்கு வம்பு?

பஸ் வருகிறதா என்று ஓரடி முன்னால் வந்து சாலையைப் பார்த்தபோது, அவர்கள் நந்தினியின் பார்வையில் விழுந்தார்கள்.

கொஞ்சம் தள்ளி இருந்த சூப்பர் மார்க்கெட்டிலிருந்து வெளியே வந்த வெஸ்பா ஸ்கூட்டரில், இளசாக ஒரு ஆண், அவனையும்விட இளசாக அவன் இடுப்பை அணைத்தபடி ஒரு மங்கை.

இவன் என்னமோ கூற அவள் சிரிக்க, இடுப்பை இன்னும் இறுக்கமாகப் பற்றியதோடு, தோள்மேலும் சாய...

திடுமென நந்தினிக்கு சற்றுமுன் வந்த கடிதத்தின் நினைப்பு எழுந்தது.

வருகிற புதன்கிழமை பெண்பார்க்க வருகிறோம்...

நாளை மறுநாள்...

பத்து நாட்கள் முன்பு அந்த வரனைப்பற்றி அப்பா அம்மாவிடம் பேசியதை இவளும் கேட்கவே செய்தாள்.

"ஒரே பிள்ளை, பேரு மோகன், மூணு அக்காக்காரிங்க... எல்லாருக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. வக்கீலுக்குப் படிச்சிட்டு திருச்சியிலேயே ஒரு வக்கீல் கிட்ட ஜூனியரா இருக்காராம். அப்பா அரசாங்க உத்தியோகத்துல இருந்து ரிடையர் ஆனவர். பிக்கல் பிடுங்கல் இருக்காது. ஜாதகம் நல்லா பொருந்தியிருக்கு! வசதிலே நமக்கு ஏத்தவங்கதான். நாம முயற்சிக்கறதை முயற்சிப் போம்..."

மோகன்...



கறுப்புக் கோட்டு, வெள்ளை பாண்ட், காலருடன் 'மைலார்ட்' என்று கம்பீரக் குரலில் பேசும் முகமற்ற ஒரு உருவத்தை நந்தினியால் கற்பனை பண்ண முடிந்தது.

அவர் எப்படிப்பட்டவர்?

போன வருஷம் வந்த இரண்டு வரன்களைப்போல, 'பெண் பிடிச்சிருக்கு.. ஆனா, கையில இருபதாயிரம் குடுங்க, முப்பது பவுன் போடுங்க' என்று இவர்கள் கனவிலும் எண்ணமுடியாத அளவுக்குச் சீர்வரிசையை கேட்டு, விலகிப் போவாரா? இல்லை...?

மோகன்...

வக்கீல்...

சற்று முன் பார்த்த வெஸ்பா ஸ்கூட்டர் ஜோடி மாதிரி, கறுப்புக் கோட்டு அணிந்து மோகன் முன்னால் அமர்ந்து ஓட்டுவது போலவும், தான் அவர் தோளில் கை வைத்துச் சிரித்தபடி பயணிப்பது போலவும் நினைத்துப் பார்த்த நொடியில், பஸ் ஓசையுடன் வந்து நிற்க, சின்னப் பெண் மாதிரி தான் இப்படி அசட்டுத்தனமாய் கற்பனை பண்ணுவதை நினைத்து வெட்கப்பட்டுக்கொண்டே, ஒரு பக்கமாய் நகர்ந்து அதிகம் இடிபடாமல் பஸ்ஸில் ஏற நந்தினி முயற்சித்தாள்.

# 3



“சாப்பிடப் போலாமா? நீ ரெடியா?”

“இதோ ஒரு நிமிஷம்... மிஸ்டர் ஜனார்தனோட லண்டன் நியூயார்க் டிக்கெட் இன்னும் கன்ஃபர்ம் ஆகல... அது எந்த அளவுல இருக்குனு கேட்டுட்டு வந்திடறேன்... மூணு மணிக்கு மனுஷன் டிக்கெட் வாங்க வரேன்னு சொல்லி இருக்கார்.”

இரண்டு நிமிஷங்களில் செய்துகொண்டிருந்த வேலையை முடித்து, மேஜை இழுப்பறைகளைப் பூட்டி, “வெங்கட், நாங்க சாப்பிடப் போறோம்...” என்று அடுத்த டேபிள்காரரிடம் கூறிவிட்டு, ஜானா எழுந்தாள்.

நித்தமும் அவள், நந்தினி, அக்கௌண்ட்ஸ் செக்ஷனில் வேலைபார்க்கும் வேணி, மூவரும் ஒன்றாகத் தான் சாப்பிடப் போவார்கள்.

இரண்டு மணி சுமாருக்கு சீட்டை விட்டால், முக்கால் மணிநேரம் நிதானமாய் அரட்டை அடித்துக் கொண்டு சாப்பிட...

அதுவரைக்கும், விவரம் தெரிந்த எந்த வாடிக்கையாளரும் வரமாட்டார். புதுசாய் வந்தால், வெங்கட் அல்லது சாக்கோ பார்த்துக்கொள்வார்கள்.

அடுத்த அறையில் இருந்த வேணி, இவர்களோடு சேர்ந்துகொண்டதும், மூவருமாய் சாப்பாட்டறையை



அடைந்து தாங்கள் வழக்கமாக உட்காரும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்தார்கள்.

பதினைந்தடிக்கு பன்னிரண்டு அடி அறை அது. நான்கு பேர்கள் உட்கார்ந்து சாப்பிட வசதியாய், குட்டிக் குட்டியாய் நான்கு மேஜைகள். ஓரமாய் கை அலம்ப பேஸின். எதிர்ப்பக்கத்தில் நீள மேஜை. அதன் மேல் காஸ் அடுப்பு, ஹாட் கேஸ். அதுதான் நாயரின் சாம்ராஜ்ஜியம், டீ, காபி, போர்ன்விட்டா கலந்து தருவதுடன், சமுசா, சாண்ட்விச், ஸ்வீட், கேக் என்று ருசியான பதார்த்தங்களாகத் தேர்ந்தெடுத்து வெளியிலிருந்து வாங்கி வினியோகிப்பார். காபியும், சிற்றுண்டியும் தான் என்பதால், டைனிங் ரூம் கசமுசாவென்று ஈ மொய்க்க இல்லாமல், எப்போதும் சுத்தமாய் பளிச்சென்று இருக்கும். கூடவே, சோழிப்பல் தெரிய சிரிக்கும் சிரிப்பு மாறாமல் நிற்கும் நாயர்...

இவர்கள் மாமூலாக இரண்டு மணிக்கு வந்துவிடுவார்கள் என்பதால், ஒன்று ஐம்பதிலிருந்து இவர்கள் மேஜையில் யாராவது உட்கார்ந்திருந்தால், ‘ஆவட்டும் சார்... அம்மா எல்லாம் வந்திடுவாங்க, சார்’ என்று அவசரப்படுத்தி எழுப்பிவிட்டு, தம்ளர்களில் தண்ணீர், சாப்பிட தட்டுகள், கைத்துடைக்க பேப்பர் நாப்கின், எல்லாம் தயாராக வைத்திருப்பார்...

“இன்னிக்கு என்ன, நாயர், வச்சிருக்கீங்க, ஸ்பெஷலா?”

“கீரை வடைம்மா... ஹாட் கேஸ்ல உங்களுக்காக சூடா வெச்சிருக்கேன்...”

“வெரிகுட்! கொண்டாங்க... வீட்லேந்து காரியர் வந்திருச்சா?”

"இதோ" பதில் கூறிய நாயர் ஜானாவின் காரியரை மேஜை மேல் வைத்துவிட்டு, மூன்று தட்டுகளில் வடைகளையும் கொணர்ந்து வைத்தார்.

மூவரும் தம்தம் சாப்பாட்டுப் பாத்திரங்களைத் திறந்தனர்.

"நீ என்ன கொண்டுவந்திருக்க, நந்து?"

"ம்? அம்மா பூரி கிழங்கு வெக்கிறதா சொன்னாங்க... எஸ், அதேதான்..."

மற்ற இருவருக்கும் தலா இரண்டு பூரி, உருளைக் கிழங்கு மசாலாவைக் கொடுத்து, வேணி நீட்டிய தயிர் சாதத்தை தன் டப்பா மூடியில் வாங்கியவள், ஜானாவின் காரியரைப் பார்த்ததும் புருவங்களை உயர்த்தினாள்.

"என்ன சாதம் அது, ஜானா? பாக்க பச்சை நிறமா இருக்கு, வாசனையும் ஜமாய்க்குது..."

"கொத்தமல்லி சாதம்..."

"கொத்தமல்லி சாதமா? அது என்ன? கேள்விப் படாத சமாச்சாரமா இருக்கு?"

"சாப்பிட்டுப் பாரேன்..."

ஸ்பூனால் வேணிக்கும் நந்தினிக்கும், சாதத்தையும், தொட்டுக்கொள்ள வெங்காய தயிர்பச்சடியையும் ஜானா பரிமாறினாள். ஒரு வாய் எடுத்துப் போட்டுக் கொண்ட வேணி, "பிரமாதம்!" என, வாய் நிறைய சோற்றைப் போட்டுக் கொண்ட நந்தினியும் "டாப் டாப்!" என்று பாராட்டினாள்.

"என்னது?"



நந்தினி அவசரமாய் வாயில் இருந்ததை விழுங்கினாள்.

"டாப் கிளாஸ்னு சென்னேன், ஜானா! ரியலி வெரி நைஸ்... எப்படிப் பண்ணறது இதை?"

ஜானா குறும்புடன் சிரித்தாள்.

"ரொம்பக் கஷ்டம்மா... மூணு நாள் பட்டினி கிடக்கணும்... அப்பறமா குளிச்சிட்டு ஈரத் துணியோட ரெண்டு நாள் தியானம் பண்ணனும். அப்புறம்... சொல்லி குடுக்கறவங்களுக்கு குருதட்சணையா..."

"ஏய்... ஏய்..."

மற்ற இருவரும் முறைக்க, ஜானா சிரித்தாள்.

"ஓகே... ஓகே... சொல்லிடறேன். ரொம்ப ஸிம்பில் ரெஸிபிப்பா இது... ஒரு டம்ளர் அரிசிய எடுத்து களைஞ்சு வடிய வச்சிடணும். பச்சைக் கொத்தமல்லித் தழைகளைக் கழுவி, காம்பில்லாம பொடியா நறுக்கிக் கணும்."

"எவ்வளவு? அளவு சொல்லலியே?" வேணி குறுக்கிட்டாள்.

"ம்... அரிசி மாதிரி குறைந்தபட்சம் ரெண்டு பங்காவது இருக்கணும். நிறைய கொத்தமல்லி இருக்கயிருக்க, நல்லது தான். எங்க விட்டேன்... அ! அவரவருக்கு வேண்டியபடி ஒண்ணோ ரெண்டோ பச்சைமிளகாய், ஒரு வெங்காயம், கொஞ்சம் சீரகம், ஒரு துண்டு இஞ்சி எல்லாத்தையும் கொத்தமல்லியோட சேர்த்து அரைச்சு, வாணலில நாலு டேபிள் ஸ்பூன் நெய், இல்லே டால்டா, விட்டு வதக்கி, வடிய வெச்சிருக்கிற அரிசியையும்

அதோடு போட்டு கொஞ்சம் பிரட்டி, தேவையான ஜலம் விட்டு, உப்புப்போட்டு ஒரு கிளறு கிளறி, குக்கர்ல வெச்சிடணும்... தட்ஸ் ஆல்..."

நந்தினி சந்தேகத்துடன் கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"வேற மசாலா ஒண்ணுமே இல்லாமலா இத்தனை ருசியா இருக்கு?"

"காரத்துக்கு மிளகா, ருசிக்கு உப்பு, வாசனைக்கு கொத்தமல்லி, வேணும்னா முந்திரி, திராட்சையை வறுத்துப் போடலாம்-இன்னும் பிரமாதமா இருக்கும்."

"எங்கேயிருந்து பிடிச்சே இத்தனை அருமையான ரெஸிபிய, ஜானா?"

"எனக்கு ஏம்பா கிரீடம் வெக்கறே? எல்லாம் எங்கம்மாக்குத்தான்... எங்க போனாலும் புதுசுபுதுசா எதையாவது தெரிஞ்சுகிட்டுவர்றதுல அவங்கதான் எக்ஸ்பர்ட்..."

பேச்சை நிறுத்திவிட்டு, சாப்பாட்டை அவர்கள் ரசித்துச் சாப்பிட்ட நாழிகையில், பர்ஸனல் செக்‌ஷனில் கிளார்க்காக இருக்கும் ஸ்ரீவத்ஸ் ஒரு காகிதப் பொட்டலத்துடன் அடுத்த மேஜையில் வந்து உட்கார...

"என்ன இன்னிக்கு இவ்ளோ லேட்?" என்றாள் ஜானா அவனிடம்.

"வேலை இருந்தது..."

"வழக்கமா வீட்லேந்து காரியர் வருமே..."



"இன்னிக்கு வரலே... மிஸஸுக்கு உடம்பு சரியா இல்ல..."

...கண்களை நிமிர்த்தாமல் ஸ்ரீவத்ஸ் பேச, அடிக்கடி தலைதூக்கும் பிரச்சினை இன்றும் அவன் வீட்டில் ஜனித்திருப்பதை ஊகிக்க முடிய, தொடர்ந்து பேச்சை வளர்த்தாமல் ஜானா மௌனமாகச் சாப்பிட்டாள்.

ஸ்ரீவத்ஸ் விவகாரம் ஆபீஸ் பூராவும் தெரிந்ததுதான்.

பார்க்க ஆள் ஷோக்காக, சினிமா ஹீரோ மாதிரி இருப்பதால், கொஞ்சம் பசையுள்ள இடத்துப் பெண் ஒன்று மயங்கி, இவனைத்தான் மணந்துகொள்வேன் என்று பிடிவாதம் பிடித்து, கல்யாணம் பண்ணிக் கொண்டதுவரை எல்லாம் ஜோராகத்தான் இருந்தது.

'ஆஹா! யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு அதிர்ஷ்டம்! ஸ்கூட்டர், கூடம் கொள்ளாமல் சீர் வரிசையுடன் மனைவி!' என்று ஸ்ரீவத்ஸும் ஆரம்பத்தில் இளியோ இளி என்று இளிக்கவே செய்தான்.

ஆனால், எல்லாம் எண்ணி பத்துப் பதினைந்து நாட்கள் வரைக்கும்கூட இல்லை... புருஷன் வீட்டில் இல்லாமையும், உறவு ஜனங்களும் சுத்தமாய் அவளுக்குத் தாங்க முடியாததாய்ப் போக, ரொம்ப சீக்கிரமே பணக்கார மனைவியைத் திருப்தி பண்ண ஸ்ரீவத்ஸ் தனிக்குடித்தனம் வைக்கச் சம்மதிக்க...

என்ன பண்ணி என்ன?

திருமணமாகி மாசம் எட்டு ஆகவில்லை, அதற்குள் பொழுது விடிந்து பொழுது போனால் எதற்காவது

துசுக்கொன்று கோபித்துக்கொண்டு, உள்ளூரிலேயே உள்ள பிறந்தகத்துக்கு அவள் போய்விடுவதும், இவன் பின்னோடு சென்று காலில் விழாக் குறையாக கெஞ்சி அழைத்து வருவதும் கணக்கில்லா தடவைகள் நடந்து, ஸ்ரீவத்ஸை நினைத்து பரிதாபப்படாத, கூடவே நமுட்டாகச் சிரிக்காத ஆத்மா இன்று இல்லை என்றாகி விட்டது.

வாங்கிவந்திருந்த எலுமிச்ச சாதத்தை நாலு வாயாக அள்ளிப்போட்டுக்கொண்டு ஸ்ரீவத்ஸ் எழுந்து போனதும், 'பாவம்' என்றாள் நந்தினி.

ஆம் என்பதுபோலத் தலையை ஆட்டினாள் வேணி.

"ஏதோ தான்பாட்டுக்கு நிம்மதியா இருந்தார். இன்னிக்கு அத்தனையும் தாலிகட்டினவளால பறி போயிட்டதுல, நிமிர்ந்து யாரையும் பாக்கக்கூடக் கூச்சப்படறார்...பாவம்..."

நந்தினி வாய்விட்டுப் பரிதாபப்பட்டதும், ஜானா பட்டென்று பதிலுக்குக் கேட்டாள்.

"பாவம் என்னப்பா பாவம்... எல்லாம் இவராவே வரவழைச்சிக்கிட்டதுதானே? பணக்காரச் சம்பந்தம்னதும் "ஆ"னு வாயைத் திறந்துகிட்டு ஓடாம, இது நமக்கு சரிப்படுமா படாதான்னு கொஞ்சம் நிதானிச்சிருந்தா, இப்படி அவஸ்தைப்பட வேண்டியிருக்குமா?"

"தாலி கட்டறப்பவே ஒருத்தர் குணம் பூராவையும் தெரிஞ்சுக்கறது சாத்தியமா, ஜானா?"



"சாத்தியமில்லேதான்... ஆனாலும், விரலுக்குத் தக்க வீக்கமா பாக்கி எல்லா சமாச்சாரமும் இருக்கான்னு துவக்கத்திலேயே பாக்கறது முடியும்தானே..."

அவள் கூற்றில் நியாயம் இருக்க, வேணி, "அதுவும் சரிதான்..." என்றாள்.

"அது மட்டுமில்லே, நந்து... இந்த ஆளு கல்யாணமான புதுசுலே, என்னமோ தனக்குத்தான் பொண்டாட்டி ஆகாசத்துலேந்து ஸ்பெஷலா குதிச்சிட்டா மாதிரி அவளைத் தலை மேலே தூக்கி வெச்சுக்கிட்டதை நீங்களும் பாக்கத்தானே செஞ்சீங்க? அப்ப இடம் குடுத்திருக்கவும் வேணாம், இப்ப இப்படி தலை தூக்க முடியாம கோழையாகவும் குறுக வேண்டாம்."

"ஏதோ தெரியாத்தனத்தால அப்படி நடந்துக்கிட்டவரையே குத்தம் சொன்னா எப்படி, ஜானா? அந்தப் பொம்பளையைச் சொல்லு... பொம்பளையா லட்சணமா அடக்க ஒடுக்கமா, புருஷனுக்கு அடங்கி, அவனை மதிச்சு அவ நடந்துக்க வேணாமா? அன்போட இடத்தைக் குடுத்தா மடத்தையா பிடுங்குவாங்க? எனக்கென்னவோ கோளாறு பூரா அந்தம்மா மேலதான்னு தோணுது! பாவம் ஸ்ரீவத்ஸ் ஒரு மனுஷன் நல்லவனா, கொஞ்சம் சாதுவா இருக்கறதே தப்புனா எப்படி?"

"பொம்பளையா பிறந்திட்ட காரணத்துக்காக ஒருத்தி ஒருத்தனுக்கு அடங்கி ஒடுங்கி நடக்கணும்னு சொல்றது, எனக்கு நியாயமாப் படலை, நந்து! தாம்பத்தியம்ன்றது என்ன? அன்பைக் குடுத்து அன்பை வாங்கறதும், மரியாதையைக் குடுத்து மரியாதையை பதிலுக்கு வாங்கறதும்தான் ஆரோக்கியமான தாம்பத்தியம்."

நந்தினி அவள் பேச்சைக் காதில் வாங்காமல் மென்மையாய் சிரித்தாள்.

"மேடைல அரசியல்வாதி பேசறாப்பல இருக்கு உன் பேச்சு... பெரியபெரிய வார்த்தைகளா, மரியாதையைக் குடுக்கணும், வாங்கணும்னு பேசினா, எனக்குச் சிரிப்புத் தான் வருது! கணவனுக்கு அடங்கி, அவனுக்கு மதிப்புக் குடுத்து பொம்பளை வாழறதுதான் என்னைப் பொறுத்த வரை சரியான தாம்பத்தியம்... அழகானதும்கூட...! முதல் ஸ்டெப்பை பொம்பளை எடுத்தான்னா, தன்னால அடுத்ததை ஆம்பளை எடுப்பான்னு நான் நம்பறேன்..."

அவள் முடிப்பதற்குள் ஜானா அவசரமாய் தலையை ஆட்டி 'நோ' என்று மறுத்தாள்.

"இப்படிக் கண்மூடித்தனமா நம்பி நம்பித்தான், இன்னிக்கு பலரோட தாம்பத்திய வாழ்க்கை ஆரோக்கிய மில்லாம இருக்கு... ஒண்ணு ஸ்ரீவத்ஸ் மாதிரி பொண்டாட்டிதாஸனா மாறி, அவ செருப்பாத் தேய வேண்டியது; இல்லேன்னா எங்க பக்கத்து வீட்டுக்காரரர் ராமகிருஷ்ணன் மாதிரி, நடுத்தெருல மனைவியைப் போட்டு நாய் மாதிரி அடிக்கவேண்டியதுனு எக்ஸ்ட்ரீமா இருக்கு! எதுலேயும் ஒரு நிதானம் வேணாமா? காலம் மாறிட்டது. நந்து... பெண்கள் முன்னேமாதிரி சமையல்கட்டே கதின்னு இப்ப இருக்கறதில்லை. வெளில வந்து வேலை பாக்க, நாலு பேரோட பழக ஆரம்பிச்சிட்டாங்க... அதனால தாம்பத்தியம் பத்தின பழைய கண்ணோட்டம் மாறணும். கணவனும் மனைவியும் பரஸ்பரம், ஒருத்தரை ஒருத்தர் மதிக்கத் கத்துக்கணும். அப்பத்தான் நிஜமான, உறுதியான, ஆரோக்கியமான தாம்பத்தியமா அது இருக்கும்..."



நிதானமாய் ஜானா பேசி நிறுத்தியதும், வேணி படபடவென்று இடது கையால் மேஜையில் பாராட்டுவது போலத் தட்டினாள்.

"ஹியர்... ஹியர்.. கேக்க ரொம்ப நல்லாத்தான் இருக்கு... பேசாம இந்த வேலையை விட்டுட்டு ஒரு அரசியல்வாதியா மாறிட்டா, தூள் கிளப்புவே போ..."

டப்பாக்களை அடுக்கி டிபன் காரியரை மூடிட ஜானாவுக்கு உதவிய நந்தினி, அவளை அழுந்த ஏறிட்டாள்.

"அப்ப, உன் வாழ்க்கை இப்படித்தான் இருக்கணும்னு நீ விரும்பறே?"

ஜானா மந்தஹாஸமாய் சிரித்தாள்.

"இருக்கணும்னு விருப்பப்படறது மட்டுமில்லே, நிச்சயமா இருக்கும்னு நம்பறேன் ஏன்னா, ரகுவும் இந்த மாதிரி கருத்துக்களை வரவேற்கிறவர்தான்...!"

ஓசைப்படாமல் குண்டு ஒன்றை ஜானா வீச, டப்பென்று மற்ற இருவரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

"ரகுவா? அது யார் ரகு? ஏய் ஜானா - என்ன விவரம்? இது என்ன திடீர் நியூஸ்! விவரமா சொல்லு..."

எட்டி சினேகிதியின் கையைப் பற்றி நந்தினி வினவ, "கண்டிப்பாச் சொல்றேன். ஆனா இப்ப இல்லே! சாயங்காலமா வீட்டுக்குப் போறப்ப..." என்று ஜானா சிரித்துக்கொண்டே பதில் கூறியதும், "சரியான எமன்ம்மா நீ! அவுட் ஆஃப் ப்ளூவா திடீர்னு எதையோ சொல்றியே!" என்று அவளைக் கேலி பண்ணியவாறே மற்ற இருவரும் சிரித்தனர்.

அத்தச் சிரிப்பும் கேலியும் மாறாமலேயே நாயர் தந்த காபியைக் குடித்துவிட்டு, தம்தம் ஸீட்டிற்குத் திரும்பி, இருக்கையில் அமர்ந்து, காத்திருந்த கறுப்புக் கோட்டு வாடிக்கையாளரை 'குட் ஆப்டர்நூன்' என்று விஷ் பண்ணியவாறே மேஜை இழுப்பறைகளை சாவி போட்டுத் திறந்த நாழிகையில், அந்தக் கறுப்புக்கோட்டு வக்கிலை ஞாபகப்படுத்த, நாளைக்குத் தன்னை மோகன் பெண்பார்க்க வருவதைப்பற்றி ஜானா வேணியிடம் சொல்ல மறந்து போனது திடுமென நந்தினிக்கு நினைவு வந்தது.

## 4



மாப்பிள்ளை அத்தனை சிவப்பில்லை.

கறுப்போடும் சேர்த்தியில்லை.

சதுர முகம், தீர்க்கமான மூக்கு, சற்றே முன்னால் நீண்ட முகவாய், மீசை, மெல்லிய ஃப்ரேம் போட்ட கண்ணாடி.

அடர்ந்த முடி என்று சொல்ல முடியாது. ஆனால் ப்ரில்கிரீம் தடவி லேசாகப் பறந்த முடியை பின்னோக்கி வாரியிருந்தது நன்றாக இருக்கிற மாதிரிதான் மனசுக்குப் பட்டது.

உள்ளே நுழைந்து குஞ்சிதபாதத்துக்குக் கைக்கூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு உட்கார எடுத்துக்கொண்ட



நாழிகையில், திரை வழியாகப் பார்த்த மட்டும், நல்ல உயரம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

ரொம்ப ஒல்லியும் இல்லை. அதிகக் குண்டும் இல்லை.

திட்டமாய் இருந்தார்.

நாற்காலியில் அமர்ந்து இங்குமங்கும் தயக்கமில்லாமல் பார்வையை ஓட்டினதை வைத்துக் கொண்டு பார்த்தால், அத்தனை சங்கோஜி இல்லை என்றே தோன்றியது.

பரவாயில்லை.

மொத்தத்தில் குற்றம் சொல்லும்படியாக எதுவும் இல்லை.

பார்க்கப்பார்க்க ஆம்பிளைத்தனம் தூக்கலாக இருக்கிற மாதிரி தோன்ற, நந்தினிக்குள் சட்டென்று சந்தோஷப்பூ ஒன்று பூத்தது. கூடவே, தன்னை இவருக்குப் பிடிக்கவேண்டுமே என்கிற கவலையும் எழுந்தது. அந்த பயத்தை விரட்டுகிற முயற்சியில் ஒரு தரம் எச்சிலைக்கூட்டி விழுங்கிக்கொண்டாள்.

காபி, டிபன் ஆயிற்று.

பிள்ளையின் அப்பா பலகாரத்தை ரசித்துச் சாப்பிட்டார். பையன் ஸ்வீட்டை மட்டும் சாப்பிட, அம்மா ஏனோதானோ என்று கொறித்த மாதிரி தோன்றியது.

"காரட் அல்வா எங்க நந்துவே செஞ்சது.. சமையல் எல்லாம் அருமையா செய்வா..."

அத்தச் சிரிப்பும் கேலியும் மாறாமலேயே நாயர் தந்த காபியைக் குடித்துவிட்டு, தம்தம் ஸீட்டிற்குத் திரும்பி, இருக்கையில் அமர்ந்து, காத்திருந்த கறுப்புக் கோட்டு வாடிக்கையாளரை 'குட் ஆப்டர் நூன்' என்று விஷ் பண்ணியவாறே மேஜை இழுப்பறைகளை சாவி போட்டுத் திறந்த நாழிகையில், அந்தக் கறுப்புக்கோட்டு வக்கீலை ஞாபகப்படுத்த, நாளைக்குத் தன்னை மோகன் பெண்பார்க்க வருவதைப்பற்றி ஜானா வேணியிடம் சொல்ல மறந்து போனது திடுமென நந்தினிக்கு நினைவு வந்தது.

# 4



**மா**ப்பிள்ளை அத்தனை சிவப்பில்லை.

கறுப்போடும் சேர்த்தியில்லை.

சதுர முகம், தீர்க்கமான மூக்கு, சற்றே முன்னால் நீண்ட முகவாய், மீசை, மெல்லிய ஃப்ரேம் போட்ட கண்ணாடி.

அடர்ந்த முடி என்று சொல்ல முடியாது. ஆனால் ப்ரில்கிரீம் தடவி லேசாகப் பறந்த முடியை பின்னோக்கி வாரியிருந்தது நன்றாக இருக்கிற மாதிரிதான் மனசுக்குப் பட்டது.

உள்ளே நுழைந்து குஞ்சிதபாதத்துக்குக் கைக்கூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு உட்கார எடுத்துக்கொண்ட



நாழிகையில், திரை வழியாகப் பார்த்த மட்டும், நல்ல உயரம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

ரொம்ப ஒல்லியும் இல்லை. அதிகக் குண்டும் இல்லை.

திட்டமாய் இருந்தார்.

நாற்காலியில் அமர்ந்து இங்குமங்கும் தயக்க மில்லாமல் பார்வையை ஓட்டினதை வைத்துக் கொண்டு பார்த்தால், அத்தனை சங்கோஜி இல்லை என்றே தோன்றியது.

பரவாயில்லை.

மொத்தத்தில் குற்றம் சொல்லும்படியாக எதுவும் இல்லை.

பார்க்கப்பார்க்க ஆம்பிளைத்தனம் தூக்கலாக இருக்கிற மாதிரி தோன்ற, நந்தினிக்குள் சட்டென்று சந்தோஷப்பூ ஒன்று பூத்தது. கூடவே, தன்னை இவருக்குப் பிடிக்கவேண்டுமே என்கிற கவலையும் எழுந்தது. அந்த பயத்தை விரட்டுகிற முயற்சியில் ஒரு தரம் எச்சிலைக்கூட்டி விழுங்கிக்கொண்டாள்.

காபி, டிபன் ஆயிற்று.

பிள்ளையின் அப்பா பலகாரத்தை ரசித்துச் சாப்பிட்டார். பையன் ஸ்வீட்டை மட்டும் சாப்பிட, அம்மா ஏனோதானோ என்று கொறித்த மாதிரி தோன்றியது.

"காரட் அல்வா எங்க நந்துவே செஞ்சது. சமையல் எல்லாம் அருமையா செய்வா..."

பங்கஜம் கதவோரமாய் நின்று கூறினதற்கு, பிள்ளையின் அம்மாவிடமிருந்து 'ம்' என்ற ஒற்றைச் சொல் பதிலாக வெளிப்பட்டது.

"பொண்ணு எம்.ஏ. படிச்சிருக்கறதா எழுதியிருந்திங்க..."

பிள்ளையைப் பெற்றவர் வினவ, வெகு பவ்யமாய் குஞ்சிதபாதம், "ஆமாங்க..." என்றார்.

"எங்கேயோ வேலை பாக்கறதா..."

"மாருதி ட்ராவல்ஸ்ல..."

"சம்பளம்கூட ஆயிரத்து சொச்சம் வர்றதா எழுதியிருந்திங்க..."

"ஆமாங்க... ஆயிரத்து இருநூறு சம்பளம். அது தவிர போனஸ்..."

"ம்ம்.." முகவாயைத் தடவிக்கொண்டு யோசித்தவர். "எங்களுக்கெல்லாம் வேலை பாக்கற பொண் வேணாம்னு தான் அபிப்பிராயம் ஆனா, இவன்தான் 'காலம் மாறிட்டது. பொம்பளையும் வேலை பார்க்குறது அவசியம்'னு நினைக்கறான்...." என்றபோது குரல் கொஞ்சம் அழுத்தமாகவே வெளிப்பட்டது.

அரை நிமிட மௌனம்.

"பொண்ணை வரச்சொல்லுங்க..."

பிள்ளையின் அம்மா கூறியதைத் தொடர்ந்து, "நந்துவக் கூட்டிக்கிட்டு வா, பங்கஜம்..." என்றார் குஞ்சிதபாதம்.



உள்ளறையில் அத்தனை பேச்சுக்களையும் கேட்டபடி நின்றிருந்த மகளிடம் வந்து, புடவைத் தலைப்பு விலகாமல் இருக்கிறதா, வெட்டின முடி அசிங்கமாய் குட்டையாக வெளியில் தெரியாமல் தலைப்பு போர்த்தி மறைக்கிறதா என்று அவசரமாய் கவனித்த பின்பு, "வாம்மா" என்று அழைத்து வந்தாள்.

மெதுவாக அம்மாவை ஒட்டி நடந்து வந்த நந்தினிக்கு படபடப்பாய் இருந்தது.

போன வருஷம் வந்த இரண்டு வரன்களும் 'பெண் பிடித்திருக்கிறது' என்று சொல்லி, க்ஷண காலத்துக்கு மனசில் சந்தோஷத்தை ஜனிக்கச் செய்துவிட்டு, 'கையில் இத்தனை வேண்டும்' என்று சீர்வரிசையைப்பற்றி பேசத் துவங்கினதும், சற்றுமுன் முளைத்த மகிழ்ச்சி அல்பாயுசில் மரித்துவிட்டது இப்போது ஞாபகத்துக்கு வந்து படபடப்பை அதிமாக்கியது.

இவரும் அப்படியே நடந்துகொள்வாரோ?

ஸ்கூட்டர் வேண்டும், கையில் இருபதாயிரம் வேண்டும் என்று, அப்பாவால் என்ன முயன்றும் சமாளிக்க முடியாமல் கேட்டுவிட்டு, வந்தோம், போனோம் என்று கையைத் தட்டிக்கொண்டு நடந்து விடுவாரோ?

ஏனோ, இவளுக்கும் கீழே இன்னொரு தங்கை ஒருத்தி இருக்கிறாள் என்பதை யாரும் நினைவில் வைத்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள்...

சம்பாதித்த காசு முழுவதையும் இவள் ஒருத்திக்கே வாரிவிட்டால், அடுத்தவளுக்கு வழி என்ன? இல்லை, வயதுக் காலத்தில் பெற்றவர்கள் பாடுதான் என்னாவது!

இவற்றையெல்லாம் இந்தப் பிள்ளை வீட்டா ராவது மனசில் நிறுத்திப்பார்த்தால் நன்றாக இருக்கும்.

பிள்ளையைப் பார்த்தால் கம்பீரமாக, நல்லது கெட்டதுகளை ஆராய்ந்து செயல்படுகிறவராய்த்தான் தோன்றுகிறார்...

வேலைக்குப் போகும் பெண் வேண்டாம் என்று பெற்றவர்கள் சொல்லியும், 'காலம் மாறிவிட்டது; நாள் இருக்கும் இருப்பில் பெண்கள் வேலைபார்ப்பது அவசியம், என்று எடுத்துச்சொல்லி அவர்களை இந்த பெண்பார்க்கும் படலத்துக்குச் சம்மதிக்க வைத்தவர், பரந்த மனப்பான்மை கொண்டவராய்த்தான் இருப்பார். கண்டிப்பாய் ஜானாவிடம் மறக்காமல் நாளைக்கு இதைச் சொல்லி 'உன் கருத்தை ஆதரிக்க நிறைய ஆண்கள் தயாராய் இருக்கிறார்கள்' என்றும் கூற வேண்டும்...

"பெரியவங்களை வணங்கிக்க, நந்து..."

அம்மாவின் குரல் காதருகில் கிசுகிசுப்பாய் ஒலிக்க, எண்ணங்களிலிருந்து விடுபட்டு முதலில் பெரியவர்களை நந்தினி நமஸ்கரித்து எழுந்தாள்.

கடைசியாய் மாப்பிள்ளையை...

குனிந்தவள் கண்களில், பேண்டுக்கு அடியில் நீட்டிக் கொண்டிருந்த பாதமும், விரல்களும் பட்டன.

சுத்தமாய் வெட்டப்பட்ட நகங்கள்... துளி அழுக்கு இல்லாமல்...

தினமும் குளிக்கும்போது சோப்பை பிரஷ்ஷில் போட்டு விரல்களில் தேய்க்கும் பழக்கம் இருக்குமோ? வீட்டிலும் செருப்பு அணியும் வழக்கம் உள்ளவரோ?



அம்மு மாதிரி...

உதவி மானேஜராக இருக்கும் அம்மு நரசிம்மனின் பாதங்கள், எப்போதும் தாமரைப்பூ போல பட்டுப் பட்டாய் இருக்கும்.

"பதினைந்து நாளுக்கொருதரம் ப்யூட்டி பார்லருக்குப் போய் 'பெடிக்யூர்' பண்ணிக்கறதோட, வீட்டுலேயும் செருப்புக் காலோட வளையவந்தா, உன் காலும், என் காலும் கூடத்தான் இதுக்கு மேல ஜோரா இருக்கும்!" என்று வேணி கூறியது நினைவுக்கு வர, ஆண்களுக்கும் அழகு நிலையத்துக்குச் சென்று பாதங்களை அழகாய் பராமரிக்கும் வழக்கம் உண்டோ... என்ற கேள்வி எழுந்தது. உடனேயே, இது என்ன அசட்டு நினைப்பு என்கிற வெட்கம் உண்டாக, உதடுகளைக் கீறிக்கொண்டு எழுந்த புன்சிரிப்பைப் பிரயத்தனப்பட்டு அடக்கினவாறு நந்தினி நிமிர்ந்தாள்.

"எங்க நந்தினி ரொம்ப அருமையா பாடுவா- அதோ, அந்த 'கப்'பெல்லாம் ஸ்கூல்லேயும், காலேஜ் லேயும் பாட்டுப் போட்டிகள்ல வாங்கினதுதான்..."

'அப்படியா! எங்க, ஒரு பாட்டு பாடச் சொல்லுங்க' என்று வந்தவர்களிடமிருந்து ஆர்வத்துடன் பேச்சு வெளிப்படும் என்று எதிர்பார்த்த நந்தினி, ஏமாந்தாள்.

பாட்டில் அத்தனை ஈடுபாடில்லையோ?

லேசாக விழிகளை உயர்த்தி மாப்பிள்ளையைப் பார்த்த போது, அவன் தன்னையே பார்ப்பது புரிய, தலையைக் குனிந்துகொண்டாள்.

கன்னங்களில் சூடு ஜிவுஜிவுத்தது.

முதுகுத்தண்டில் முளைத்த வியர்வைத் துளி, கோடு போட்டுக்கொண்டு கீழே இறங்கியது.

நிற்க முடியாமல் கால்கள் வெலவெலத்தன.

இவள் தவிப்பு புரிந்த தினுசில் அந்த அம்மாள் பேசினாள்.

"உட்காரு... ஏன் நிக்கற..."

அமர்ந்தாள்.

"எத்தனை வருஷமா வேலைபாக்கற?"

"ரெண்டு..."

"ஆபீஸ் எங்க இருக்கு?"

சொன்னாள்.

"நிறைய பொம்பளைங்க உன்கூட வேலை பாக்க றாங்களா?"

"ம்..."

இப்போது பிள்ளையின் தந்தை கேட்டார்.

"உங்க ஆபீஸுக்கு திருச்சிலே ப்ரான்ச் இருக்கா?"

"இல்ல..."

"அப்ப... ஒண்ணு, நீ வேலையை விட்டுட்டு அங்க வந்து வேற வேலை பாக்கணும்... இல்ல..."

உரக்கச் சிந்தித்தவர் போலப் பேசினவர், பாதியில் நிறுத்திவிட்டு மனைவியைப் பார்த்தார். பின்னர் மகனை ஏறிட்டார்.



"என்னப்பா மோகன், நீ என்ன சொல்ற?"

மோகன் முதல்முறையாக வாயைத் திறந்து பேசினான்.

"உங்களுக்கும், அம்மாக்கும் ஆட்சேபனை ஒண்ணும் இல்லேன்னா, எனக்கும் சம்மதம்தான்..."

"அப்ப என்னங்க... மேற்கொண்டு விஷயங்களைப் பேசித் தீர்த்திடுவோம்... சும்மா வழவழகொழகொழன்னு 'ஊருக்குப் போய் கடிதாசு போடறோம்'னு சொல்லற தெல்லாம் எனக்குப் பிடிக்காது..."

ஒருவித மிதப்புடன் அவர் பேச, சீர் செனத்திகளை தீர்மானிக்கையில் நந்தினி எதற்காக அங்கு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், "நீ வேணா உள்ளார போயிக்க நந்து" என்று அவளை அனுப்பிவைத்தாள் பங்கஜம்.

"பொண்ணை எங்களுக்குப் பிடிச்சிருக்கு... பாக்கி விவரங்களையும் பேசித் தீர்மானிச்சிட்டம்னா, முஹூர்த்தம் குறிச்சிடலாம்... என்ன நா சொல்றது?"

பிள்ளையின் தந்தை கேட்டதற்கு, குஞ்சிதபாதம் யோசித்து நிதானமாய் பதில் கூறினார்.

"நந்து எங்க மூத்த மக... எங்க சக்திக்கு மீறி படிக்க வெச்சிருக்கோம். இப்ப கை நிறைய சம்பளம் வாங்கறா. எல்லாம் உங்களுக்கே தெரிஞ்சதுதான்..."

மெதுவாகப் பேசிக்கொண்டுபோன குஞ்சிதபாதத்தை, பிள்ளையின் தகப்பன் இடைமறித்தார்.

"அதெல்லாம் இருக்கட்டும்... மத்த விஷயத்தைப் பத்தி பேசுங்க... மோகன் எங்களுக்கு ஒரே மகன்... வக்கீலுக்குப் படிச்சிட்டு ப்ராக்டீஸ் துவங்கியிருக்கான். பெரிய எடத்துலேந்தெல்லாம் பெண் கொடுக்க வராங்க தான். ஆனா, எங்களுக்குத்தான் ரொம்ப அகலக்காலா வைக்க மனசில்லே... என்ன, நா சொல்றது புரியுதா?"

குஞ்சிதபாதம் நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டார். மனைவி பக்கம் பார்வையை வீசிவிட்டு மீண்டும் வந்தவர்களை ஏறிட்டார்.

"என்ன எதிர்பாக்கறீங்கன்னு வெளிப்படையா சொல்லிட்டீங்கன்னா தேவலை..."

"உங்களால முடியாதது எதுவும் இல்ல... கையில பத்தாயிரம், இருவது பவுனுக்குக் குறையாம நகை, வைரத்தோடு... பிள்ளைக்கு வாட்ச், மோதிரம்... உங்க மகளைக் கூட்டிக்கிட்டு இங்க அங்க வசதியா போக ஒரு ஸ்கூட்டர்... இதான்..."

குஞ்சிதபாதம் சங்கடத்துடன் நெளிந்தார்.

"கையில் பத்தாயிரமும் இருவது பவுன் நகையும், மத்ததுங்களையும் குடுத்துடறேன். ஆனா வைரத் தோடும், ஸ்கூட்டரும்தான்..."

"எங்களுக்கு ஒரே பிள்ளை... வக்கீல்... இதுகூட சீர் செனத்தி இல்லைன்னா, கேக்கறவங்க சிரிக்க மாட் டாங்களா?"

"பொண் கை நிறைய சம்பாதிக்கிறதா... தயவு பண்ணி அதை நினைப்புல வெச்சுக்கணும்..."

பிள்ளையின் தாய் சூள்கொட்டினாள்.



"என்னங்க நீங்க... திரும்பத்திரும்ப அதையே சொல்லிக்கிட்டு... எங்களுக்கு வேலைபாக்கற மருமக வேணும்னு விருப்பம் இல்லை! இவன்தான் பிடிவாதம் பண்றான்னு சொல்லியும்கூட, இப்படி பேசினா...?"

குஞ்சிதபாதம் குழைந்தார்.

"தப்பா சொல்லலீங்க, எங்களால இப்ப வாங்கித் தர முடியாட்டியும், எட்டு மாசம் இவ சம்பளத்தைத் தொடாம இருந்தா ஸ்கூட்டர் வாங்கிட முடியாதான்னு தான்..."

"அப்ப, உங்க மக சம்பளத்தை நம்பி எங்க பிள்ளை ஸ்கூட்டர் வாங்கினாத்தான் உண்டுன்னு சொல்லிக் காட்டறீங்களா?"

"ஐயோ... நீங்க தப்பா எடுத்துகிட்டீங்க! நா என்ன சொல்லவந்தேன்னா..."

அடுத்த ஒருமணி நேரமும் இப்படியே பேச்சு வார்த்தை நீண்டு போய், ஒரு வழியாய் ஸ்கூட்டரைத் தவிர் பாக்கி அனைத்துக்கும் குஞ்சிதபாதம் சம்மதித்ததை பெரிய மனசு பண்ணி வந்தவர்கள் ஏற்றுக் கொள்ள, அடுத்த மாசம் இரண்டாம் தேதி வெள்ளிக் கிழமையன்று குஞ்சிதபாதம், தன்னைச் சார்ந்த பெரிய வர்களுடன் திருச்சிக்குச் சென்று பாக்கு வெற்றிலை மாற்றி திருமணத்தை நிச்சயம்செய்வது என்ற தீர் மானத்துடன், வந்தவர்கள் கிளம்பிப் போனார்கள்.

பாங்கில் இருக்கும் சேமிப்போடு, பி. எஃப்பில் கடன் வாங்கியும் கல்யாணச் செலவுகளை சமாளித்து விடலாம் என்றும், பத்தாயிரம் செலவழித்து வைரத் தோடு செய்து போடுவது மட்டும் இப்போது

சாத்தியமில்லை என்பதால் தன்னுடையதைக் கழட்டிப் போட்டு ஒப்பேற்றிவிடலாம் என்றும், அம்மாவும் அப்பாவும் தூங்காமல் வெகு நேரத்துக்குப் பேசிய பேச்சுக்கள் காதில் விழுந்தபோது, தன்னால் பெற்றவர்களுக்கு எத்தனை சிரமம் என்ற வேதனை நந்தினியை ஆக்ரமிக்கவே செய்தது.

ஆனால், "இதெல்லாம் சிரமம்னா எப்படி, நந்து? பிள்ளைகளைப் பெத்தா ஆச்சா? நல்லபடியா வளர்த்து, ஆளாக்கி, சிறப்பா வாழ்க்கையை அமைச்சிக் கொடுக்கறதும் எங்க கடமை இல்லியா? நாளைக்கு உனக்கு ஒரு மக பிறந்ததும் நீயும் இப்படித்தான் பேசுவே... வேண்டாததை நினைச்சு மனசை உழப்பிக்காம, போய் படும்மா..." என்று அம்மாவும், அப்பாவும் மாறிமாறி பேசின பிறகு லேசாகச் சமாதானம் அடைந்தவளாய், படுக்கையை விரித்துப்படுத்தாள்.

சில நிமிஷங்களில் மோகனின் சதுர முகமும், துருதுரு பார்வையும் கண்முன் தோன்றினதும், பாக்கியிருந்த துளி அவஸ்தையும் மறைந்துபோக, மனசு பரவசப்பட ஆரம்பித்தது.

எத்தனை அழகான பாதங்கள்... விரல்கள்! தினமும் காலையில் அந்தப் பாதத்தைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டால் எப்படியிருக்கும்?

அவர் கைவிரல்கள் எப்படியிருந்தன? கால் மாதிரியே நீளமாய்...? விரல்கள் நீளமாய் இருந்தால், கலையுணர்ச்சி மிகுந்தவர் என்று சொல்வார்களே? பிறகு, என்னைப் பாடச் சொல்லி ஏன் கேட்கவில்லை? ஒருவேளை, பெற்றவர்கள் கூட இருந்ததால் கூச்சமா? இருக்கும்... இருக்கும்...



பச்சை மரங்கள் அடர்ந்த சோலை ஒன்றில், பாறை மேல் அமர்ந்து, 'பாடு நந்து' என்று மோகன் கேட்கிற மாதிரியும், அவன் காலடியில் அமர்ந்து, முகம் நாணத்தில் சிவந்துபோக, பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா' பாட்டை மெல்லிய குரலில் இழைய இழைய பாடுவது போலவும் கற்பனைப் பண்ணிக்கொண்டே, அன்றைக்கு நந்தினி உறங்கிப் போனாள்.



# 5

"சொல்லு..."

"அவ்ளோதான்... முகூர்த்தம் எங்க, எப்போன்ற விவரமெல்லம், நிச்சயதாம் பூலத்துக்கு அங்க போனாத் தான் தெரியும்."

"ம்ம்"... கையிலிருந்த இட்லித் துண்டத்தை வாய்க்குக் கொண்டுபோகாமல், எதையோ யோசித்தபடி அமர்ந்திருந்துவிட்டு, ஜானா கேட்டாள்.

"அப்ப, கையில பத்தாயிரம், இருவது பவுன் நகை, ப்ளஸ் வைரத்தோடு, ப்ளஸ் மாப்பிள்ளைக்கு மோதிரம் வாட்ச் எல்லாத்துக்கும் உங்கப்பா ஒத்துக்கிட்டார்னு சொல்லு..."

"ம்."

ஜானா தம்ளரிலிருந்து கொஞ்சம் தண்ணீரைப் பருகினாள். லேசாகத் தயங்கினாள்.

"பர்ஸனலா பேசறேன்னு நினைக்காத, நந்து... உங்கப்பாவோட சக்திக்கு இதெல்லாம் அதிகம்னு உனக்குத் தோணலை?"

"நிச்சயமா அதிகம்தான்... ஆனா என்ன பண்ணறது. ஜானா?"

"எப்படி சமாளிக்கப்போறார்? பவுன் விலை இன்னிக்கு என்ன தெரியுமா?"

"நேத்து ராத்திரி அப்பாவும் அம்மாவும் பேசிகிட்டிருந்ததை வெச்சு சொல்றேன்... பாங்க்ல என் கல்யாணத்துக்குனு அப்பா பதினஞ்சாயிரம் டிபாஸிட் பண்ணியிருக்கார். என் சம்பளப் பணத்தை அப்பப்ப சேர்த்து வந்ததுல, பனிரெண்டாயிரம் தனியா இருக்கு. அப்பாவும், நானும் பி.ஃஎப்ல கடன் வாங்கறதா இருக்கோம். ஏற்கனவே என்கிட்ட நாலு பவுன்ல ஒரு ஜதை வளை, மூணு பவுன்ல செயின், ரெண்டு ஜதை தங்கத் தோடு இருக்கு. அதனால, வர்றதை வெச்சுக்கிட்டு சமாளிச்சிடலாம்னே அப்பா நினைக்கறார்."

ஜானா கண்களை இடுக்கிக்கொண்டு சின்னக் குரலில் கேட்டாள்.

"முக்கியமானதை மறந்துட்டுப் பேசறியே... நந்து, வாட் அபௌட் வைரத்தோடு?"

நந்தினி பார்வையைத் தழைத்தாள். டேபிளில் சிந்தியிருந்த ஜலத்துளியை ஆள்காட்டி விரலால் இழுத்து குட்டியாய் ஒரு கோலத்தை வரைந்தாள்.



"அ... அது வந்து..."

"நிச்சயதார்த்தத்துக்கப்பறம் பேசவேண்டிய விதமாபேசி, அது வேணாம்னு அவங்களை சொல்ல வைக்கப் போறீங்களா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே..."

இப்போது வேணி குறுக்கிட்டாள்.

"அப்பறம்?"

"பத்தாயிரம் போல செலவழிச்சு இப்ப புதுசா பண்ண முடியாதுன்றதால, எங்கம்மா தன்னுதை..."

முடிக்காமல் நந்தினி நிறுத்தினதும், "திஸ் இஸ் வெரி அன்ஃபேர்!" என்றாள் ஜானா கோபமாக.

"தன்னுதைக் கழட்டிப் போட்டுட்டா, அப்பறம் அவங்களுக்கு? உன் தங்கைக்கு? என்ன நந்து... இதுக்கு நீ எப்படி ஒத்துக்கலாம்?"

நந்தினி பரிதாபமாக விழித்தாள்.

"என்னை என்ன பண்ணச்சொல்ற. ஜானா?"

"கூடாதும்மான்னு தடுக்கறது! இது தப்பும்மானு சொல்றது!"

"சொன்னா அவங்க கேக்க மாட்டாங்க, ஜானா"

"சொல்லிப்பாத்தியா?"

"....."

"தென்? நம்பளைப் பெத்துட்டாங்கன்ற ஒரே காரணத்துக்காக, அவங்களை இப்படிப் பெரட்டி

எடுக்கறது நியாயமே இல்லாத செய்கை... எல்லாம் தெரிஞ்ச, வெளில வந்து வேலைபாத்து உலகத்தைப் புரிஞ்சிகிட்ட நாமே இந்த அக்ரமத்துக்கு உடன்பட்டா எப்படி?"

நந்தினியின் சங்கடமான நிலை பார்க்கப் பரிதாபமாக இருக்க, வேணி அவள் உதவிக்கு வந்தாள்.

"நீ சொல்றது கேக்க நல்லாத்தான் இருக்கு, ஆனா, நடைமுறைக்கு ஒத்துவருமா, ஜானா? போன வருஷம் எங்கக்காவுக்கு கல்யாணமானப்பக்கூட, இப்படித்தான் அடாவடி பண்ணி என்னென்னமோ வாங்கிட்டாங்க..."

"நீங்க குடுக்க ரெடியா இருந்தீங்க, அவங்க வாங்கிக்கிட்டாங்கனு சொல்லு..."

"மாட்டேன்னு சொல்லியிருந்தா, அக்கா கல்யாணம் நின்னுபோயிருக்கும்... ஏற்கனவே முப்பதும், இருபத்தி எட்டும், இருபத்தி நாலுமா வீடு நிறைய பொண்களை வெச்சுக்கிட்டு கையாலாகாத்தனத்தோட நிக்கறோமேனு அம்மா புலம்பிட்டிருந்தது அதிகமாயிருக்கும்... வர்றவங்க, போறவங்க எல்லாம் 'இப்படி பெத்ததுங்களை குதிர்குதிரா நிக்க வச்சிருக்கீங்களே'னு நையாண்டியா பேசி, அம்மாவோட குத்த உணர்ச்சிய ஏத்திவிட்டிருப்பாங்க..."

"அதுக்கா? அதுக்காக? பொண்களை சந்தையில மாட்டுப் பல்லை பிடிச்சிப் பாக்கற மாதிரி கண்டவன் பாக்க அனுமதிக்கறதும், இவளை எப்படியாவது அனுப்பிச்சிட்டா தேவலைன்ற எண்ணத்தோட, பிள்ளை வீட்டுக்காரங்க கேக்கறதை கடனோ, உடனோ வாங்கிக் குடுத்திடறதும் சரியான காரியமாயிடுமா?"



"சரியோ, தப்போ... அதப்பத்தி எனக்குத் தெரியாது... ஆனா, நூத்துக்குத் தொண்ணுத்தொம்பது வீட்லே இன்னிக்கு இதுதான் நடந்துகிட்டிருக்குனு மட்டும் தெரியும்."

"தொண்ணுத்தொம்பது வீட்டுல நடக்கறதாலேயே இது நியாயம்னு தீர்மானிச்சிடலாமா?"

"கூடாதுதான், ஒத்துக்கறேன். ஆனா, இதுக்கு என்ன பண்ணலாம்னு சொல்லேன்..."

ஜானா எழுந்துபோய் கை கழுவியபடி பேசினாள்.

"சொல்லறதோட நிக்கப்போறதில்லை, செஞ்சும் காட்டத்தான்போறேன்..."

குறுக்கே எதுவும் பேசாமல் மற்ற இருவரும் மௌனத்தைக் கடைப்பிடிக்க, ஜானா தொடர்ந்தாள்.

"இருக்கோ, இல்லியோ, அடுத்தவங்ககிட்டல்லாம் கடனை வாங்கி தாட்பூட்னு செலவழிச்சு ஒண்ணறை நாளுக்கு கல்யாணம் பண்ணாதானா? எளிமையா ஒருத்தரை ஒருத்தர் ஏத்துக்கிட்டா, அது தாம்பத்தியம் ஆகாதா? இது பத்தி ரகுவும் நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டதால, அவங்க அவங்க பெத்தவங்ககிட்ட பேசினோம். முதல்ல எங்களைப் பெத்தவங்க எதுக்கும் சம்மதிக்கலைதான்... ஆனா, நாங்க விடல, உன்னை இத்தனை செலவழிச்சு படிக்கவெச்சிருக்கேன், உனக்குக் கீழ் ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க... எதையும் யோசிக்காம ஒண்ணும் வேணாம், கையில வாங்கக்கூடாது, கோவில்ல கல்யாணம் அப்படி, இப்படின்னு பேசறது சரியான்னு ரகுவோட அப்பா கேட்டப்ப, 'எனக்காக நீங்க செலவழிச்சதை நானே சம்பாரிச்சு உங்களுக்குக்

குடுத்திடறேன். அதுதான் மரியாதை, ஒரு ஆம்பளைக்கு அழகும்கூட! அதை விட்டுட்டு முன்பின் தெரியாத மனுஷர்கிட்டே, அவர் பெண்ணை நா கட்டிக்கப் போறேன்றதுக்காக கை நீட்டி பணமும் பொருளும் வாங்கறது, ரொம்ப கீழ்த்தரமான செயல், பிச்சை எடுக்கறதைவிட மட்டமானது! என் தங்கச்சிங்களோட எதிர்காலத்தைப்பத்தி கவலைப்படாதீங்க. அது என் பொறுப்புனு ரகு அழுத்தமா பேசி, புரிய வெச்சார்! இதே மாதிரி எங்க வீட்லேயும் என்னைப் பெத்தவங்க, அதெப்படி கோவில்ல வெச்சு தாலி கட்டறது, நாங்க என்ன அன்னக்காவடிகளா? சீர், செனத்தினு ஏதும் வேணாம்னு நீ சொல்றதை ஒப்புக்கமுடியாது, எங்களுக்குன்னு விருப்பு, வெறுப்பு, திருப்தி, எல்லாம் இருக்குன்றதை மறந்து கண்ணை கட்டிவிட்ட குதிரையா நீங்க பேசினா ஆச்சானு சண்டை போடவே செஞ்சாங்க... ஆனா, பக்குவமா பேசற விதத்துல பேசி, ரெண்டு பக்கத்துக்காரங்களையும் எங்க போக்குக்குச் சம்மதிக்க வெச்சிட்டோம். எதுக்கு அத்தனை நீளமா சொல்றேன்னா, நாம முயற்சி பண்ணா எதையும் சாதிக்கலாம்ன்ற அடிப்படை நம்பிக்கை முதல்ல நமக்கு வேணும்னு சொல்லத்தான்..."

நாயர் கொண்டுவைத்த காபியைக் குடித்து முடிக்கும் வரை, அது நாழிகை ஜானா பேசியவற்றைப் புரட்டிப் பார்க்கும் தினுசில் சும்மா இருந்துவிட்டு, நந்தினி மெதுவாகக் கேட்டாள்.

"நிஜமாவா, ரகு வீட்லே எந்த சீர்வரிசையும் வேணானிட்டாங்க?"



"இதுல பொய் எதுக்கு, நந்து? அடுத்த புதன் கிழமை வடபழனில கல்யாணம்... நீங்க எல்லாரும் வரத்தானேபோறீங்க! அப்ப கண்கூடாவே பாத்திடுங்க..."

வேணியும் நந்தினியும் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். "தேதி குறிச்சாச்சா?" என்று நந்தினி வினவ, வேணி, "அடுத்த புதனா! இன்னும் எட்டு நாள் கூட இல்லியே! அதுக்குள்ள அத்தனை ஏற்பாடுகளையும் பண்ண முடியுமா?" என்றாள்.

ஜானா சிரித்தாள்.

"என்ன பிரமாத ஏற்பாடு! இன்விடேஷன் அடிக்கணும், ஒரு புதுப் புடவை, மாங்கல்யம் வாங்கணும், கோவில்ல பணத்தைக் கட்டணும், கூப்பிடப்போற நூறு, நூத்தி அம்பது பேர்களுக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்யணும்... இதானே!"

அவள் கூறியதை நம்பமாட்டாமல் வேணி 'ஹேய்!' என்று கண்களை விரிக்க, நந்தினி பேசாது எதிரில் இருந்தவளை வெறித்தாள்.

ஜானாவைப் பற்றின இதர விவரங்கள் கொஞ்சமாவது தெரிந்திருந்த எவருக்கும் இந்தத் திகைப்பு எழுவது இயற்கையே!

ஜானாவின் தந்தை அரசாங்கத்தில் உயரதிகாரி, நல்ல வருமானம். இந்திரா நகரில் சொந்த வீடு, கார்.

ஜானாவுக்கு இரண்டு சகோதரர்கள். மூத்தவன் அமெரிக்காவில் படிக்கிறான். இளையவன் இங்கேயே மெட்ராஸ் மெடிக்கலில்...

வசதியானவர்கள் வீட்டுத் திருமணம் எப்படி யிருக்கும் என்று அறிந்திருந்த காரணத்தால், இப்படி கோவிலில் கல்யாணம், ஒரு புடவை, மாங்கல்யம், நூறு பேருக்கு விருந்து - என்று ஜானா பேசியவுடன், மற்ற இருவரும் அசந்து போனதில் ஆச்சர்யம் என்ன?

முதலில் சுதாரித்துக்கொண்டது வேணிதான்.

"விளையாடாதே, ஜானா..." என்றாள்.

ஜானா பதில் கூறாது மீண்டும் சிரித்தாள்.

"உன்னைப் பெத்தவங்களும் இந்த மாதிரி கல்யாணம் பண்ணறத்துக்கு ஒப்புக்கிட்டாங்கன்னா சொல்றே?"

"அட ராமா! திரும்பத்திரும்ப இதையே கேட்டு கிட்டு இருந்தா? நம்பிக்கைப்படலைனா, சாயங்காலமா ரகு வருவார். கேளுங்க... அப்படியும் திருப்தி உண்டாகலைன்னா, வீட்டுக்கு வந்து எங்கம்மாகிட்டயே கேட்டுக்குங்க... இப்ப நாழியாச்சு... சீட்டுக்குப் போலாமா?"

எழுந்தவளை 'இரு, இரு' என்று கூறி நந்தினி அழுத்தினாள்.

"வரதட்சணை, பிரமாதமா சீர்செனத்தினு ரகு வீட்டுல கேக்கலை, சரி. ஆனா, உன்னைப் பெத்தவங்க உனக்குக் குடுக்கறதை யார் தடுக்க முடியும்?"

"நாங்கதான்..."

"நீயும்? ரகுவுமா? ஏன் தடுக்கணும்?"

பேசியவளை ஜானா தீர்க்கமாக ஏறிட்டாள்.



"அதையே நா திருப்பி கேக்கறேன்... அவங்க ஏன் குடுக்கணும்?"

ஒரு நிமிடம் இதற்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல் நந்தினி விழித்தாள். பின், முதல் நாள் தன்னை அம்மா சமாதானப்படுத்திப் பேசின வார்த்தைகள் நினைவில் மின்ன, அவற்றையே வெளியிட்டாள்.

"இது என்னப்பா கேள்வி! பெத்தவங்க இல்லியா? நம்மை ஆளாக்கி, நல்ல விதமா வாழ வழி பண்ணறது அவங்க கடமை இல்லியா?"

"ரைட். பெத்ததுக்காக அருமை பெருமையா வளர்த்தாங்க, உசத்தியா படிக்க வெச்சாங்களே... போதாதா? இன்னிக்கு நம்ம கால்ல சுயமா நிக்கற அளவுக்கு நாமளே சம்பாதிக்கறோமே, போதாதா? பெத்துட்ட கடமைக்காக நாம கிழவியாகற வரைக்கும் அவங்க கழுத்தை ஒட்ட அறுக்கறது நியாயமா, நந்து?"

"அறுக்கறது, கிறுக்கறதுனு ஏன் அசிங்கமா பேசற, ஜானா... எங்க மகளுக்கு நாங்க விரும்பிப் பண்றோம்னு சொல்றவங்களும் இருக்காங்கன்றதை மறந்துட்டுப் பேசினா எப்படி?"

மிகுந்த வருத்தத்துடன் நந்தினி பேசியதும், ஜானா அவள் தோளைத் தட்டினாள்.

"நா பேசினது உன் மனசைப் புண்படுத்தியிருந்தா, ஐ'ம் ஸாரி என் கருத்தைச் சொன்னேன்... அவ்ளோதான்! ஒரு வயசுக்கு மேலேயும், விவரம் தெரிஞ்ச பிறகும், பெத்தவங்களுக்கு குழந்தைங்க பாரமா நம்ம நாட்டுல இருந்துகிட்டு இருக்கிறது, எப்பவுமே என்னைப்

பிறாண்டற சமாச்சாரம், அதுவும், கல்யாணம்னு வர்றப்ப, அனாவசிய செலவுகளும், வேதனை, அவஸ்தைகளும்தான் நம்ம சமூகத்துல அதிகமா இருக்கு! இது தப்பு... குறையணும்... குறைக்கப்படணும்! இதுக்கு நம்மளை மாதிரி இருக்கறவங்க தீவிரமா முனைஞ்சாதான் உண்டு. என்ன வேணி, யு அக்ரி வித் மீ?"

வேணி அசிரத்தையுடன் சூள்கொட்டினாள்.

"இதெல்லாம் வெஸ்டர்ன் கண்ட்ரீஸ் சித்தாந்தம்... நம்ம நாட்டுல எடுபடாதும்மா..."

"இந்த மாதிரி சப்பைக்கட்டுதானே வேணான்றது... இப்படி விட்டேத்தியா படிச்ச நீங்களே பேசினா எனக்கு வருத்தமா இருக்கு..."

வேணி இல்லை என்று மெதுவாகத் தலையசைத்தாள்.

"விட்டேத்தியா பேசலை, ஜானா... நீ சொல்றது ப்ராக்டிகலா இல்லைனுதான் சொல்லவரேன். எங்கக்கா பாக்க ராஜாத்தியாட்டம் இருப்பா... கண் கண்டா, கை செய்யும் ஆனா, என்ன ப்ரயோஜனம்! எவன் கண்ணுக்கு இதெல்லாம் பட்டுது? பணம் பிரதானமா போகக் கொண்டு தானே, முப்பது வயசு வரைக்கும் அவ 'குதிரா' நின்னா! கடைசில அவங்க கேக்கிறதை உன் பாடு, என்பாடுன்னு குடுத்தப்புறம்தானே கல்யாணம் ஆச்சு? வைராக்கியமா மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சிருந்தா, இன்னிக்கும் அவ எங்க வீட்டோட நின்னுட்டுதானே இருந்திருப்பா?"

"கேளு... கேளு நல்லா அப்படிக் கேளு!" என்று வேணியை உற்சாகப்படுத்தியவாறே நந்தினி எழுந்து



நிற்க, புருவங்கள் நெற்றியில் ஏறிக்கொள்ள தீவிரமாக ஜானா பேசினாள்.

"இந்த நிலை மாறணும்னா என் கருத்துக்களை ஒத்துகிடறதைத் தவிர வேற வழியே இல்ல... உங்கக்கா சமாச்சாரத்தை விடு! அவ படிக்காதவ... வீட்டோட சமையல் காரியம்னு இருந்து பழகிட்டவ...! அவ கேஸ் வேற! நந்தினி சமாச்சாரத்தை எடுத்துக்க... இவ படிச்சவ... கை நிறைய சம்பளம் வாங்கறவ... இவளைக் கட்டிக்கப் போறவனுக்கு ஆயசுபர்யந்தம் இவ எல்லா விதங்களிலேயும் உதவியாகத்தான் இருக்கப்போறா - அப்படி இருக்கறப்போ, இவளைக் கட்டிக்கப்போறவன், பத்தாயிரம் குடுங்க, வைரத்தோடு போடுங்கன்னு அவ அப்பாகிட்டே கேக்கறது நியாயமா? இல்லை, அவங்க கேட்டதை மூச்சுபேச்சு இல்லாம குடுக்க இவங்க ஒப்புக்கிட்டதுதான் நியாயமா? வீட்டைக் கவனிக்கறதுல தொடங்கி, சம்பாரிச்சிட்டு வர்றவரைக்கும் அத்தனைப் பொறுப்புலேயும் சம பங்கு எடுக்க முன்வர பொண்ணுக்கு, ஒரு ஆம்பிளை தர்ற மரியாதை இதுதானா! ஓ! நோ... இந்தக் கண்ணோட்டம் தப்புப்பா... மாறணும்... மாறணும்... மாறியே தீரணும்! அடுத்தத் தலைமுறைப் பெண்களாவது நிம்மதியா, கௌரவமா வாழணும்னா, இன்னிக்கு இந்த ரெண்டாங்கெட்டான் நிலைமைல உள்ள நாமெல்லாம் சிந்திச்சு, நம்மல்ல சில பேர் 'விக்டிமைஸ்' ஆனாலும் பரவாயில்லேனு இதுக்கு ஒரு வழி பண்ணலைன்னா, அப்புறம் யார்தான்..."

அவள் பேசிக்கொண்டிக்கையிலேயே ப்யூன் ரத்தினம் வந்து, "நந்தினியம்மா, உங்களை மானேஜர் கூப்பிடறார்..." என்று சொல்ல, "சாயங்காலம்

பாக்கலாம்" என்று கூறி, அத்துடன் பேச்சை நிறுத்தி விட்டு மூவரும் சாப்பாட்டறையை விட்டு வெளியில் வந்தனர்.

# 6



மல்லிகையின் மணம் மயக்கத்தைத் தந்தது.

சுருள்சுருளாய் எழுந்த ஊதுபத்தியின் வாசம், கண் களில் மயக்கத்தைத் தெளித் தது. அறைக்கதவின் மேல் சாய்ந்தபடி நின்றிருந்த நந்தினிக்கு அடிவயிற்றில் குளிரிற்று.

ரொம்பப் பயமாக இருந்தது.

ரொம்பப் படபடப்பாய் இருந்தது.

உள்ளங்கையில் கசகசத்த வியர்வையைப் புடவை யில் அழுந்தத் துடைத்துக்கொண்டாள்.

தானாகக் கட்டிலிடம் நெருங்கலாமா, இல்லை அவர் கூப்பிடும்வரை காத்திருக்க வேண்டுமா?

புரியவில்லை.

தானாகப் போக ரொம்ப வெட்கமாக இருந்தது.

கூப்பிடுவாரா, மாட்டாரா?

அவருக்கும் சங்கோஜமாக இருந்ததென்றால்?



சட்டென்று இந்த சம்பிரதாயத்தின் மேலேயே நந்தினிக்குச் சன்னமாய் கோபம் எழுந்தது.

பத்துபேர் அறிய முதலிரவு, ஜோடனை, என்று அறையை சிங்காரிப்பதும், ஆளாளுக்கு வந்து எட்டிப் பார்ப்பதும், கேலியாய் பேசுவதும், சிரிப்பதும், பிறகு இப்படி அனைவரின் கண் முன்னால் தம்பதியை உள்ளே விட்டு கதவை சாத்துவதும்-ச்சே... ரொம்ப மோசம்!

பேசாமல், முந்தின மாதம் ஜானாவுக்கு நடந்த மாதிரி இருந்திருந்தால், எத்தனை வசதியாய், சங்கட மில்லாமல் போயிருக்கும்!

வடபழனியில் எளிமையாய் திருமணம், தொடர்ந்து, வந்திருந்தவர்களுக்கு விருந்து ஆன கையோடு மாலை வண்டியில் ரகுவும் ஜானாவும் டெல்லிக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

இரண்டு நாட்கள் 'கூப்பே'யில் டெல்லியை நோக்கி பயணித்த அவகாசத்தில்' படபடப்பு, பயம் என்ற எந்த வேண்டாத அவஸ்தைகளும் இல்லாமல், அற்புத மான அந்தத் தனிமையில் வெகு இயல்பாக...

"நிஜமாவா' ஜானா? ட்ரெயின்லியா? இப்படி சம்பிரதாயத்த மீறி ஒரு காரியம் பண்ண உங்க ரெண்டு பேர் வீட்லேயும் ஒத்துக்கிட்டாங்களா?"

நம்ப முடியாமல், அவள் தேனிலவிலிருந்து திரும்பிய பின்னர் நந்தினி கேட்டதும், ஜானா சிரித்தாள்.

"சம்பிரதாயம் அது, இதுனு சொல்லி, ரொம்ப அந்த ரங்கமா நடக்கவேண்டிய ஒண்ணை இப்படி 'டாம் டாம்' அடிக்கறது அநாகரிமா எங்களுக்குப் படுது'னு

நாங்க சொன்னதை ரெண்டு வீட்டுப் பெரியவங்களும் சரியா புரிஞ்சுக்கிட்டாங்க, நந்து…”

“கல்யாணமான அன்னிக்கே ரகுவோட இப்படிக் கிளம்பிப் போறதுக்கு, உனக்குத் தயக்கமா இல்லே? ஒரு வேளை ஏற்கனவே பழகியிருந்ததால…” அவள் முடிக்கும் முன்னர் ‘தப்பு’ என்று தலையசைத்து ஜானா மறுத்தாள்.

“நாங்க ஒருத்தரோட ஒருத்தர் கிட்டத்தட்ட ஒண்ணரை வருஷங்களுக்கு மேலே பழகினவங்கதான். ஆனா, நந்து, எங்க பழக்கம் நாங்களே தீர்மானிச்ச எல்லைக்கோட்டை ஒரு நாளும் தாண்டினது கிடையாது. எங்க ரெண்டு பேருக்குமே புத்தியும், மனசும் முக்கியமாயிருந்தது. உடம்பை அஸ்திவாரமா வெச்சு எங்க நட்பு பிறக்கல, வளரல… அன்யோன்னியம் வளர வளர, திருமணம் செஞ்சுக்கிட்டு ஆயுசு பூரா சேர்ந்து வாழணும்ன்ற ஆசை உண்டாச்சு! அந்த பந்தத்தை எங்க மனசுக்குப் பிடிச்ச மாதிரி எளிமையா, கோவில்ல ஏற்படுத்திக்கிட்டு, ரகுவை நானும், என்னை அவரும் நல்லா புரிஞ்சிக்கிட்டோம்ன்ற நம்பிக்கையோட அன்னிக்கே தேனிலவுக்குப் புறப்பட்டோம்… இதுல பயம் என்ன? தயக்கம் என்ன? இட் வாஸ் வொண்டர்ஃபுல், தெரியுமா? என்னைக் கேட்டா, நீயும் மோகன்கிட்ட பேசி, ரிஸப்ஷன், முதலிரவு இதெல்லாம் வேணாம்ன்ற முடிவுக்கு வர்றதுதான் சரினு சொல்வேன்…”

மோகனிடம் பேசுவதா? முடிவுக்கு வருவதா?

எங்கே?

அன்றைக்குப் பெண்பார்த்துவிட்டுப் போனவரை மறுபடியும் நேற்றிரவு நலங்கில் பார்த்ததோடு சரி, மற்றபடி ஒரு லெட்டரா, ஒரு டெலிபோனா? ம்ஹூம்… ஒன்றும் இல்லை.

பெற்றவர்களுக்கு அடங்கின பிள்ளையாக இவர் இப்படி இருக்கையில் ரிசப்ஷன், முதலிரவு வேண்டாம் என்று பேசுவதாவது தீர்மானிப்பதாவது!

ஆனால், ஜானா பேசிய பேச்சுக்களை, அம்மாவை ஒரு சிநேகிதியாக பாவித்து அன்றிரவு கூறவே செய்தாள்.

குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் அத்தனையும் கேட்ட பங்கஜம், கொஞ்சம் யோசனை பண்ணிவிட்டு பதில் பேசினபோது குரல் ரொம்பவும் தழைந்திருந்தது.

“ஜானா சொல்றது அவ கண்ணோட்டத்துலேந்து சரியா இருக்கலாம்; அவ வளர்ந்த விதம் அப்படி; வாழற விதம் அப்படி! ஆனா, நந்து, பெரியவங்க எந்த ஒரு காரியத்தையும் காரணமில்லாம நடைமுறைல வெக்கல அதை… நீ நம்பணும். சந்ததிகள் நல்லவிதமா, கட்டுப் பாடா அமைதியோட வாழணும்ன்றத்துக்காக சில சம்பிரதாயங்கள். சில பழக்கவழக்கங்கள் ஏற்படுத்தியிருக்காங்க… அதெல்லாம் ஏன், எதுக்காகனு நமக்குப் புரியலைன்றதுக்காக, அத்தனையும் மூடப்பழக்கம், அநாகரிகம்னு சொல்றது தப்புனே நா நினைக்கிறேன்… எங்கம்மா, எங்கம்மாவுக்கு அம்மா, என் மாமியார், அவங்க அம்மா எல்லாரும் இந்த சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டுதான் வாழ்ந்தாங்க… என்ன குறைஞ்சு போயிட்டாங்க? ஏன், என்னையே எடுத்துக்க… மனசு பூராவும் நிம்மதியும் சந்தோஷமுமா நா வாழ்ந்திட்டிருக்கறதை நீயும் பாத்திட்டுத்தானே இருக்கே! எதுக்கு இத்தன நீளமா பேசறேன்னா, ஜானா வழி அவளுக்கு;

நம்பளது நம்பளுக்குன்னு சொல்லத்தான். எதையாவது நினைச்சு மனசை அலட்டிக்காம, பெரியவங்க சொல்றதும் எல்லாம் நம்ம நன்மைக்குதான்னு தெளிவா இரும்மா..."

அதிகம் பேசாத அம்மா அன்று தன்னைத் தெளிவு படுத்த அத்தனை பேசியதும், நந்தினிக்கு ரொம்ப வெட்கமாகப் போய்விட்டது.

வாஸ்தவம்தானே!

ஒவ்வொருத்தர் வளர்ந்து, வாழும் தினுசு வேறு... அது அவளுக்குச் சரி, இது எனக்குச் சரி.... வீணாக நானும் குழம்பி, அம்மா வரைக்கும் விஷயத்தைக் கொண்டுபோய்... அந்தப் பேச்சுக்கள் ஞாபகத்தில் இருந்த மாதிரி, சற்று முன் இவளை அறைக்குள் கொண்டுவிடும் முன்னர், "எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு கடவுளை வேண்டிகிட்டு வா, நந்து, தாலி கட்டினவன் முகம் கோணாம, அவன் மனசுக்கேத்த மனைவியா எல்லா விதத்துலேயும் நீ நடந்துக்கிடணும். அப்பத்தான் உனக்குப் பெருமை, உன்னைப் பெத்த எங்களுக்கும் பெருமை!" என்ற அம்மா கூடவே, "மாப்பிள்ளை கூப்பிடணும்னு காத்திருக்காத; நீயா போய் அவர் கால்ல விழுந்து கும்பிட்டுக்க... செம்புல பால் வெச்சிருக்கேன்... சூடு ஆறரத்துக்கு முன்னால எடுத்துக் குடு..." என்று கிசுகிசுத்ததும் இப்போது நினைவுக்கு வர, எச்சிலை ஒருதரம் கூட்டி விழுங்கினாள்.

தலையை நிமிர்த்தாமலேயே மெதுவாக நடந்து கட்டில் அருகில் சென்றாள்.



ஒருபக்கமாய், இவள் என்ன செய்யப்போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் அமர்ந்திருந்த மோகனை வணங்கி எழுந்தாள்.

சற்றுத் தள்ளி, மேஜைமேல் வைத்திருந்த பால் செம்பிலிருந்து பாலை லோட்டாவில் ஊற்றி, மீண்டும் மோகனிடம் சென்று, பார்வை தரையைத் தழுவ நின்று நீட்டினாள்.

நீட்டிய விரல்கள் லேசாக நடுங்குவது தெரிந்தது.

பிடித்திருந்த டம்ளர் நழுவிவிடுமோ என்று பயமாக இருந்தது.

லோட்டாவை வாங்கிய மோகன், இன்னொரு கையால் அவள் விரல்களைப் பற்றினான்.

உடம்பு சிலிர்த்தது.

ஆனந்தபைரவி மங்களமாய் இதயத்தில் இழைந்தது.

"உட்காரேன்..."

அவனருகில் அமர்ந்து மிக லேசாகக் கண்களை உயர்த்தியபோது அவனது புன்சிரிப்பு பரவசப் படுத்தியது.

"நா நினைச்சதுதான் சரி..."

சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் எதையோ அவன் பேச, என்ன என்கிற பாவனையுடன் நந்தினி நிமிர்ந்தாள்.

"வேலைபாக்கிற பொண்ணுன்னா நிச்சயம் திமிராத் தான் இருப்பா... எங்க காலம் மாதிரி உன்னை வணங்குவா, பவ்யமா நிப்பானு எதிர்பார்க்காத! எப்படி

இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டுப் போனு எங்கம்மா சொன்னாங்க... நீ அப்படி இருக்க மாட்டேனு நா எதிர்பாத்தேன்... என் கணக்கு சரிதான்."

தன் வெற்றி, பெருத்த நிறைவைக் கொடுத்த மாதிரி மோகன் வாய்விட்டுச் சிரிக்க... நந்தினி புன்னகைத்தாள்.

"அன்னிக்கு உன்னைப் பொண்பாக்க வந்தப்பவே 'இவ அடக்கமானவ, சம்பாரிக்கறேன்ற திமிர் இல்லாத வனு' நினைச்சேன். என்ன, என் கணிப்பு சரிதானே!"

பேசியதையே அவன் பேச, என்ன பதில் கூறுவது என்று புரியாமல் மறுபடி நந்தினி புன்னகைத்தாள்.

பற்றியிருந்த கையை விடாமல், பாலைக் குடித்து டம்ளரை மேஜைமேல் வைத்துவிட்டு, இன்னொரு கையால் அவள் தோளை அணைத்து தன் பக்கம் திருப்பினான்.

"எங்கம்மா, அப்பா திருச்சியிலே பிறந்து வளர்ந்த வங்க... மெட்ராஸ் நாகரிகமெல்லாம் புரியாதவங்க... எங்கக்கா மூணு பேரையும் சின்ன வயசுலேயே நல்ல எடமாப் பாத்துக் கட்டிக்குடுத்திட்டாங்க... அவங்கல்லாம் ரொம்பப் படிக்காதவங்க... படிச்சு, வேலைபாக்கற பொண்ணு குடும்பத்துக்கு லாயக்கில்லாதவள்ன்றது தான் அவங்க அபிப்ராயம்... அதனால, அவங்ககிட்ட நீ ரொம்ப பக்குவமா நடந்துக்கணும்... என்ன?"

"ம்..."

"ம்-னு சொன்னா பத்தாது; வாயத் திறந்து அப்படியே நடந்துக்கறேங்கனு சொல்லணும்."



"உங்க விருப்பம் போல, உங்க மனசு கோணாம கண்டிப்பா நடந்துப்பேங்க..."

"என் மனசு மட்டுமில்ல... எங்கம்மா, அப்பா, அக்கா..."

"எல்லாருக்கும் பிடிச்சவளா நிச்சயமா நடந்து காட்டறேங்க..."

"குட்..."

மோகன் அவளைத் தன்னருகில் இழுத்தான்.

"அன்னிக்கு உன்னைப் பாத்தப்பவே எனக்குத் தெரிஞ்சுபோச்சு, நீ சொன்ன பேச்சைக் கேட்டுக்கிட்டு அடக்க ஒடுக்கமான பொண்டாட்டியாதான் இருப் பேன்னு!" சந்தோஷக் குரலில் முணுமுணுத்தவன், குனிந்து அவள் வாயை அழுந்த முத்தமிட்டான்.

ஆணின் முரட்டு ஸ்பரிசமும், நெருக்கமும், அணைப்பும், முத்தமும் மண்டைக்குள் வண்ணவண்ண விளக்குகளை ஏற்றி அணைக்க, நந்தினி கண்களை மூடிக் கொண்டாள்.

"நந்தினி..."

"ம்..."

"நாளைக் காலைல வெளியே போனதும், குளிச் சிட்டு முத காரியமா எங்கம்மாவைத் தேடிப்போய் விழுந்து கும்பிட்டு ஆசிர்வாதம் வாங்கிக்க..."

"சரிங்க..."

"எங்க பெரியம்மா மருமக இப்படிச் செய்தாளாம். வாய் ஓயாம அம்மா, 'பொண்ணுனா அது பொண்ணு... இந்தக் காலத்துல தாக்ளா மோக்ளானு அது அது தலைகால் புரியாம நடந்துக்கறப்ப இவளைப் பாரு'னு புலம்பிக்கிட்டே இருப்பாங்க..."

"...."

"அப்பறம், புஷ்பாவுக்கு உங்க வீட்ல வாங்கிக் குடுத்த சேலையோட நிறம் ஏன் அத்தனை மட்டமா இருக்கு? நா கறுப்புனு குத்திக்காட்ட இத்தனை டார்க்கா, வாடாமல்லி கலர்ல எடுத்திருக்காங்களானு வருத்தப் பட்டுகிட்டு, அதை உடுத்திக்கவே இல்லை... காலைல நீயா, 'ஏங்க்கா, புதுசு கட்டலை' -னு கேட்டு, அதை வாங்கி உங்கப்பாகிட்ட குடுத்து நாளைக்கே வேற லைட் கலரா மாத்திட்டு வந்திடச் சொல்லு."

**நா**த்தானார்களுக்குப் புடவை வாங்குவதாக முதலில் குஞ்சிதபாதத்துக்கு எண்ணம் இல்லை. ஒன்று என்றால் பரவாயில்லை... இருப்பதோ மூன்று. தவிர, கையில் பத்தாயிரம் கொடுத்திருக்கும்போது சம்பந்தி அம்மாளுக்கு மட்டும் வாங்கினால் போதும், நாத்தனார்கள் புடவை எதற்கு உபரிச் செலவாய் என்று எண்ணியது தப்பாய் போய்விட்டது.

ஊரிலிருந்து வந்து இறங்கி அரைமணி போவதற்குள் சம்பந்திகள் முகத்தில் கோபம் கசமுசா...

என்னவென்று விசாரித்தால்-சம்பந்திங்க வந்து இறங்கின கையோட, சந்தனம் தாம்பூலம் குடுத்து மரியாதை பண்ணறதுதான் எங்க வீட்டு வழக்கம். அட, அத்தனை பேருக்கும் வேணாம் சாமி, பிள்ளையைப் பெத்தவளையும் கூடப்பிறந்த பிறப்புக்களையுமே மதிச்சு மரியாதை செய்யலேன்னா எப்படி? என்று, சித்தப்பா என்று உறவு சொல்லிக்கொண்டு வந்த நபர் முழக்கு கிறார்!



இது என்ன புது பிரச்சினை என்று பயந்து, கூட மாட ஒத்தாசை பண்ண வந்திருந்த ஜானாவிடம் பணத்தைக் கொடுத்து தலா இருநூற்றைம்பது ரூபாயில் கொஞ்சமாய் சரிகை போட்ட தர்மாவரம் புடவைகளை எடுத்துக்கொண்டு வரச் செய்து, 'மாலை நலங்குக்கு நா எதுக்கு?' என்று மாடியோடு மாடியாய் வீம்பாக உட்கார்ந்திருந்த சம்பந்தி அம்மாள் அண்ட் கோவை மரியாதை பண்ணி, தாஜா செய்து ஒருதினுசாய் சமாளிக்க...

**எ**ன்ன பதிலைக் காணும்! நா சொல்லறதைக் காதில வாங்கிட்டயா?"

தோளில் பதிந்திருந்த கை லேசாக அழுந்த, நந்தினி அவசரமாய் 'சரிங்க' என்றாள்.

இடுப்பை மோகனின் விரல்கள் மெதுவாய் வருடியது. கிளுகிளுப்பைத் தந்து கிறக்கத்தை உண்டாக்கியது.

பின்னால் நகர்ந்து, அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டவன், திடுமென நினைவுக்கு வந்த மாதிரி, "மறந்திட்டேனே! ஸ்ரீரங்கத்து மாமா நாளைக்குத் திருத்தணி போயிட்டுவந்தாத் தேவலைனு சொன்னார்... எதோ வேண்டுதலாம்.. உங்கப்பாகிட்ட ஒரு கார் ஏற்பாடு பண்ணச் சொல்லிடு..." என்றபடியே அவள் முகவாயில் கையைக் கொடுத்து இன்னும், இன்னும் தன்னருகே

அவளை இழுத்தபோது, இதயம் எகிறிக் குதிக்க முற்பட்டது.

முகத்தில், கழுத்தில், தோளில் தன் முகத்தைப் பதித்து மிகுந்த அவசரத்துடன் அவளை அவன் ருசித்த நிமிடத்தில், சிநேகபாவத்துடன் கணவனை 'ரகு' என்று ஜானா பேர் சொல்லிக் கூப்பிடுகிறமாதிரி தானும் தனிமையிலாவது ஆசையுடன் 'மோகன்' என்றழைக்க இவர் ஒப்புக்கொள்வாரோ என்று நினைத்த நந்தினி, மறுகணமே என்னமோ எண்ணக்கூடாததை எண்ணி விட்ட ரீதியில் மனசு உதறிப்போட்ட கண்களை இறுக மூடிக்கொண்டு, கணவனின் பிடிக்குள் கரைந்துபோகும் அற்புதமான உணர்வை அனுபவிக்க முற்பட்டாள்.

## 7



சரியாக நான்கே முக்காலுக்கு அந்தப் பெரியவர் டிக்கெட்டிங் செக்ஷனுக்குள் நுழைந்து நந்தினியின் எதிரில் அமர்ந்தார்.

அவரை ஒட்டின மாதிரி கொஞ்சம் வயதான ஒரு பெண்மணி.

பெரியவர் என்றால், எழுபது, எழுபத்தி ஐந்து வயதைக் கடந்த கிழவர் இல்லை. அறுபதுக்குள்தான் இருக்கும், அந்தம்மாளுக்கு நான்கைந்து குறைச்சலாக இருக்கலாம்...



ஒரே பார்வையில் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று புள்ளிகுத்த முடிந்தது.

தலைமேல் சட்டியைக் கவிழ்த்துவிட்டு, ஆச்சு என்று ஒரே கோடாய் வெட்டிவிட்ட கிராப், சதும்ப எண்ணெய், சந்தனப் பொட்டு, வியர்வையில் உடம்போடு ஒட்டிக்கொண்ட டெர்லின் அரைக்கைச் சட்டை, பாக்கெட்டில் துருத்திக்கொண்டு நின்ற தடிமனான பர்ஸ், மேல்பட்டனைப் போடாமல் காலரைப் பின்னுக்குத் தள்ளியிருந்ததில் பளிச்சென்று தெரிந்த தங்கச் சங்கிலி... கையில் மஞ்சள் நிற துணிப்பை.

அந்தம்மாளின் அலங்காரமும் எல்லா விதத்திலும் இவருக்கு சரியான ஜோடியாக இருந்த மாதிரியே நந்தினிக்குப்பட்டது.

நிறைய எண்ணெய் தடவி, படிய வாரி போடப்பட்ட கொண்டை, கனகாம்பரம், பத்து காசைவிடச் சற்று பெரிதாய் குங்குமப் பொட்டு, எட்டுக்கல் பேசரிகள், வெற்றிலைக் காவியேறின உதடுகள் பற்கள், கழுத்தில் கோட்ஸ்டாண்ட் கணக்காய் ஒரு இரட்டை வடம் சங்கிலி, பவழமாலை, கனமாய் தங்கத்தாலிச்சரடு, கூடவே மஞ்சளும் பிசுக்கும் கலந்தேறிய கயிறு.

இரட்டை நாடி சரீரம்... உருக்கினால் வஞ்சனையில்லாமல் நான்கு சாதாரண சைஸ் பெண்களை பண்ணக்கூடிய பருமன். மணிக்கட்டைத் தாண்ட இயலாமல் காப்பு மாதிரி மொழுமொழு கையைக் கவ்விப்பிடித்த வளையல்கள், சாண் அகல சரிகை போட்ட பட்டுப்புடவை...

படி ஏறி நடந்து உள்ளே வந்தது, மூச்சிரைக்கப் பண்ணி இருக்க வேண்டும்.

"என்னா பேபி, மூச்சிரைக்குதா? ஆஸ்வாசப் படுத்திக்க! தண்ணி வேணா சாப்பிடறியா?" என்று பெரியவர் கரிசனத்தோடு உபசரிக்க, பக்கென்று வெடித்துக் கொண்டு எழுந்த சிரிப்பை அடக்குவதற்குள் நந்தினி சிரமப்பட்டுப் போனாள்.

மனைவியைக் கவனித்து முடித்த திருப்தியுடன் பெரியவர் இவள் பக்கம் திரும்பினார்.

"வணக்கங்க..."

"வணக்கம்..."

"ஊருக்குப் போகோணும்... உங்களாண்ட வந்தா வெவரம் சொல்லித்தருவீங்கன்னு கோவாலு அனுப்பி வெச்சான்..."

"கோவாலுவா?"

"ஆமாங்க... புவையில கோவாலு... அவன் எனக்கு மச்சான் மொறை ஆகோணும்...

கோவாலுவோட அப்பாரும், இவங்களோட அப்பாரும் ஒண்ணு விட்ட அண்ணன் தம்பிங்க... அப்பன்னா கோவாலு எனக்கு மச்சான் மொறைதானங்க ஆகோணும்?"

விட்டால், நிறுத்தாமல் புகையிலை கோவாலுவின் ஜாதகத்தையே இவர் பிட்டுவைக்கலாம் என்ற பயம் உண்டாக நந்தினி அவசரமாய், "உங்களுக்கு எந்த ஊருக்குப் போகணும்? இது வெளிநாட்டுக்கு டிக்கெட்



எழுதற கவுண்டர்..." என, பெரியவர் தங்கப்பல் தெரிய சிரித்தார்.

"அதான் விசாரிச்சுத் தெரிஞ்சிகிட்டமே! உள்ளார நுழைஞ்சதும் சிவத்த நிறமா, வெடவெடன்னு ஒரு பொம்பளை குந்தியிருக்காங்க இல்ல, அவங்கதான் 'இப்படி நேர போயி இடக்கைப் பக்கம் திரும்புங்க... வெளிநாட்டுக்குப் போற வெவரம் சொல்ற கவுண்டர் இருக்குன்னு' சொல்லி அனுப்பிச்சாங்களே..."

"அப்ப, நீங்க வெளிநாட்டுக்கா போகப்போறீங்க?"

"ஆமாங்க... அமெரிக்காவுக்குங்க... எங்க தம்பி அங்கிட்டு வேலையா இருக்கான் இல்லே..."

"உங்க தம்பிகூட கொஞ்ச நாள் இருந்திட்டு வர்றதா இருக்கீங்களா?"

"தம்பினா தம்பி இல்லிங்க... எங்க மவனைத்தான் நாங்க ஆசையா தம்பி, தம்பினு சொல்லுவோம்... அதுவும் இவங்க இருக்காங்களே..."

பேசிக்கொண்டுபோனவரை நந்தினி இடை மறித்தாள்.

"நீங்க ஸ்டேட்ஸ்க்குப் போக விரும்பறீங்க, ரைட்... தனியாவா, இல்ல இவங்களும் உண்டா?"

"நீங்க சொல்ற இடத்துக்கு இல்லீங்க... அமெரிக்காவுக்குத்தான் நாங்க இரண்டு பேரும் போகோணும்..."

நந்தினி சிரிப்பை அடக்கமுடியாமல், "சரி, அமெரிக்காவுக்கு–" என்று தன்னைத் திருத்திக்கொண்டு, மேலே கேட்டாள்.

"டிக்கெட் இங்க எடுக்கப்போறீங்களா, இல்லை, உங்க மகன் அங்கேயிருந்து அனுப்பப் போறாரா? பாஸ் போர்ட் இருக்கா, வாங்கணுமா?"

"பாஸ்போர்ட் எல்லாம் இனிமேதாங்க எடுக்கோணும்! நாங்க உண்டு, எங்க கிராமம் உண்டுனு இருந்தவங்கள, தம்பிதான் வலுக்கட்டாயமாக் கட்டி இளுக்கறான். 'நா இவ்ளோ சம்பாரிக்கறேன்... கடல் மாதிரி வீடு வெச்சிருக்கேன். ரெண்டு கார் வெச்சிருக்கேன். நீங்களும் அம்மாவும் ஒரு நடை வந்து பாக்காட்டி எப்படி'னு வருத்தப்பட்டுக்கறான்... அதான்... போலாம்னிட்டு... புவையில கோவாலுகூட..."

அவர் மறுபடி புகையிலை கோவாலுவைப்பற்றி பேசத் துவங்க, நந்தினி "டிக்கெட் விவரம் சொல்லுங்க" என்றாள் குறுக்கிட்டு.

"அ... சொல்லத்தானே வர்றேன்... நாங்க கிளம்பத் தயார்னா தம்பி அங்கிட்டிருந்தே டிக்கெட் எடுத்து அனுப்பிடறானாம், எளுதியிருக்கான். 'மொதல்ல பாஸ் போர்ட், அது, இது எல்லாம் ஏற்பாடு பண்ணிக்கோங்க, மாசக் கடைசில டிக்கெட் அனுப்பிடறேன்னு எளுதியிருக்கான்... இதப்பாருங்க..."

பேசியவர் கையில் கொணர்ந்திருந்த துணிப்பையிலிருந்து ஒரு வெளிநாட்டுக் கவரை எடுத்து நீட்டினார்.

பாஸ்டனிலிருந்து வந்திருந்த லெட்டரை நந்தினி படித்துவிட்டு நிமிர்ந்தாள்.

"பாஸ்போர்டுக்கு ஏற்பாடு பண்ணிடலாம். 'விசா' வாங்க உங்க பிள்ளை லெட்டர் ஆஃப் அஃபிடவிட் அனுப்பறேன்னு எழுதியிருக்காரே, அனுப்பிட்டாரா?"



"என்னங்க?"

"அங்க அவர் வாங்கற சம்பள விவரத்தோட உங்களுக்கு அங்க உண்டான அத்தனை செலவுக்கும் தானே பொறுப்பு எடுத்துக்கறதா சொல்ற உறுதி மொழிப் பத்திரம்..."

பெரியவர் அலட்சியமாய் சிரித்தார்.

"அங்கிட்டு போயி அப்டி என்னத்த நாங்க பெரிசா செலவளிச்சிடப்போறோம்! அப்டித் தேவைனா இங்கிட்டிருந்து நாங்களே எடுத்துட்டுப் போறோம்... என்ன பேபி?"

"அதானே!" யானைமாதிரி அந்தம்மாள் தலையாட்ட, நந்தினி மறுபடியும் சிரிப்பை அடக்க கஷ்டப் பட்டுப் போனாள்.

"இங்கேயிருந்து நீங்க ஒரு அளவுக்கு மேல பணத்தை டாலரா மாத்தி எடுத்துக்கிட்டுப் போக முடியாது. தவிர, அங்க போய் நீங்க சீக்கா படுத்தீங்கனு வெச்சுக்கங்க, அந்த நாட்டுல வைத்தியச் செலவு பண்ணி நமக்குக் கட்டுப்படி ஆகாது... அதனால உங்க மகன் அந்தப் பொறுப்பை ஏத்துக்கறதா உறுதிமொழி குடுத்தா. இங்க 'விசா' குடுப்பாங்க..."

இப்போது அந்த அம்மாள் சரக்கென்று முன்னால் சாய்ந்தாள்.

"ஏங்க இப்படி அச்சான்யமா பேசறீங்க?"

நந்தினி விழித்தாள்.

"அச்சான்யமா? இல்லீங்கயார் வெளிநாட்டுக்குப் போகணும்னாலும்..."

அவள் பேசுவது காதில் விழாத தினுசில் அந்தப் பெண்மணி எழுந்து நின்றாள்.

"மொதமொதல்ல நாமளே கடல் கடந்து அந்நிய தேசத்துக்குப் போகப்போறோமேனு கலங்கிட்டிருக் கோம்... நல்லபடியா போயிட்டுவாங்கனு சொல்லாம, அங்கிட்டு வியாதிவந்து படுத்தா செலவுக்கு என்ன பண்ணுவீங்கனு அச்சான்யமா எதுக்குக் கேக்கோணும்? எளுந்திரிங்க... நாம போயி வேற எங்கிட்டாவது நல்ல எடமா பாத்து டிக்கெட் எடுப்பம்... இங்க தோதுப் படாது..."

கோபத்துடன் பேசிக்கொண்டே திரும்பி அசைந்து அசைந்து அந்தம்மாள் நடக்க, "த... பேபி... பேபி... இரு... நா சொல்றதக் கேளு..." என்றவாறு துணிப்பையுடன் அந்தப் பெரியவரும் பின்னால் சென்றார்.

அப்படி துசுக்கென்று கோபித்துக்கொண்டு அவர்கள் செல்ல, நந்தினி முதலில் விழித்தாள். பின்னர் வாய்விட்டுச் சிரித்தாள்.

"என்ன, தனக்குத்தானே சிரிச்சாறது? சொல்லிட்டு சிரிச்சா... நானும் சேர்ந்து சிரிப்பேன் இல்லே?"

வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்படத் தயாராக வந்த வேணி அருகில் நின்று கேட்டதும், நந்தினி தொடர்ந்து சிரித்தாள்.

"என்னப்பா... எதுக்கு இத்தனை சிரிப்பு? வீட்டுக்குக் கிளம்பறதா இல்லியா? கஸ்டமர் இருந்தாங்களேனு



நானே தாமதிச்சு வந்திருக்கேன்... மணி என்ன தெரியுமா? அஞ்சரை..."

நந்தினி கண்களில் ததும்பிவிட்ட நீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள்.

"சரியான வெகுளிங்க, வேணி... பாஸ்டன்ல இருக்கற பிள்ளைகிட்ட போற திட்டத்தோட வந்தாங்க..."

"சரி, இதுல சிரிக்கறதுக்கு என்ன இருக்கு?"

"விசா வாங்க லெட்டர் ஆஃப் அஃபிடவிட் வேணும்னு சொன்னேன். அப்டின்னா என்னங்க...னு கேட்டார். எதிர்பாராத செலவுக்கு... சீக்கா, சீக்கா படுத்து கிட்டா உண்டாற செலவுக்கு உங்க பிள்ளை தான் பொறுப்பேத்துக்கறதா சொல்ற லெட்டர்னு சொன்னதும், அந்தம்மாக்கு கோபம் பொத்துகிட்டு வந்திடுச்சு... 'அச்சான்யமா பேசறீங்களா?'னு கோவிச்சுகிட்டு எழுந்து போயிட்டாங்க!"

"அடப்பாவமே! இது எல்லா நாட்டு அரசாங்கமும் வழக்கமா கேக்கற லெட்டர்தான்னு சொல்றதுதானே?"

"விளக்கமாப் பேச எங்க விட்டாங்க, வேணி? இன்ஃபாக்ட், வெளிநாடுகளுக்குப் போயி அங்க செத்துக் கித்து போயிட்டா சவ அடக்கம், அல்லது நம்ம நாட்டுக்கு திரும்பப் பிரேதத்தைக் கொண்டுவரச் செலவு எல்லாம் இதுல சேர்த்தினு அந்த லெட்டர்ல எழுதியிருக்கணும்ன்ற விதியை நா சொல்லியிருந்தா, அந்தம்மா என்னை நார்நாரா நகத்தாலியே கிழிச்சி போட்டிருப் பாங்க..."

இப்போது நந்தினியோடு வேணியும் சேர்ந்து கொண்டு சிரிக்க, மேஜையைப் பூட்டிவிட்டு இருவரும் வெளியில் வந்தார்கள்.

**அ**ண்ணாசாலை கசகசவென்று இருந்தது.

நாள் முழுக்க உழைத்து அலுத்துப்போய் வீடு திரும்பும் அவசரத்தில் சாரிசாரியாய் மனிதர்கள்... பஸ்ஸில், வண்டிகளில்...

"ஜானா நாளைக்கு வேலைக்கு வருவாளா?"

"வருவானுதான் நினைக்கறேன்... நேத்து நா போய் பாத்தப்பவே நார்மல் வந்துடுத்தே..."

"நாந்தான் போகணும்னு பார்க்கறேன். வீட்டுல வேலை ஒழியறதே இல்லை... அம்மாக்கு பீ.பி. அதிகமா இருக்கு... அரை உப்பு போட்டுகிட்டு சாப்பிடுன்னா, காதுலையே வாங்கறதில்லே..."

அதிசயமாய், லேசாய் வேணி அலுத்துக்கொள்கிற மாதிரி தோன்ற, கரிசனத்துடன் அவளை நந்தினி ஏறிட்டாள்.

சம்சாரி இல்லை, பிள்ளை குட்டி என்று ஏதும் இல்லை... ஆனால் கழுத்து வரை குடும்பப் பொறுப்பை சுமந்து கொண்டு, தனக்கென்று ஒரு தனி வாழ்க்கை வேண்டும் என்று எண்ணாமல், பெற்றவளையும், கூடப் பிறந்தவர்களையும் தன் தோளில் ஏற்றிக்கொண்டு...

"ஜானா நா வந்து பாக்காததை குறையா சொன்னாளா, நந்து?"



"சீச்சி... இதுல குறைப்பட என்ன இருக்கு...? இந்த மாதிரி எல்லாம் தப்பா எடுத்துக்கறது ஜானாவுக்கு சாத்தியமே இல்ல, வேணி..."

"யு ஆர் ரைட்... யாரையுமே எதுக்குமே அனாவசியமா குத்தம் குறை சொல்லறவ இல்ல ஜானா... ஆனா, தப்பு தண்டா கண்டா மட்டும் பொறுத்துக்கவே மாட்டா... மூஞ்சிக்கு நேராபட்டுனு கேட்டுடுவா!"

பஸ் ஸ்டாண்டில் இவர்கள் போய் நின்றபோது தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

"இந்த சனி, ஞாயிறுக்கு நீ திருச்சிக்குப் போறதா இருக்கியா, நந்து?"

"ம்ஹூம்.. அவர் இங்க வரேன்னு எழுதியிருக்கார்..."

"வெரிகுட்... வந்தா நாலு நாள் இருப்பாரா?"

"தெரியல, இருப்பார்ன்னுதான் தோணுது.. போன வாரம் திருச்சிக்கு நா போயிருந்தப்போ, அவர் இந்த ஊருக்கு வந்து ப்ராக்டீஸைத் தொடங்கறதுபத்தி பேசினார்னு உன்கிட்ட சொன்னேன் இல்ல?"

"ம்... யோசிச்சிட்டிருக்கார்னு சொன்னே..."

"மதியம் சாப்பிடறப்பவே உன்னண்ட சொல்லணும்னு இருந்தேன்... வெங்கட் கூடவே இருந்ததால சொல்ல முடியல... இங்க வந்திடறதா அவர் தீர்மானம் பண்ணிட்டாராம். நேத்து வந்த லெட்டர்ல எழுதியிருக்கார்."

"அப்பாடா! எங்க வேலையை விட்டுட்டு உன்னை திருச்சிக்கு வரச் சொல்லிடுவாங்களோன்னு பாத்தேன்... நல்ல வேளையா அப்படி நடக்கல..."

நந்தினி குரலைத் தழைத்துக்கொண்டாள்.

"பெத்தவங்களை விட்டுட்டு அவரை இந்த ஊரோட நா வரப்பண்ணிட்டேன்னு யாராவது ஏசிக் காட்டுவாங்களோனு பயமா இருக்கு, வேணி..."

"யாரோன்னா, அவங்க வீட்டுலியா?"

"ம்..."

"நீ அப்படி மோகன்கிட்ட பேசினியா?"

"அய்யய்யோ..."

"அப்பறம் பயம் எதுக்கு? நீ செய்யாத ஒரு காரியத்துக்கா உன்னை யாராவது ஏசினா, அதை நீ எப்படித் தடுக்க முடியும்... ரிலாக்ஸ் நந்து... உன்னோட இங்க தனியா இருக்கணும்னு மோகன்தானே விரும்பி வர்றப்போ, நீ ஏன் பயப்படறே! இந்த நியூஸை ஜானா கேட்டா, ரொம்ப சந்தோஷப்படுவா..."

"நேத்தி பாத்தப்பா சொல்லிட்டேன்... எஸ், ஷி வாஸ் வெரி ஹாப்பி..."

"இங்க அவர் யார் கிட்டாயாவது ஜூனியரா இருக்கப் போறாரா?"

நந்தினி தெரியாது என்று உதட்டைப் பிதுக்கினாள்.



"அவர் எது டிஸைட் பண்ணாலும் எனக்குச் சம்மதம் தான், வேணி... எனக்காகப் பெத்தவங்களை விட்டுட்டு, புது இடத்துக்கு வரத் தீர்மானிச்சதே பெரிய விஷயம்... அதனால, அவரா விவரம் சொல்றவரைக்கும் நானா என்ன, ஏதுன்னு எதுவும் கேக்கறதா இல்லை..."

புருஷன் செய்யப்போகும் காரியத்தினால் நெகிழ்ந்து போய் கண்கள் பளபளக்க நந்தினி பேசியதும், 'புரிகிறது' என்கிற மாதிரி புன்னகைத்த வேணி, தொடர்ந்து ஏதாவது பேசினால் அவள் இன்னும் உணர்ச்சிவசப்பட்டுப் போகலாம் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டி, வலப்பக்கம் திரும்பி பஸ் வருகிறதா என்று பார்க்க முற்பட்டாள்.



# 8

"**மா**ப்பிள்ளை எழுந்திட்டாரானு பாக்கறியா, நந்து?"

நந்தினி பாத்திர அலமாரியில் இருந்த டைம் பீஸைப் பார்த்தாள்.

அது ஏழு அடிக்க இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கின்றன என்றது.

கீரை ஆய்ந்துகொண்டிருந்தவள் எழுந்து, முன் அறைக்குச் சென்று எட்டிப்பார்த்தாள். மோகன் நல்ல உறக்கத்தில் இருப்பது புரிந்தது.

அப்பறேன்..."

"தூங்கறார்மா... ஏழு ஆகட்டும்... எழுப்பறேன்..."

"நேத்து மாதிரி ஆயிடக்கூடாது, நந்து... அடிக்கொரு தரம் எழுந்திட்டாரானு கவனிச்சுக்கிட்டே இரு..."

மீண்டும் கீரை ஆயத் தொடங்கியதை நிறுத்தாமல் நந்தினி சரி என்று தலையசைத்தாள்.

இந்த ஊரோடு வந்துவிட்ட ஒரு மாசமாய் இவர் களுடனேயே தங்கியிருக்கும் மோகன், நித்தமும் ஏழு மணிக்குக் குறைந்து எழுந்திருக்கும் வழக்கம் இல்லை என்பதால், நேற்றும் அப்படித்தான் எழுந்திருப்பார் என்ற நினைப்பில் நந்தினி எண்ணெய் தேய்த்து குளிக்கப் போய்விட, அதிசயமாய் ஆறரை மணிக்கெல்லாம் எழுந்துவிட்ட மோகன், காபிக்காக ஐந்து நிமிஷம் காத்துப் பார்த்திருக்கிறான்... யாரும் காபியுடன் வராது போக சட்டையை மாட்டிக்கொண்டு ஹோட்டலில் சாப்பிடப் போய்விட்டான்.

காய்கறி வாங்கச் சென்றிருந்த குஞ்சிதபாதம் திரும்பி வந்து உள்ளறையில் மோகனைக் காணாமல் சமையலறையில் வேலையாய் இருந்த பங்கஜத்திடம் வந்து, "மாப்பிள்ளை எங்க?" என்று கேட்க, அவள் விழித்தாள்.

ஏழரை மணி சுமாருக்குத் திரும்பி, வேசான கோபத்துடன் பேப்பரும் கையுமாய் மோகன் அமர்ந்த பிறகு மெதுமெதுவாய் விவரம் புரிபட, உள்ளே வந்து பெண்ணையும் மனைவியையும் நிற்க வைத்து அடிக் குரலில் குஞ்சிதபாதம் கடிந்துகொண்டார்.

"மாப்பிள்ளை எழுந்திட்டாரா, காபி சாப்பிட் டாரானுகூடக் கவனிக்காம அப்படி இங்க என்ன வேலை வெட்டி முறியுது? ஹோட்டலுக்குப் போய் மாப்பிள்ளை காபி சாப்பிட்டதை, யாராச்சும் தெரிஞ்சவங்க பாத் திருந்தா என்ன நினைப்பாங்க? ஏதோ இந்த மட்டுக்கும் அவர் நல்ல பிள்ளையா இருக்கக்கொண்டு, விவரம் பெரிசா கலை! இல்லாட்டிபோனா, முகத்தைக் கொண்டு நாம எங்க வெச்சுக்கறது?"



தலையைக் குனிந்துகொண்டு அத்தனையும் வாய் திறக்காமல் ஏற்றுக்கொண்ட பங்கஜம், நுரைக்க காபி கலந்து நந்தினியிடம் கொடுத்து அவளை வாசலுக்கு அனுப்பி, தானும் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தி, பின்னோடு வந்தாள்.

நந்தினி நீட்டிய காபியை வாங்காமல், "நா சாப்பிட் டாச்சு... வேணாம்..." என்று மோகன் மறுத்ததும், சற்று தள்ளி நின்றிருந்த பங்கஜம் சின்னக் குரலில் "மன்னிச்சுக்கணும்... தெரியாம தப்பு நடந்துபோச்சு" என்று கெஞ்சிவிட்டு, "நீயும் மன்னிப்பு கேட்டுக்க, நந்து-" என்றும் கூற-

நந்தினி தன் பங்குக்கு, "ஸாரிங்க... நீங்க ஏழு மணிக்கு முன்னால எழுந்திருக்கமாட்டீங்கனு குளிக்கப் போனது என் தப்புதாங்க..." என்றதும், எதுவுமே நடக்காத மாதிரி, "எதுக்கா ஒண்ணுமே இல்லாததைப் பெரிசு பண்ணறே, நந்து! இப்ப காபி சாப்பிடணும் அதானே? கொண்டா..." என்றபடி மோகன் டம்ளரை வாங்கிக்கொண்டான்.

முறுக்காய் முகத்தைத் திருப்பிக்கொண்டு உட் காராமல், சட்டென்று மாப்பிள்ளை தழைந்து கொடுத்துவிட்டார் என்று பங்கஜத்துக்குச் சந்தோஷமான சந்தோஷம்.

"தடித்தடியா வீட்டுல மூணு பொம்பளைங்க இருந்தும், வந்திருக்கிற மாப்பிள்ளையைச் சரியா கவனிக்காததைப் பெரிசு பண்ணாம போனாப்போறதுன்னு விட்டுக்குடுத்துட்டாரே - இந்த குணம் யாருக்கு வரும்?" என்று அம்மா நீட்டிமுழக்கியதை பெருமையுடன் நந்தினி ஆபீஸில் ஜானா, வேணியிடம் சொல்ல, ஜானா புருவங்களை உயர்த்தினாள்.

"இதுல சந்தோஷமோ, பெருமையோ பட என்ன இருக்கு, நந்து?"

"........................"

"அஞ்சு நிமிஷம் காத்துப்பாத்துட்டு காபி வரலைன்றதுக்காக ஹோட்டலுக்குப் போய் மோகன் சாப்பிட்டது உனக்கு சரினு படுதா?"

"பின்னே? புருஷன் எழுந்திட்டாரா இல்லையானு கூட கவனிக்காம குளிக்கப் போனது என் தப்புதானே? அப்பா காய் வாங்கப் போயிட்டார், கல்பனா மொட்டை மாடில படிச்சிட்டிருந்தா... அப்பறம் அவரா உள்ளே வந்து அம்மாகிட்ட காபி தாங்கனு கேக்கவா முடியும்?"

"ஏன்? கேட்டா என்ன? உங்கம்மா கடிச்சித் தின்னுடுவாங்களா?"

"இது விதண்டாவாதம், ஜானா... கல்யாணமாகி நாளாகல... மாமியார் முகத்தைப் பாத்து கேக்க வெக்கப் படறது சகஜம்தானே!"

ஜானா தோளைக் குலுக்கினாள்.

"நா ஒண்ணும் விதண்டவாதம் பண்ணல... நீ தான் சப்பைக்கட்டு கட்டறே... மாமியாரும் அம்மா மாதிரிதானே! அவங்ககிட்ட கூச்சம் என்ன? அதுவும் ஒரு மாசமா உங்க வீட்டோடயே இருக்கறவருக்கு! அட, உங்கம்மாகிட்ட கேக்க வேணம்பா கூடத்துலேந்தே 'நந்தினி'னு குரல் குடுத்தா, மாப்பிள்ளை எழுந்திட்டாருனு உங்கம்மா புரிஞ்சுக்க மாட்டாங்களா?"



ஜானாவின் கேள்விகளுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல் நந்தினி பார்வையைத் தழைத்தாள். கை விரல்களை மடக்கி நகங்களை ஆராய்ந்தாள். ஹேர் ஸ்லைடை உருவி அழுக்கேயில்லாத நகங்களில் அழுக்கை எடுத்தாள்.

ஜானா அவள் தோளில் கை வைத்தாள்.

"குறை சொல்றேன்னு நினைச்சு வருத்தப்படாதே. நந்து, துவக்கத்துலேந்தே அனுசரணையோட எல்லாரும் நடந்துக்க ஆரம்பிச்சா, நாளைக்கு எதுவுமே பிரச்னையாகாம தடுக்கறது சுலபம்... உனக்குத் தெரியாததை புதுசா நா சொல்ல வரலை... ஆனாலும்... உன் விட்டுக் குடுக்கற நல்ல சுபாவத்தை யாரும் தப்பா எடுத்துக்கக் கூடாதென்ற ஆதங்கத்துல பேசறேன். நோபடி ஷுட் டேக் திங்ஸ் ஃபார் க்ராண்டட் புரியுது இல்லை?"

முதல் நாள் ஜானா பேசிய பேச்சுக்கள் மீண்டும் மனசுள் வரிவரியாய் ஓட, எதற்கு அந்த நினைப்பு இப்போது என்று அதை ஒதுக்கி, கீரையை ஆய்ந்து முடித்து எழுந்தாள். காம்புகளையும் இதர குப்பைகளையும் துடைப்பதால் சுத்தமாகப் பெருக்கித் தள்ளின நிமிஷத்தில், 'நந்து, மாப்பிள்ளை எழுந்திட்டார்' என்று அப்பா குரல் கொடுத்தது காதில் விழ, துடைப்பத்தைக் கதவு மூலையில் வைத்தாள்.

கைகளைக் கழுவிக்கொண்டாள்.

மாப்பிள்ளைக்கென, காய்ச்சாமல் தனியாக அம்மா வைத்திருந்த பாலை பொங்கக் காய்ச்சி திட்ட மாய் டிகாக்ஷன் சர்க்கரை போட்டுக் கலந்து எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

அப்பாவின் அருகில் அமர்ந்திருந்த கணவனிடம் லோட்டாவை நீட்டினாள்.

மோகன் காபியைக் குடித்து, நந்தினி டம்பளருடன் திரும்புவரை பேசாமல் இருந்த குஞ்சிதபாதம், "ராத்திரி கரெண்ட் நின்னுபோச்சே... ஃபேன் இல்லாம தூங்க கஷ்டப்பட்டீங்களா?" என, மோகன் 'பச்' என்றான்.

"ஃபேன் இருந்தா மட்டும் என்ன வாழுது! நாற்பத்தெட்டு அங்குலம் ஃபேன்னா காத்து நல்லா வரும்... டேபிள் ஃபேன் வெச்சி படுத்து எனக்குப் பழக்கமில்லை..."

குஞ்சிதபாதம் அசட்டுச் சிரிப்பொன்றை வெளி யிட்டார்.

"ஆமாமா... டேபிள் ஃபேன்ல காத்து அவ்வளவா வராதுதான்... இந்தக் கூடம் ஒண்ணுலதான் பெரிய ஸீலிங்ஃபேன் இருக்கு... ஆனா, புதுசா கல்யாணமான வங்களை நடுக்கூடதுல எப்படி... ஹீ... ஹீ..."

நந்தினி சமையலறை வாசலிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

"நீங்க குளிக்கறீங்களா? வெந்நீர் விளாவி வெக்கட்டுமா?"



"வேணாம்... அரை மணி போகட்டும்... அந்தப் பேப்பரை எடு..."

கையெட்டும் தொலைவில் இருந்த பேப்பரை, அங்கிருந்து வந்து நந்தினி எடுத்துத் தந்தபோது, கல்பனா அறைக்குள் வந்தாள்.

"தோய்க்க ரெண்டு டெரிகாட் ஷர்ட் இருக்குனு சொன்னீங்களே, அத்தான்... தாங்க, தோய்ச்சிப் போட் டுட்டு நா குளிக்கப் போறேன்..."

"ஹாங்கர்ல மாட்டியிருக்கேன் பாரு..."

உள்ளறைக்குச் சென்று நீலம், க்ரீம் நிறங்களில் சட்டைகளை எடுத்து வந்த கல்பனா, "இதுவா?" என்றாள்.

"ம்."

"உனக்கு வேற வேலை ஏதாச்சும் இருந்தா பாரேன், கல்பனா, நா இதச் செய்யறேன்..."

"ஒரு வேலையும் இல்லக்கா... இன்னிக்கு காலேஜ் லீவு. துணிகளைத் தோய்ச்சி கஞ்சி பிழிஞ்சி இஸ்திரி பண்ணப் போறேன். அத்தான், உங்க துணிங்க வேற ஏதாச்சும் இருந்தா குடுங்க..."

"பாண்ட்டுல பட்டன் கட்டணும்..."

"குடுங்க..."

"அதெல்லாம் சாயங்காலம் ஆபீஸ்லேந்து வந்து நா தெச்சிவைக்கறேன், கல்பனா,"

"இருக்கட்டும்... நா ஒண்ணும் கோணலா தெச்சிட மாட்டேன்... உனக்கு ஏற்கனவே வேலை தலைக்கு மேல இருக்கு... குளிக்கப் போக்கா, அப்பறம் ஆபீஸுக்கு நேரமாயிடும்..."

சிரித்துக்கொண்டே கல்பனா துணிகளுடன் கொல்லைப்பக்கம் போனதும், பேப்பரில் கவனத்தைச் செலுத்தின மோகன், சரியாக அரை நிமிடத்தில் பார்வையை உயர்த்தி 'நந்து' என்று மனைவியை அழைத்தான்.

"என்னங்க?"

"சொல்ல மறந்திட்டேன்... நேத்து என் சினேகிதன் குருமூர்த்தியப் பாத்தேன். மந்தைவெளியில் இருக்கான். அவன் வீட்டுக் கிட்ட ஒரு போர்ஷன் காலி ஆவுதாம்... வேணும்னா வீட்டுக்காரங்ககிட்ட பேசி ஏற்பாடு பண்ணறேன்னான்..."

நந்தினி அப்பாவைப் பார்த்தாள். அவர் மோகனை ஏறிட்டார்.

"என்ன மாப்பிள்ளை, இது, திடும்னிட்டு?"

"என்னிக்காவது ஒருநாள் தனியா போகவேண்டியவங்கதானே? ஆயுசுக்கும் உங்க கூடவே இருக்க முடியுமா? எங்க வீட்டு மனுஷங்க வந்துபோகணும்னு விரும்பறாங்க... அதனால, சீக்கிரமா எங்களுக்குனு ஒரு இடம் பார்த்துக் கிட்டு போயிடறது நல்லதுதானே?"

"அ... அ... நல்லதுதான்... ஆனாலும் இவ்வளவு சுருக்க..."



இழுத்தவரை லட்சியம் பண்ணாமல் மோகன் நந்தினி பக்கம் திரும்பினான்.

"சாயங்காலமா போய் பாத்திட்டு வந்துடலாமா?"

"சரிங்க."

"ஒருமணி நேரம் பர்மிஷன் சொல்லிட்டு வந்திடு... நானும் ஸீனியர் வீட்டுலேந்து நாலுக்கெல்லாம் வந்துடறேன்..."

"சரிங்க."

விஷயம் அதோடு முடிந்த தினுசில் பேப்பருக்குள் மோகன் புதைந்துகொள்ள, நந்தினி சமையலறைக்கு வந்தாள்.

மோகனின் குரல் காதில் விழுந்திருந்ததில், இவளைக் கண்டதும் பங்கஜம் தழைந்த குரலில், "வீடு பாக்கப் போறீங்களா?" என்றாள்.

"ம்..."

"இப்ப என்ன அவசரம்... இன்னும் ரெண்டு மூணு மாசம் கழிச்சி மெதுவா பாக்கக்கூடாதா?"

"........................"

"இங்க மாப்பிள்ளைக்கு வசதி குறைவா இருக்காமா?"

"அதெல்லாம் இல்லைம்மா...."

"டேபிள் ஃபேன் வெச்சுக்கிட்டு படுக்கறது சிரமமா இருக்கா?"

"இல்லைம்மா..."

"ஒருவேளை, நேத்து கவனிக்காம இருந்திட்ட வருத்தமா?"

நந்தினி சத்தம் எழாமல் சிரித்தாள்.

"தனிக்குடுத்தனம் போகணும்னு அவர் விரும்பறது நியாயம்தானேம்மா? எத்தனை நாளைக்கு பொண்டாட்டி வீட்டோட இருக்கமுடியும்? அடுத்தவங்க சிரிக்கமாட்டாங்களா? தவிர, அவங்க வீட்டு மனுஷங்க வந்து போகணும்ன்ற ஆசை அவருக்கு இருக்காதா?"

"அதுவும் சரிதான்..."

கொதித்த குழம்பில் கடைந்த பருப்பைக் கொட்டின பங்கஜம், என்னமோ யோசனை பண்ணுகிற மாதிரி இருந்தாள்.

"என்னம்மா?"

"ஒண்ணுமில்லே... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... சாயங்காலம் எப்ப வருவே?"

"ஒரு மணிநேரம் பர்மிஷன் போட முடியாது. அதனால அரை நாள் லீவு கேட்டுக்கிட்டு வந்துடறேன்... என்ன விஷயம்?"

"பெரிசா ஒண்ணுமில்லே... நீ வா, அப்பறமா பேசிக்கலாம்..."

"அப்ப சரி, நா குளிச்சிட்டு வந்துடறேன்... நாழி ஆச்சு..."



குளித்து, உடை உடுத்தி, கணவன் ஸீனியர் வீட்டுக்குப் போகத் தயாராக உதவிவிட்டு, அவனுக்குச் சிற்றுண்டி பரிமாறின பின், தானும் சாப்பிட்டுவிட்டு நந்தினி கிளம்பினாள்.

**சொ**ன்னபடி இரண்டு மணி சுமாருக்கு வீடு திரும்பினவள், சாப்பிட்டு கூடத்து விசிறிக்கடியில் வந்து உட்கார்ந்ததும், பங்கஜம் ஈரக்கையை தலைப்பில் துடைத்தபடி அவளருகில் வந்து அமர்ந்தாள்.

"கல்பனா எங்க?"

"நல்லா தூங்கறா..."

கழுத்தடியில் துளிர்த்த வியர்வையை பங்கஜம் ஒற்றினாள்.

"ஸ்...ஸப்பா... என்ன வெயில்..."

நந்தினி புன்னகைத்தாள்.

"இதைச் சொல்லத்தான் ஏதோ பேசணும்னு பறந்தீர்களா?"

"நாலு நாளாவே உன்கிட்டே பேசணும்னுதான்... வகையா காலைல மாப்பிள்ளை தனிக்குடுத்தனம் போறது பத்தி சொன்னதும், சரி உடனே பேசிடுவம்னு தோணுச்சு... ஆமா, இப்ப மாப்பிள்ளை யார்கிட்டியோ ஜூனியரா சேர்ந்திருக்காராமே, அது சம்பளத்துக்குத் தானே?"

"யார்கிட்டியோ இல்லம்மா... ஃபேமஸ் கிரிமினல் லாயர் நடராஜன்கிட்டே! சம்பளம் உண்டா இல்லியான்னு எனக்குத் தெரியாதும்மா... ஏன் கேக்கற?"

“இல்லே... தனிக்குடுத்தனம்னு போனா, வாடகை, மளிகை, பால், அது இதுனு ஏகத்துக்கு செலவாகுமே... அத்தனைக்கும் சரியா வருமானம் இருக்குதானு தெரிஞ்சுக்கத்தான்.”

நந்தினி அம்மாவை நெருங்கி அவள் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டாள்.

“எதுவானாலும் விரலுக்குத் தகுந்த வீக்கமா எங்களுக்குனு வர்றதை வெச்சிகிட்டு இருக்கக் கத்துக்க வேண்டியதுதானேம்மா?”

பங்கஜம் வேகமாக தலையசைத்து ஆமோதித்தாள்.

“அதேதான், அதச் சொல்லத்தான் இந்தப் பேச்சையே நா எடுத்தேன்... மாப்பிள்ளைக்கு உன்னை விட கூடுதலாவோ, குறைச்சலாவோ சம்பளம் வரலாம். எதுவானாலும், அதைப் பெரிசு பண்ணாம, புருஷன் சந்தோஷம் முக்கியம்னு நீ இருக்கணும். அவருக்கு அதிகமா வரலியேனு நீ குறைப்படக் கூடாது. இவ நம்மளைவிட அதிகமா சம்பாதிக்கறாளேன்ற ஏக்கம் மாப்பிள்ளைக்கு வரவும் எடம் குடுக்கக் கூடாது... புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் நடுவுல நல்லது, கெட்டது எது நடந்தாலும், அது அந்த நாலு சுவத்தைத் தாண்டிகிட்டு வெளில வரக்கூடாது. இது ரொம்ப முக்கியம்! நா பெத்த மக நாலு பேர் மெச்ச, புருஷனுக்கு அடங்கினவளா இருந்தாதான் எனக்குப் பெருமை, என்ன நந்து?”

வாய்வார்த்தையாக எதுவும் கூறாமல் அத்தனைக்கும் சரி, சரி என்பதாய் நந்தினி தலையசைத்துக் கொண்டிக்கையிலேயே மோகன் வந்துவிட, திட்ட



மிட்டபடி அவர்கள் இருவரும் கிளம்பி மந்தைவெளி போர்ஷனைச் சென்று பார்த்தார்கள்.

முன்னூற்று ஐம்பது ரூபாய் வாடகை, மூன்று மாச அட்வான்ஸ் என்று வீட்டுக்காரர் சொன்னதை ஏற்று மறுநாளே நந்தினியின் பாங்க் கணக்கிலிருந்து பணத்தை எடுத்து முன்பணத்தைக் கட்டினவர்கள், அந்த முதல் தேதி குடிவருவதாகச் சொல்லிவிட்டு வந்தார்கள்.



## 9

கடிகாரம் ஐந்து முறை அடிக்கையில், நந்தினிக்கு விழிப்பு கண்டுவிட்டது.

கல்யாணமாகும்முன் அம்மா வீட்டில், தோளைத் தொட்டு உலுக்கஉலுக்க, ‘இன்னும் கொஞ்ச நேரம்மா... ப்ளீஸ்’ என்று புரண்டு படுக்கும் தான், இன்று மண்டையில் தட்டி விட்ட மாதிரி நித்தமும் ஐந்து மணிக்கு வெறும் கடிகார மணி ஓசையில் எழுந்துவிடுவது வியப்பைத் தந்தது. கூடவே, இப்படிப் பொறுப்புணர்ந்து செயல்படுவது சந்தோஷமாகவும் இருந்தது.

ஆபீஸ் நண்பர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து திருமணத்தில் பரிசளித்த வெளிநாட்டுக் கடிகாரம்.

கால்மணிக்கொரு முறையும், மணிக்கொரு தரமும் இனிமையாய் பாடும் கடிகாரம்...

டண்... டண்... டண்... டண்... டண்.... டண்... டண்....

ஸ்...நி...த...ஸ...ஸ்...ரி...க...ஸ...

சங்கரா மணி ஓசையை ஸ்வரப்படுத்தினபோது, சங்கராபரணத்தின் ஆரோகண, அவரோகணத்தின் சாயல் சுத்தமாய் மனசுள் ஓடியது.

சங்கராபரணத்துக்கு ஈடு இணை, சங்கராபரணம் தான்!

எத்தனை கம்பீரம், அதே சமயத்தில் எத்தனை இனிமை!

"அக்ஷயலிங்கவிபோ..."

ஸ்ருதிப் பெட்டியை வைத்துக்கொண்டு, தீக்ஷிதரின் க்ருதியைப் பாடினால் எத்தனை நன்றாக இருக்கும்?

பாடி எத்தனை நாட்களாயின என்கிற நினைப்பு தலைதூக்க, அந்த உணர்வை அடக்கும் பாவனையுடன் நந்தினி கண்ணை மூடி தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள்.

வாசலில் போகும் பேப்பர்காரப் பையன், விடாமல் சைக்கிள் மணியை அடித்துக்கொண்டு போனபோது, மனசு அதையும் பிடிவாதத்துடன் ஸ்வரப்படுத்தியது.

நி...பா...நி...பா...நி...பா...நி...பா...

தலைக்குமேல் சுழன்ற ஃபேன் 'ரும்ம்' என்ற ஓசையுடன் சுத்தமான மத்யம ஸ்ருதியில் இயங்கியது.

சங்கராபரணத்திலிருந்து நாட்டைக்குத் தாவின புத்தி, மத்யம ஸ்ருதியில் வந்து நின்றது.



ஸ்ரீ சக்ர ராஜ சிம்மாசனேஸ்வரி...

ஸ்ரீலலிதா அம்பிகே புவனேஸ்வரி...

மகாராஜபுரம் சந்தானம் பாடவேண்டும்... கேட்க வேண்டும்.

நாபியிலிருந்து எழும் கனமான சாரீரத்துக்கு, அப்படிக் குழைவதும், நெளிவதும், மயக்குவதும், எப்படித்தான் சாத்தியமாகிறதோ?

'உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கிவிட்டாய்.

உயரிய பெரியோருடன் ஒன்றிட கூட்டி வைத்தாய்'.

'நாதநாமக்ரியா'வை எடுக்கும் விதத்திலேயே கண்கள் பனித்துப்போகும், மனசு ஹா ஹா என்று பரிதவித்துவிடும்...

பாடி நாளாயின என்பதோடு, நல்ல கர்நாடக சங்கீதத்தை நின்று நிதானித்து உட்கார்ந்து கேட்டும் எத்தனையோ காலமாயிற்று என்பதை நினைக்கும் போது, வருத்தமாக இருந்தது.

மோகனுக்கோ, அவன் குடும்பத்தாருக்கோ, கர்நாடக சங்கீதத்தில் அவ்வளவாக ஈடுபாடு இல்லை தான்.

அவ்வளவாக என்ன, சுத்தமாக என்பதுதானே நிஜம்?

அவனாக 'பாடு நந்து' என்று கேட்பான் என்று எதிர்பார்த்து, அது நடக்காமல், தானாகவே ஸ்ருதிப் பெட்டியை வைத்துக்கொண்டு உட்கார்ந்த நாட்களிலும், பத்து நிமிஷங்கள் பொறுத்துவிட்டு, "காபி கொண்டா,

நந்து...” என்பான்; அல்லது, “தலைய வலிக்குது, அந்த சத்தத்தை நிறுத்தேன்...” என்பான் அப்பட்டமாக...

இல்லை... விரல்கள் நீளநீளமாக இருந்தால் கலையுணர்வு அதிகம் என்பது இவரைப் பொறுத்தவரை சரியில்லை.

மோகன் மட்டும்தான் இப்படி என்றில்லை, அவனோடு கூடப் பிறந்தவர்களும் பெற்றவர்களும்கூட ரசனையில் ஒரே மாதிரி இருப்பதுதான் உண்மை.

விவிதபாரதியை வைப்பதிலும், சினிமாவுக்குப் போவதிலும் காட்டிய உற்சாகம், இசைக் கச்சேரி கேட்பதில் கண்டிப்பாய் இல்லை.

தாங்க முடியாமல் அம்மாவிடம் இது குறித்து நந்தினி ஒரு சமயம் குறைப்பட்டுக்கொள்ளவே செய்தாள்.

திருச்சிக்கு ஏதோ வேலையாய் மோகன் சென்றிருந்த போது, தனியாக மந்தைவெளி வீட்டில் இருக்க வேண்டாமென்று பிறந்த வீட்டுக்கு வந்தவளிடம், ‘உன் பாட்டைக் கேட்டு நாளாச்சு, சாமி விளக்கை ஏத்திட்டு ரெண்டு பாட்டுப் பாடேன்’ என்று அம்மா கூறினதும், ஏனோ அந்தக் கனிவான வேண்டுகோளில் சட்டென்று கண்கள் கலங்கிப்போயின.

“என்ன, நந்து?”

“ஒண்ணுமில்லேம்மா...”

“சொல்லும்மா...”



“அவங்களுக்குப் பாட்டுல கொஞ்சம்கூட இண்ட்ரஸ்ட் இல்லேம்மா... பாடி எத்தனையோ நாளாச்சு... ஸாகித்யமெல்லாம் மறந்துகூடப் போயிடும் போல இருக்கு...”

பங்கஜம் அவளை நெருங்கி, நெற்றியில் விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கிவிட்டாள்.

இதமாகப் பேசினாள்.

“அல்ப விஷயத்துக்காகக் கண்கலங்கறது அசட்டுத்தனம் இல்லியா, நந்து! சின்னப்பொண்ணா இருந்தப்ப, நேரம் இருந்திச்சு... எங்களுக்கும் உனக்குப் பாட்டு கத்துத்தரணும்ன்ற ஆர்வம் இருந்திச்சு... கத்துக்கிட்டே, நல்லா பாடினே... கல்யாணமாயிட்டப்பறம் இப்ப உனக்கு பொறுப்பு ஜாஸ்தியாப்போச்சு... புருஷன், குடும்பம், வேலைனு நேரம் சரியா இருக்கு, உக்கார்ந்து பாட பொழுது எங்க? ஒரோர்த்தர் சுபாவம் ஒரோர் மாதிரி... எங்களுக்குக் கர்நாடக சங்கீதம் பிடிக்குது; அவங்களுக்கு இன்னொன்னு... அதானே! நமக்குப் பிடிச்சதே அடுத்தவங்களுக்கும் பிடிக்கணும்னு எதிர்பாக்கறது அடாவடித்தனம் இல்லியா? மாப்பிள்ளை எதிர்ல உக்கார்ந்து ரசிச்சுக் கேட்டாதானா? உனக்கு வேணும்னு தோணினப்ப, நீயா பாடிக்கயேன்...”

“அப்படிப் பாடினாக்கூட அவங்க யாருக்கும் பிடிக்கறதில்லேம்மா.... ‘குளிக்கப் போனா, வந்தமானு இருக்க வேணாமா? பாடிக்கிட்டே கதவை சாத்திகிட்டு ஒண்ணரை மணி நேரமா குளிப்பாங்க? நல்லா இருக்கு உன்னை வளர்த்த லட்சணம்!’னு போன ட்ரிப் வந்தப்ப அத்தை சொல்லிக் காட்டினாங்கம்மா...”

“சொல்லிக்காட்டாமல்! வேலை இருக்கறப்போ ஒரு பொம்பளை பாத்ரூம்ல பாடிக்கிட்டிருக்கறது தப்பு தானே?”

“அது இல்லேம்மா வந்து...”

“வந்துமில்லே, போயுமில்லே! ஒண்ணை மட்டும் நினைப்புல நீ வெச்சிக்கணும், நந்து... கல்யாணத்துக்கு முன்னால வாழ்ந்த வாழ்க்கை வேற, இப்ப வாழறது வேற... அப்ப பொறுப்பு கிடையாது, நினைச்சதைச் செய்யலாம்... இப்ப அப்படி இல்ல! புருஷனுக்கு மிஞ்சி முக்கியமானது வேற ஒண்ணும் இல்லை, இருக்கவும் கூடாது. அவருக்கு எதெதுல நாட்டம் இல்லியோ, அதெல்லாம் நமக்கும் வேணாம்னு ஒதுக்கிடறதுதான் நல்ல மனைவிக்கு அடையாளம்... மாப்பிள்ளைக்குப் பிடிச்ச சமாச்சாரங்கள் எத்தனையோ இருக்குமே... அதுங்கள்ல உனக்கு ஈடு பாட்டை வளர்த்துக்கக் கூடாதாம்மா?”

இத்தனை பேசியும் எதுவும் காதில் விழாத மாதிரி வருத்தத்துடனேயே நந்தினி அமர்ந்திருக்க, பங்கஜம் தொடர்ந்து பேசினாள்.

“லீலாவத் தெரியுமில்ல உனக்கு, நந்து? ராஜாமணி மாமா மகதான்... அருமையா நாட்டியம் ஆடுவா... எக்கச்சக்க ப்ரைஸ் எல்லாம்கூட வாங்கியிருக்கா! கல்யாணம் ஆச்சு, புருஷனுக்கு தான் நாட்டியம் ஆடற துல விருப்பம் இல்லேனு புரிஞ்சப்பறம்... சிரிச்ச முகத் தோடு தனக்கும் இனி அது வேணாம்னு தீர்மானிச் சிட்டா! ‘நா ஆடினது போதும்... இனி, ஒரு மக பிறந்ததும் அவளுக்குச் சொல்லிக்குடுத்து ஆட வெச்சி திருப்திப் பட்டாப் போகுதுன்’னு அவ தெளிவா சொல்லிட்டா!



பொம்பளைனா அப்படித்தான் இருக்கணும்... புருஷனுக்கு அடங்கி, அவன் ருசிக்கேத்தமாதிரி நாம மாறி வாழறதுதான் நல்லது. இப்ப லீலா, பொண்ணுக்கு ஆசைப்பட்ட ரீதில அரங்கேத்தம் பண்ணி ‘ஓஹோ’னு ஊர் மெச்ச வாழறா... முதல்ல சின்ன விஷயங்களுக் கெல்லாம் குறைப்பட்டுக்கற குணத்தை எல்லாரும் விட்டொழிக்கணும்... நிம்மதியா வாழணும்னா, விட்டுக் குடுக்கறதும், அனுசரிச்சுப் போறதும் முக்கியம், புரியுதா?”

புரிந்தது, நன்றாகவே புரிந்தது. அந்தப் புரிதலின் காரணமாய்த்தான், இப்போது தனிக்குடித்தனம் வைத்துவிட்ட ஏழு மாசங்களாய் ஒருதரம்கூட மனசு விரும்புவது போல உட்கார்ந்து பாட முடியாதபோதும், அதை நினைத்து ஏங்காமல் இருப்பது சாத்தியமாகிறது.

டண்... டண்... டண்... டண்... டண்...

ஐந்தேகால் ஆகிவிட்டதைக் குறிக்க மீண்டும் கடிகாரம் ஓசை எழுப்ப, நந்தினி நாழியாகிவிட்ட உணர்வுடன் அவசரமாய் எழுந்து உட்கார்ந்தாள்.

பக்கத்தில், கை கால்களைப் பரத்திக்கொண்டு உறங்கும் கணவனை எழுப்பிவிடாமல், அதிஜாக்கிரதையாக எழுந்து கொல்லைப்பக்கம் போனாள்.

அரைகுறையாகத் தூக்கத்திலிருந்து மோகனை எழுப்பிவிட்டால், வேறு வினையே வேண்டாம்... நாள் முழுவதும் சரியாகச் சாப்பிடாமல், பேசாமல் உர்ரென்று முகத்தை வைத்துக்கொண்டிருப்பார்.

எதற்கு வீண் வம்பு?

முகத்தைக் கழுவிக்கொண்டவள், வாளியில் தண்ணீரையும் கோலப்பொடி டப்பாவையும் எடுத்து வந்து, வாசக் கதவைத் திறந்து விளக்கைப் போட்டுக் கொண்டு, தெளித்துப் பெருக்கினாள். சின்னதாக, கோணல் இல்லாமல் கோலத்தைப் போட்டாள்.

உள்ளே வந்து காபி ஃபில்டரில் பொடி போட்டு வெந்நீர் வைத்து ஊற்றியபின், அன்றைய சமையலுக்கு காய் என்ன தோதாக இருக்கிறது என்று பிளாஸ்டிக் கூடையை எடுத்துப் பார்த்தாள்.

முந்தினநாள் ஆபீஸிலிருந்து திரும்புகையில் வாங்கி வந்திருந்த முள்ளங்கியும், கோஸூம் இருந்தன.

முள்ளங்கி சாம்பார் செய்து, கோஸ் பொறியல் செய்யலாமா?

மோகனுக்கு கோஸ் அவ்வளவாகப் பிடிக்காது.

"மாட்டுக்குப் போடற தழை மாதிரி என்ன காய் இது! தத்! மனுஷன் திம்பானா? பத்தாதகுறைக்கு நாத்தம் வேற!"

சாதாரணமாய் கோஸை இவள் வாங்குவதில்லை தான்; நேற்று என்னமோ அவசரம். வேறு காய் வகையாக எதுவும் இல்லை... வாங்கிவிட்டாள். கொஞ்சமாய் கோஸ் பொறியல் செய்து, நாலு உருளைக்கிழங்கு இருப்பதை காரப் பொடிமாஸ் பண்ணிவிட்டால்?

சமையலைத் தீர்மானித்த கையோடு காய்களை நறுக்கினாள். குக்கரில் பருப்பையும், அரிசியையும் வைத்து விட்டுக் குளிக்கப் போனாள்.



தனிக்குடித்தனம் துவங்கிய முதல் மாசம், மண்ணெண்ணெய் ஸ்டவ்வை வைத்துக்கொண்டு பொழுதோடு சமைத்து வேலைக்குக் கிளம்புவதற்குள், உன்பாடு என்பாடு என்றுதான் ஆகிவிட்டது.

ஒருநாள் பேச்சுவாக்கில், "காஸ் அடுப்பு இருந்தா வசதியாயிருக்கும் எங்க ஆபீஸ் சாக்கோவோட சித்தப்பா இண்டியன் ஆயில்ல ஆபீஸரா இருக்கார்... முன்னேகூட அவரண்ட சொல்லிதான் காஸ் வாங்கினோம்... இப்பவும் சொல்லிப் பாக்கலாமாங்க?" என்று மோகனிடம் கேட்டதும், அவன் கண்களை இடுக்கிக் கொண்டு இவளை ஏறிட்டான்.

"உங்க அப்பா வீட்டுல இருக்கற காஸ், நீ சாக்கோ கிட்ட சொல்லி வாங்கினதா?"

"ஆமாங்க..."

"பணம் குடுத்தது யாரு?"

"அ... அது வந்து..."

"இப்படி வழவழா கொழகொழானு இழுத்தா எனக்குப் பிடிக்காது, நந்து. கேட்ட கேள்விக்கு பதில் பளிச்சினு வரணும்!"

"போன ரெண்டாம் வருஷம் எனக்கு ப்ரமோஷன் ஆனப்பறம், சண்டை போட்டு நாந்தாங்க வாங்கி வெச்சேன்..."

அரைநிமிஷம் எதையோ யோசித்துக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டு மோகன் கேட்டான்.

"வேற என்னென்ன உன் சம்பளத்திலேந்து இது வரைக்கும் அவங்களுக்கு வாங்கித்தந்திருக்கே?"

"பிரமாதமா ஒண்ணும் இல்லீங்க... ஸீலிங் ஃபேன், ஸுமித் மிக்ஸி... இதான்."

"ம்ம்..."

அன்றைக்கு அத்துடன் பேச்சை நிறுத்திய மோகன், நான்குநாள் கழித்து குஞ்சிதபாதம் இவர்களைப் பார்க்க வந்திருந்தபோது, மீண்டும் இந்தப் பேச்சைத் தானாக எடுத்தான்.

அப்பாவுக்குக் காபி கலந்து வந்து நீட்டிய மனைவியை ஏறிட்டுக் கரிசனத்துடன் புன்னகைத்து விட்டு, "பாவம், உனக்கு இந்த ஸ்டவ்வோட மன்னாடறது கஷ்டமா இருக்கு இல்லே?" என்று மோகன் சொன்னதும்,

இது என்ன திடீர்க் கரிசனம் என்று விழித்தாள்.

மோகன் மாமனார் பக்கம் திரும்பினான்.

"காலைல ஆபீஸுக்குப் புறப்படத்துக்குள்ளார ரெண்டு ஸ்டவ் வெச்சுகிட்டாலும் நேரத்தோட சமையல் ஆறதில்ல! காஸ் அடுப்பு கிடைக்குமானு பாத்தோம்... சாக்கோ மூலமா இவ ஏற்கனவே வாங்கிட்டதுல, இன்னொருதரம் தர்றது கஷ்டம்னு சொல்லிட்டாங்க! வீட்டுல சும்மா இருக்கறவங்கன்னா அரைமணி கூடக் கொறச்சல் ஆனாலும் பரவாயில்லை... நிதானமா ஸ்டவ்லே சமைச்சுக்கலாம். ஆனா இவ வேலை அத்தனையும் முடிச்சிட்டு அவதி அவதினு கௌம்பவேண்டியிருக்கு, பாவம்..."

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் பேச்சாய் மாப்பிள்ளை பேசினதை குஞ்சிதபாதம் புரிந்துகொண்டதில்,



மறுநாள் காலை டாணென்று அடுப்பும் ஸிலிண்டரும் மந்தைவெளி வீட்டுக்கு சைக்கிள் ரிக்ஷாவில் வந்து இறங்கிவிட்டன.

"என்னப்பா? ஏம்பா அங்கேயிருந்தத கொண்டு வந்திட்டீங்க... இது அம்மாது... அவங்க கஷ்டப்படமாட்டாங்களா?" என்று அப்பாவிடம் புலம்பினவள், எதையும் காதில் வாங்காமல், "அம்மாவுக்கு என்னம்மா சிரமம்! நீங்க குடுத்தனம் வெச்சதுமே இதக் கொண்டு வெச்சிடணும்னு அவ சொல்லிட்டுதானே இருந்தா... எப்படியோ விட்டுப்போச்சு..." என்று சிரிப்பு மாறாத முகத்துடன் சொல்லிவிட்டு அவர் புறப்பட்டுப் போனதும், முதல்முறையாய் கணவனிடம், "என்னங்க, இது உங்களுக்கே நல்லாயிருக்கா?" என்று ஆதங்கத்துடன் கேட்கவே செய்தாள்.

"எது?"

"ஒருத்தருக்கு வாங்கிக் குடுத்ததை திருப்பி வாங்கறது."

"நா குடுன்னா கேட்டேன்?"

"கேட்டாதானா? எனக்கு ஸ்டவ்ல சமைக்கறது கஷ்டமாயிருக்குனு ஏன் சொன்னீங்க?"

"அது நிஜம்தானே?"

"ஆனாலும், நீங்க நேத்து அப்படி சொல்லக் கொண்டு தானே..."

அவள் முடிக்கும் முன் அடிக்குரலில் மோகன் அதட்டினான்.

"போதும் நிறுத்திக்க... நா எது பேசணும், பேசக்கூடாதுன சொல்ற அளவுக்கு நீ பெரிய மனுஷியா யிட்டியா? அதிகப்பிரசங்கி! வாங்கின சம்பளம் பூராவையும் ஒழுங்கா பாங்க்ல போட்டு வெக்க துப் பில்லை; பெரிசா பேச வந்துட்டா... உங்கப்பனைத்தான் சொல்லு.. மக சம்பாத்யத்துல வெக்கமில்லாம கை நீட்டி பொருள்களை வாங்கிட்டதும் இல்லாம, அதை உனக்குக் கல்யாணமானதும், 'இந்தாம்மா... இது உன்னது, எடுத்துக்கன்னு சொல்ல மனசு இல்லாம, இன்னும் அனுபவிச்சிகிட்டு இருக்காரே? யாரண்ட எது பேசணும் பேசக்கூடாதுனு எனக்குத் தெரியும்... சம்பாரிக்க றோம்ன்ற திமிரை என்னண்ட காட்டாத... ஆமாம்!"

எதிலோ தொடங்கி எங்கோ மோகன் முடிக்க, அந்தக் கோபத்தையும் அடிக்குரலையும் பார்த்து, கேட்டு, வெல வெலத்துப்போனாலும், இவருக்கு அத்தனை எரிச்சல் வருகிற மாதிரி நான் பேசினது தப்புத்தானே என்கிற வருத்தமும் ஏகத்துக்கு எழ, அன்று நடந்த பேச்சுவார்த்தைகளை யாரிடமும் சொல்லாமல் இருந்ததோடு, தவறியும் இன்னொரு முறை இவருக்கு இப்படிக் கோபம் மூளும் வகையில் அதிகப் பிரசங்கித் தனமாய் நான் பேச மாட்டேன் என்றும் நந்தினி உறுதி பூண்டாள்.





# 10

"நந்து?"

"ம்?"

"ஏன்... எப்படியோ இருக்கே?"

"இல்லியே..."

"இதானே வேணாங்கறது..."

"ஒண்ணுமில்லே, ஜானா..."

"உன்னோட முழுசா மூணுவருஷமா பழகிட்டிருக் கேன், என்கிட்டயே டபாய்க்கறயேப்பா..."

"........................"

"சொல்லும்மா..."

"டயர்டா ஸிக்னஸ் அதிகமா இருக்கா?"

"ம்..."

"நாலு மாசம் தாண்டிட்டா அத்தனை மசக்கை இருக்காதுன்னு சொல்லுவாங்க... இன்னும் ஒரு மாசம் பல்லைக் கடிச்சுப் பொறுத்துக்க, சரியாயிடும்..."

நந்தினி அலுப்புடன் சூள்கொட்டினாள்.

"ஏன்தான் இந்த ப்ரெக்னன்ஸி வந்ததோனு இருக்கு, ஜானா..."

வேணி இடக்கையால் டேபிள் மேல் கிடந்த நந்தினியின் கையைப் பற்றிக்கொண்டாள்.

"என்னப்பா, இவ்வளவு அலுத்துக்கறே?"

"பின்னே! என் நிலைமைல இருந்தா உனக்குப் புரியும்."

"அய்யய்யோ... இது எதுவுமே வேணாம்னுதானே நா ஒத்தையாவே இருக்கறதுனு தீர்மானிச்சிட்டேன்!"

கொஞ்சம் கேலியும், கொஞ்சம் நிஜமாகவும் அவள் பேசினதும், மேற்கொண்டு ஏதும் கிளறாமல் மற்ற இருவரும் மௌனித்தார்கள்.

வேணிக்கு வயது இருபத்தியேழு. பார்க்க ஒன்றும் பங்கரை இல்லை. எம்.ஏ. படிப்பு. நல்ல சம்பளம்.

இவளுக்கு மேலே இன்னும் ஒருத்திதான். அலைந்து திரிந்து அவளுக்கு ஒரு இடத்தை முடித்து விட்டால், இவள் லைன் க்ளியர். மனசுக்குப் பிடித்தவனை மணக்கத் தடை ஒன்றும் இல்லை.

இவள் 'ம்' என்றால் தாலியுடன் ஆளும் தயாராக இருக்கிறான். அதே கட்டிடத்தில் மூன்றாவது மாடியில் இயங்கும் 'தமிழ்நாடு கேபிள்' நிறுவனத்தில் காஷியராகப் பணிபுரியும் வேதாசலம்...

ஆனால் இவள்தான் 'ம்' சொல்லாததோடு, இந்தப் பேச்சே வேண்டாம் என்று பிடிவாதமாக இருக்கிறாள்.

**செ**ன்ற வருஷத்தில் ஒருநாள், இவர்கள் நடுவில் இருக்கும் சினேகிதத்தை உணர்ந்து வேதாசலம் வலிய வந்து ஜானா, நந்தினியிடம் பேசவே செய்தான்.



ஒரு சாயங்காலம், வீட்டுக்குக் கிளம்பவேண்டி மேஜை இழுப்பறைகளைப் பூட்டிக்கொண்டிருந்தவள் முன்னால் வந்து நின்றான்.

"மன்னிக்கணும்... நீங்கதானே மிஸஸ் ஜானா ரகு!"

"எஸ்..."

"என் பேர் வேதாசலம்... 'தமிழ்நாடு கேபிள்ல' வேலையாய் இருக்கேன்... உங்ககிட்டயும், மிஸஸ் நந்தினி கிட்டயும் கொஞ்சம் பேசணும்..."

ஜானா தலையைத் திருப்பி அருகில் நின்ற நந்தினியை பார்க்க, அவள் எனக்கு ஒன்றும் தெரியாது என்கிற பாவனையுடன் உதட்டை லேசாகப் பிதுக்கினாள்.

"சொல்லுங்க..."

"பர்ஸனல் மேட்டர் இங்கேயே பேசலாமா, இல்லே ஒரு ஹோட்டலுக்குப் போய் காபி சாப்பிட்டுகிட்டே பேசலாமா?"

ஜானா மறுபடி நந்தினியைப் பார்க்க, அவள் 'என்னப்பா இது?' என்கிற வியப்பில் புருவங்களை உயர்த்தினாள்.

"இங்கேயே பேசலாமா?"

"ஓ யெஸ்... ஐ ஹாவ் நோ அப்ஜெக்ஷன்..."

வேதாசலம் எதிர் நாற்காலியில் அமர, நந்தினி மேஜை மேல் சரிந்து நின்றுகொண்டாள்.

"சொல்லுங்க..."

வேதாசலம் மீசையை வழித்தான்... யோசித்து நிதானமாகப் பேசினான்.

"சுத்திவளைக்காம விஷயத்துக்கு வரேங்க... நா மிஸ் வேணியை விரும்பறேன். அவங்களக் கட்டிக்க விரும்பறேன். இதப்பத்தி அவங்ககிட்ட பேசப் போனா, முகம் குடுத்தே பேச மாட்டேங்கறாங்க... 'நா கல்யாணம் பண்ணிக்கறதா இல்லே. மன்னிச்சிடுங்க'னு... சொல்றாங்களே தவிரவும், என்ன, ஏதுனு வெவரமா சொல்ல மறுக்கறாங்க... நீங்க மூணு பேரும் ஒண்ணா இருக்கிறதை நா பாத்திருக்கேன்... அதான் உங்ககிட்ட மனசுவிட்டுப் பேசிடலாம்னு வந்தேன்..."

நாணாமல், கோணாமல், அதிகப்பிரசங்கித்தனமாக உளறாமல், இரண்டும் இரண்டும் நான்கு என்கிற மாதிரி வேதாசலம் பேச, 'என்ன இது புதுக் கதை' என்று ஜானாவும் நந்தினியும் திகைத்தார்கள்.

வேணியை இவன் காதலிக்கிறானா!

இது குறித்து அவளிடம் பேசினானா!

கல்லுளிமங்கி! வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே?

இவர்களின் கண் விரிப்புகளும், முகபாவனையும், நிலைமையை வந்தவனுக்கு வெளிப்படையாகப் புரிய வைத்திருக்க வேண்டும்.

"உங்ககிட்ட மிஸ் வேணி ஏதும் சொல்லலியா?"

"ம்ஹூம்..."

அரை நிமிஷம் வெறுமனே சென்றது.



"திடும்னு நீங்க வந்து இப்படிப் பேசிட்டதும், என்ன சொல்லறதுனு எங்களுக்குப் புரியல... ரெண்டுநாள் டைம் குடுங்க... வேணிகிட்ட பேசிட்டு வெவரம் சொல்றோம்..."

ஜானா பேசியதும், அவன் எழுந்து நின்றான். வணக்கம் சொல்லிவிட்டு திரும்பி நடந்தான்.

மேஜை மேல் கிடந்த பென்ஸிலைக் கடித்தபடி நந்தினி, "வேணி உன்னண்ட ஏதாவது பேசினாளா?" என,... ஜானா "ம்ஹூம்" என்றாள்.

"வீட்டுக்குப் போறப்போ என்ன விஷயம்னு கேட்டுடுவமா?"

"அவ எங்க இருக்கா? அம்மாவ டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போகணும்னு அரைநாள் லீவு போட்டுட்டு போயிட்டாளே!"

"ஓ! மறந்துட்டேன். அப்புறம்?"

ஜானா டேபிள் வெயிட்டை உருட்டினாள். எடுத்து கண்ணில் வைத்துக்கொண்டு அதன் வழியாக நந்தினியைப் பார்த்தாள்.

"இந்த வேதாசலத்த எனக்குப் பிடிச்சிருக்கு, நந்து... ஸீம்ஸ் டு பீ எ ஸின்ஸியர் சாப்..."

"எனக்கும்தான்."

"என்ன பண்ணலாம்! இந்த தடிக்கழுதை நம்மகிட்ட ஏன் இதப்பத்தி பேசவேயில்லே?"

"........"

"ஒண்ணு செய்யலாமா? நாளன்னிக்கு சனிக் கிழமை, அரைநாள்... ஆபீஸ்லேந்து நேரா என் வீட்டுக்குப் போயிடலாம்." அங்க வெச்சு, 'என்னம்மா விஷயம்'னு உடைச்சு கேட்டுடலாம். அதுக்குள்ளார வேதாசலத்தைப் பத்தியும் கொஞ்சம் விசாரிச்சிடலாம்.. எப்படி?"

திட்டமிட்டபடி போனார்கள்.

ரொட்டியை வாட்டி, ஃப்ரிஜ்ஜிலிருந்த கேக்குடன் டேபிள் மேல் வைத்து, சினேகிதிகளை ஜானா சாப்பிட அழைத்தாள்.

டிபன் சாப்பிட்டு, காபியைக் குடிக்கும்போது நைஸாக பேச்செடுத்தாள்.

"முந்தாநாள் மிஸ்டர் வேதாசலம் எங்களைப் பாக்க வந்திருந்தார். வேணி..."

"எந்த வேதாசலம்?"

"தமிழ்நாடு கேபிள்ல வேலைபாக்கற வேதாசலம்..."

"ஓ."

"அவரப்பத்தி நீ இதுவரைக்கும் எதுவுமே சொல்லலியே, வேணி!"

"என்னப்பா இருக்கு சொல்லறதுக்கு?"

"இதானே வேணாங்கறது... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க அவர் விரும்பறாராமே..."

"அவர்தானே விரும்பறார்!"



"அப்படின்னா?"

"நா விரும்பலைனு அர்த்தம்."

"அதான் ஏன்னு கேக்கறோம்."

"எனக்குக் கல்யாணம் பண்ணிக்கணும், ஒரு ஆம்பளையோட வாழணும்னற ஆசையெல்லாம் கிடையாது, நந்து..."

"அதெப்படிப்பா தீர்மானமா சொல்றே! பொம்பளையா பொறந்தவளுக்கு, கல்யாணம்னு ஒண்ணு ஆக வேணாமா?"

"செஞ்சிக்கணும்னு ஏதாவது ரூலா?"

"ரூல் இல்லை... ஆனாலும்? ஏம்பா, வேதாசலத்தை உனக்குப் பிடிக்கலையா?"

"ஹீ ஈஸ் எ நைஸ் மேன்."

"அப்பறம்?"

"பிடிச்சவங்க எல்லாரையும் கல்யாணமா செஞ்சுக்க முடியும்?"

"இது அடாவடி, வேணி..."

"நீங்கள்ளாம் ஒரு காரியத்தை செஞ்சிட்டீங் கன்றதுக்காக நானும் அதையே பண்ணனும்னு எதிர் பாக்கறதுதான் எனக்கு அடாவடியா படுது..."

"சரி, கல்யாணம் வேணான்றதுக்கு ஒரு நல்ல காரணத்தைச் சொல்லேன்... அக்கா இருக்கானுதானே மறுக்கறே?"

"அதுக்கும், இதுக்கும் சம்பந்தமே இல்லே... இந்த வருஷத்துல கண்டிப்பா அவளுக்கு ஒரு நல்ல வரனாப் பாத்து முடிச்சிடத்தான் போறோம்."

"தென்?"

"விடுங்கப்பா... ப்ளீஸ்..."

"முடியாது. 'இது என் பர்ஸனல் விஷயம், தலையிடாதீங்க'னு நீ சொன்னாலே ஒழிய, நாங்க விடறதா இல்லே..."

"............"

"சொல்லு, வேணி... ஏன் கல்யாணத்தை இப்படி வெறுக்கறே? வலிய வர நல்ல வரனை வேணாங்கறது புத்திசாலித்தனமா? வேதாசலத்துகிட்ட ஏதாவது குத்தம் குறை, இருக்கா? நாங்க விசாரிச்சவரைக்கும் ரிபோர்ட் நல்லாத்தானே இருக்கு!"

வேணி எழுந்து போய் ஜன்னலருகில் நின்று ஒரு சில நொடிகளுக்கு தோட்டத்தைப் பராக்கு பார்த்தாள். பின்னர் இவர்களை நோக்கி திரும்பி நின்றுகொண்டு கேட்டாள்.

"எங்க வீட்டுக்கு இத்தனை தடவைகள் வந்திருக்கீங்களே, என் தம்பிய நீங்க பாத்திருக்கீங்களா?"

"தம்பியா? உனக்கு ரெண்டு அக்காதானே இருக்காங்க?"

"இல்லே, தம்பி இருக்கான்... பேர் ராஜா. வயசு பத்தொன்பது... அவனுக்கு ஒரு வயசாரப்போ சித்தி ஒருத்தி கீழ போட்டதுல மண்டைல அடிபட்டு, அவனுக்கு பாக்கற, கேக்கற, பேசற சக்தி எல்லாம் சுத்தமா போயிடிச்சு! எங்க சக்தி இடம் குடுத்த வரைக்கும் வைத்தியம் பாத்தோம்; பலன் எதுவுமே இல்லை- உடம்பு மட்டும் திடுதிடுனு வளர்ந்திட்டதுல, இன்னிக்கு அஞ்சு அடி நீளத்துக்கு மூச்சு விட்டுகிட்டு இருக்கிற ஒரு பிரேதமா உள்ளறைல படுத்திட்டிருக்கான். நடக்க முடியாது, உணர முடியாதுப்பா..."



தொடர்ந்து பேசமுடியாமல், தொண்டை அடைத்துக்கொண்டுவேணி சன்னமாய் விசும்ப முற்பட, உட்கார்ந்திருந்த நந்தினியும், ஜானாவும் பதறிக் கொண்டு அவளிடம் சென்றார்கள்.

"ஸாரிப்பா... வெரிவெரி ஸாரிப்பா... ஏய்... வேணி அழாத... ப்ளீஸ் கேதர் யுவர்செல்ஃப்..."

மாற்றிமாற்றி இவர்கள் தேற்றினதும், வேணி கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

"ராஜா இனிமே ஆயுசுக்கும் இப்படித்தான் இருப்பான்... சாவு ஒண்ணுதான் அவனுக்கு விமோசனம் அம்மா ஏற்கனவே பீ.பி.லே அவஸ்தைப்பட்டுக்கிட்டு இருக்காங்க... அதோட, சதா தனக்கப்புறம் தம்பிய யார் கவனிப்பாங்கன்ற புலம்பல் வேற..."

"அப்ப, கல்யாணமாகிப் போயிட்டா தம்பிய யார் கவனிப்பாங்கனுதான், மேரேஜ் வேணாம்னு சொல்றியா?"

"அதுவும் ஒரு காரணம். ஆனா ஒரு புருஷத் துணை வேணும்னு நா நிஜமா நினைக்காததுதான் முக்கியமான காரணம்..."

"நீ அலுப்புல பேசற மாதிரி எனக்குப் படுது, வேணி..."

"சத்தியமா இல்லே, ஜானா... உங்ககிட்ட நா ஏன் வேஷம் போடணும்? இந்த மாதிரி பேச்சுவார்த்தை களும், 'பாவம்மா நின்ற பரிதாபமும் எழும்னுதான் உங்கிட்டக்கூட ராஜாபத்தி இத்தனை நாள் ஏதும் பேசாம இருந்தேன். நா உண்டு, எங்கம்மா, தம்பி உண்டுனு இருக்கற வாழ்க்கை, எனக்கு நிம்மதியாப் படுது- மத்தபடி அக்காவுக்கு நல்ல இடமா அமையணும், அது ஒண்ணுதான் இப்ப எனக்கு இருக்கற கவலை... நீங்க என்னை நம்பணும்."

அன்று சாயங்காலமே ஜானாவும் நந்தினியும், வேணியுடன் அவள் வீட்டுக்குச் சென்று ராஜாவைப் பார்த்தார்கள்.

அப்பப்பா...

அது என்ன பயங்கரம்!

உடம்பில் பத்தொன்பது வயசுக்கான வளர்த்தி... ஆனால் மற்றபடி பேச்சில்லை, பார்வையில்லை, துளி சலனமும் இல்லை...

எதிரிக்குக்கூட வரக்கூடாது இப்படியொரு பரிதாப நிலை.

"என் தம்பி இப்படி இருக்கறது வெளில தெரிய வேண்டிய அவசியமில்லேன்னே நினைக்கறேன்.... வேதாசலத்தையும் சேர்த்துத்தான் சொல்றேன். யாரோட பரிதாபமும் எங்களுக்குத் தேவையில்லை. அதோட 'தியாகம்' அது இதுன்ற பெரியபெரிய



டயலாக் மத்த வங்ககிட்டேயிருந்து வெளிப்படறதை தவிர்க்கவும் விரும்பறேன்."

தெளிவாக வேணி பேசிவிட, இரண்டு நாட்கள் கழித்து வேதாசலம் இவர்களைச் சந்திக்க வந்ததும், "மன்னிச்சுக்கங்க, தாம்பத்திய வாழ்க்கைல விருப்பம் இல்லாதவள, கட்டாயப்படுத்தறதுல அர்த்தம் இருக் கறதா தெரியலே..." என்று தீர்மானமாகப்பேசி அவனை அனுப்பிவைத்ததும் நடந்து, மாசங்கள் பத்தோ, பதினொன்றோ ஓடிவிட்டன.

"என்னப்பா... சாப்பிடாம அப்படியே வெச்சுக் கிட்டு உக்கார்ந்திருக்கே?"

வேணியின் குரல் கேட்டு நந்தினி கலைந்தாள்.

"ம்? என்ன?"

"எந்த உலகத்துல இருக்கே! உக்கார்ந்துகிட்டே தூங்கறியா என்ன?"

நந்தினி புன்னகைத்து சமாளிக்கப் பார்த்தாள்.

"இதுக்குத்தான்... ரெண்டு வருஷம் பிள்ளை, குட்டினு ஏதும் வேணாம்னு எங்களை மாதிரி இருக்க ணும்னு சொல்றது!"

கண்களை சிமிட்டிக்கொண்டு கேலி பண்ணிய ஜானா, குனிந்து கிட்டே வந்து வினவினாள்.

"ஏன் நந்து, ஒண்ணுமே சாப்பிடப் பிடிக்கலையா?"

"வயத்தப் பிரட்டிகிட்டே இருக்கு, ஜானா..."

"நாயரை விட்டு எலுமிச்சை சர்பத் வாங்கிவரச் சொல்லட்டுமா?"

"வேணாம்பா..."

ஒரு நிமிஷம் அப்படியே அமர்ந்து அவளை தீர்க்கமாக ஜானா பார்த்தாள்.

"ம்... அதுக்கொண்ணும் குறைச்சல் இல்லை... வேலை தான் ஜாஸ்தியா இருக்கு..."

"ஒரு வேலைக்காரிய போட்டுக்கனு நானும் கரடியா கத்தறேன், காதுல வாங்கிட்டாத்தானே?"

"நாமளே ஓடியாடி கடைசிவரைக்கும் வேலை பண்ணா, பிரசவம் சுலபமா இருக்கும்னு சொல்றாங்களே!"

"யாரு?"

"எங்க மாமியார்தான்... அப்படி இருந்ததாலதான், அவங்களுக்கு நாலு பிரசவமும் நொடில ஆயிடுச்சாம்..."

"ஆகும்... ஆகும்.. உன்னை மாதிரி அவங்க ஆபீஸ் வந்தாங்களா, நாள் பூரா உக்கார்ந்து வேலை பாத்தாங்களா... என்ன கம்பேரிஸன் இது, நந்து? வீட்டுலேயும் இடுப்பொடிய வேலைபாத்திட்டு ஆபீஸ்ஸுக்கும் வந்து போறது கஷ்டம்பா... வேணா... மோகன்கிட்ட நா பேசட்டுமா?"

"ஐயோ, வேணாம்... வேணாம்..." என்று நந்தினி தடுத்ததைக் காதில் வாங்காமல், அன்று மாலையே கணவனுடன் அவர்கள் வீட்டுக்கு வந்த ஜானா, இதுபற்றி மோகனிடம் உரிமையுடன் பேசியதும் அல்லாமல்,



'உடனடியாக வேலைக்காரி வைக்க ஏற்பாடு பண்ணிடுங்க, மோகன்' என்றும் கூறிவிட்டு புறப்பட்டுப்போக, அவர்கள் எதிரில் சிரித்த முகத்தோடு 'அதுக்கென்னங்க.. செஞ்சா போச்சு' என்று பேசிய மோகன், அவர்கள் தலை மறைந்ததும், "என்ன நினைச்சிட்டிருக்கா உன் சிநேகிதி! இவள் புருஷன் மாதிரி என்னையும் முந்தானைக்குள்ள ஒளிஞ்சவன்னு நினைச்சாளா? தறுதலை... இவ பேச்சு, அரட்டை எல்லாத்தையும் ஆபீஸோடு வெச்சிக்கச் சொல்லு; இன்னொருதரம் மோகன், கீகன்னு மரியாதை இல்லாம பேர் சொல்லி கூப்டுகிட்டு அவ இந்த வீட்டுப்படி ஏறட்டும், அப்புறம் சொல்றேன்!" என்று நந்தினியிடம் கத்தவே செய்தான்.



# 11

நந்தினி தரையில் உட்கார்ந்து தேங்காய் துருவ ஆரம்பித்தபோது, பாத்ரூமிலிருந்து மோகன் கத்தும் சப்தம் கேட்டது.

'ஒரு நிமிஷம் இருங்க, கூட்டுக்கு கொஞ்சமா தேங்காய் துருவிட்டு வந்திடறேன்...' என்று சொல்ல நினைத்தவள், மோகனின் குரலில் இருந்த எரிச்சலை உணர்ந்து வாயை மூடிக்கொண்டாள்.

அரிவாள்மணையைச் சாய்த்து வைத்துவிட்டு, தேங்காய் மூடியை ஒரு பக்கமாய் ஒதுக்கினவள், அருகிலிருந்த ஸ்டூலின் மேல் கையை ஊன்றிக்கொண்டு மெல்ல எழுந்தாள்.

ஒன்பது மாசம் ஆன நிலை வயிற்றுப்பிள்ளைக்கு யில், சாதாரணமாய் உட்காருவதும், எழுந்திருப்பதும்கூட ரொம்ப சிரமமாகத்தான் இருந்தது.

ஒருவழியாய் எழுந்து பாத்ரூமுக்குள் நுழைந்து, "என்னங்க..." என்று சாதாரணமாய் கேட்டு நிமிர்ந்தவள், மோகனின் முகத்தைப் பார்த்து திடுக்கிட்டாள்.

எரிச்சலுடன் ஜிவுஜிவுத்த முகம், பார்க்க பயங்கர மாக இருந்தது.

"கூப்பிட்டு அரை மணியாவது... மகாராணி இப்பத் தான் ஆடி அசைஞ்சுக்கிட்டு வர்றீங்களாக்கும்!"

"இல்லீங்க... தேங்கா துருவிக்..."

"சரி போதும் ராமாயணம்... இங்க பாரு. வெந்நீர் விளாவி வெக்கக்கூட முடியாம அப்படி என்ன பெரிசா கிழிக்கறே? இத்தன ஜில்லுனு தண்ணிய ஊத்திக்கிட்டா, ஜன்னி பொறந்துதான் சாகணும்..."

குரலெடுத்துக் கத்தியவன், படக்கென்று வாளியை அப்படியே கவிழ்த்து, அத்தனை தண்ணீரையும் சாக்கடையில் ஓட விட்டான். பின்னர் தன் எரிச்சல் துளியும் குறையாதவனாய் இவள் பக்கம் திரும்பி, "இப்போ, நா எப்படி குளிக்கறது? ம்? நீங்க மட்டும்தான் ஆபீஸுக்குப் போறீங்க, மத்தவங்க வீட்டுல குண்டுச் சட்டில குதிரை ஓட்டறாங்கன்ற நினைப்பா?" என்றான், அதட்டலாய்...

நந்தினி தலையைக் குனிந்துகொண்டாள், கண் களில் திரண்டுவிட்ட நீரை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.



"கொஞ்சம் இருங்க... இதோ மறுபடியும் வெந்நீர் போட்டுக் குடுக்கறேன்..." என்றவள், வேகமாய் நடந்து சமையலறைக்கு வந்து, ஸ்டவ்வில் போட்டால் நேரமாகலாம் என்பதால், காஸ் அடுப்பிலேயே வெந்நீர் தவலையைத் தூக்கி வைத்தாள்.

சுமார் இருபது நிமிடங்களில் தண்ணீர் கொதித் ததும், துணியைப் பிடித்து இறக்கி பாத்ரூம் பக்கெட்டில் ஊற்றி, திட்டமாய் விளாவி வைத்து, கூடத்தில் பேப்ப ரால் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த மோகனிடம் சென்று. "வெந்நீர் ரெடிங்க... நீங்க குளிக்கப் போங்க..." என்றாள்.

பேப்பரைத் தழைக்காமலே, "எல்லாம் குளிச் சுக்கறேன், பெரிசா விரட்டாதே...." என்றவனின் அருகி லேயே இரண்டு நிமிடம் நின்றுவிட்டு, இன்னொருதரம் அதுபற்றி பேசப் பயந்தவளாய் உள்ளே திரும்பி நடந்தாள்.

வெந்நீரை ரொம்ப ஆறவிடாமல் இப்போதாவது குளித்துவிட்டால் தேவலை என்று தோன்றியது. இப்படித்தான், முதல்முறையும் அவன் குளிக்க வெந்நீர், துண்டு, சோப்பு எல்லாம் தயாராக வைத்துவிட்டு, மூன்று தரம் சொன்ன பின்பும், கூடத்து நாற்காலியிருந்து அசையாமலே உட்கார்ந்திருந்தான்.

தனக்காகத் தோன்றி, ஆற அமர எழுந்து குளிக்கப் போனால், தண்ணீர் சூடுத்தணிந்துபோகாமல் கொதிக் கவா செய்யும்?

திரும்பத்திரும்ப வெந்நீர் போட்டு, கொதிக்கும் பானையை தூக்கிக்கொண்டு யாரால் நடக்க முடிகிறது

என்று லேசாய் ஒரு சலிப்புத் தோன்றியது, நந்தினிக்குள்... ஆனால் அது இரண்டு நொடிக்குத்தான்.

பாதியில் விட்டுவிட்டு வந்திருந்த வேலைகள் நினைவுக்கு வர, அந்தச் சலிப்பு உடனே அமுங்கிப் போயிற்று.

அடுத்தடுத்து சங்கிலித் தொடராய் வேலைகள்...

சமையலறை வேலைகளை முடித்து, குளித்து, கணவனுக்கு சாப்பாடு பரிமாறி, இருவருக்கும் மதிய உணவு எடுத்து வைத்து, அவனை அனுப்பியபின், தானும் கையோடு உட்கார்ந்து அவசரமாய் சாப்பிட்டாள்.

முகத்தை மறுபடி கழுவி சீர்செய்தவள், கட்டி யிருந்த பழைய புடவையை அவிழ்த்து ஸ்டாண்டில் போட்டாள்.

பீரோவைத் திறந்து காட்டன் புடவை ஒன்றை எடுத்தாள்.

கஞ்சி போட்டு, விறைப்பாக மடிக்கப்பட்டு, பலகை மாதிரி இருப்பதைப் பிரித்து நிதானமாய் உடுத்தி முடிக்க, குறைந்தது பதினைந்து நிமிஷங்களாவது ஆகும்.

இத்தனாம் பெரிய வயிற்றோடு, புஸ்ஸென்று புடவையை வேறு கட்டிக்கொண்டால், அத்தனை நன்றா கவும் இருக்காது.

எடுத்ததைத் திரும்ப பீரோவுக்குள்ளேயே வைத் தவள், மிருதுவான அந்த அமெரிக்கன் ஸில்க்கை எடுத்து உடுத்திக் கொண்டாள்.



தலைப்பை இழுத்து வயிற்றை மூடி செருகிக் கொண்டாள்.

ஹாண்ட் பாக்கை எடுத்துக்கொண்டு கிளம்பின போது, ரொம்பச் சோர்வாக இருந்தது.

சாப்பிட்டவுடன் அவதி அவதி என்று கிளம்புவது, ஒரு நாளைப்போல் அசதியாகத்தான் இருந்தது.

ஒருமணிநேரமாவது படுத்திருந்துவிட்டு, தூங்கா விட்டாலும் பரவாயில்லை, வெறுமே காலை நீட்டி உட்கார்ந்திருந்துவிட்டுப் போனால், இத்தனை சோர்வு தெரியாதுதான்...

ஆனால், உட்காருவதா? காலை நீட்டிக் கொண்டா? எங்கே!

காலையிலிருந்து அத்தனை வேலைகளையும் செய்து முடித்துவிட்டு அவரசமாய் கிளம்புபோதே, எப்படியோ மணி ஆகிவிடுகிறது.

இதில் அக்கடா என்று உட்கார்ந்து சிரமப் பரிகாரம் செய்துவிட்டு வேறு கிளம்பினால், மதியச் சாப்பாட்டு நேரமே வந்துவிடும்.

வீட்டைப் பூட்டி, சாவியை பையினுள் திணித்துக் கொண்டு, தெருவில் இறங்கி நடந்தாள்.

சுறுசுறுப்பாய் காலை வீசிப்போட்டு நடக்க முடியாமல், வயிற்றை முன்னால் தள்ளி முதுகைச் சாய்த்து நடப்பதும்கூட அலுப்பாகத்தான் இருந்தது.

பிள்ளை உண்டாகி முதல் சில மாசங்களுக்கு இந்தத் தொந்தரவெல்லாம் இல்லை.

போகப்போக, ஆறு, ஏழு, எட்டு என்று மாசங்கள் ஓடஓட, அதுவும் இப்போது ஒன்பது மாசமாகிவிட்ட தில், எதற்கெடுத்தாலும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

விடிந்துவிட்டது என்று தெரிந்த பின்னரும், இன்னும் கொஞ்சம் படுத்திருக்கலாம் போல...

சொம்பால் நீரை மொண்டு ஊற்றிக் குளித்து விட்டு வந்த பிறகு, அரைமணி ரெஸ்ட் எடுக்கலாம் போல...

சாப்பிட்டால் அரைமணி தூங்கலாம் போல...

இப்படி நடந்து, பஸ் பிடித்து ஆபீஸ் போய், சீட்டில் உட்கார்ந்தால், கண்ணைச் சுழற்றிக்கொண்டு வரும் தூக்கத்தை அடக்காமல் அப்படியே மேஜையில் கவிழ்ந்துகொள்ளலாம் போல...

தனக்கு மட்டும்தான் இப்படி இருக்கிறதா, இல்லை, எல்லா கர்ப்பிணிப் பெண்களும் இப்படித்தான் உணர்வார்களா என்று முதலில் சந்தேகமாக இருந்தது.

முந்தின செக்-அப்பின்போது இவளுடைய இந்த சந்தேகத்தைக் கேட்டுவிட்டு டாக்டர் சிரித்தது, உடனே நினைவுக்கு வந்தது.

அப்படித்தாம்மா இருக்கும்... வயத்துல இத்தனை வெயிட்டை வெச்சுக்கிட்டு, எல்லா வேலையும் செஞ்சுக் கிட்டு, நார்மலாவும் இருக்கணும்னு எதிர்பாத்தா எப்படி, நந்தினி? அதுக்காக, படுத்துக்கிட்டே இருந்திடலாம்னு நினைக்காதே... அப்பறம் உடம்புல ஆயிரம் கோளாறு வந்து, பிரசவமே சிரமமாயிடும், கூடியவரைக்கும்



சோம்பேறித்தனமா படுக்காம சுறுசுறுப்பாவே இருக்கப் பாரு...

டாக்டர் சொன்னதை அப்படியே ஏற்று, துளியும் சோம்பேறித்தனமாக இல்லாமலிருக்க முயன்றாலும்கூட, இப்படி உடம்பையும் மனசையும் சோர்வு அழுத்தும் போது, பேசாமல் அக்கடா என்று மூலையில் சுருண்டு கொள்ளலாம் போல்தான் இருக்கிறது.

சாதாரண நாட்களிலேயே கேட்க வேண்டாம்.

அதிலும் இன்று மாதிரி, மோகனின் ‘வெந்நீர் கலாட்டா’ போல ஏதாவது நிகழ்ந்துவிட்டால், நொந்த மனசும் சேர்ந்துகொண்டு ‘பேசாமல் படு, படு...’ என்று தூபம் போடுகிறது.

இத்தனைக்கும், அனுசரணையாய் ரெண்டு வார்த்தை மோகன் பேசியிருந்தால் இத்தனை அலுப்பும் சலிப்பும் தோன்றியிருக்காதோ?

‘முடியாட்டி, இன்னிக்கு வேணா வெளில சாப் பிட்டுக்கலாமா?’ என்றோ, ‘நீ சமையல் வேலைய மட்டும் கவனி, நந்தினி, என் வேலைய நானே கவனிச்சுக்கறேன்...’ என்றோ மென்மையாகச் சொல்லியிருந்தால் எப்படி யிருக்கும்?

என்னென்னவோ யோசித்துக்கொண்டு ஆபீஸுக் குள் நுழைந்து வேலைகளில் மூழ்கிப்போனவள், முன் கூட்டியே தீர்மானித்திருந்த தினுசில் மதியத்துக்குமேல் மானேஜரிடம் லீவு சொல்லிவிட்டு வெளியே வந்தாள்.

ஒரு மணி வெயிலில் அரைமணி காத்திருந்து, பஸ் பிடித்து அம்மா வீட்டுக்குள் நுழைந்தவளை, அம்மா ஆர்வத்துடன் வரவேற்றாள்.

"வாம்மா... இந்த வெயில்ல பஸ்ஸிலயா வந்தே? ஒரு ஆட்டோ வெச்சுக்கிட்டு வந்திருக்கக் கூடாது?"

அறுபது பைசாவோடு போகிற இடத்தில், ஆட்டோவுக்காக ஏழு ரூபாய் செலவழித்தால், கணவனுக்கு பதில் சொல்வது எப்படி என்று சொல்ல நினைத்ததை, நந்தினி ஒரு புன்னகையோடு அடக்கிக்கொண்டாள்.

அந்த மதிய நேரத்தில் ஒன்றும் சாப்பிடப் பிடிக்காமல் வெறும் மோரை மட்டும் ஒரு டம்ளர் குடித்துவிட்டு, "அம்மா, நா ரொம்ப தூங்கிட்டா எழுப்பிடுங்கம்மா... சரியா நாலரைக்கு டாக்டர் வீட்டுல இருக்கணும்..." என்று குரல் கொடுத்துவிட்டு, படுத்த மாத்திரத்தில் உறங்கியும்போனாள்.

மூன்றரைக்கு அம்மா எழுப்பிய பின் எழுந்தவள், முகம் கழுவி, அம்மா கொடுத்த டிபன் காபியை சாப்பிட்டு, கிளம்பி, டாக்டர் வீட்டை நோக்கி அம்மாவுடன் நடக்கத் துவங்கினாள்.

முதலில் மாசம் ஒரு முறையாக இருந்த செக்-அப் பதினைந்து நாளுக்கு ஒரு தரமாக மாறி, இப்போது நிறை மாசமானதால் வாரம் ஒருமுறை ஆகிவிட்டது.

டாக்டர் சொன்ன கணக்குப்படி இன்னும் மூன்று வாரகாலம் பிரசவத்துக்கு இருந்தாலும், நடக்க முடியாமல் மூச்சு திணறிய அந்த நிமிஷத்தில், அதற்கு முன்பே பிரசவமாகிவிடலாம் என்றே தோன்றியது.

சிறிது நேரம் மௌனமாக வந்த பின், மெதுவாக அம்மா, "ராத்திரி நல்லா தூங்கறியா, நந்து?" என்றாள்.



"ம்... சுமாரா... ஆனா, கால்தாம்மா ரொம்ப வலிக்குது..."

"அப்படிதாம்மா இருக்கும்... எத்தனை பெரிய சுமையை சுமக்கறே..."

நந்தினி 'பச்' என்று சூள்கொட்டி நீளமாய் பெருமூச்சை விட, அம்மா அவள் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

"என்னம்மா, இன்னிக்கு, ரொம்ப டயர்டா இருக்கே? உடம்ப ஏதாவது செய்யுதா?"

"புதுசா ஒண்ணும் இல்லை... ஆனா, மொத்தமாவே ரொம்ப சோர்வாதான் இருக்கு... முடியவே இல்லைம்மா, என்னால... பேசாம படுத்துக்கிட்டே இருக்கணும் போல இருக்கு..."

அம்மா சிரித்தாள்.

"அவ்வளவுதானே? உண்டாகியிருக்கறதுனா சும்மாவா? நாங்கள்ளாம் இப்படித்தானே சுமந்தோம்?"

"நீங்க இருந்ததே வேற காலம்மா... ஏழாம் மாசம் வளைகாப்பு ஆன கையோட பொறந்த வீட்டைப் பாக்கப் போயிருப்பீங்க..."

"இப்போ உன்னையும்கூட அழைச்சிக்கிட்டுப் போறதாத்தான் சொன்னோம்... ஆனா மாப்பிள்ளையோட சேர்ந்துகிட்டு நீயும்தானே வரமாட்டன்னு சொல்லிட்டே!"

நந்தினி பதில் பேசாமல் நடந்தாள்.

அம்மா சொல்வதும் வாஸ்தவம்தானே?

வளைகாப்பு முடிந்து ஒருமுறை, அதைத் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு முன்பு ஒருமுறை - அம்மாவும் அப்பாவுமாய் சேர்ந்து வந்து மோகனிடம் கேட்கவே செய்தார்கள்.

வெகு பவ்யமாய், 'அழைச்சிட்டுப் போங்களேன்...' என்று முதலில் சொன்னவன், முகத்தில் புன்னகை மாறாமல், "நந்தினி இல்லாம நான்தான் சிரமப்படப் போறேன்... உள்ளூர்தானே, பிரசவ சமயத்துல போனா போறாதானு நினைச்சிட்டு இருந்துட்டேன்... நீங்க இப்பவே அவளைக் கூட்டிட்டுப் போயிட்டீங்கன்னா, நான்தான் தனியா போரடிச்சிக்கிட்டு உக்காந்திருக்கணும்... என்னை விடுங்க, நந்தினி சம்மதிச்சா தாராளமா கூட்டிட்டுப் போங்க..." என்றபோது, 'எதற்காக இப்போதே பிறந்த வீட்டுக்குப் போகவேண்டும்? பிரசவ நேரத்தில் போய்க்கொண்டால் போதாதா? நான் இல்லாவிட்டால் இவர் கஷ்டப்படப் போவது நிஜம் தானே?' என்கிற அசட்டுப் பரிதாபம் நெஞ்சை வியாபிக்க, குரலைத் தழைத்துக்கொண்டு அவளேதான் சொன்னாள், தான் அப்புறமாய் பிறந்தவீட்டுக்கு வருவதாக. அது முதல் தரம்... அப்புறம் இரண்டாவது தடவை...

நந்தினி சட்டென்று தன்னை உலுக்கிக்கொண்டாள். இப்போது எதற்கு அந்தப் பழங்கதை எல்லாம்?

மரியாதையாய் பிறந்தகத்துக்கு எட்டாம் மாசமே போயிருக்க வேண்டும்... போகவில்லை... மனசில்லையோ, தைரியமில்லையோ, பயமோ ஏதோ ஒன்று...



நந்தினியின் எண்ணம் புரிந்த மாதிரி, அம்மா மெதுவாக அவள் கையைத் தன்னுடையதுடன் பிணைத்துக் கொண்டாள்.

"பொறந்த வீட்டுக்கு எப்போ வந்தா என்ன, நந்தினி? வேலை எல்லாம் ஒண்ணாத்தானே இருக்கும்?"

"அதெப்படிம்மா? அம்மா வீட்டுல இருக்கறதும், நம்ம வீட்டுல இருக்கறதும் ஒண்ணாயிடுமா? முடிஞ்சா வேலை பண்ணலாம், முடியாட்டி அம்மாகிட்ட சொல்லிட்டுப் படுத்துடலாமே?"

"இப்போ உன்னை மட்டும் யார், நந்து, அப்படிச் செய்ய வேணாம்னு தடுக்கறாங்க? நீதானே முடிஞ்ச வரைக்கும் ஆபீஸ் போயிட்டா பின்னால நிறைய லீவு இருக்கும், குழந்தையோட சேர்ந்து இருக்க உதவும்னு இன்னமும் ஆபீஸ் போயிட்டு இருக்கே?"

"நா ஆபீஸ் போறதைப்பத்தி சொல்லலைம்மா... அங்க ஒண்ணும் இடுப்பொடியற மாதிரி வேலை இல்லே..."

"பின்னே?"

"வீட்டுலதான்..."

"வீட்டுலியா? உங்க ரெண்டு பேருக்கு பெரிசா எவ்வளவு வேலை இருந்திடப்போவுது? ம்?"

"வேலை அதிகமா இல்லைதான். ஆனா ஒவ்வொண்ணையும் ரெண்டுரெண்டு தரம் செய்யணும்னா அலுப்பா இருக்கும்மா... காபி குடுத்தா, சூடு பத்தலைன்றாரு... வெந்நீர் வெச்சா, ஆறிப்போயிடுச்

சுன்றாரு... துணிங்களை சரியா தோய்க்கலை, அயர்ன் பண்ணினா மடிப்பு சரியா இல்லைனு ஆயிரம் குத்தம் சொல்றாரு..."

அம்மா அனுசரனையுடன் ஏறிட்டாள்.

"உனக்கு உடம்பு முடியலேன்றதுக்காக நீ மாப்பிள்ளைப்பத்தி ரொம்ப அலுத்துக்கறே, நந்து.. ஆம்பிள்ளைங்கன்னா அப்படித்தாம்மா இருப்பா..."

அம்மாவை முடிக்கவிடாமல் நந்தினி சரக்கென்று குறுக்கிட்டாள்.

"ஏம்மா, நம்ம அப்பா அப்படியா இருக்காரு?"

பங்கஜம் அரைநிமிஷம் மௌனித்தாள். பின்னர், யோசனை பண்ணிப் பேசுகிற மாதிரி மெதுவாகப் பேசினாள்.

"யாரையும் யாரோடவும் ஒப்பிட்டுப் பேசாதே, நந்து- உங்கப்பாவுக்கு என்ன வயசாவுது, மாப்பிள்ளைக்கு என்ன வயசாவுது? இப்போ அப்பா ரொம்ப சாதுவா இருக்கார்தான்... ஆனா, அந்தக் காலத்துல எவ்வளவு கண்டிப்பா இருப்பாரு, தெரியுமா? துசுக்குனா கோவிச்சுக்கிட்டு வெளியே போயிடுவாரு... ஒவ்வொரு தரமும் நா போய் மன்னிப்பு கேட்டுக்கிட்டாத்தான், கோவம் தணியும்! மாப்பிள்ளை சின்னவருதானே? கொஞ்சநாள் ஆயிட்டா தானே சரியாயிடுவாரு... எதுக்கும் ஆம்பிளைங்களை குத்தம் சொல்ற குணத்தை வளர்த்துக்கறது தப்பும்மா... பொம்பளைங்க நாம தழைஞ்சிபோனா, நாளைக்கே எல்லாம் சரியாயிடும்..."

"நான்தான் எப்பவுமே..."



பதில் சொல்ல வந்த நந்தினியை அம்மா குறுக்கே கைகளை நீட்டித் தடுத்தாள்.

"போதும் நந்து... இதெல்லாம் எல்லா குடும்பத்துலயும் நடக்கறதுதான், நீ வீணா குறைப்பட்டுக்காதே! இந்த சமயத்துல எதைப் பத்தியும் நினைச்சு மனசை வருத்திக்காம சந்தோஷமா வெச்சிக்கப் பாரு... குறைங்க இல்லாத வாழ்க்கையே இல்ல... எல்லாத்துலேயும் குறைப்பட்டுக்க ஆரம்பிச்சம்னா, வாழ்க்கை முழுக்க அப்படியேதான் ஆயிடும்... நீ படிச்ச பொண்ணு, உனக்குக்கூட இதெல்லாம் சொல்லித்தரணுமா? ம்?"

மேலே எதுவும் பேசாமல், அம்மா சொன்னவற்றை அப்படியே கேட்டுக்கொண்டு, நர்ஸிங் ஹோமினுள் நுழைந்தவளை, வழக்கம்போல் பரிசோதித்த டாக்டர் லேசான சிரிப்புடன் நிமிர்ந்து, "எல்லாம் ரொம்ப பர்ஃபெக்ட்டா இருக்கு, நந்தினி... வேலைக்குப் போயிக்கிட்டுதானே இருக்கே?" என்று கேட்டார்.

"எஸ் டாக்டர், நீங்க சொல்றவரைக்கும் போகலாம்னு நினைக்கறேன்..."

"அடுத்த வாரம் பார்த்துட்டு அப்பறமா சொல்றேன். அதுவரைக்கும் நார்மலா எல்லா வேலையும் செஞ்சுக்கிட்டே இரும்மா..."

முதுகில் தட்டிக்கொடுத்து டாக்டர் அனுப்ப, வெளியே வந்து அம்மாவுடன் திரும்பி நடக்கத் துவங்கின போது, மனசு சட்டென்று நெளிந்துவிட்ட மாதிரி தோன்றியது.

எல்லா வேலைகளையும் செய்துகொண்டு எப்போதும் போலவே இரு என்று டாக்டரே சொல்கிறார்...

அப்புறம் ஏன் இப்படி அலுத்துக்கொள்கிறேன்?

அம்மா சொல்கிற மாதிரி, நிறைமாத கர்ப்பம் தந்திருக்கும் சின்ன தள்ளாமையில், வேண்டாததை யெல்லாம் பெரிசுபடுத்துகிறேன் போலிருக்கிறது.

இதில் அவரைப்பற்றி அம்மாவிடம் குறை வேறு சொல்லியிருக்கிறேனே, தப்பில்லையா?

ச்சே...

எல்லோரும் சரியாய்த்தான் இருக்கிறார்கள், எனக்குத் தான் உடம்பு முடியாமையில் கோபமும் சலிப்புமாக வருகிறது.

பஸ் ஸ்டாண்டில் அம்மாவிடம் விடைபெற்று, மந்தைவெளி போகும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தபோது, சோர்வெல்லாம் காணாமல்போய் லேசாக ஒரு உற்சாகம் கூட தொற்றிக்கொண்ட மாதிரி உதட்டில் சின்னதாக ஒரு புன்னகை ஜனிக்க, அந்த சந்தோஷத் தோடு அம்மாவை ஏறிட்டு, கையை அசைத்து, ‘போயிட்டு வரேம்மா’ என்றாள்.



## 12

குழந்தை சிணுங்கியது.

மூடியிருந்த கண்களைத் திறக்காமலேயே, நந்தினி கையை நீட்டி குழந்தையின் இடுப்புத் துணியைத் தொட்டுப் பார்த்தாள்.



ஈரம்.

அரைமணிக்கொரு தரம் இது ஒரு வேலை! ஒரு நாளைக்கு இந்தக் குட்டி ராணியுடையது மட்டும் இரண்டு கூடை துணி சேர்ந்துவிடுகிறது, தோய்ப்பதற்கு!

சின்னச் சிரிப்போடு நந்தினி எழுந்து உட்கார்ந் தாள்.

தலைகாணி பக்கத்திலேயே அடுக்காய் மடித்திருந்த துணிகளில் ஒன்றை எடுத்தாள்.

குழந்தையின் இரண்டு கால்களையும் சேர்த்துப் பிடித்துத் தூக்கி, நனைந்துவிட்ட துணியை அகற்றி, அதையே பந்தாகச் சுருட்டி, துடை, இடுப்பைத் துடைத்துவிட்டு, புதுத்துணியை விரித்தாள்.

கட்டிலை விட்டு இறங்கி, ஒரு பக்கமாய் வைத் திருந்த பிளாஸ்டிக் வாளியில் மூத்திரத் துணியை போட்டு மூடி விட்டு, மீண்டும் குழந்தையிடம் வந்தாள்.

இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு, உடம்பை முறுக்கியபடி குழந்தை அழ ஆரம் பித்தது.

பசி.

மணி என்ன?

மூன்றா?

பன்னிரண்டு மணிக்குக் குடித்தது. வயிற்றில் அலாரம் மணி இருக்குமா என்ன?

நந்தினி குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கைச்சூடு புரிந்த மாதிரி அழுகையை நிறுத்தின குழந்தை, வாயை ஒரு பக்கமாய் கோணிக்கொண்டு, பாலுக்காக அலைய, நந்தினிக்கு சிரிப்பு வந்தது.

இத்தனூண்டு குழந்தைக்கு இதெல்லாம் யார் கற்றுத் தந்தது?

சிரிப்பு மாறாமல், சுவரில் சாய்ந்த மாதிரி கட்டிலில் உட்கார்ந்தவள், ரவிக்கை கொக்கிகளை அவிழ்த்து விட்டு, பெண்ணை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

ஆர்வத்தோடு சப்புக்கொட்டிக்கொண்டு பால் குடிக்கும் குழந்தையை குனிந்து பார்க்கையில், ரொம்பப் பெருமையாக இருந்தது.

வெளிர் சிவப்பு; கறுப்புத் தலைமுடி; நீளநீள விரல்கள்; மெல்லிசு உதடுகள்; ரொம்பப் பெரிசும் இல்லாத சிறிசும் இல்லாத கண்கள்...

பெரியவளானால் இவள் கண்டிப்பாய் ஒரு அழகான பெண்ணாய்த்தான் இருப்பாள், சந்தேகமில்லை...

பார்க்கப்பார்க்க முகஜாடையில் பெண் பல விதங்களிலும் தன்னை மாதிரிதான் இருப்பாள் என்றே தோன்றியது.

விரல்களை தவிர...

விரல்கள்தான் மோகனுடையவை மாதிரி நீள நீளமாய் இருக்கின்றன.

விரல்கள் நீளமாய் இருப்பவர்களுக்குக் கலையுணர்ச்சி அதிகம் என்பது மோகனைப் பொறுத்தவரை பொய்த்து விட்டது!



இவளாவது என்னைக் கொண்டு, சங்கீதத்தில் ஈடுபாடு உடையவளாக இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்.

அப்படி இசைஞானம் கொண்டவளாக இருந்து, குரலும் காத்திரமாக அமைந்துவிட்டால்... ஏ... அப்பா... எத்தனாம் பெரிய ஆசிர்வாதம் அது!

அந்த வரப்பிரசாதத்தை வீணாக்காமல், குழந்தைப் பிராயத்திலிருந்தே பல வித்வான்களின் கச்சேரிகளை இவளைக் கேட்கவைக்க வேண்டும். ஆறு, ஏழு வயசிலேயே நல்ல வாத்தியாரிடம் சேர்த்து சிட்சையை ஆரம்பித்துவிட வேண்டும். அதிகாலையில் எழுப்பி, கிட்டத்தில் உட்கார்ந்து ஸரளி வரிசையையும், ஜண்ட வரிசையையும் மூன்று காலத்தில் பாடச் சொல்லி பழக்க வேண்டும். அப்போதுதான் குரலில் ‘கமகம்’ வரும், கூடவே ‘தியரி’யையும் சொல்லிக்கொடுக்கச் சொல்ல வேண்டும். இன்னென்ன மேளகர்த்தாவிலிருந்து இன்னென்ன ராகங்கள் ஜன்யமாகின்றன என்று யோசிக்காமல் டக்டக்கென்று கூறி, கேட்பவர்களை ‘அம்மாடி! எத்தனை கெட்டிக்காரி! யார் பெண் இவள்?’ என்று புருவங்களை உயர்த்திக் கேள்வி கேட்கவைக்கும் தினுசில்...

நந்தினி கண்களை மூடிக்கொண்டாள்.

கற்பனை தித்திப்பாய் தித்தித்தது.

லட்சணமாய், அடக்க ஒடுக்கமாய் மேடையில் அமர்ந்து பெண் பாடுகிறாள்... எதிரில் கூட்டமான கூட்டம்... இனிமையான சங்கீதத்தில் கரைந்துகொண்டு...

நிதி சால சுகமா...

கல்யாணி நெளிகிறது... குழைகிறது... கம்பீரமாய் ஆர்ப்பரிக்கிறது... கைத் தட்டல்கள் படபடவென்று ஓயாமல்...

கற்பனையில் கேட்ட கைத்தட்டல் நிஜத்திலேயே ஒலிக்கிறமாதிரி தோன்ற, நந்தினி திடுககிட்டுக் கண்களைத் திறந்தாள்.

வாசக்கதவை யாராவது தட்டுகிறார்களா என்ன?

தலையைத் திருப்பி கட்டிலுக்கு எதிர்புறமாய் படுத்திருக்கும் அம்மாவை ஏறிட்டாள்.

எந்த சப்தத்திலும் பாதிக்கப்படாமல் அசந்து உறங்கும் அம்மாவைப் பார்க்கையில், நெஞ்சுள் வருத்தம் படர்ந்தது.

அம்மாவுக்குத்தான் எத்தனை வேலை?

காலையில் நான்குக்கு எழுந்தால், ஒரு நிமிஷம் அக்கடா என்று உட்கார முடியாமல் இரவு பதினொன்று வரை அடுக்கடுக்காய் வேலைகள்...

சமையல், வீட்டு வேலைகள், கடை கண்ணிக்குப் போய்வருவதோடு, இப்போது இவள், குழந்தை பொறுப்பு வேறு...

முடிந்தவரைக்கும் எல்லாவற்றிலும் இவள் உதவவே செய்கிறாள் என்றாலும், இவளை உட்கார வைத்துவிட்டு அத்தனையும் இழுத்து போட்டுக் கொண்டு அல்லவா அம்மா செய்கிறாள்!

அம்மாவுக்கு ஒத்தாசையாய் ஒரு ஆளைப் போடுவோம் என்றால், அதற்கும் வழி இல்லாமல்...



மீண்டும் வாசக்கதவு தட்டப்படும் ஓசை கேட்க, இப்போது பங்கஜம் திடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

"வாசக்கதவை யாராவது தட்டறாங்களா, என்ன?"

"அப்படித்தான் தோணுது- நீங்க படுத்துக்கங்க-நா போய் பாக்கறேன்..."

குழந்தையைக் கீழே விட நந்தினி முனைய, பங்கஜம் அவளைத் தடுத்தாள்.

"இரு... இரு... பால் குடிக்கற குழந்தையை அழ விடாதே... நா எழுந்தாச்சு..."

அவிழ்ந்து கிடந்த தலைமுடியை முடிந்தபடியே பங்கஜம் எழுந்து வாச வராந்தாவுக்குப் போனாள்.

அரை நிமிஷத்தில் நாதாங்கியைத் திறக்கும் ஓசையும், "அடடே நீங்களா! வாங்க, வாங்க..." என்று வரவேற்கும் குரலும் கேட்டன...

"உன் சிநேகிதிங்க வந்திருக்காங்க, நந்து..." உற்சாகமாய் பேசியபடி வந்தவளைத் தொடர்ந்து அறைக்குள் ஜானாவும், வேணியும் நுழைந்தார்கள்.

"ஹாய்..."

"ஹாய்... என்னப்பா திடீர்னு?"

"வரக்கூடாதா? சொல்லிட்டுத்தான் வரணுமா?"

"அதெல்லாம் வேணாம்... வா... வா... உக்காரு... இப்படி உட்காரு, வேணி..."

நந்தினிக்கு இடது பக்கம் ஜானாவும், எதிரில் வேணியும் அமர்ந்துகொண்டார்கள்.

ஜானா கையை நீட்டி குழந்தையின் தலையைத் தடவினாள்.

"எப்படி யிருக்கா ரம்யாக்குட்டி?"

"மடா குடிகாரியா இருக்கா... மூணுமணி நேரத்துக்கு ஒரு தரம் செம குடி!"

சிரித்துக்கொண்டே நந்தினி பேச, மற்றவர்களும் சிரித்தார்கள்.

பால் குடித்துக் கொண்டிருந்த பெண்ணை முன்னால் கொணர்ந்து சினேகிதிகள் பார்க்க வசதியாய் நீட்ட, பால் வழிந்து கிடந்த கன்னங்களும், இன்னும் குடிக்க வேணும் என்கிற ஆர்வத்தில் அலைந்த வாயும் அவர்கள் சிரிப்பை அதிகமாக்கின.

"ச்சே பாவம்பா... இன்னும் வேணும் போல இருக்கு... குடு, நந்து..."

வேணி பலமாய் சிபாரிசு செய்ய, "குடிகாரி... உனக்கு ரெகமண்டேஷன் வேறயா?" என்றபடி நந்தினி வலதிலிருந்து இடப்பக்கத்துக்கு குழந்தையை மாற்றிக் கொள்ள, "நா காபி கலந்து எடுத்திட்டுவரேன்... நீங்க பேசிட்டு இருங்க..." என்றவாறு பங்கஜம் உள்ளே சென்றாள்.

நந்தினி சினேகிதிகளை ஏறிட்டு புன்னகைத்தாள்.

"நாளைக்குத்தான் வருவீங்கனு நினைச்சேன்... ஸண்டே ஆச்சே!"



"இல்லேப்பா... எனக்கு நாளைக்கு கெஸ்ட் வராங்க... வேணியும் ஏதோ வேலை இருக்குனு சொன்னா... சரி, இன்னிக்கு அரை நாள்தானே, பாத்துட்டுப் போயிடுவோம்னு வந்தோம்... எப்படி இருக்கே? எவ்ரிதிங் ஓகே?"

"எனக்கென்ன? நல்லாதான் இருக்கேன்... அம்மா தான் கஷ்டப்படறாங்க."

ஜானா குரலைத் தழைத்துக்கொண்டாள்.

"போன முறை பாத்ததுக்கு இப்ப, அம்மா இளைச் சாப்பலதான் தெரியறாங்க... உடம்புக்கு ஒண்ணும் இல்லியே, நந்து?"

"வேலை அதிகமா இருக்கு, ஜானா... கல்பனா காலேஜுக்குப் போற பொண். அவளாலயும் ஒரு அளவுக்கு மேல ஹெல்ப் பண்ண முடியல..."

"வீட்டு, வெளி வேலைக்கு ஆள் இருக்கு, இல்லே?"

நந்தினி உதட்டைப் பிதுக்கினாள்.

"நா பிரசவத்துக்கு வரப்போறேன்று ஒரு ஆயாவை போட்டாங்கதான்... ஆனா, நாலு நாள் வந்திட்டு என்னால முடியலைனு அவ நின்னுட்டா..."

"அப்பறம்?"

"வேற யாரும் தோதுப் படலைனு அம்மாவே அத்தனை காரியங்களையும் செய்யறாங்க..."

"குழந்தைக் காரியமே ஒரு வண்டி இருக்குமே, நந்து?"

"இருக்குதான்... கூடுமானவரை நானும் ஒத்தாசை பண்ணத்தான் செய்யறேன்... ஆனால் துணி தோய்ச்சு குழந்தையைக் குளிப்பாட்டி, மத்த காரியங்களை செய்ய றத்துக்குள்ளே போதும்போதும்னுதான் ஆறது..."

"சமையலுக்காவது ஒரு ஆளைப் போட்டுக் கலாமே..."

"எங்க கிடைக்கறாங்க, ஜானா? அதிசயமா வர்றவங்களும் ஒரு நாளைக்கு இருபதைக் கொண்டா, முப்பதைக் கொண்டானு கேக்கறாங்களே?"

ஜானா உடனே பதில் பேசாது மௌனித்தாள், பின் சின்னக் குரலில் கேட்டாள்.

"அம்மாக்குக் கட்டுப்படி ஆகலைன்னா, அந்த சம்பளத்தை நீ குடுக்கலாமே, நந்து?"

நந்தினி, பேசியவளை நிமிர்ந்து பார்த்தாள். இத்தனை வருஷங்களாக என்னோடு பழகின உனக்குமா என் நிலை புரியவில்லை என்று அந்தப் பார்வை கேட்பது புரிய, ஜானா எட்டி அவள் கையைப் பற்றிக்கொண்டாள்.

"மோகன் ஏதாவது சொல்வார்னு பயப்படறியா?"

"............"

ஜானா தலையைத் திருப்பி வேணியை ஏறிட்டாள்.

"உன்னோட இந்தக் கேள்விக்கு நந்து பதில் சொல்வானு நீ எதிர்பாத்தா, அது அசட்டுத்தனம்! மாசா மாசம் சம்பளத்தை அப்படியே முழுசா புருஷன் கிட்ட குடுத்துட்டு, தன்னோட பஸ் சார்ஜுக்கே அவரண்ட இவ கெஞ்சிகிட்டு நிக்கறது, உனக்கும் எனக்கும் தெரிஞ்ச சமாச்சாரம்தானே ஜானா?"



இரண்டு நிமிஷங்கள் யாரும் ஏதும் பேசாமல் நகர்ந்தது.

"சரி, அந்தப் பேச்சு வேணாம்... நீ எப்போ ட்யூட்டி ஜாயின் பண்ணப்போறே? குழந்தைக்கு மூணு வாரம் ஆயிடுச்சே!"

"அடுத்த திங்கக்கிழமைலேந்து வேலைக்கு வர லாம்னு நினைச்சிட்டிருக்கேன்"

"அதுக்குள்ள உங்க வீட்டுக்குப் போயிடுவியா?"

"ம்ஹூம். அஞ்சாம் மாசம் வரைக்கும் இங்கதான் இருக்கணுமாம்... தவிர, அம்மாகிட்ட குழந்தையை விட்டுட்டு வந்தாதான் எனக்கும் நிம்மதியா இருக்கும்."

"அதென்ன அஞ்சாம் மாசக் கணக்கு?"

"சம்பிரதாயம், ஜானா..."

"மண்ணாங்கட்டி சம்பிரதாயம்... பொண்ணைப் பெத்தவங்களை உண்டு, இல்லேனு ஆக்கற சம்பிர தாயம்! சொல்றேன்னு தப்பா நினைக்காத, நந்து - வந்தமா, பிள்ளை பெத்தமா, புறப்பட்டுப் போனமானு இல்லாம, மாசக் கணக்குல அவங்களுக்கு பாரமா உக்கார்ந்துகிட்டு..."

அவள் முடிக்கும் முன்னர் பலகாரத் தட்டுடன் பங்கஜம் வந்துவிட, பேச்சு அத்துடன் தடைபட்டுப் போனாலும், காபி டிபன் சாப்பிட்டு மேற்கொண்டு அரைமணி போல பொதுவாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்துவிட்டு ஜானாவும் வேணியும் புறப் பட்டுப் போனதும், ஜானா பேசிய பேச்சுக்கள் மட்டும் நந்தினியுள் சுழன்றுகொண்டே இருந்தன.

வாஸ்தவம்தானே!

என்னால் அப்பா, அம்மாவுக்கு எத்தனை சிரமங்கள், செலவுகள்...

கல்யாணமான நாளில் தொடங்கி இன்றுவரை எதற்கும் அவர்கள் கொடுத்து, நான் வாங்கும் நிலையில் இருக்கிறேனே தவிரவும், என்னால் அவர்களுக்கு என்ன ஆதாயம்? பிரயோஜனம்?

பிரசவச் செலவுதான் முழுக்க அவர்களுடையது என்றால், இப்போது இங்கு இருக்கும்போதுகூட என் பங்குக்கு நான் என்ன செய்கிறேன்?

சம்பளம் கொடுத்து ஆளைப் போட்டேனா? பணத்தை தாராளமாய் கொடுத்து சாமான்களையாவது வாங்குகிறேனா?

ம்ஹூம்.

ஒன்றும் இல்லை.

குழந்தைக்கு பவுடர் வேண்டுமென்றால்கூட, அப்பா தானே வாங்கிவருகிறார்!

என்னிடம் பணம் ஏது?

பிரசவத்துக்கென இந்த வீட்டுக்கு வரும் முன்னர் தயங்கித்தயங்கி மோகனிடம் கேட்டபோது, 'பணமா? எதுக்கு? உனக்கு செலவழிக்கறது அவங்க கடமை' என்று அலட்சியமாக அவர் கூறியது. ஜானாவுக்குத் தெரிந்தால் என்ன சொல்வாள்?

மாசம் ஆயிரத்து அறுநூறு சம்பாதிப்பவள், இந்த நிமிஷம் கையில் பத்து ரூபாய்க்காசு இல்லாமல், எதற்கும்



பெற்றவர் கையை எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதைச் சொன்னால் அவள் நம்புவாளா?

சட்டென்று நந்தினிக்கு தன் நிலையைக் குறித்து சன்னமாய் கோபம் எழுந்தது.

ஆனால். ஒரு சில நொடிகளிலேயே அந்தக் கோபம் அடங்கி, ஒருவித கையாலாகாத்தனம் நெஞ்சை வியாபிக்க, அதை விரட்டும் பாவனையில் பார்வையை ஜன்னலுக்கு வெளியில் வீசி, மாமரத்துக் காக்காய்கள் மேல் கவனத்தைத் திருப்பினாள்.



## 13

"இன்னிக்குத் தேதி என்ன, நந்து?"

செய்துகொண்டிருந்த வேலையிலிருந்து கவனத்தை அகற்றாமல் நந்தினி, "இருபத்தி ரெண்டு"... என்றாள்.

"மாசம்?"

"ஜூன்... அதுகூடவாப்பா மறந்துபோச்சு?"

"அப்பறமா என்னைக் கேள்வி கேக்கலாம், முதல்ல இதுக்கு பதில் சொல்லு... ரம்யாவுக்கு இப்ப எத்தனை மாசம்?"

பேனாவைக் கீழே வைத்துவிட்டு, நந்தினி சினேகிதி பக்கம் திரும்பி உட்கார்ந்தாள்.

"இருபத்தி நாலாம் தேதி, அதாவது நாளன்னி யோட ஆறு மாசம் முடியுது..."

ஜானா வேண்டுமென்றே நமுட்டாகச் சிரித்தாள்.

"ஞாபகம் இருக்கா? எங்க மறந்திட்டியோனு பாத்தேன்!"

"அதெப்படிப்பா மறக்கும்?"

"இல்லே, 'அஞ்சாம் மாசம் என் வீட்டுக்குப் போயிடு வேன்'னு முன்னே சொன்னவ, அதப்பத்தின பிரக்ஞையே இல்லாம இருக்கற மாதிரி, இதையும் மறந்திட்டியோனு நினைச்சேன்..."

கொஞ்சம் கேலியும், கொஞ்சம் கோபமும் கலந்த தினுசில் ஜானா பேச, நந்தினி தலையைக் குனிந்துக் கொண்டாள்.

என்னவோ சொல்ல வாயைத் திறந்தவள், வேண்டாம் என்று தீர்மானித்து, அடி உதட்டை ஒரு தரம் அழுந்தக் கடித்தாள். பேனாவை எடுத்துவிட்ட இடத்திலிருந்து எழுதத் தொடங்கினாள்.

"உனக்கு இது சம்பந்தமா பேச விருப்பம் இல் லேன்னா, நா பேச மாட்டேன். ஆனா எதையோ உனக்குள்ளேயே வெச்சிக்கிட்டு நீ அவஸ்தைப்படற மாதிரி எனக்குத் தோணுது... சரியா, தப்பா... அதை மட்டும் சொல்லிடு..."

"....."

"போன மாசம் நீயாவே உன் வீட்டுக்குப் போறதைப் பத்தி சொல்லுவேனு எதிர்பாத்தேன்.



ம்ஹூம், இல்லே! சரி, நல்ல நாள், அது இதுனு ஏதாவது இருக்கும்னு சும்மா இருந்தேன். மூணு வாரம் முன்னால நானா கேட்டப்போ, மோகன் ஊர்ல இல்லேன்னு ஒரு தரம் சொன்னே; இன்னொரு தரம் 'குழந்தைக்கு வயத் தால போகுது'னு சொன்னே... நாலு நாள் முன்னால வேணி எதேச்சையா, நாம சாப்பிடறப்போ இதப்பத்தி கேட்டதும், 'நல்ல ஆளா தேடிட்டு இருக்கேன். கிடைச் சதும் போயிடுவேன்னே... அப்ப நீ தயங்கின விதமும், பேசின விதமுமே எதையோ மறைக்கிறேனு காட்டிக் குடுத்துச்சு... அங்கயே, அப்பவே 'என்னப்பா விஷயம்'னு கேட்டிருப்பேன். மாலதி கூட இருந்தா... புது மனுஷிக் கெதிர்ல எதுக்குக் கிளறணும்னு விட்டுட்டேன். அப்பறம் சனி ஞாயிறு... நேத்து நா லீவு... இப்ப சொல்லு, வாட்ஸ் பாதரிங் யூ? ஏதாவது தகராறா, நந்து? என்னண்ட சொல்றதுல உனக்குத் தயக்கம் என்னப்பா?"

மிகுந்த அன்னியோன்னியம், கரிசனத்துடன் யாருக்கும் எதுவும் கேளாத த்வனியில் பேசி நிறுத்த, சட்டென்று நந்தினியின் கண்கள் கலங்கிப்போயின.

"ஏய்... நந்து... என்னப்பா?" வாட்ஸ் த மேட்டர்?" ஜானா வேகமாய் எழுந்து கிட்டத்தில் வந்து அவள் தோளைத் தட்டிக் கொடுக்க, இரண்டு தரம் கண்களைச் சிமிட்டி, ஊறிவிட்ட நீர்த் திவலைகளை நந்தினி கலைத்து விட்டாள்.

"என்ன விஷயம், நந்து? கஸ்டமர்ஸ் யாரும் இல்லியே, சாப்பிடப் போனா அங்க மாலதியும் இருப்பா ளேனு இந்த பேச்சை இப்ப எடுத்தேன். எதுக்காகக் கண் கலங்கறே? இப்படி நீ வருத்தப்படற அளவுக்கு என்னப்பா நடந்துடுத்து?"

நந்தினி ஆயாசத்துடன் 'ப்ச்' என்றாள்.

"இன்னும் என்னப்பா நடக்கணும்... மொத்தத்துல எதுவுமே சரியா இல்லே, அதான் நா சொல்வேன்..."

"விஷயத்தைச் சொல்லாம அத்தைப்பாட்டி மாதிரி பேசினா எப்படி, நந்து? குழந்தைக்கு உடம்பு கிடம்பு சரியா இல்லியா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே..."

"மோகன் அடிக்கடி கேஸ் விஷயமா வெளியூர் போயிடறதால, தனியா இருக்கக் கஷ்டப்பட்டுக்கிட்டு அம்மா வீட்டுலேயே இருக்கியா?"

"ம்ஹூம்."

"அப்பறம்?"

நந்தினி பதிலாக ஏதும் பேசாமல் கைப்பையைத் திறந்தாள். நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்த இன்லாண்ட் கடிதத்தை எடுத்து நீட்டினாள்.

"லெட்டரா? யார் கிட்டேயிருந்துப்பா? ம்... ம்... 'அன்பு மகன் செல்வன் மோகனுக்கு, இப்பவும் உன தாய் எழுதியது...' உன் ஹஸ்பண்டுக்கு வந்த லெட்டர என்னை ஏன் படிக்கச் சொல்றே, நந்து?"

"படிச்சுப்பாருப்பா..."

"...தாய் எழுதியது. இங்கு யாவரும் நலம், உன் நலமறிய அவா... நிற்க, இப்பவும், நந்தினியையும், குழந்தையையும் அவசரப்பட்டு வீட்டில் கொண்டுவிடச் சொல்ல வேண்டாம். செய்து போடுவதாகச் சொன்ன



சீர்வரிசைகளைத் தந்த பிறகு அழைத்துக்கொள்வதுதான் நமக்கு மரியாதை. இரண்டு பவுனில் செயின், ஒரு பவுனில் வளை, கால் பவுனில் மோதிரம், பட்டுப்புடவை, வேட்டி, பலகாரங்கள் இத்யாதிகளுடன் பிரசவம் முடிந்த பெண் புருஷன் வீட்டுக்கு வருவது, நம் வீட்டு வழக்கம். தொட்டில் சமயத்தில் நாங்கள் அங்கு வந்தபோது, உன் மாமனார், மாமியார் எங்களை மதிக்காமல் இருந்தது உனக்கே தெரியும். பார்த்து நடந்துகொள். எதற்கும் ஒரு நடை நீ திருச்சிக்கு வந்துபோவது நலம். நிற்க... இப்பவும் புஷ்பாவிற்கு..."

கடிதத்தை ஒரு தரத்துக்கு இரண்டு தரம் படித்த பின்னர், ஜானா கோபத்துடன் விழித்தாள்.

ஜூன் பத்தாம் தேதி எழுதப்பட்ட கடிதம். ஆக புருஷன் வீட்டுக்கு நந்தினி போகாததற்கு இதுதான் காரணமா?

"இதுக்கு மோகன் என்ன, நந்து, சொல்றார்?"

நந்தினி பதில் பேசாமல் உதட்டைப் பிதுக்கி வருத்தத்துடன் தோளைக் குலுக்கினாள்.

"அப்படின்னா...?"

"அவர் என்னப்பா சொல்ல முடியும்? அதான் எங்க மாமியார் தெளிவா எழுதிட்டாரே!"

"இந்த லெட்டரை உன்னண்ட குடுத்தப்போ, அவர் ஒண்ணுமே சொல்லலியா?"

"அம்மா ஏற்கனவே மனசு நொந்திருக்காங்க. இப்பவாவது உங்கப்பாகிட்ட சொல்லி பக்குவமா நடந்துக்கச் சொல்லுனு சொன்னார்."

"அவ்ளோதானா?"

அதிர்ந்துபோய் ஜானா வினவ, நந்தினி 'ஆம்' என்று தலையசைத்தாள்.

"தொட்டிலுக்கு வந்தப்போ உங்க வீட்டுல உன் மாமியாரை மதிக்காமயா நடந்துக்கிட்டாங்க?"

"பின்னே அவங்க ஏம்பா அப்படி எழுதியிருக் காங்க?"

"தொட்டிலுக்கு வந்தவங்க திரும்பிப்போறப்போ அஞ்சு வகைப் பலகாரம் செஞ்சு குடுக்கலியாம்... தாம் பூலம் சரியா வைக்கலியாம்... அவங்களுக்கு வாழைக்காய் தள்ளுபடியாம், அதை நினைப்புல வெச்சிக்காம அன்னிக்கு எங்க வீட்டுல வாழைக்காய் பொரியல் பண்ணிட்டாங்களாம்..."

நந்தினி சன்னக் குரலில் பேசப்பேச, ஜானா நெற்றியில் ஒரு தரம் ஓங்கி அடித்துக்கொண்டாள்.

"நான்ஸென்ஸ்... இவங்கள்ளாம் மனசுல என்ன தான் நினைச்சுகிட்டிருக்காங்க... எனக்குப் புரியலையே! தொட்டிலுக்கு நானும் தானே வந்திருந்தேன்... நாலு வகை காய், ஸ்வீட், வடைனு உங்கம்மா விருந்தை ஜமாய்ச்சிருந்தாங்களே? இவங்களுக்கு வாழைக்காய் தள்ளுபடினா, அதை விட்டுட்டு பாக்கி வகையறாக்களை சாப்பிடறது! ஒரு பொரியல் இல்லைனா, சாப்பிட்டது ஜீரணிக்காதாமா? என்ன அடாவடித்தனம் இது, நந்து? இந்த மாதிரி பேத்தல் எல்லாத்தையும் கேட்டுகிட்டு, மோகனும், நீயும், உங்க வீட்டு மனுஷங்களும் சும்மா இருக்கறதுதான் எனக்குப் பைத்தியக்காரத்தனமா படுது..."



கிட்டத்தில் யாரும் இல்லா தைரியத்தில் லேசாக குரலை உயர்த்தி ஜானா பேச, குனிந்த தலையை நிமிர்த்தாமல் பேனாவினால் பேப்பரில் நந்தினி, நந்தினி என்று தன் பெயரை, மீண்டும் மீண்டும் எழுதினாள்.

"சரி, போனதை விடு... இப்ப இந்த லெட்டருக்கு என்ன அர்த்தம்? இதுல சொல்லியிருக்கற சீர்வரிசைகளை செஞ்சு குடுக்கலைன்னா, உன்னை மோகன் கூட்டிக்கக் கூடாதாமா?"

"ம்..."

"என்னப்பா 'ம்'? இப்படிச் சொல்ல உனக்கு வெக்கமா இல்லே?"

"என்னை என்ன பண்ணச் சொல்றே, ஜானா?"

"மோகன் என்னப்பா சொல்றார்?"

"அவர் ஒண்ணும் சொல்லலை... லெட்டரைக் குடுத்து இன்னியோட பத்து நாளாகுது... நடுவுல நாலு நாள் திருச்சிக்குப் போயிட்டுவந்தார். அதுக்கப்பறம் நானா கேட்டப்பக்கூட, 'இது விஷயமா பேச ஒண்ணுமில்லே... அதான் அம்மா தீர்மானமா எழுதிட்டாங்களே! இனி, உன்னை என்னோட அனுப்பறதும் அனுப்பாததும் உங்கப்பா கையிலதான் இருக்கு'னு தெளிவா சொல்லிட்டார்..."

"மண்ணாங்கட்டி தெளிவு! இப்படிப் பேசறது அவருக்கு நியாயமாப் படுதாமா?"

"..."

"அவரோட அக்காக்காரிங்க பிள்ளை பெத்து போனப்ப, இப்படித்தான் உங்க மாமியார் செஞ்சு அனுப்பினாராமா?"

"..."

"நீ கோவிச்சுக்கிட்டாலும் பரவாயில்லை, நந்து, ஐ டோண்ட் கேர். அம்மா பேச்சைக் கேட்டுகிட்டு மோகன் இப்படிப் பேசறதை நினைச்சா, எனக்குக் கோவம், பொத்துகிட்டு வருது! பொண்டாட்டி, குழந்தையோட பொறுப்பு தன்னுதுன்றதை மறந்து, இப்படிக் கூடவா ஒருத்தரால விட்டேத்தியா இருக்க முடியும்? மூணு வருஷமா ஒண்ணா வாழற பொண்டாட்டிகிட்ட, கை நிறைய சம்பாதிக்கறவகிட்ட இத்தனை கேவலமா! ச்சே... என்ன அக்ரமம்பா இது?"

"மோகன் என்ன பண்ணுவார், ஜானா... அவரோட அம்மாதான்..."

தயங்கித் தயங்கி பேசியவளை ஜானா இடை மறித்தாள்.

"ஓ! ஸ்டாப் இட்! இந்த மாதிரி நீ எதுக்கும் ஸப்போர்ட் பண்ணிப் பண்ணித்தான், ஏகத்துக்கு தலை கால், நியாய, அநியாயம் புரியாம மோகன் நடந்துக்கறார்..."

ஜானா பேசிக்கொண்டிருக்கையில் அறைக்குள் நுழைந்த வேணி, அவர்கள் முக்கியமான சமாச்சாரம் பேசுவதைப் புரிந்துகொள்ள முடிய, மேஜைமேல் சாய்ந்து நின்று புருவங்களை உயர்த்தி, "என்னப்பா?" என்றாள்.



"நாம சந்தேகப்பட்டது சரிதான், வேணி... சீர் வரிசை செமத்தியா செய்யலைனுதான் ஐயா அம்மாவைக் கூட்டிக்காம இருக்கார்."

"நிஜமாவா, நந்து?"

"அவளைக் கேக்காத... உருப்படியா ஒரு பதிலும் கிடைக்காது! நா சொல்றேன்... ரெண்டு பவுன்ல சங்கிலி, ஒரு பவுன்ல வளை, மோதிரம், பட்டுப் புடவை, வேஷ்டி, பலகாரம்..."

வேணி சன்ன த்வனியில் விஸில் அடித்தாள். நந்தினியின் தோளில் கை வைத்து, "பிரசவம், அது இதுனே எக்கச்சக்கமா செலவு ஆயிடுச்சே, இதை உங்கப்பா எப்படி சமாளிக்கப்போறார், நந்து?" என்றாள்.

"அதப்பத்தி இவளுக்கு என்னப்பா கவலை? தலைய அடகு வெச்சாவது இத்தனையும் அவர் செஞ்சி நம்மளை புருஷன் வீட்டுக்கு அனுப்பிடமாட்டாராானுதானே இவ எதிர்பாத்திட்டிருக்கா..."

நந்தினி சரக்கென்று விழிகளை உயர்த்தி, பேசியவளை ஏறிட்டாள்.

"என்ன ஜானா, இது! நானே நொந்து போயிருக்கேன்... நீயும் சேர்ந்துகிட்டு..."

குரல் தழுதழுத்துப்போக, நந்தினி கீழ் உதட்டை அழுந்தக் கடித்துக்கொண்டாள்.

"என் மேல வருத்தப்படறதுல பிரயோஜனம் ஏதும் இல்லே, நந்து..."

"நா என்னப்பா பண்ணுவேன்? எனக்கு மட்டும் அப்பாவோட கஷ்டம் புரியலைனு நினைக்கறியா?"

ஜானா நான்கடி நடந்தாள், யோசித்தாள். திரும்பி வந்து அவளிடம் குனிந்து, "ஆல்ரைட், புரியுது... உருப் படியா என்ன பண்ணப்போறே... அதச் சொல்லு..."

"ஐ டோண்ட் நோ... பத்து நாளா நாங்க குழம்பற குழம்பல் எனக்குத்தான் தெரியும்! பணத்துக்காக அப்பாவும் நிறைய முனைஞ்சிட்டார்... கிடைக்கலே... வேற வழி எதுவும் புரியல..."

"உங்க மாமியார் கேட்டதை செஞ்சுபோடறது ஒண்ணுதான் இதுக்கு சொல்யூஷனா, நந்து?"

நந்தினி கண்களை அகல விரித்தாள்.

"அப்பறம்?"

"மோகனை விட்டு, அவரைப் பெத்தவங்ககிட்ட இதெல்லாம் தப்புனு சொல்லவைக்கறது ஒரு தீர்வா உங்களுக்குத் தோணலியா?"

நந்தினி அலுப்புடன் வேணி பக்கம் திரும்பினாள்.

"ஏதாவது நடக்கற விஷயமா இவ பேசறாளா பாரேன், வேணி..."

"ஏம்பா நடக்காது? நீ முயற்சி பண்ணினியா?"

"இல்லே... ஆனாலும், அவர் குணம் எனக்குத் தெரியும்..."

"சரி அத விடு.... இது நீ மட்டும் சம்பந்தப்பட்டது இல்லே... அவர் பொண் விஷயமும்கூட.... அதனால..."



கால் மணி நேரம் அழுத்தம் திருத்தமாகத் தன் கருத்தை ஜானா வெளியிட, அதற்கு வேணியும் முழு மனசுடன் ஒத்துப்போக, அவர்களின் ஆலோசனைப்படி, மோகனுடைய ஸீனியர் வீட்டுக்கு போன் செய்து அவனுடன் நந்தினி பேசினாள்.

"நாந்தான் நந்தினி..."

"புரியிது... என்ன விஷயம்?"

"வந்து..."

"மளமளனு பேசப்போறியா, இல்லியா?"

"இல்லே, உங்கம்மா கேட்டிருக்கற சீர்வரிசை செஞ்சு போட, இப்ப அப்பாவுக்கு வசதி இல்லே... அதனால, நாமளே அதை செஞ்சிட்டு உங்கம்மாகிட்ட..." தொடர்ந்து பேச முடியாமல் வார்த்தைகள் அவள் தொண்டையிலேயே சிக்கிக்கொண்டதைப்பற்றி லட்சியம் செய்யாதவனாய், மோகன் அடித்தொண்டை யில் உறுமினான்.

"இதச் சொல்லத்தான் கனகாரியமா கூப்பிட்டியா? இப்படிப் பேசுனு உன் தறுதலை ஃப்ரெண்ட் சொல்லிக் குடுத்தாளா? ராஸ்கல்! இன்னொரு தரம் ஸீனியர் வீட்டுக்கு போன் பண்ணி இப்படி கெக்கபிக்கேனு பேசினே, நடக்கறதே வேற...! ஆமா"

அத்துடன் தொடர்பை மோகன் துண்டித்துவிட, "ஐயோ அவர் கோச்சுக்கிட்டார், ஜானா... இதுக்குத் தான் பேச வேணாம்னு சொன்னேன்..." என்று கண்களில் நீர் மல்க நந்தினி பதறியதற்கு ஏற்ப, அடுத்து வந்த ஒரு வாரமும் மோகன் வேட்டகத்துப் பக்கம் எட்டிக்கூடப்

பார்க்காமல் இருந்தான். போனில் பேச முயன்றால், அடுத்தவரை விட்டு, 'மோகன் இல்லை' என்று சொல்ல வைத்தான்.

"ஆடி மாசம் பொறக்கப்போகுது... இப்ப எங்க வீட்டுக்குப் போகலைனா, இன்னும் ஒரு மாசம் முடியாது! இவரானா இப்படி முரண்டு பண்ணறார்... அப்பா அம்மாக்குப் பாரமா இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கப் போறேன்? நா என்ன பண்ணுவேன்?"

வாய் ஓயாமல் நந்தினி புலம்பத் துவங்க, அன்று மாலை வீடு திரும்பும் முன்னர் ஜானாவும், வேணியும் அவள் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

"வர்ற ஒண்ணாந் தேதிலேந்து உனக்கு எழுபத்தி அஞ்சு ரூபா இன்க்ரிமெண்ட்னு நேத்து பர்ஸனல் மானேஜர் சொன்னதை மோகன்கிட்ட சொல்லிட்டியா?"

"ம்ஹூம்."

"குட்... சொல்லாத நாளைக்கே நா ரெண்டாயிரம், வேணி ஆயிரம் உனக்குக் குடுக்கறோம்... உங்கிட்ட இருக்கறதையும் போட்டு, எப்படியாவது சமாளிச்சிடலாம். வர்ற மாசத்துக்லேந்து உனக்குக் கிடைக்கப் போற சம்பள உயர்வை, ரெண்டாம் பேருக்குத் தெரியாம மாசாமாசம் எங்களுக்குத் குடுத்துக் கடனை அடைச்சிடு. எப்படி?"

முதலில் ரொம்ப பயந்தாலும், இதைத் தவிர வேறு வழியே இல்லை என்பது புரிய, இந்த ஏற்பாட்டுக்கு நந்தினி சம்மதித்தாள்.



"என்ன ஏதுனு விவரம் கேக்காதீங்க... இந்த நகை எல்லாம் நீங்க பண்ணிப்போட்டதா இருக்கட்டும்... மாப்பிள்ளைகிட்ட எதுவும் சொல்லிடாதீங்க..." என்று கெஞ்சி, பெற்றவர்களின் வாயை அவள் அடைத்த பின்னர், அந்த வெள்ளிக்கிழமை நல்ல நேரத்தில் சம்பந்தியம்மாள் கேட்ட அத்தனை சீர், செனத்தியோடும், நந்தினி குழந்தையை திருச்சியில் குஞ்சிதபாதம் கொண்டுவிட்டார்.



# 14

"கீரை என்னம்மா வெல?"

"கட்டு அம்பது காசு..."

"ஏ அப்பா! கீரைக்கு வெல சொல்றியா, இல்ல யானை குதிரைக்குச் சொல்றியா? ரூபாய்க்கு மூணு கட்டு தருவியா?"

"ஆங்! தருவாங்க, தருவாங்க... உன் மாமனாரு கடைவெச்சு நடத்தறாரு, அவுரு தருவாரு... போய் வாங்கிக்க... அவஅவ வெயில்ல நாயா பூந்தமல்லிக்கும் படப்பைக்கும் ஓடி பவுன்பவுனா கீரையை வாங்கிட்டு வந்தா, கறுப்புக் கண்ணாடியும் கொண்டையுமா வந்து ஸ்டைலா நின்னு கூசாம கேக்கறதப் பாரு! த... தள்ளு... வந்திட்டா பெரிசா கீரை வாங்க... ரூபாய்க்கு மூணு கட்டு! வாங்கற மூஞ்சியப் பாரு..."

நீளமாய் குரலை உசத்தி கீரைக்காரி வைய முற்பட, அவசரமாய் விலை கேட்டவள் நகர, நந்தினி தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் உத்தேசத்தோடு, "ஒரு ரூபாய்க்கு கீரை குடும்மா..." என்றாள்.

கீரைக்காரி நீட்டிய இரண்டு கட்டுகளை ஒரு பக்கமாய் வைத்துவிட்டு ஹாண்ட்பாக்கில் நான்காக மடித்து வைத்திருந்த நைலான் பையை எடுத்து உதறி, அதனுள் கீரையைப் போட்டாள்.

"இந்த நைலான் பையில் இது ஒரு சௌகர்யம். சுருக்கினால் ஒரு கர்சீப் அளவே இருப்பதை ஹாண்ட் பாக்கில் போட்டுவிட்டால், சமயத்தில் அவசரத் தேவைக்கு கை கொடுக்கும். இப்படி ஆபீஸிலிருந்து வீடு திரும்புகையில் பச்சென்று கீரையோ, காயோ, விலை மலிவாய் பழங்களோ பார்த்தால், பைக்கு என்ன செய்வோம் என்று கையைப் பிசைந்து கொண்டு நிற்காமல், தேவையானதை வாங்கி, வீட்டுக்கு வசதியாய் எடுத்துப் போகலாம்..."

கீரைக்குப் பணத்தைக் கொடுத்த பின்னர் அடுத்த கூடைக்காரரிடம் இளசாக முள்ளங்கியும், முருங்கைக் காய்களும் இருக்க, அவற்றையும் தலா ஒரு ரூபாய்க்கு வாங்கிப் பையில் போட்டுக்கொண்டாள்.

இந்த மாதிரி கூடை வியாபாரிகள் நித்தமும் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. சில நாட்களுக்கு இருப்பார்கள், சில நாட்களுக்கு இருக்கமாட்டார்கள். அப்படி இல்லாதபோது, வீட்டுக்குச் சென்று இரவுச் சமையலைத் தொடங்கும் முன்னர். அவதிஅவதி என்று அடுத்தத் தெருமார்க்கெட்டுக்கு ஓடி, ஏதாவது



காய்களை வாங்கி வருவதுதான் முக்கால்வாசி நாட்களில் நடக்கும் பழக்கம்.

ஒருநாளைப்போல ஆபீஸில் உழைத்துவிட்டு, பஸ்சில் இடிபட்டு வந்த பிறகு, மீண்டும் செருப்பை மாட்டிக்கொண்டு ஓடு என்றால், அலுப்பாகத்தான் இருக்கிறது. இன்று மாதிரி வரும் வழியிலேயே நல்லதாகப் பதார்த்தங்கள் தினமும் கிடைத்துவிட்டால், எத்தனை நன்றாக இருக்கும்!

அல்லது, சில பேர் வீடுகளில் செய்கிற மாதிரி வேலைக்காரர்கள், வீட்டு ஆண்கள் என்று யாராவது இந்த வெளிவேலைகளைக் கவனிக்க முன்வந்தால், கொஞ்சம் உபகாரமாய் இருக்கும். ஆனால் எங்கே? இது நடக்கிற காரியமா?

தனிக்குடித்தனம் வைத்த புதுசில் மோகனிடம் சுவாதீனமாய் இது விஷயமாய் பேச்செடுத்தது உண்டு தான்.

படித்துக்கொண்டிருந்த பேப்பரைத் தழைத்து விட்டு, மெதுவாய் பேசியவளை மோகன் அழுத்தமாய் பார்த்தான்.

"என்...னது! என்ன... என்ன... திரும்பச் சொல்லு..."

அந்த 'என்ன, என்ன' கேட்ட தோரணையும், விழித்த பார்வையுமே, தான் கேட்டது தவறு என்கிற பயத்தைத் தோற்றுவிக்க, நந்தினி பேசாமல் நின்றாள்.

அரைநிமிஷம் அவளை அப்படியே வெறித்து விட்டு, "எல்லார் வீட்டு இளிச்சவாயன்க மாதிரி நானும்னு நினைச்சிடாத... இன்னொரு தரம் மரியாதை

இல்லாம இந்த ரீதில பேசினேன்னா, நடக்கறதே வேற! வேலைக்குப் போய் வந்துகிட்டு, ஒழுங்கா மத்த பொறுப்புக்களையும் கவனிக்கறதுன்னா, செய்... இல்லேன்னா, வேலையை விட்டுட்டு வாலைச் சுருட்டிக் கிட்டு வீட்டோட, பொம்பளையா லட்சணமா இரு... உன் சம்பாதிக்கிற திமிரை என்னண்ட காட்டாத! உனக்கு 'ஆமாஞ்சாமி' போட்டு, கூஜா தூக்குவேன்னு எதிர்பாத்தா, அதுக்கு ஆள் நா இல்லே... நா ஆம்பளை... ஆமா..." என்று உறுமிவிட்டு, மீண்டும் பேப்பரை உயர்த்திக்கொள்ள, சாதாரணமாய் எதையோ சொல்லப்போய், என்னடா இது என்று நந்தினி வெல வெலத்துத்தான் போனாள். இந்தப் பேச்சை எடுத்தது அன்றுதான் முதல்! கடைசியும்கூட!

ஆனால், தனியாய் இருக்க நேரும்போது, மேலும் மேலும் அடுக்கடுக்காய் வேலைகள் காத்திருந்து ஒருவித அலுப்பைத் தரும்போது, மனசுக்குள் தலை தூக்கவே செய்யும். அப்படி என்ன அடாவடியாய் கேட்டுவிட் டோம், அத்தனை கோபம் மூக்கு நுனியில் ஏறி இத்தனை முரட்டுத் தனத்துடன் இருக்கிறார் என்கிற வருத்தம் உள்ளுக்குள் வியாபிக்கவே செய்யும்...

இளிச்சவாயன்கள்.

யார்?

பெண்டாட்டிக்கு உதவியாய் கடை, கண்ணிக்குச் சென்றுவந்து, ஒருவித அனுசரணையுடன் நடந்து கொள்பவர்களா? அப்படியென்றால் அப்பா, ராமு மாமா, சந்திரன் மாமா, ரகு, ஸ்ரீதர், சுந்தரேசன், வாசு மாமா, சேகர் அத்தான், இன்னும் பெண்டாட்டி கஷ்டம் புரிந்து இதமாய் நடந்துகொள்ளும் அத்தனை



ஆண்களும், மோகன் கணக்குப்படி இளிச்சவாயன்கள் தானா?

இப்படி இவர் குற்றம்சாட்டுவதை ஜானாவிடம் சொன்னால் அவள் என்ன பண்ணுவாள்? சிரிப்பாளா, இல்லை, இது என்ன கண்ணைக் கட்டிவிட்ட குதிரைத் தனம் என்று புருவம் உயர கோபிப்பாளா?

ரகு போன்ற புருஷனுடன் வாழ்பவளுக்கு, என் நிலையைப் புரிந்துகொள்வது சிரமமாகத்தான் இருக்கும்.

புருஷனும் மனைவியுமாய், நான் ஆண், நீ பெண், எனக்கு அடங்கி வாழ்வது உன் கடமை என்று சர்வ சகஜமாய் ஊர் உலகத்தில் காணப்படும் தம்பதிபோல வாழாமல், புருஷனை நல்ல சினேகிதனாகவும் பாவித்து வாழும் ஜானாவுக்கு, சுலபத்தில் என் நிலை புரியாது தான்...

**கா**ய்கறிப் பையை நந்தினி இடக்கைக்கு மாற்றிக் கொண்டாள். வலக்கையில் கசகசத்த வியர்வையை புடவைத் தலைப்பில் துடைத்தாள்.

என்னமோ தெரியவில்லை, இன்று வழக்கத்தை விட அலுப்பு கூடியே இருந்தது... லேசாக முணுமுணு வென்று தலைவலி... மூட்டுகளில் ஒரு குடைச்சல்... ஜுரம் வரப் போகிறதோ?

சட்டென்று, ஏழெட்டு மாசங்களுக்கு முன்னால் அதிசயத்திலும் அதிசயமாய் உடம்புக்கு முடியாமல் ஒரு நாள் லோல் பட்டது ஞாபகத்துக்கு வந்தது.

பித்தமோ, என்னவோ... சதா தலைசுற்றல், வாந்தி, கணகணவென்று உடம்பில் சூடு... ராத்திரி முழுக்க வாய்

ஓயாமல் வாந்தியெடுத்து விட்டு கண்ணில் கருமை படரச் சுருண்டு படுத்த நிமிடத்தில், 'என்னம்மா' என்று பரிவோடு ஒரு வார்த்தை மோகன் கேட்காதது கூடப் பெரிசில்லை, ஆனால் அழும் கைக்குழந்தையைத் தூக்கி சமாதானம் செய்யாததோடு, 'அந்தச் சனியனை கொஞ்சம் கவனியேன். மனுஷனை நிம்மதியா பேப்பர் படிக்கவிடாம நைநைனு அழுதுகிட்டே இருக்கு... சட்' என்று எரிச்சலோடு கத்தியதும் நந்தினி அடிபட்டுத் தான் போனாள். பல்லைக் கடித்துக்கொண்டு எதுவும் பேசாமல் இருந்தவள், அவன் ஸீனியர் வீட்டுக்குப் போனதும், ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, என்னால் இதுதான் முடியும் என்கிற மாதிரி தனியாய் உட்கார்ந்து பிழியப்பிழிய அழுதுதீர்த்தாள்.

அழுது முடித்து, கொஞ்சம் தயிர்சாதமாய் சாப்பிட்டு, குழந்தைக்குப் பால் கொடுத்து உறங்க வைத்து, இவளும் தூங்கி எழுந்த பின்னர், வேதனை குறைந்துபோனது. அம்மா சொல்கிற தினுசில், ஒன்றுமே இல்லாததை நாம் தான் பெரிசு பண்ணுகிறோம்; ஆண்கள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள்; இந்தக் காதில் வாங்கி அந்தக் காதால் விட பழக வேண்டும் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டு, எதுவுமே நடக்காத மாதிரி இரவுச் சமையலுக்குப் புருஷனுக்குப் பிடித்த பூண்டு குழம்பைச் செய்ய பூண்டு உரிக்க உட்கார்ந்ததை இப்போது நினைக்கையில், இன்று ஜுரம், கிரம் என்று எதுவும் வராமல் இருக்க வேண்டும், வந்தால் குழந்தை, வீடு திண்டாடுவதோடு, தானும் சீரழிந்துவிடுவோமே என்கிற கவலை தோன்றியது.



வேண்டுமானால் மருந்துக் கடையில் க்ரோஸின் மாத்திரைகளை வாங்கிச்சென்று காபியோடு விழுங்கி, வருவதை முன்யோசனையுடன் தடுத்துவிடலாமா?

வீட்டுக்குப் போய்விட்டால், மருந்து வாங்கவென கிளம்ப கை வராது, மோகனும் சென்று வாங்கிவர மாட்டார் என்பதால், தெருமுனையில் இருந்த மருந்துக் கடையில் கூட்டமாக இருந்தாலும் பரவாயில்லை என்று நின்று, நான்கு மாத்திரைகளை வாங்கிக்கொண்டாள்.

திரும்பி, நாழியாகிவிட்ட உணர்வோடு கால்களை வீசிப்போட்டு நடந்தவளுக்கு, திடுமென ஜானா உடம்பு சரியாக இல்லை என்று முன்பொரு நாளு ஆபீஸுக்கு வராமல் இருந்ததும், இவளும் வேணியும் அவள் வீட்டுக்குப் போனதும், அங்கு பார்த்த சம்பவங்களும் மனசுள் பளபளத்தன.

மதியச் சாப்பாட்டு நேரத்தை வீணாக்காமல் ஆட்டோ பிடித்து ஜானாவைப் பார்க்க அவள் வீட்டுக்குச் சென்று மணி அடித்தவர்களை, கதவைத் திறந்து வரவேற்றது ரகு.

சமையல்கட்டில் ஏதோ வேலையாய் இருந்திருக்க வேண்டும்... தோளில் துண்டு, கையில் கரண்டி, நெற்றியில் வியர்வை.

கரண்டியும் கையுமாய் நிற்பதை இவர்கள் பார்த்து விட்டார்களே என்கிற கூச்சமோ, அசட்டு வழியலோ இல்லாமல் அழகாய் புன்னகைத்தான். 'ப்ளீஸ் கம் இன்-' என்று வரவேற்றான்.

"ஜானா பெட்ரூம்ல இருக்கா... போய் பேசிட்டு இருங்க... இதோ வந்திடறேன்..."

உள்ளே சென்று அமர்ந்து ஜானாவிடம் பேசத் தொடங்கி பத்து நிமிஷங்கள் ஆகியிருக்கும், ரகு அறைக்குள் வந்தான். கையில் ட்ரே... தட்டு நிறைய, வாட்டப்பட்ட ரொட்டித் துண்டங்கள், ஜாம், வெண்ணை, இரண்டு 'மக்'கில் காபி, ஒரு கிண்ணத்தில் ஆவி பறக்கும் 'சூப்'.

"என்ன ரகு, இது? நீங்க ஏன் வீணா சிரமப்படறீங்க?" இவளும் வேணியும் பரிதவித்ததும், ரகு சிரித்தான்.

"டோஸ்டர்ல ரொட்டி வாட்டறதும், பாலை சுடவெச்சு காபி கலக்கறதும் சிரமம்னா, மனுஷன் நடக்கறதும், உக்காரறதும்கூடத்தான் சிரமம்! ப்ளீஸ், எடுத்துக்கங்க... சாப்பாட்டு நேரத்துல வந்திருக்கீங்க... இன்னும் சாப்பிடலை இல்லே...? பிரமாதமா ஒண்ணும் பண்ணிடல... வெறும் டோஸ்டும், காபியும்தான்... ஜானா, உனக்கு சூப் வெச்சிருக்கேன், சூடு ஆறத்துக்கு முன்னால எடுக்க... வாய்க்குப் பிடிச்சா, ரெண்டு டோஸ்டும் எடுத்துக்க! தூங்கப் பாரு... நா அஞ்சு, அஞ்சரைக்கு வந்துடறேன். உடம்பு தேவலை, நா சமைக்கப்போறேன்னு எழுந்து ஸ்ட்ரெயின் பண்ணிக்கிட்டா, என்கிட்ட உதை வாங்குவே! நா வரட்டுமா? ரெண்டரை மணிக்கு ஒரு மீட்டிங் இருக்கு... வரேன் வேணி, பை நந்தினி..."

வெகு இயல்பாகப் பேசி ரகு விடைபெற்றுக் கொண்டு போக, அதைவிட இயல்பாக கணவனின் உபசரணைகளை ஜானா ஏற்றுக்கொள்ள, அந்த அன்னியோன்யம், வேஷம் போடாத அன்பு, கரிசனத்தைப் பார்த்த நந்தினி பிரமித்தாள்.



கொஞ்சம்கூடப் பெண்பிள்ளைத்தனம் கலக்காமல், கொஞ்சம்கூடத் தன் ஆண்பிள்ளைத்தனத்தை இழக்காமல், சொல்லப்போனால், தன் மாறுபட்ட, கனிவான, அக்கறை மிகுந்த செயல்களால் இன்னும் கம்பீரம் கூடிப்போக, இப்படிக்கூட ஓர் ஆண் இருப்பது சாத்தியமா என்ன?

இருக்கிறாரே!

"ஒரு ஆணும், பெண்ணும் உடம்பால இணைஞ்சு வாழறது மட்டும்தான் தாம்பத்தியம்னு நினைச்சா, என்னைப் பொறுத்தவரை அதைவிட பைத்தியக்காரத்தனமான கருத்து வேற ஒண்ணுமில்லே! நா அடிக்கடி சொல்ற மாதிரி, பரஸ்பர அன்பு, மரியாதை, மதிப்பு, விட்டுக்கொடுத்தல் இத்தனையும் தனக்குள்ள அடக்கிட்டு இருக்கறதுதான் நிஜமான, சத்தியமான தாம்பத்தியம்... இதைப் புரிஞ்சுகிட்டு வாழ்ந்தா, எந்த பிரச்சினையுமே இல்லே..."

ஜானா சொன்ன மாதிரி ஒரு தாம்பத்தியம் அமைவது சாத்தியமா என்று வியப்பேனே - இதோ இவர்களே வாழ்ந்துகாட்டுகிறார்களே!

அன்று அவர்கள் இருவரையும் ஒருங்கே நிற்க வைத்து நமஸ்காரம் பண்ணவேண்டும்போல நந்தினிக்கு பரபரத்துத்தான் போனது.

எப்பேர்ப்பட்ட வாழ்க்கை அது!

பூர்வ ஜென்மத்தில் எக்கச்சக்கமாய் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும், இப்படியொரு வாழ்வு அமைய, இல்லையா?

நான்கு நாட்கள் கழித்து, உடம்பு தேவலையாகி ஜானா மறுபடி ஆபீஸுக்கு வரத் தொடங்கியதும், இதையே அவளிடம் சொல்ல, சிரித்தாள்.

"மண்ணாங்கட்டி பூர்வ ஜென்மம், புண்ணியம்! கணவன், மனைவி மனசு வெச்சா நடக்கக்கூடிய ஒரு சமாச்சாரத்துக்கு, ஏம்பா அனாவசியமா பூர்மஜென்ம புண்ணியப் பாவத்துக்கு க்ரெடிட் குடுக்கறே? 'இது என் வாழ்க்கை, இதை நிம்மதியா வெச்சிக்கறதும் வெச்சிக் காததும் என் கையில் இருக்கு! நா வளர்ந்து விவரம் தெரிஞ்சவ... ஸோ, எனக்கு வேண்டியது, வேண்டாததை அலசி, தீர்மானிக்க வேண்டியது என் பொறுப்பு'னு நாம ஒத்தொத்தரும் தெளிவா நடந்துகிட்டம்னா, யாருடைய வாழ்க்கையும் கூடுமானவரையில் பிரச்சினைகள் இல்லாம தான் இருக்கும்! 'அவேர்னஸ்' இது ரொம்ப முக்கியம், நந்து..."

ஜானா சொல்லும்போது கேட்பதற்கு எல்லாம் ரொம்ப சுலபமாக, யாராலும் சாதிக்கக்கூடியதாகத் தெரிகிறது.

ஆனால்?

புருஷன் எதிரில் நின்று நிமிர்ந்து பார்க்கும்போதே வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்க முற்பட்டால்... மீறி ஏதாவது பேச ஆரம்பித்தாலே, "இது என்ன அதிகப் பிரசங்கித்தனம்? யார் இப்படிப் பேசகத்துக்குடுத்தது? வேலைக்குப் போற திமிரா?" என்று எதையும் காதில் வாங்காமல் உறுமினால்... மனம்விட்டுப் பேசுவதாவது, விழிப்புணர்வாவது!



சிந்தனை மாறாமல் மாடிப்படி ஏறியவள் குழந்தையின் அழுகுரல் கேட்டு, கலைந்தாள்.

முன்னறையில் வாரியிறைந்திருந்த ரம்யாவின் விளையாட்டுச் சாமான்கள், கிழிபட்டிருந்த புத்தகங்கள், ஓரத்தில் குளமாய் ஜலம். மூத்திரமா?

கூடத்தில் அழுதழுது சிவந்த கண்களும், ஒழுகும் மூக்குமாய் ரம்யா.

பைகளை வைத்துவிட்டு குழந்தையை எடுத்துக் கொண்டாள்.

"ஆயா..."

எங்கு போய்விட்டாள், இங்கு குழந்தையை அழ விட்டு விட்டு...

"ஆ...யா..."

"இதோ வந்திட்டே இருக்கேன்..."

மொட்டை மாடியிலிருந்து உள்ளே வந்தவளை நந்தினி கோபத்துடன் ஏறிட்டாள்.

"குழந்தையை அழவிட்டுட்டு எங்க போயிட்ட, ஆயா?"

"எங்கயும் போகல... அய்யா வந்தாரு, காபி கேட்டாரு... கலந்து குடுத்திட்டு, கொல்லைப் பக்கம் போயிட்டுவரேன்..."

இதற்கும் மேல் ஏதாவது கேட்டால், "உன் கிட்ட வேலை பாக்க நம்மால ஆகாதும்மா, கணக்கைத் தீர்த்து அனுப்பிடு!" என்று தம் மாமூல் பல்லவியை

ஆரம்பிப்பாள் என்பதால், நந்தினி கஷ்டப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

ஒரு வேலைக்காரியை 'ஏன் வீட்டை துப்புறவாகக் கூட்டி சுத்தம் பண்ணவில்லை? குழந்தையை அழாமல் பார்த்துக் கொள்வதற்கென்ன?' என்று அதட்டக்கூட முடியாத கையாலாகாத்தனத்தோடு, இத்தனைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி காபியைக் குடித்துக்கொண்டு படுக்கையில் ஹாயாக புருஷன் படுத்திருப்பதும் சேர்ந்து கொள்ள, கண்கள் கலங்கி, சப்தமில்லாமல் அழத்தொடங்கிய நிமிஷத்தில், வரவர எதற்கெடுத்தாலும் அழும் பலவீனமும் தனக்குள் ஜனித்துவிட்டதை நந்தினியால் உணர முடிந்தது.

## 15



ஞாயிற்றுக்கிழமை.

"ஐந்துக்கு எழுந்து புடவைத் தலைப்பை தூக்கிச் செருகிக்கொண்டு, வீட்டை ஒட்டடை அடித்து, அலமாரி களை ஒழித்து, தட்டுகளை அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த பேப்பர்களை, தெருவோடு போன பேப்பர்காரரை வரவழைத்து, எடை சரியாக இருக் கிறதா என்று மன்றாடி போட்டு, தூங்கி எழுந்துவிட்ட ரம்யாவுக்குப் பால் கொடுத்து, எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, ரவா உப்புமா செய்து கணவனுக்கும் பெண்ணுக்கும் கொடுத்து, சமையல்கட்டில் பூச்சி



பிடித்துப்போயிருந்த மளிகைச் சாமான்களைத் தட்டி, சலித்து புடைத்த பின்னர், குளிக்கப் போகலாமா, இல்லை, சமையலைக் கவனித்துவிடலாமா என்று நந்தினி நிமிர்ந்தபோது, மணி பத்தேமுக்கால் என்றது.

இன்னும் தலைக்கு மேலே வேலைகள் காத் திருந்தன.

தோய்ப்பதற்கு அம்பாரமாய் ஒரு மூட்டை துணி இருந்தது. நூல் புடவைகளைத் தோய்த்து, கஞ்சி போட்டு உலர்த்திவைத்தால், மூணு மணிக்கு மேல் இஸ்திரிக் காரர் வந்து வாங்கிப் போவதற்கு வசதியாய் இருக்கும். ரம்யாவின் ஃப்ராக் இரண்டில் தையல் விட்டிருக்கிறது. 'வேற போடு ஆயா... இது வேணாம்" என்று இவள் கரடியாய் நித்தமும் கூறுவதைக் காதில் வாங்காமல், வேறு துணியே இல்லாத தினுசில் இந்த இரண்டையுமே ஆயா மாற்றிமாற்றிப் போடுவதில், சாயங்காலம் ஆபீஸிலிருந்து வரும்போது அன்றாடம் பிச்சைக்காரக் குட்டி மாதிரி கிழிந்த ஃப்ராக்கும் கலைந்த தலையுமாய் ரம்யா நிற்கிறது.

மத்தியானமாய் உட்கார்ந்து ரம்யாவின் துணி களை சீர்பண்ண வேண்டும்.

அப்புறம்...

ஏதோ ஒரு ஷர்ட்டில் பட்டன் இல்லை என்று முதல் நாள் அதை முகத்தில் எறிந்து மோகன் கத்தியது ஞாபகத்துக்கு வர, கையோடு அவருடைய அலமாரியை யும் ஒரு தரம் பார்த்துவிட வேண்டும் என்ற தீர்மானத் தோடு, காய்கறிக் கூடையை கையில் எடுத்தபடி என்ன

சமைக்கலாம் என்று நந்தினி யோசனை பண்ணத் தொடங்கினாள்.

என்றைக்குமே எல்லாம் மகா விதரணையாக இருந்தால்தான் மோகனுக்குப் பிடிக்கும் என்றாலும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்கிற ஹோதாவில் சமையலும் சாப்பாடும் இன்னும் விசேஷமாக இருக்க வேண்டும்.

என்ன சமைக்கலாம்...?

தேங்காய் இருக்கிறது. தேங்காய் சாதம் கலந்து, மோர்க்குழம்பு வைத்து, அப்பளம் பொறிக்கலாமா?

ஐந்து மணி டிபனுக்கு வேண்டுமானால், உருளைக் கிழங்கு இருக்கிறது... காரமாய் மசாலா கலந்த போண்டா போட்டுவிட்டால், ராத்திரி படம் முடிந்து சாப்பிடுவதற்கு வெறும் தயிர்சாதத்தை வைத்து விடலாம். போதாது என்று தோன்றினால், சட்டென்று ஒரு துவையல் அரைத்து, மிளகு சீரகம் தட்டிப் போட்ட ரசத்தை...

**வா**சல் அழைப்புமணியை யாரோ அழுத்துவது கேட்க, நந்தினி புருவங்களை உயர்த்தினாள்.

யாராக இருக்கும்?

அப்பா? கல்பனா?

இஸ்திரிக்காரர் அதற்குள் வரமாட்டாரே!

மோகனுடைய நண்பர்கள் யாராவது?



இவள் யோசித்துக்கொண்டிருக்கையிலேயே ஆயா கதவைத் திறப்பதும், 'வாங்கம்மா' என்று யாரையோ வரவேற்பதும் கேட்டன.

"அம்மா இல்லே?"

"சமையல்கட்டுலே இருக்காங்க..."

யார்? ஜானாவா? இந்த வேளையிலா?

அவசரமாய் எழுந்து, காய்கறித் கூடையை மேடை மேல் வைத்துவிட்டுத் திரும்புவதற்குள், ஜானா அறைக்குள் வந்துவிட்டாள்.

"என்ன ஜானா, திடும்னிட்டு?"

சினேகிதியை வரவேற்றவள் திடுக்கிட்டாள்.

லேசான உப்பின முகம் சிவந்த கண்கள். ஏனோ தானோ என்று உடுத்தப்பட்ட புடவை.

"என்ன, ஜானா?"

கிட்டே வந்தவள், நந்தினியின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"ஒரு ட்ராஜிக் நியூஸ், நந்து.... சீதாராமன் போயிட்டாராம்..."

"எ....ன்....னது! எந்த சீதாராமன்? மாலுவோட ஹஸ்பண்ட்? என்னப்பா சொல்றே நீ?"

"அரை மணி முன்னால வெங்கட் வந்தப்ப, நானும் நம்பலதான்... அம்மு நரசிம்மன், வெங்கட்டுக்கு போன் பண்ணி, தெரிஞ்சவங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணுங்கனு சொல்லியிருக்காங்க... நம்பாம என்ன பண்றது!"

"என்னப்பா, என்னப்பா ஆச்சு?"

"ரொம்ப அநியாயம், நந்து... காலைல எழுந்து, 'கதவைச் சாத்திக்க, மாலு'னு சொல்லிட்டு ஜாக் போயிருக்கார். சாதாரணமா அஞ்சுக்குப் போற மனுஷன் ஆறரைக்கெல்லாம் வந்துடுவாராம். இன்னிக்கு ஏழாகியும் திரும்பலை... சரி, வழிலே யாராவது சிநேகிதரைப் பாத்திருப்பார், பேசிட்டு நிதானமா வருவார். ஞாயிற்றுக்கிழமைதானேனு மாலுவும் கவலைப் படலியாம்... ஆனா..."

"ஆனா?"

"எட்டு மணி சுமாருக்கு வாசல்ல கார் வந்து நிக்கறதாம், சீதாராமனோட 'பாடி'யோட..."

நிற்க முடியாததைப்போல நந்தினி மேடைமேல் சரிந்து கொண்டாள்.

"என்னாச்சுப்பா?"

"மாஸிவ் ஹார்ட் அட்டாக்காம்... பீச்சுல ஓடிட்டே இருக்கறப்போ, மாரடைப்பு வந்து..."

பேசமுடியாமல் ஜானா விசும்ப முற்பட, நந்தினியின் கண்களிலிருந்தும் நீர் சலசலவென்று வழியத் தொடங்கியது.

சீதாராமனுக்கா?

மாஸிவ் ஹார்ட் அட்டாக்கா?

நம்ப முடியவில்லையே?

வாரத்துக்கு நான்கு தரமாவது க்ளப்புக்குப் போய் நீச்சல் அடித்து, டென்னிஸ் விளையாடி, காலையில



தினமும் 'ஜாக்' செய்கிறேன் பேர்வழி என்று பீச்சில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஓடி... கண்டதைத் தின்னால் தொந்தி விழுந்துவிடும் என்று எண்ணெய், இனிப்பு வகையறாக்களைத் தவிர்த்து, உயரமாய், திட்டமான பருமன், வலுவான புஜங்களுடன், சிரித்த முகமாய், மாலுவை ஆபீஸில் விட வரும் நாட்களில் இவர்களைப் பார்க்க நேர்ந்துவிட்டால் 'ஹல்லோ' என்று முகம் முழுவதும் ஒரு சிரிப்பைப் படரவிட்டு விஷ் பண்ணும் சீதாராமனா? போய்விட்டாரா?

அழுகையினூடே நந்தினி பேசினாள்.

"என்னால நம்பமுடியலை, ஜானா... நீ நிஜம்மா தான் சொல்றியா? ஆர் யூ ஷ்யூர்? என்னப்பா இது! அவர் ஒரு அத்லெட் ஆச்சேப்பா... அவருக்காவது, மாஸிவ் ஹார்ட் அட்டாக்காவது! ஏய் ஜானா... வெவரம் தப்பா இருக்கப் போறதுப்பா... ப்ளீஸ்... ப்ளீஸ்..."

ஜானா கண்களைத் துடைத்துக்கொண்டு, பரிதவித்தவளின் தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

"நாம இங்க பேசிட்டு நேரத்தை வீண் பண்ணறதுல அர்த்தம் இல்லே... பாவம் மாலு... ஒண்டியா என்ன பண்றாளோ! 'நா போய் வேணிகிட்ட சொல்லிட்டு அங்க நேரா வந்திடறேன்'னு ரகு கிளம்பிப் போயிருக்கார். உன்னைக் கூட்டிகிட்டுப் போயிடலாம்னு நா வந்தேன்... கிளம்பறியா? ஆட்டோ வாசல்லே நிக்கறது-"

தலையை அள்ளி முடிந்து, நனைந்திருந்த புடவையை அவிழ்த்து, சுமராய் ஒன்றை உடுத்தி, படுக்கையறையில் டீவி, பார்த்துக்கொண்டிருந்த புருஷனிடம் சேதியைச் சொல்லி, "உப்புமா மிச்சம் இருக்கு... ராத்திரி சாதமும்,

தயிரும் இருக்கு... குழந்தைக்கு தயிர்சாதம் போதும்... உங்களுக்கு நல்ல சாப்பாடா வேணும்னா ஹோட்டல்ல சாப்பிடறீங்களா? குழந்தைய ஆயா பாத்துப்பா... கொஞ்சம் பொறுத்துக்கங்க... எவ்ளோ சுருக்க முடியுமோ வந்துடறேன்..." என்று கூடத்தில் நிற்கும் ஜானாவுக்குக் கேட்காத சின்னக் குரலில் கெஞ்சி, "குழந்தைய கவனா பார்த்துக்க, ஆயா... எதிர் வீட்டுக்கு வேணும்னா விளையாட அழைச்சிட்டுப் போ... அய்யாவ தொந்தரவு பண்ணவிடாத... தயிர்சாதமா போடு... அய்யா சாப்பிட்டப்பறம் இருக்கறதை நீயும் சாப்பிடு... இந்தா அஞ்சு ரூபா... வெச்சுக்க..." என்று கையில் காசைக் கொடுத்து அவளை சரிக்கட்டின பின்னர், காத்திருந்த சினேகிதியோடு புறப்பட்டாள்.

ஆட்டோவில் போகும்போது தனக்குத் தெரிந்த விவரத்தை ஜானா கூறினாள்.

"நல்லவேளையா சீதாராமனோட க்ளப் ஃப்ரெண்ட் ஸ்ரீனிவாசன், கூட இருந்திருக்கார். தினமும் காந்தி சிலைல தொடங்கி உழைப்பாளிகள் சிலை வரைக்கும் ஓடறது வழக்கமாம்... கண்ணகி சிலை வந்தப்போ, ஓடிட்டே இருந்தவர் 'சீனு'ன்னு கூப்பிட்டாராம். இவர் திரும்பிப் பாத்தப்ப, ஆள் கீழே கிடக்காராம்... தடுக்கி, கிடுக்கி விழுந்திட்டாராக்கும்னு பாத்தா, பேச்சு மூச்சு இல்லியாம்... பதறிப்போய் ரோட்ல போன காரை நிறுத்தி, ஆள்வார்பேட்டைல இருக்கற ப்ரைவேட் நர்ஸிங் ஹோமுக்கு எடுத்திட்டுப் போயிருக்கார். "எல்லாம் முடிஞ்சாச்சு, மாஸிவ் கார்டியக் அரெஸ்ட்'னு சொல்லிட்டாங்களாம்! ஸ்ரீனிவாசன் உடனே சீதாராமனோட ஜி.எம்.க்கு போன்ல விஷயத்தைச் சொல்லியிருக்கார். அவர் வண்டியோட வந்து, பாடிய வீட்டுக்குக் கொண்டுவந்தாராம்... 'ஜாக்' போன புருஷன் வந்துடுவார்னு காபி போட்டு வெச்சிட்டுக் காத்திருக்கறப்போ, பாடி வந்து எறங்கினா... ப்பா... என்ன ஷாக்...பா அது! மாலு எப்படித் தாங்கினாளோ, என்னமா தவிக்கறாளோ?"



அடங்கியிருந்த கண்ணீர் மீண்டும் ஊறிவிட, இருவரும் சில நிமிஷங்களுக்கு மௌனித்தார்கள்.

இன்றைக்கெல்லாம் இருந்தால், சீதாராமனுக்கு முப்பது, முப்பத்தோரு வயசிருந்தால் அதிகம். மாலு இவர்களைவிடச் சின்னவள், வயசு இருபத்திநாலோ, மூன்றோதான். கல்யாணமாகி, இரண்டு வருஷங்கள் ஆகின்றன. நான்கு மாதத்தில் கைக்குழந்தை. என்ன அக்ரமம் இது!

"முப்பது வயசுக்காரருக்கு, அவ்ளோ திடகாத்திரமாத் தன்னை வெச்சிகிட்டிருந்தவருக்குக் கூடவா ஹார்ட் அட்டாக் வரும், ஜானா?"

"வந்திருக்கே!"

"என்னால நம்ப முடியலைப்பா..."

"என்னாலையும்தான்... ஆனா, நாம நம்பலைன்றதுக்காக, அது நடக்காம இருக்கா?"

"பாவம்பா மாலு... கையில குழந்தை வேற..."

"மாலு ஹிஸ்டரிகலா இருக்கா, நீங்க போய் ஜானா மத்தவங்கள உடனே வரச் சொல்லுங்கனு அம்மு நரசிம்மன் வெங்கட்கிட்ட சொன்னாங்களாம்..."

"அவங்களுக்கு எப்படித் தெரியுமாம், ஜானா?"

"சீதாராமனோட பார்ட்னருக்கு நரசிம்மனைத் தெரியுமாம்... அதனாலதான் நியூஸ் வேகமா நமக்கு வந்திருக்கு..."

"மாலுவோட பேரன்ட்ஸ் உள்ளூர்தான், பொண்ணுக்கு தைரியம் சொல்ல கிட்டவே இருக்காங்க... சீதாராமன் குடும்பம் மதுரைலதானே இருக்கு?"

"ம்ம்..."

"அவங்களுக்குத் தகவல் போயாச்சாமா?"

"போயிருக்கும்... பாவம்... சீதாராமன்தான் மூத்த பிள்ளை... பெத்தவங்க எப்படித் தாங்குவாங்க? ஆசை ஆசையா காதல் கல்யாணம் பண்ணிகிட்டதெல்லாம் இப்படி அகாலமா ரெண்டே ரெண்டு வருஷத்துல ஓடறதுக்குத்தானா? ச்சே... ஆனாலும் ரொம்ப அநியாயம்ப்பா... மாலு எப்படி இந்தக் கஷ்டத்தைத் தாங்குவா? அவளை எப்படிப் பாக்கப் போறோம்? எனக்கு ரொம்ப பயமா இருக்கு, நந்து..."

**வீ**டு வந்துவிட்டது.

அதற்குள் சேதி பரவி, வாசலிலும், தெருவிலும் ஜனக் கூட்டம், ரோஜா மாலைகள், நீளநீளமாய் ஐஸ் கட்டிகள், அவற்றின் மேல் வாட்டசாட்டமாய், கால், கை விரல்கள் கட்டப்பட்ட சீதாராமன்.

ஜானா பயந்ததற்கு ஏற்ற மாதிரி, மாலு கதிகலங்கி, தூள் தூளாகச் சிதறித்தான் போயிருந்தாள்.

முதலில் இவர்களைப் புரிந்துகொள்ள முடியாதவளாய் மலங்கமலங்க விழித்தாள். 'மாலு...மாலு' என்று அழைத்ததும் துளி பிரக்ஞை வந்ததுபோல, "ஜானா... நந்து... நா... நா... என்ன பண்ணுவேன்... இது பொய் தானே... அவர் தூங்கறார்... அதானே நிஜம் சொல்லுங்க..." என்று கத்தி, புலம்பினாள். உடனே மயங்கி விழுந்தாள். தண்ணீர் தெளித்து விழிக்கப் பண்ணியதும் மீண்டும் எதுவும் புரியாமல் பரிதவித்தாள்.

மாலை வரை இதே வேதனைதான், கத்தல்தான், வார்த்தைகளால் விவரிக்கத் தெரியாத அவஸ்தைதான்.

நான்குமணிக்கு சீதாராமனைப் பெற்றவர்களும், உடன் பிறப்புகளும் மதுரையிலிருந்து வந்துசேர்ந்தார்கள். செய்ய வேண்டியவற்றைச் செய்துமுடித்து சீதாராமனைக் காட்டுக்கு ஒரு வழியாய் அனுப்பும் போது, மணி கிட்டத்தட்ட ஏழைத் தொட்டது.

பம்பரமாய் சுழன்று, அத்தனை ஏற்பாடுகளையும் முன்னின்று ரகு கவனிக்க, 'நாங்க இங்கயே இருக்கோம் மாலுவுக்கு துணையா' என்று ஜானாவும் வேணியும் தங்கிவிட, அவர்களுடனேயே இருந்து தன்னாலான இதத்தை மாலுவுக்குத் தர மனசு விரும்பினாலும், அது நடக்கிற காரியம் இல்லை என்பதால் நந்தினி புறப்பட்டாள்.

**அ**துவரை, புருஷனையும் வீட்டையும் மறந்திருந்தாலும், நாழியாகிவிட்டதே, மோகன் என்ன சொல்வாரோ என்கிற கலக்கம் நெஞ்சைப் பிறாண்டத் தொடங்கியதற்கு ஏற்ப, படியேறியவளை பூட்டின கதவு வரவேற்றது.

எங்கோ போய்விட்டார்?

கிழே வந்து, வீட்டுக்காரரின் போர்ஷன் கதவைத் தட்டினாள்.

பாதி சினிமாவில் தொந்தரவு செய்துவிட்ட கோபம் வீட்டுக்கார அம்மாளின் முகத்தில் வெளிப்படையாய் தெரிந்தது.

"எங்க வீட்டுக்காரரர் எங்கயாவது போயிருக்கா ராம்மா?"

"போகாம? காலைல போனவ, அவங்க சாப்பிட்டாங்களா, கொண்டாங்களானு கவலையில்லாம, ஊர் சுத்திட்டு இருட்டினப்புறம் வந்தா, போகாம என்ன பண்ணுவார்? பொண்ணை உங்கம்மா வீட்டுல விட்டுட்டு, செங்கல்பட்டுக்கு, தன்னோட அக்கா வீட்டுக்குப் போறதா சொல்லிட்டு மோகன் போனார். இந்தா சாவி..."

முகத்தில் எறியாத குறையாகச் சாவியைத் தந்துவிட்டு அந்தம்மாள் கதவை மூடிக்கொள்ள, நந்தினி வெலவெலத்துப் போனாள்.

வீட்டுக்கார அம்மாள் இத்தனை நிஷ்டூரமாகப் பேச வேண்டும் என்றால், கண்டிப்பாக மோகன் ஏதோ திரித்துச் சொல்லியிருக்க வேண்டும்...

ஊர் சுற்றவா போனேன்?

அப்படிச் சுற்றுபவளா நான்?

விவரத்தைச் சொல்லி, அனுமதி வாங்கிக்கொண்டு தானே சென்றேன்?



ரகு மாதிரி முன்னின்று அத்தனையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யாவிட்டாலும், இடி மாதிரி சம்பவம் நடந்திருக்கிறபோது, அதைப் புரிந்துகொண்டு அனுசரணையாக நடக்காமல்-என்ன கோபம் இது?

மனிதாபிமானம் துளியும் இல்லாமல் தான் நடந்து கொள்வதோடு, வேண்டாத புகார்களை அடுத்தவர்களிடம் கூறி, தன் பங்குக்குப் பரிதாபத்தை சம்பாதித்துக் கொள்ள முனையும் கணவனின் சுபாவத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள கூடிய, அடிவயிற்றில் உண்டான சங்கடத்தை அடக்கும் பாவனையில் உதட்டைக் கடித்து, அப்படியே இரண்டாக மடிந்து மாடிப்படிகளிலேயே நந்தினி கவிழ்ந்து உட்கார்ந்தாள்.



## 16

திங்கள் அன்று, ஜானாவும் வேணியும், அலுவலகத்துக்கு வரவில்லை.

"மாலதி ரொம்ப இடிஞ்சு போயிருக்காங்களாம். 'ஒரு மாரல் ஸப்போர்ட்டுக்கு வேணியும் நானும் கூட இருக்கோம்'னு காலைல வீட்டுக்கு ஜானா போன் பண்ணி சொல்லிட்டாங்க... அதனால இன்னிக்கு டிக்கெட்டிங் செக்ஷனுக்கு நீங்கதான் முழு இன்சார்ஜ். கஸ்டமர்ஸைச் சமாளிக்க முடியலைன்னா, வெங்கட்டைக் கூப்பிட்டுக்கங்க..."

இவள் நுழைவதற்காகவே காத்திருந்த மாதிரி உதவி மானேஜர் அம்மு நரசிம்மன் கூறிவிட்டதில், தன் சொந்த பிரச்சினைகளைக் குறித்து அல்லல்படவோ, மாலு என்னமாய் தவிக்கிறாளோ என்ற சிந்தனைகளை அளவுக்கு மீறி வளர்த்துக் கொள்ளவோ இயலாமல், எக்கச்சக்கமாய் வேலைகள்...

கூடவே - சீதாராமனின் அகால மரணம் குறித்தும், மாலதி எப்படியிருக்கிறாள் என்பது குறித்தும் எழுந்த கேள்விகளையும் சமாளிப்பதற்குள், நந்தினி திணறித் தான் போனாள்.

செவ்வாய் காலை, அலுவலகம் தொடங்குவதற்கு கால் மணி முன்னாலேயே வந்துவிடும் பழக்கம் ஜானாவுக்கு உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, முன்கூட்டியே சென்று காத்திருந்த நந்தினி, ஜானாவைக் கண்டதும் அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, "மாலு எப்படி இருக்காப்பா?" என்றாள் அவசரமாய்.

"நேத்து காலைல ஆபீஸ் போற வழிலயோ, இல்ல வீட்டுக்குப் போறப்பவோ நீ கண்டிப்பா மாலுவப் பாக்க வருவேனு எதிர்பாத்தோம், ஏம்பா வரலை?"

ஒருவித ஏமாற்றத்துடன் ஜானா வினவ, நந்தினி உதட்டைப் பிதுக்கினாள்.

"வர முடியல... அது இருக்கட்டும், மாலு எப்படி இருக்கா? அத மொதல்ல சொல்லு..."

"எப்படி இருப்பா? கதிகலங்கிப் போயி... திக்பிரமைப் பிடிச்சுப்போயி.. போப்பா... சந்தோஷமா போயிட்டிருந்த வாழ்க்கை க்ஷண காலத்துல தலைக்குப்புறக் கவிழ்ந்து போச்சுன்னா, யாராலதான் தாங்கிக்க முடியும்?"



"ரொம்ப அழறாளா?"

"அழாம? கைக்குழந்தைக்கு பால் குடுக்க மாட்டேன், ஒரு வாய் சாப்பிட மாட்டேன்னு பிடிவாதம் பண்ண தோட, சதா அழுதுக்கிட்டுத்தான் இருக்கா... மத்தவங்க சொல்லித் தேத்தற இழப்பா இது? அவகூட ரெண்டு நாளா இருந்தப்போ, அந்த துக்கம் தாளாம எனக்கே ஒண்ணும் பிடிக்காமத்தான் போயிடுத்து! ச்சே... என்ன உலகம்ப்பா... எதுவுமே சாஸ்வதம் இல்லாம..."

கலங்கிவிட்ட கண்களைக் கைக்குட்டையால் ஜானா துடைத்துக் கொள்ள, நந்தினி வேதனையை அடக்கும் பாவனையில் எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டாள்.

"எங்கப்பா கிட்டத்தட்ட மூணு மாசம் உடம்புக்கு முடியாம படுத்திருந்து போனார்... ஆஸ்பத்திரில சேர்த்து, எங்களால் முடிஞ்ச அளவுக்கு பணத்தாலயும், உடம்பாலயும் அவருக்கு சிகிச்சை, சிஷ்ருஷை பண்ணியும், இன்னிக்கும் அவர் போயிட்டார்ன்றதை எங்களால் நம்ப முடியல. அப்படியிருக்கறப்போ, கண்மூடித் திறக்கற நாழிகைல, 'இதோ வந்துடறேன்'னு திடகாத்திரமா வெளில போன ஆம்பிளை பிணமா வந்தா, யாரால நம்ப முடியும், இல்ல தாங்கிக்கத் தான் முடியும்? இது ரொம்ப கொடுமைப்பா... காலம் ஒண்ணாலதான் மாலுவத் தேத்த முடியும்னு எல்லாரும் சொல்றாங்க... அது சீக்கிரம் நடந்திச்சுன்னா நா சந்தோஷப்படுவேன்..."

உணர்ச்சிவசப்பட்டுப் போனதில் இருவருக்குமே அழுகை அடக்கமாட்டாமல்போக, நான்கு பேர் வந்து

போகும் இடத்தில் நிற்க வேண்டாம் என்று டாய்லட்டுக்குச் சென்று கதவை சாத்திக்கொண்டார்கள்.

முகம் கழுவி, பையிலிருந்து 'காம்பேக்டை' எடுத்து லேசாக பவுடர் பூசி, லிப்ஸ்டிக் தடவி, கலைந்திருந்த முடியை வாறிக்கொண்ட பின்னர் ஜானா கேட்டாள்.

"சாயங்காலம் இங்கேந்து நேரா மாலு வீட்டுக்குத்தான் போப்போறேன், நீயும் வரியா?"

உடனே பதில் கூறாமல் நந்தினி மௌனிக்க, ஜானா புருவத்தை உயர்த்தினாள்.

"என்னப்பா?"

"கஷ்டம், ஜானா..."

"என்ன கஷ்டம்..."

"........"

"என்ன விஷயம், நந்து? ஏதாவது பிராப்ளமா?"

"அப்புறமா சொல்றேனே..."

"எப்புறமா?"

"சாப்பிடறப்போ..."

பேசியவளை அழுந்த ஏறிட்டபோது, அவள் முகம் வெளிறி கண்களில் கருவளையம் படர்ந்திருப்பதை ஜானா வால் புரிந்து கொள்ள முடிந்தது.

மாலுவின் இழப்பு இவளை இந்த அளவுக்குத் தாக்கியிருக்கிறதா, இல்லை வேறு ஏதாவது கசமுசாவா?

எதுவானாலும் அப்போது பேச நேரமில்லை என்பதால், மேற்கொண்டு ஏதும் கேட்காமல் ஜானா வெளியில் வந்தாள்.

ஒன்றேகால் மணி சுமாருக்கு ப்யூனை அனுப்பி சாப்பாட்டு அறை காலியாக இருக்கிறதா என்று தெரிந்து கொண்ட பின்னர் சிநேகிதிகள் மூவரும் சாப்பிடச் சென்றனர்.

அவரவர் சாப்பாட்டைப் பிரிக்கும் வரையில் வாயைத் திறக்காமல் இருந்த ஜானா, காபி கலக்க நாயர் அடுப்படிக்குச் சென்றதும் நந்தினி பக்கம் திரும்பி "சொல்லு..." என்றாள்.

நந்தினி கையில் எடுத்த தோசைத் துண்டத்தை டப்பாவினுள் போட்டுவிட்டு ஜானாவை ஏறிட்டு மெதுவாய் பேசினாள்.

"ரெண்டு நாளா நா அம்மா வீட்டுலதான் இருக்கேன்..."

"ஏன்? என்ன விஷயம்? உடம்பு கிடம்பு சரியில்லையா? அன்னிக்கு மாலுவப் பாத்திட்டு வந்ததுல ரொம்ப அப்செட் ஆயிட்டியா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா..."

"தென்?"

"மோகன் இப்ப இங்க இல்ல... அவர் அக்கா வீட்டுல, செங்கல்பட்டுலே இருக்கார்..."

"ஸோ? நீ தனியா இருக்கப் பிடிக்காம அம்மா வீட்டுல இருக்கே, அதானே?"

நந்தினி இல்லை என்று தலையசைக்க, ஜானா பொறுமை இழந்தாள்.

"என்னப்பா சொல்ல வரே? வாயத் திறந்து சொன்னாத் தேவலை."

நந்தினி நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள். கலங்க முற்பட்ட கண்களை கஷ்டப்பட்டு அடக்கி சமாளித்தாள்.

"மோகன் கோச்சுக்கிட்டு அக்கா வீட்டுக்குப் போயிட்டார், ஜானா..."

"கோவமா? எதுக்கு? யார் மேல?"

"எம் மேலதான்..."

"எதுக்குப்பா கோவம்?"

"அன்னிக்கு அவர்கிட்ட சொல்லாம, அனுமதி வாங்காம மாலு வீட்டுக்குப் போயிட்டேனாம்!"

"யார் சொன்னா?"

"அவர் சொன்னதா வீட்டுக்காரம்மா, எங்கம்மா, அப்பா எல்லாரும்தான்."

"என்ன குழப்பம், நந்து, இது? மோகன்கிட்ட வெவரத்த சொல்லிட்டு நீ புறப்பட்டது எனக்கே தெரியுமே!"

"இல்லேனு மோகனே சொல்லியிருக்காரேப்பா?"

"வாட் நான்சென்ஸ் ஈஸ் நந்து?"



இப்போது நந்தினியின் விழிகள், இனியும் நீரை அடக்க மாட்டோம் என்று சண்டி பண்ணியதில், நீர்ப் பூக்கள் கண்ணோரங்களில் பூத்து உதிர்ந்தன.

வேணி எட்டி அவள் தோளைத் தட்டிக்கொடுத்தாள்.

"என்ன நடந்தது, நந்து? வெவரமா சொல்லாம எதுக்காகப்பா கண்கலங்கறே?"

"என்னத்தப்பா சொல்றது, எனக்கே தெளிவா ஒண்ணும் புரியாதப்போ..."

"முதல்ல நடந்ததைச் சொல்லு..."

சொன்னாள்.

குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் அத்தனையும் கேட்டு, அவள் நிறுத்தியதும், ஓங்கி மேஜையில் ஒரு குத்து குத்தி, "என்ன அக்கரமம்பா இது!" என்று ஜானா கோபமாகத் தொடர்ந்தாள்.

"இவ வெவரம் சொன்னதுக்கும், பர்மிஷன் கேட்டதுக்கும் சாட்சி, கல்லுகுண்டா நா இருந்திருக்கேன்! இவர் தடக்குனு கதையைப் புரட்டினா, நடந்தது இல்லைனு ஆயிடுமா? அது சரி, என்ன தைரியத்துல உங்க வீட்டுக்காரம்மா 'காலைல போயிட்டு ராத்திரி வரைக்கும் ஊர் சுத்திட்டு வரே'னு உன்னைக் கேட்டாங்க? ஹவ் டேர் ஷி? அப்படியே நீ சுத்தறதாவே வெச்சுக்கிட்டாலும் அவங்க யாரு உன்னண்ட கத்த? ம்?"

"அவங்க மட்டும் இல்லே, ஜானா, எங்கம்மாவே அப்படித்தானே கேட்டாங்க?"

"என்னனு?"

"காலைல போனவ இப்படிப் பொறுப்பில்லாம ராத்திரி இருட்டினப்புறம் வந்தா, எந்தப் புருஷன் பொறுத்துப்பார்-னு என் தலையைக் கண்டதும் பளிச்சுனு கேட்டாங்களே!"

"நீ அப்படிப் போறவளா, இல்லியானு ஒரு நிமிஷம் உங்கம்மா நினைச்சுப்பாக்கலியா?"

நந்தினி, விண்டுவிட்ட தோசையை எடுத்து வாயில் போட்டு மெதுவாக மென்றாள். படபடப்பில் விழுங்க முடியாமல் தோசை தொண்டையில் சிக்கிக்கொள்ள, ஒருவாய் தண்ணீர் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

முந்தாநாள் நடந்தது விரிவாக நினைவில் படர்ந்தது.

சில நிமிஷங்களுக்கு எதுவும் புரியாமல் மாடிப்படி இருட்டில் உட்கார்ந்துவிட்டு, மெள்ள எழுந்து மாடிக்குச் சென்று, அடுத்தடுத்து உண்டான வலியில் மனசு மரத்துவிட அழக்கூட தோன்றாமல் குளித்து, உடை மாற்றி, வீட்டைப் பூட்டி, கீழே வந்து தெருக்கோடி வரை நடந்து, சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அமர்த்திக்கொண்டு அம்மா வீட்டுக்கு வந்து படி ஏறினாள்....

வந்தவளை வாவென்று சொல்லாது, என்றும் இல்லாத வழக்கமாய் எங்கு போனாய், ஏன் இப்படி அடிபட்டு நிற்கிறாய் என்று ஒரு வார்த்தை, ஒரு வார்த்தை கூடக் கேட்காது, "என்ன, நந்து, இப்படிப் பண்ணிட்டே!" என்று முகத்தில் வண்டி ஏமாற்றம், கோபத்தோடு பேசும் அம்மா...



"என்னம்மா?" என்றால்...

என்ன ஏது என்று நின்று நிதானித்து விசாரிக்காமல் முழு நீளத்துக்கு புகார்கள், புத்திமதிகள்.

வருத்தம், கசப்பான அனுபவம் இவற்றோடு வயிற்றுப் பசியும் சேர்ந்துக்கொள்ள, மூலையாய் உட்கார்ந்து தேம்பித்தேம்பி அழுது முடித்த பிறகு, மெதுமெதுவாய் நடந்தவை அத்தனையும் இவள் கூற...

"ஏய் நந்து... கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுப்பா..."

"என்ன சொல்லணும்?"

"உன் குணம் உங்கம்மாக்குத் தெரியாதா?"

"தெரியும்தான்... ஆனாலும் மோகனே இல்லாததையும் பொல்லாததையும் சொல்லியிருக்கறப்போ..."

வேணி சாப்பிடப் பிடிக்காத மாதிரி டப்பாவை மூடி வைத்தாள். வாஷ் பேஸினில் கை கழுவியபடி கேட்டாள்.

"நிஜமாவேவா சீதாராமன் போயிட்டதப்பத்தி உங்க வீட்டுல மோகன் ஒண்ணுமே சொல்லல?"

"ம்ஹூம்.... 'காலைல தலைவலினு படுக்கைல படுத்திட்டிருந்தேன். அவ சினேகிதி ஜானா வந்தா. என்னமோ குசுகுசுனு பேசினாங்க... 'நா ஜானாவோட வெளில போயிட்டு வரேன்... குழந்தையப் பாத்துக்கங்க'னு சொல்லிட்டுக் கிளம்பிப் போயிட்டா. சமைக்கலை... ஒண்ணும் பண்ணலை... இப்படிப் பொறுப்பில்லாம இருக்கறதோட, சம்பாதிக்கற திமிரையும்

காட்டினா, எவ்வளவு நாளைக்குப் பொறுத்துக்க முடியும்? இந்தாங்க உங்க பேத்தி இனி உங்க பாடு, உங்க பொண் பாடு! நா எங்கக்கா வீட்டுக்குப் போறே'னு கத்திட்டு போயிட்டாராம்."

"அடக் கடவுளே!" ஜானா வெறுப்புடன் எங்கோ இருக்கும் கடவுளை அழைக்க, வேணி "அப்புறம்?" என்றாள்.

"நடந்தது பூராவும் கேட்டுகிட்டபுறமும் எங்கம்மா, நா செஞ்சதுதான் தப்புனு சொல்றாங்க... 'ஞாயித்துக் கிழமை ஒரு நாள்தான் நீயும் மாப்பிள்ளையும் சேர்ந்து இருக்கிற நாளு... ஆயிரம்தான் சினேகமானாலும், மணிக்கணக்கா அவரையும் வீட்டையும் கவனிக்காம நீ எப்படிப் போகலாம்? மாப்பிள்ளை குணம்தான் உனக்குத் தெரியுமே'னு என்னையே குத்தம் சொல்றாங்க..."

"ஓ, காட்!" வெறுப்புடன் ஜானா மீண்டும் மேஜையில் குத்தினபோது, நாயர் வைத்துச் சென்றிருந்த காபி, கப்பிலிருந்து சிதறியது.

"நீயே தழைஞ்சிபோறவதான்... உங்கம்மா உனக்கு மேல! கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன்னு இன்னிக்கும் இருக்கணும்னா எப்படி?"

"இப்ப அந்த விஷயம் எதுக்கு? நடக்கறதைப் பாப்போம்... அக்கா வீட்டுக்குப் போன மோகன் வந்துட்டாரா இல்லியா?"

""ம்ஹூம், இன்னிக் காலைல வரை வரல..."

ஜானா விரல்களால் மேஜைமேல் தாளம் போட்டாள்.



"சாருக்கு அவ்ளோ கோவமா? ஆனாலும் இந்த மாதிரி ஒருத்தரை நா பாத்ததில்லேப்பா..."

"....."

"என்ன பண்ணப்போறே, நந்து?"

"காலைல புறப்படறப்பவே அப்பாகிட்ட அம்மா சொல்லிட்டிருந்தாங்க, போய் அவரை சமாதானம் பண்ணி கூட்டிட்டு வரும்படி..."

"இடியாடிக், நீ தப்பு எதுவுமே பண்ணாதப்போ எதுக்காக அவரைப் போய் தாஜா செய்யணும், நந்து?"

"............"

நந்தினி வருத்தத்துடன் அமர்ந்திருக்க, ஜானா தீர்மானமாகப் பேசினாள்.

"இந்த முறை நீ தழைஞ்சுபோறதுல அர்த்தம் எதுவும் இருக்கறதா எனக்குத் தோணலப்பா... உனக்குனு ஒரு மரியாதை வேணாமா? இப்படி செய்யாத தப்புக்காக நீ விட்டுக் கொடுத்துக்கிட்டேபோனா, இதுக்கு ஒரு எல்லையே இல்லாமப்போயிடும்! பேசாம இரு, சொல்றேன். எத்தனை நாள் கோச்சுகிட்டு அக்கா வீட்டுல ஆசாமி உக்காருவார்? ரெண்டு நாள் போய், நீங்க யாரும் வந்து உருவமாட்டீங்கனு புரிஞ்சா, தன் தப்பை உணர்ந்து தன்னால வருவார்! ஜஸ்ட் இக்னோர் ஹிம்... இந்த மாதிரி ஒரு ட்ரீட்மெண்ட்தான் மோகனை வழிக்குக் கொண்டுவரும்! சொன்னாக் கேளுப்பா... மரியாதை குடுத்து, மரியாதையை வாங்கணும்... செல்ஃப் ரெஸ்பெக்ட் ரொம்ப முக்கியம்... புரிஞ்சு நடந்துக்க, நந்து..."

நிதானமாக, ஆனால் தெளிவாக ஜானா பேசியதை மனப்பூர்வமாய் வேணியும் ஆதரித்ததும், அவர்கள் சொன்னதில் நியாயத்தை உணர்ந்து நந்தினி அத்தனைக்கும் சரி, சரி என்று தலையாட்டினாலும், மேற்கொண்டு இரண்டு நாட்கள் சென்றும் மோகன் வீடுதிரும்பாமல் இருந்து, அம்மாவின் புலம்பல் தாள மாட்டாமல், துளித்துளியாக இவள் மாறிப்போனதில் அப்பா மாப்பிள்ளையை அழைத்துவரப் புறப்பட்டதற்கு சம்மதித்ததும் அல்லாமல், அவர் திரும்பி வந்து 'நீ வந்து மன்னிப்பு கேட்டுக்கிட்டாதான் மாப்பிள்ளை வருவார்னு அவங்க அக்கா சொல்றாங்க' என்று கூறியதும், வெட்கம் மானம் ரோஷம் என்று எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு செங்கல்பட்டு சென்று, 'இனிமே இப்படி நடந்துக்க மாட்டேங்க' என்று கிசுகிசுப்பாய் கூறி அவன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டதுதான் கடைசியில் நடந்தது.

# 17



"ஏய்..."

"..........."

"ஏய்... உன்னத்தானே... காது கேக்கலியா? இல்லே, கேட்டும் கேக்காத மாதிரி இருக்கியா?"

குரலை எழுப்பி மோகன் கத்த, சமையல்கட்டில் ரம்யாவுக்குச் சாதம் ஊட்டிக்கொண்டிருந்த நந்தினி அடித்துப் பிடித்துக்கொண்டு, தயிர்சாதக் கையோடு ஓடி வந்தாள்.



"கூப்பிட்டீங்களா, என்ன?"

மோகன் விழிகளை விரித்து அவளை ஏறிட்டான்.

"நா போடற சத்தத்துல அடுத்தத் தெருக்காரங்களே வந்திருவாங்க போல இருக்கு, நீ என்னடான்னா ஆடி அசைஞ்சுகிட்டு வந்து, கூப்பிட்டீங்களான்னு கேளு..."

"காதுல விழலீங்க..."

"எப்படி விழும்? புருஷன்காரன் ஒருத்தன் வாசக் கூடத்துல உக்கார்ந்திருக்கிறது நினைப்புல இருந்தாத் தானே, கூப்பிடறது காதுல விழும்!"

பேசிக்கொண்டே வராந்தாவுக்குச் சென்ற மோகன், கைப்பிடிச் சுவரில் சாய்ந்து, குரலைத் தழைக்காமலேயே பேசினான்.

"ஏதாவது சொன்னா, யாரையோ, யாரோ சொல்றாங்கனு கம்முனு இருந்திடுவே, அதானே உன் வழக்கம்... எல்லாம் நாம சம்பாதிக்கிறோம்ன்ற திமிர் அதானே?"

வராந்தாவுக்கு நேர் கீழாக, கீழ்விட்டு துளசி மாடம் இருக்கிறது. சாதாரணமாய் இன்னேரத்தில் வீட்டுக்காரம்மா அங்கு விளக்கைப் போட்டு அமர்ந்து பூ கட்டுவார்கள்; இல்லாவிட்டால், அந்தவாரப் பத்திரிகை எதையாவது புரட்டிக்கொண்டிருப்பார்கள்.

மோகன் வராந்தாவில் நின்று கத்தலாய் கூறும் அத்தனையும் அவர் காதில் ஒன்றுவிடாமல் விழவே செய்யும் என்கிற நினைப்பு சின்னதாக ஒரு சங்கடத்தை உற்பத்தி பண்ண, நந்தினி புருஷனை ஏறிட்டு, "உள்ள

வந்து பேசுங்க..." என்று கெஞ்சும் குரலில் கூற, மோகனின் கோபம் சரக்கென்று ஏறி மூக்கில் உட்கார்ந்து கொண்டது.

"ஏன்? ஏன் உள்ளார வரணும்? உன் வண்ட வாளத்தை யாரும் தெரிஞ்சிக்கக் கூடாதுன்ற பயமா? ம்? ஊர் உலகத்தோட பழிபாவத்துக்கு அஞ்சறவளா இருந்தா, ஒழுங்கா நடந்துக்கணும்... அத விட்டுட்டு..."

காரணமே இல்லாமல் எரிச்சல்படும் மனநிலையில் புருஷன் இருக்கும்போது, அவரிடம் பேச்சுக்கொடுப்பது தவறு என்று இதுநாள் கஷ்டப்பட்டு உணர்ந்திருந்த புத்தி முணுமுணுக்க, நந்தினி பதில் பேசாது உள்ளே போகத் திரும்பினாள்.

"எங்க போறே? நா என்ன செவுத்துகிட்டையா பேசிட்டிருக்கேன்? உன் மனசுல என்னதான் நினைச் சிட்டு இருக்கே? ம்? ஏய்... நில்லு... எனக்கு பதில் சொல்லிட்டுப் போ..."

நந்தினி பரிதாபமாய் விழித்தாள்.

"என்ன சொல்லச் சொல்றீங்க?"

"உள்ளார என்ன வெட்டி, கிழிச்சிட்டிருந்தே, மனுஷன் தொண்டைத் தண்ணி போக கத்தினது காதுல விழாம?"

"ரம்யாவுக்கு சாப்பாடு ஊட்டிகிட்டிருந்தேன்..."

"குழந்தைக்குச் சாப்பாடு போடறப்ப, காதுல பஞ்சை வெச்சு அடைச்சுப்பியா?"

நந்தினி அலுப்புடன் சூள்கொட்டினாள்.



"ஏங்க இப்படி எடக்கா பேசறீங்க? காதுல விழுந் திருந்தா வந்திருக்க மாட்டேனா?"

ஓரடி முன்னால் வந்து மோகன் கத்தியபோது, சற்றே அடங்கியிருந்த குரல் மீண்டும் ஓங்கி, அண்டை அயலாருக்குக் கேட்கும் தினுசில் பளிச்சென்று ஒலிக்க, நந்தினி அவமானத்தில் குன்றினாள்.

வரவர எதையும் திரித்து, இப்படி நாலு வீடு கேட்க அலறுவது மோகனுக்கு வாடிக்கையாய் போய்விட்டது.

கூடாது... தப்பித்தவறிக்கூட இந்த அர்த்தமில்லாத புகார்களுக்கு பதில் சொல்லிவிடக் கூடாது. தாள மாட்டாமல் ஒரு வார்த்தை கூறிவிட்டால், ஒழிந்தது, நான்கு நாட்களுக்கு "திமிர் பிடிச்சவடி நீ... உன் சம்பாதிக்கற கர்வத்தை என்னண்ட காட்டாத... பதிலா பேசற? பொண்டாட்டி அனுசரணையா இல்லாட்டி கூறாம சன்யாசம் வாங்கிக்கனு பெரியவங்க சொல்லி யிருக்கறத்துக்கு, இப்பத்தான் எனக்கு அர்த்தம் விளங்குது! பாத்தா பசு, பாஞ்சா புலி... அம்மாடி... ஊமைக்கோட்டானாட்டம் இருந்துகிட்டு உள்ளுக் குள்ளார இத்தனை விஷமா?" என்று இன்றைக்குக் கத்திய மாதிரி கீழ், பக்கத்து வீடுகளுக்குக் கேட்கும் படி கத்துவதும்; சமயங்களில் ஒருபடி மேலே போய் வீட்டுக்காரம்மாவிடம் சென்று சாது மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு, 'நா கண்காணாம போறேம்மா... குழந்தையப் பாத்துக்கங்க...' என்று சின்னக் குரலில் முனகிவிட்டு, 'ஐயோ பாவம் இவன்' என்கிற பரிதாபத்தை ரொம்ப சுலபமாகப் பெற்று, அர்த்த ராத்திரி வரை எங்காவது சுற்றிவிட்டு வருவதும் சில மாசங்களாக மாமூலாக நடப்பவைதானே!

சும்மா சொல்லக்கூடாது... அந்நியர் நடுவில் மோகன் பண்போடு நடந்துகொள்கிற விதம், மூக்கில் விரலைத்தான் வைக்கச் செய்யும்.

எழுந்து மரியாதையாய் நிற்பான்; சன்ன த்வனியில் பேசுவான்; 'ஆஹா, அதுக்கென்னங்க' என்று எதிராளி பேச்சுக்கு உடனே சம்மதிப்பான்; அடிக்கடி புன்னகைப் பான்; முக்கியமாய், வந்திருக்கும் விருந்தாளிகள் எதிரில் மனைவியைக் கொண்டாடுவான்.

'உட்காரு, நந்து...' என்று கரிசனத்தோடு நாற்காலி கொண்டுபோடுவான்.

'ஏன் வேர்க்குது... துடைச்சிக்க...' என்பான்.

'வயித்த வலிக்குதுனு சொன்னியே, தேவலியாம்மா?' என்பான்.

'குழந்தையக் கொண்டா... நா வெச்சிக்கிறேன்... எத்தனை நாழிதான் நீ சொமப்பே...' என்பான்.

மொத்தத்தில் இந்த மாதிரி ஒரு புருஷன் அமைவது துர்லபம் என்று யாரையும் எண்ணவைப்பான்.

துவக்கத்தில் இந்த நாடகத்தைக் கண்டு ஜானா, வேணி, ஏன் நந்தினியின் பெற்றோர்கூட ஏமாந்துதான் போயிருக்கிறார்கள்.

இத்தனை அருமையாய் பேசி, நடந்துகொள்ப வனைப் பற்றியா, இலைமறைவு, காய்மறைவாய் நந்தினி குற்றப்பத்திரிகை வாசிக்கிறாள் என்று யோசித்திருக் கிறார்கள்.



ஆனால், போகப்போக ரொம்ப நெருக்கமாகப் பழக ஆரம்பித்த பிறகு, இவர்களிடம் மோகனின் சாயம் வெளுத்துதான்போனது.

அந்தப் பேச்சும், கரிசனமும், அப்பட்டமான பொய், நாடகம் என்பதோடு, எந்த அளவுக்குத் தாலி கட்டினவனை நந்தினி விட்டுக்கொடுக்காமல் இருக்கப் பாடுபடுகிறாள் என்பதும் புரிந்துபோக...

அதன் பிறகுதான், 'ஆம்பிள்ளைனா அப்படித் தான் இருப்பார், நீதான் விட்டுக்குடுக்கணும்... உன் குடும்பம் சந்தி சிரிக்காம இருக்கணும்னா நீதான் அடங்கிப்போகணும்' என்கிற பங்கஜத்தின் உபதேசம் ஒரு பக்கமும், 'குனியக்குனிய குட்டுவாங்கப்பா, இது மனுஷ சுபாவம்... நிமிரு... சுய மரியாதைய விட்டுக் குடுக்காத... உன்னை மதிக்க உன் புருஷனுக்குக் கத்துக் குடு' என்கிற ஜானாவின் வெளிப்படையான பேச்சுக் களும் அதிகமாயின.

ஆனால், எந்த அறிவுரைக்கும் சுத்தமாய் பலன் இல்லாமல், இவள் எப்படி நடந்தாலும் அது கடைசியில் பிரச்சினையில் வந்துதான் முடிந்தது.

அம்மா பேச்சைக் கேட்டு எதற்கும் விட்டுக் கொடுத்ததில், நாளுக்கு நாள் மோகனின் அதிகாரம் தூள் பறந்ததோடு, அவன் எள் என்றால் இவள் எண்ணெயாய் நிற்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் ஏகத்துக்கு அதிகமாக, சரி, ஜானா சொல்கிற விதமாய் அத்தனைக்கும் பூம்பூம் மாடாய் தலையாட்டாமல், நிமிர்ந்து ஒரு வார்த்தை ஏன், என்ன என்று கேட்டு விடலாம் என்று தீர்மானித்து செயல்பட்டதும், மோகனின் புத்தி வக்கிரமாகி பாய முற்பட்டு, இப்படி

சின்ன விஷயத்துக்கு அல்லு அசல் அல்லோல கல் லோலப்பட்டுப்போகிற மாதிரி ஒரு ஆர்ப்பாட்டம் பண்ணுவது வழக்கமாகிவிட்டது.

தங்களிடம் பவ்யமாய், புன்சிரிப்புடன் பேசும் ஆளை, இப்படிக் கத்தி கோபிக்கவைக்கவேண்டும் என்றால், அந்த நந்தினி லேசுப்பட்டவளாக இருக்க முடியாது.

தனியாக இருக்கையில் தேள் மாதிரி என்னென்ன விதமாய் கொட்டுகிறாளோ!

மோகன் சொல்லிப் புலம்பும் வகையில், சம் பாதிக்கும் திமிறில் புருஷனை மதிக்காமல் எப்படி யெப்படி நடந்து கொள்கிறாளோ?

இதுதான் மாடி, எதிர், கீழ் வீடுகளில் தன்னைப் பற்றின அபிப்ராயம் என்பதை, நந்தினியால் நன்றாகவே உணர முடிந்தது.

ஆனாலும், என்ன செய்ய?

ஒவ்வொரு வீடாகச் சென்று, என் புருஷன் நடிக் கிறார், நான் எந்தத் தப்பும் பண்ணாதபோது வீணாகக் கத்துகிறார் என்று சமாதானமா சொல்ல முடியும்? அதுவும்...

"அம்மா... மம்மு குடும்மா..."

புடவையை இழுத்து, மழலையில் குழந்தை பேச, நந்தினி சிந்தனையிலிருந்து மீண்டாள்.

பாதியில் விட்டிருந்த தயிர்சோற்றை முழுவதும் ஊட்டி, தண்ணீர் குடிக்கச் செய்து, 'படுத்துக்க, அம்மா



வந்திடறேன்' என்று சொல்லி, கூடத்திலேயே பாயை விரித்து, படுக்கவைத்தாள்.

எதுவுமே நடக்காத மாதிரி மோகன் முன் நின்று, 'சாப்பிட வாங்க' என்று அழைத்தாள்.

வந்து உட்கார்ந்தவனுக்குப் பிடித்த ரீதியில் சூடாக குழம்பு, ரசத்தைப் பரிமாறி, அவன் சாப்பிட்டானதும் தானும் சாப்பிட்டு, அறையை ஒழித்தாள்.

"என்ன பண்ணிட்டிருக்கே, வந்து கால அமுக்கி விட்டுட்டுப் போ... ஒரே வலி!" என்று கணவன் அழைத் ததும் சென்று, தைலம் தடவிப் பிடித்துவிட்டதோடு நிற்காமல், அவன் தட்சணமே படுக்கக் கூப்பிட்டதையும் நிறைவேற்றிவிட்டு, புடவையை சீர்செய்தபடி கூடத்துக்கு வந்தாள்.

உறங்கிவிட்ட பெண்ணைத் தூக்கி வந்து படுக்கை யில் கிடத்தின நாழிகையில், மோகன் முகத்தைச் சுளித்தான்.

"நம்பகூட படுக்கவைக்காதனு தினமும் சொல் றேன்... காதுல வாங்க மாட்டேன்றியே... வயசு ஆகுது, கடாமாடாட்டம் மூணு... ஆனா, இன்னும் படுக்கைல மூத்திரம் போற பழக்கம் நிக்கல! அம்மாக்காரி நல்லா வளர்த்தா இல்ல, பொண்ணுக்குச் சமர்த்து வரும்... எங்க! ட்ரஸ் பண்ணிக்கவும், ஊர் சுத்தவும்தானே உனக்குப் பொழுது சரியா இருக்கு! சரி... சரி... அந்தப் பக்கமா பாய விரிச்சு அவளைப் படுக்க வை... ராத்திரி எழுந்தா, படுக்கைல மூத்திர நாத்தம் குலையப் பிடுங்குது..."

நித்தமும் கொஞ்சமாய் முகம் காட்டும் மோகன் இன்று அதிகமான கசப்போடு பேச, நந்தினி கட்டிலுக்குப்

பக்கத்தில் பாயை விரித்து, பெட்ஷீட்டை தடிமனாய் மடித்துப் போட்டு மகளைப் படுக்க வைத்தாள்.

ரம்யாவின் இந்தப் பழக்கம் குறித்து அவளுக்குக் கவலையாகவே இருந்தது. டாக்டரிடம் கேட்டால், சிரிக்கிறார். "சில குழந்தைகளுக்கு இது மெதுவாகத்தான் நிக்கும்... டோன்ட் ஒர்ரி!" என்கிறார். பெண் குழந்தைக்கு பழக்க வழக்கங்கள் செம்மையாக இருக்க வேண்டாமோ?

யோசனை மாறாமல் விளக்கை அணைக்கப் போனவளை மோகன் தடுத்து நிறுத்தினான்.

"விளக்க அணைக்காத... இப்படி உக்காரு... உன்னண்ட பேசணும்."

உட்கார்ந்தாள்.

"அம்மாவுக்கு வர்ற மாசம் அறுவது வயசு பூர்த்தி ஆகுதாம். போன ட்ரிப் திருச்சிக்கு போயிருந்தப்ப புஷ்பா, ரேவதி பேசிக்கிட்டாங்க... அவங்க பங்குக்கு வேஷ்டியும், பட்டுப் புடவையும் வாங்கப்போறாங்களாம்... 'நீ என்னடா செய்யப் போறே'னு கேட்டாங்க. 'பாத்துகிட்டே இருங்க'னு சொல்லிட்டு வந்திட்டேன். அம்மாக்கு முத்து வளையல் செஞ்சிக்கணும்னு ரொம்ப நாளா ஆசை... இப்ப போட்டுக்காட்டி அப்பறம் எப்பத்தான் போட்டுக்கறது? ம்? நீ என்ன பண்றே, நாளைக்க ஆபீஸ் போனதும் ஃப்ரிஜ் வாங்கணும்னு சொல்லி ஐயாயிரம் ரூபாய்க்கு லோன் அப்ளை பண்ணு-உங்க ஆபீஸ்லதான் அததுக்குனு தனித்தனியா அள்ளி விடறாங்களே... ஒரு வாரத்துல கைக்கு பணம் வந்திடிச்சுன்னா, ஆர்டர் குடுத்து ஊருக்குப் போறப்ப எடுத்திட்டுப் போக சரியா இருக்கும்... என்ன?"



தானே ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டு, இவளிடம் 'நீ என்ன நினைக்கிறாய்' என்று மரியாதைக்குக் கூட ஒரு வார்த்தை கேட்காமல், சட்டமாய் படுத்துக் கொண்டு மோகன் ஆணையிட்டதும், அதிசயமாய் அன்று நந்தினிக்குள் 'ப்ளக்'கென்று கோபக்குமிழ் வெடித்தது. கூடவே, சென்ற வருடம் தன் தகப்பனாருக்கு அறுபது வயது பூர்த்தி ஆனாலும், பிள்ளை இல்லாத காரணத்தால் மூத்தவளான தான் தாலி செய்து, புடவை எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, ரொம்ப தயக்கத்தோடு மோகனிடம் பேசினபோது, 'வேற வேல இல்ல... கிழத்துக்கு அறுபதாகியும் ஆசை விடலியா? உன்னைக் கிளப்பி விட்டுட்டு, வெக்கமில்லாம பெண்கிட்டயிருந்து சாமான்கள் வாங்கி அடுக்கிக்கலாம்னு நினைக்கிறாரா? அதெல்லாம் நடக்காது... வாய மூடிக்கிட்டு கிட' என்று நிஷ்டூரமாய் பேசி, இவள் ஆசையை முளையிலேயே நசுக்கி விட்டதும் நினைவுக்கு வந்து, ஜனித்து விட்ட கோபத்துக்கு கொம்பு சீவி விட்டதில்... "எங்கப்பாவ அன்னிக்கு கிழத்துக்கு என்ன ஆசைனு கேலி பண்ணீங்களே, இப்ப உங்கம்மா மட்டும் குமரியா?" என்று யோசிக்காமல், ஏதோ ஒரு வேகத்தில் நந்தினி படபடக்க-

முதல்முறையாய் அன்றுதான் மோகன் அவளை, "எதிர்த்தா பேசறே? அத்தனை வாயா உனக்கு?" என்று பேசிய வாயில் ரத்தம் கசியும்படி ஓங்கி அடித்தான்.

# 18



“ரம்யா, இங்க வரப் போறியா, இல்லியா? நாழி ஆச்சும்மா... பஸ் வந்துடும்...”

“மாட்டேன் போ...”

“காலவேளல என்னம்மா பிடிவாதம்? எதுக்காக சட்டி மாதிரி மொகத்தை வெச்சிட்டிருக்கே? இப்ப வரப்போறியா, இல்லியா?”

“மாட்டேன் போ...”

அடுப்பில் குழம்பு கொதிக்க ஆரம்பித்துவிட்டது.

கம்மென்று எழுந்த மணம், வயிற்றைப் பிரட்ட, நந்தினி புடவைத் தலைப்பால் வாயையும் மூக்கையும் பொத்திக்கொண்டாள்.

இருக்கிற தொல்லைகள் போதாது என்று இது வேறு.

இப்போது இரண்டாவது பிள்ளை வந்துத் தொலைக்கவில்லை என்று யார் அழுதார்கள்? யார்யாரோ குழந்தை இல்லை என்று ராமேஸ்வரத்துக்கு நடையாய் நடக்கிறார்களே, அங்கு சென்று உண்டாயிருக்கக் கூடாது? எதற்காக வேண்டாத விருந்தாளியாக வந்து கழுத்தை அறுக்கிறது... சனியன்!

முடியாமையும் செய்யக் காத்திருக்கும் வேலைகளின் பாரம் தந்த அலுப்பும் ஒன்றுசேர்ந்துகொண்டு, எழுபது நாட்களே ஆகியிருந்த வயிற்றுக் கருவை அனாவசியமாய் ஏச வைக்கின்றன என்பது சட்டென்று



ஞானோதயமாக, நந்தினி தன் எரிச்சலை அடக்க முயற்சித்தாள்.

தவறு...

என்னுடைய இயலாமையை ஒழிக்க முடியாமல், குழந்தை மேல் பழியைப் போட்டு ஆத்திரப்படுவது தவறு.

வரவர என் கையாலாகாத்தனத்துக்கு ரம்யாவையும், புதுசாய் உண்டாகிவிட்டதையும் ரொம்பத்தான் பலி ஆக்குகிறேனோ?

திடுமென நந்தினிக்கு, சமீபத்தில் ஒருநாள் தனிமையில் இவள் கையைப் பற்றிக்கொண்டு ஜானா பேசின பேச்சுக்கள் நினைவுக்கு வந்தன.

“முன்னைய விட உனக்கு அடிக்கடி கோவம் வர்ற மாதிரியும், அதை ரம்யாவ அடிச்சு, கிள்ளி நீ வெளிப்படுத்தற மாதிரியும் எனக்குப் படுதுப்பா... இது தவறான போக்கு, நந்து! ரொம்ப ‘டாமினேட்’ பண்ணற புருஷனை எதிர்த்துப் பேச பயப்படறவங்க, அவன் நிஜமாவே செய்யற தப்புகளைக் கூட சொல்லிக்காட்ட தைரியமில்லாதவங்க, தன்னை எந்தவிதத்திலேயும் எதிர்க்க பலமில்லாத குழந்தைகளைப் போட்டு துவைச்சியெடுத்து தன் உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடறது பரவலா பல பெண்கள் நடுவுல காணப்படற சமாச்சாரம். இதை ‘பாடர்ட் சைல்ட் ஸிண்ட்ரோம்’னு சொல்வாங்க... இதுவும் ஒரு விதத்துல ஒரு வியாதிதான்... நம்பளோட இந்த பலவீனத்தைப் புரிஞ்சுகிட்டு நாமளே நம்மை சரி பண்ணிக்கணும்பா... சுபாவத்துல ரொம்ப நிதானமான நீ, இப்படி நடந்துக்கறது எனக்குக் கஷ்டமா இருக்கு.. ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் நந்து...”

அன்றைக்கு அந்தப் பேச்சிலிருந்த நியாயத்தையும் கரிசனத்தையும் உணர முடிந்தவளாய் 'ஸாரிப்பா' என்று மட்டும் முனகி, தன்னை நினைத்தே வெட்கித்து ரொம்ப நேரத்துக்கு தலை குனிந்து உட்கார்ந்திருந்ததும், இனி, எக்காரணத்தைக் கொண்டும் குழந்தையிடம் கோபத்தை வெளியிடுவதில்லை என்று தீர்மானித்ததும் இப்போது நினைவுக்கு வர, நந்தினி அடுப்பை சின்னத் தீயில் வைத்து விட்டு கூடத்துக்கு வந்தாள்.

**சோ**பாவில் ரம்யா குப்புறப் படுத்திருந்தாள்.

சுற்றிலும் வாறியிறைத்த விளையாட்டுச் சாமான் கள்.

கிட்டே அமர்ந்து, தலைமுடியைக் கோதி, "என்னடா?" என்றதும், ரம்யா தலையை எதிர்பக்கமாகத் திருப்பிக்கொண்டு, "உன்னோட பேச மாட்டேன், போ!" என்றாள்.

"ஏம்பா? அம்மாமேல ரம்யாக்குட்டிக்கு என்ன கோவம்?"

"நீ பொய் சொல்றே!"

"என்னடா பொய் சொன்னேன்?"

ரம்யா சரக்கென்று திரும்பினாள்.

"என் ஸ்கூல்ல நிதைக்கும் எல்லாரோட அப்பா, அம்மாவும் என் ஃப்ரெண்ட்ஸைக் கொண்டுவிட வராங்க... நீ மட்டும் வரதே இல்லை... எப்ப கேட்டாலும் 'நாளைக்கு வரேன்'னு பொய் சொல்லிட்டே இருக்கே..."



நந்தினி பெண்ணை இழுத்து மடியில் கிடத்திக் கொண்டாள்.

"பொய் இல்லடா... அம்மாக்கும் வரணும்தான் இருக்கு... ஆபீஸ்லேந்து வரதுக்குள்ளே லேட் ஆயிடு தும்மா..."

ரம்யா தன் பெரிய கண்களை அகல விரித்தாள்.

"சுஜாதாவோட அம்மாவும்தான் வேலைக்குப் போறாங்க... ஆனாலும் நிதைக்கும் கார்ல சுஜாதாவக் கொண்டு விட்டுட்டுப் போறாங்க... நீலுவோட அம்மாவும் தான் வேலைக்குப் போறாங்க... ஆனாலும் நிதைக்கும் ஸ்கூட்டர்ல அப்பா, அம்மா ஆபீஸ் போறப்போ ஜம்முனு அவளும் ஸ்கூலுக்கு வரா..."

பெண் என்ன சொல்லவருகிறாள் என்பதை நந்தினியால் நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

நம் வீட்டிலும் ஒரு ஸ்கூட்டர் இருக்கிறதே, ஒரு நாளாவது நீ பின்னால் உட்கார்ந்துகொள்ள, நான் முன்னால் நின்றுகொள்ள, ஸ்கூலுக்குச் சென்றிருக்கி றோமா என்றுதானே இவள் கேட்க நினைக்கிறாள்?

அட, ஸ்கூல்கூட வேண்டாம்... வேறு எங்காவது போயிருக்கிறார்களோ! ஒரு பீச், ஒரு சினிமா, ஒரு விஸிட் என்று எங்காவது...?

ம்ஹூம்,

நாலு வேளை மோகன் தன்னை அலங்கரித்துக் கொண்டு இங்குமங்கும் போய்வருவதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை ஆனால், அது என்னமோ,

பெண்டாட்டி குழந்தையை அழைத்துக்கொண்டு எங்கேயாவது போக வேண்டும் என்றால் மட்டும் தலைவலி வருகிறது; ஜலதோஷம் பிடிக்கிறது... அன்றைக்குப் பார்த்து ஆபீஸில் வேலை தலைக்கு மேல் செய்ய வேண்டி வந்து உடம்பு அலுத்துப் போகிறது.

என்ன? பீச்சுக்குப் போகணுமா? நாயா உழைச்சிட்டு வர்ற மனுஷனை சித்த நிம்மதியா இருக்க விடாம, என்ன நச்சரிப்பு இது! வேணும்னா மகளைக் கூட்டிக்கிட்டு நீ போயிட்டு வர்றது ஊர் சுத்தி உனக்குப் பழக்கம் தானே?

எத்தனை நாட்கள் இப்படித் தணலாய் வார்த்தைகளை வாங்கிக் கட்டிக் கொண்டாகிவிட்டது.

இந்த மனுஷனுக்கு, என் பெண்டாட்டி, என் மகள் என்கிறதெல்லாம் கிடையாது; தான் தன் சுகம் மட்டும் தான் முக்கியம் என்பது தெளிவாகப் புரிந்துபோன பிறகு, ஆசைப்பட்டு ஒன்றைப் கேட்பது என்பதையே அடியோடு நிறுத்திக்கொண்டாள்.

முடிந்தவரைக்கும் பெண்ணுக்குத் தன்னால் இயன்ற விதத்தில் அனுசரணையாக இருக்க முயன்றாள்.

ஆனால், இதுவும் ரொம்ப சீக்கிரமே மோகனுக்குப் பிடிக்காமல்போனது.

ஏய்... என்னத்துக்காக அவளைத் தூக்கி மடில போட்டுகிட்டு அந்தக் கொஞ்சல் கொஞ்சி, கெடுக்கறே? கீழ எறக்கி விடு! என்னமோ அதிசயமா இவதான் பொண்ணைப் பெத்திட்ட மாதிரி! குழந்தைகளைக் கண்டிப்பா வளக்கணும், கெக்கேபிக்கேனு வளத்தா, நாளைக்கு நமக்கு அடங்கி நிக்காம, தலைல ஏறிப்பாங்க! ஏதுடா, புருஷன் ஒருத்தன் இருக்கானே, அவனைக் கவனிப்போம்ன்ற அக்கறை இல்லாம, எப்பப்பாரு பொண்ணைக் கொஞ்சிக்கிட்டு... தத்! ஏய், ரம்யா.. என்னத்துக்கு திருதிருனு முழிச்சிக்கிட்டு நிக்கற- போய் ஸ்லேட்டை வெச்சுகிட்டு ஏ.பி.ஸி.டி எழுது... போ! முழியப் பாரு... ஆடு திருடின திருடனாட்டம்- படுக்கைல இன்னும் மூத்திரம் பெஞ்சு கிட்டு...தத்..."

எங்கோ ஆரம்பித்து, எதிலோ முடித்து...

கடவுளே...

இந்தக் காட்டமான பேச்சைத் தவிர, அன்பாய், இதமாய் பேச ஏன் இந்த மனிதருக்குத் தெரிவதில்லை?

தெரியாத்தனமா - ரம்யாவின் மீது பொறாமையா இல்லை, வேண்டுமென்றே இவளை நோகடிக்கவென செய்யும் காரியமா?

இதுபற்றி யோசிக்க உட்கார்ந்தால் குழப்பமும், வேதனையும்தான் கடைசியில் மிஞ்சும் என்பதால், ஒரு அளவுக்கு மேல் நந்தினி இந்தச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதில்லை.

ஆனால், தாங்க முடியாமல் போன சமயங்களில் அம்மாவிடமோ, சிநேகிதிகளிடமோ லேசாக வருத்தப் பட்டுக்கொள்வது உண்டுதான்.

அப்போதெல்லாம், பங்கஜம், "ஆம்பிள்ளைங்கன்னா அப்படித்தான் விட்டேத்தியா இருப்பாங்க, நந்து... உங்கப்பாவும் நீங்க சின்னப்பிள்ளைங்களா இருந்தப்ப கிட்டயே வரமாட்டார்தான்... நீ அழுதாலே முகத்தைச் சுளிச்சிகிட்டு எழுந்து போயிடுவார். வயசாக ஆக தன்னால மாறிடுவாங்க" என்றும்,

ஜானா, நான்ஸென்ஸ்! ரம்யா அவர் மகளும்கூட, நந்து... உனக்கு அவளை வளர்க்கறதுல எத்தனை பொறுப்பு இருக்கோ, அத்தனை மோகனுக்கும் உண்டு! கோவப்படாம நிதானமா அவர்கிட்ட இதை எடுத்துச் சொல்லு... இனியும் அவர் இஷ்டத்துக்கு நீ ஆட மாட்டேன்றது புரிஞ்சா, தன்னால வழிக்கு வந்து தன் பொறுப்பை உணருவார். மேக் ஹிம் ரியலைஸ் ஹிஸ் மிஸ்டேக்ஸ்... அத விட்டுட்டு, படிக்காத பொம்பளை மாதிரி சதா கோழையா அழுதிட்டிருக்கறதால யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லே... புரியுதா?" என்றும், தங்கள் மாமுல் உபதேசங்களைத் தப்பாமல் சொல்வார்கள்.

என்ன சொல்லி என்ன?

அம்மா சொல்கிறாளே என்று அடங்கி அடங்கிப் பார்த்துவிட்டு, பொறுக்கமாட்டாமல் ஜானாவின் கூற்றுப்படி நிமிர்ந்து நின்று, 'நீங்க செய்யறது தப்பு' என்று எப்படியோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சொல்லி, பதிலுக்கு அடி உதை வாங்கி, 'இப்படி சாக முடியாது, சாமி, நம் தலை எழுத்து இதுதான். அடங்கிப் போனால் இந்த அடிகளையாவது தவிர்க்கலாம்' என்று மறுபடியும் அம்மா வழிக்கே வந்து...

கடைசியில் இந்த வட்டம்தானே சுழன்றுசுழன்று ஆளை அமுத்திக்கொண்டிருக்கிறது!

**த**ன் அவல நிலையை, தெளிவாக சிந்தித்துச் செயலாற்ற முடியாத இயலாமையை, நினைக்கும்போது நந்தினிக்கு சிரிக்கவே தோன்றியது.

"ஏம்மா சிரிக்கறே?"



"ஒண்ணும் இல்லேடா... நீ எழுந்திரு... பல் தேய்ச்சு பால் குடிக்க வா... நாழி ஆச்சுடா... ப்ளீஸ்..."

"கதை சொல்றியா? அப்பதான் வருவேன்..."

நந்தினி டேபிள்மேல் இருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

ஆறு நாற்பது.

சமையல் செய்து, ரம்யாவைப் பள்ளிக்கு தயார் பண்ணி, மோகனுக்கு வேண்டியவற்றைக் கவனித்து, ஆயா வராத காரணத்தால் வீட்டைப் பெருக்கி, தானும் தயாராகி...

நாழி ஆகிவிட்டது... மசமசவென்று உட்கார்ந்து பெண்ணுடன் கொஞ்ச இன்று அவகாசம் இல்லை.

எழுந்தாள். பெண்ணையும் எழுப்பி உட்கார வைத்தாள்.

"சரி... சரி... எழுந்து வா... குட்டிக் கதையா சொல்றேன்... அம்மாக்கு இன்னிக்கு வேலை ஜாஸ்தியா இருக்கு... ஆயா வரலை, பாரு..."

'ஜாக் அண்ட் த பீன் ஸ்டாக்' கதையை வேகமாகச் சொல்லி, ஒருவழியாய் பெண்ணுக்குப் பல் தேய்த்து, பால் கொடுத்து, ராத்திரி பத்துப்பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கையில், "நந்து..." என்று மோகன் கூப்பிடுவது கேட்டது.

கை கழுவி, பாலைச் சுடவைத்து, காபி கலந்து எடுத்துக் கொண்டு போனாள்.

"காபி கொண்டுவர எத்தனை நேரம்? பேப்பர் எங்க?"

காலை ஐந்துக்கு எழுந்து லோலோ என்று லோல் படுவதை லட்சியம் பண்ணாமல், உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து 'பேப்பர் எங்க?' என்று அதிகாரம் பண்ணுவது எரிச்சலைக் கிளப்ப, 'போய் எடுத்துகிட்டா என்ன, தேஞ்சா போயிடுவீங்க?' என்று முணுமுணுத்த படி வராந்தாவில் கிடந்த பேப்பரை எடுத்து வந்து நீட்டினாள்.

"என்ன மொணமொணன்றே?"

"ஒண்ணுமில்லே..."

சமையல் கட்டுக்குத் திரும்பி வந்து, பொறிய லுக்குக் காய் நறுக்கி அடுப்பில் போட்டுவிட்டுக் மகளைக் குளிக்க அழைத்துப் போனாள்.

அவளைத் தயாராக்கி, படுக்கையைப் போட்டு, வீட்டைப் பெருக்கினாள்.

அத்தனை காரியங்களிலும் தலைப்பைப் பிடித்துக் கொண்டு கூடவே நின்ற ரம்யா, 'என்னை ஸ்கூல்ல நீ கொண்டு விடும்மா' என்று தொணதொணத்தது தாள மாட்டாமல், "அம்மாவத் தொந்தரவு பண்ணாத, ரம்யா..." என்று சிடுசிடுக்க, அவள் விசும்ப முற்பட...

குளிக்கப்போன மோகன் நின்று, "தூங்கி எழுந்தா அழறதைத் தவிர உனக்கு வேற எதுவும் தெரியாதா? சனியனே... வாய மூடு!" என்று நறுக்கென்று தலையில் குட்டி அதட்டினதும், ரம்யாவின் அழுகை பெரிசாயிற்று.

அழும் பெண்ணைத் தூக்கிச் சென்று சமையல் கட்டில் வைத்து சமாதானம் பண்ணிய நாழிகையில், "ஏய்... துண்டு எங்க?" என்று மோகன் பாத்ரூமிலிருந்து கத்த, அதை ஓடிப்போய் கொடுத்துவிட்டு, பொங்கி விட்ட ரசத்தை அடுப்பிலிருந்து இறக்கி, வாசலில் பணத்திற்காக வந்து நின்ற மளிகைக்கடைப் பையனை சாயங்காலமாய் வரச் சொல்லி, குளித்து, சமையலை முடிப்பதற்குள் நந்தினியின் பொறுமை மறைந்து, நமநமவென்று எரிச்சல் மண்டத் தொடங்கியது.

"ரசமா இது! உப்பும் இல்லாம, உரைப்பும் இல்லாம! எழவு..." என்று கத்தி தட்டை உதைத்துவிட்டு மோகன் எழுந்து வெளியே போனதும், அந்த எரிச்சல் கோபமாக உருமாறி வெடிக்க... செய்துகொண்ட வைராக்கியத்தை மறந்து, சாப்பிடாமல் 'நீ கொண்டு விடு' என்று அழுது அடம் பண்ணிக்கொண்டிருந்த மகள் மேல் பாய்ந்தாள்.

"சாப்பிடப் போறியா, இல்லியா? பஸ் வந்திடும்னு சொல்றேன்... ம்... ம்... வாயத் திற... சத்தம் வந்தது, கொன்னுடுவேன்..." என்று மிரட்டி, நாலு வாயாக சோற்றைத் திணித்துவிட்டு தட்டை முற்றத்தில் போடத் திரும்பியதும், கொட கொடவென்று அத்தனையும் ரம்யா வாந்தியெடுத்தாள்.

"சனியனே... என் உசிரை எடுக்கணும்னு வந்திருக் கியா? ஒழிஞ்சு போ... எல்லாரும் தொலைஞ்சி போங்க..." என்று கத்தி, பெண்ணின் முதுகில் ஓர் அறை வைத்து, துணிகளை மாற்றும்போதே பஸ் வந்து ஹாரன் அடிக்க, அவசரமாய் அழும் பெண்ணை பை, டிபன் பாக்ஸோடு ஏற்றிவிட்டாள்.

பெண் எடுத்த வாந்தியை சுத்தம் பண்ணி, சாப்பிடப் பிடிக்காமல் ஒரு டம்ளர் மோரை மட்டும் குடித்து, ஆபீஸுக்குப் போகக் கிளம்பின நிமிஷத்தில், அது நாழிகை தக தகத்த கோபம் அடங்கிப்போய், வெறும் வயிற்றோடு பச்சைக் குழந்தையை அழஅழ அனுப்பி விட்டோமே என்கிற குற்ற மனப்பான்மை மனசை ஆக்ரமிக்க, அன்று முழுவதும் யாரிடமும் எதுவும் பேசப் பிடிக்காமல் இருந்ததோடு, தன் செயலுக்குப் பிராயச் சித்தம் செய்கிற மாதிரி தானும் முழுப் பட்டினியாகவே கிடந்தாள்.

## 19



“**வி**ஷயம் தெரியுமாப்பா?”

“என்ன?”

“ஸ்வர்ணா கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானிச்சிருக்காங்களாம்...”

“எந்த ஸ்வர்ணாப்பா? ‘ஸதர்ன் கெமிகல்ஸ்’ ஸ்வர்ணாவா?”

“அவங்களேதான்...”

நந்தினி புத்தகத்தை மூடிவைத்துவிட்டு ஆச்சர்யத்துடன் நிமிர்ந்தாள்.

“அவங்களுக்கு ‘டிவோர்ஸ்’ ஆகி நாலைஞ்சு வருஷம் இருக்காது?”



“தாராளமா...”

“ரெண்டு பையங்ககூட இருக்காங்க, இல்லை?”

எதிர்மேஜைமேல் அமர்ந்து பேசின மாலுவின் குரலில் தயக்கம் விரவியிருப்பது புரிய, ஜானா சிரித்தாள்.

“இருந்தா என்னப்பா?”

உடனே யாரும் பதில் சொல்லாததில், அரை நிமிஷத்துக்கு அங்கு மௌனம் நிலவியது.

நந்தினி மென்மையாகப் பேசினாள்.

“டிவோர்ஸ் ஆகி, ரெண்டு பசங்க இருக்கிற பெண் சாதாரணமா ரீமேரேஜ் செய்யறதில்லே; அதனாலதான் மாலு அப்படிக் கேட்டா, இல்லியாப்பா?”

“சாதாரணமா யாரும் செய்யறதில்லைன்றதுக்காக, ஒரு காரியம் தப்பானதாயிடுமா?”

“தப்புனு நாங்க சொல்லலை, ஜானா... ஆனா, இது அவசியமானதுதானானு சொல்றோம்... அவ்வளவுதான்...”

ஜானா, வேணி பக்கம் திரும்பினாள்.

“நீ என்ன சொல்றே, வேணி?”

அவள் உதட்டைப் பிதுக்கி, ‘எனக்கென்னப்பா இதுல சம்பந்தம்’ என்கிற விதமாய் தோளைக் குலுக்கினாள்.

“சொல்லேன்...”

"ம்? இது ஸ்வர்ணா சம்பந்தப்பட்ட விஷயம், இதை விமர்சிக்க நாம யாரு? ஆனாலும், நீ கேட்டதுக் காக யோசிக்கறப்போ, தேவையில்லாத ஒரு பந்தத்துல திரும்ப மாட்டிக்கப்போறாங்களோன்னே தோணுது..."

"உனக்கு இது அனாவசியமானதா இருக்கலாம்; அவங்களுக்கு அவசியமா இருந்தா?"

இப்போது நந்தினி இடைமறித்தாள்.

"அப்படீன்னா, முதல் பந்தத்துலேந்து விடு பட்டேயிருக்க வேணாமே!"

ஜானா, புருவங்கள் முடிச்சுப்போட்டுக்கொள்ள யோசனையுடன் பேசினாள். "ஸ்வர்ணாவோட முதல் புருஷனை நீங்கள்ளாம் பாத்திருக்கீங்களா? நா பாத் திருக்கேன், பழகியிருக்கேன், வேலை வெட்டி இல்லாம, சதா குடிச்சிட்டு, நாலு பேர் எதிர்லியே பொண்டாட்டிய கை நீட்டி அடிச்சு, அவளை மதிக்காம இன்னொருத்திய வீட்டுக்கே கூட்டிட்டு வந்து கூத்தடிச்சவர்... தெரியுமா? அந்த மாதிரி ஒரு மனுஷனோட எட்டு வருஷ காலம் ஸ்வர்ணா வாழ்ந்ததே அதிகம்னு நா சொல்வேன்..."

"சரி, ஒரு தரம் பட்டாச்சு இல்லே, திரும்ப எதுக்கு தாம்பத்திய ஆசை?"

வேணி இப்படிக் கேட்டு, நந்தினி "அதுவும், வயசும் முப்பத்தி ஏழு, முப்பத்தி எட்டு இருக்காது?" என்றும், ஜானாவின் கண்களில் கோபம் மெலிதாக வெளிச்சம் போட்டது.

"ஸோ? ஒரு தரம் பட்டாச்சுன்றதாலயும், வயசு முப்பத்தி ஏழு ஆயிட்டதாலயும் இது தப்பான காரி யம்ன்ற முடிவுக்கு வந்திட்டீங்க, அதானே?"



"................"

"படிச்சு, வேலைபாத்து வெளி உலகத்தோட பழகி, நல்லது கெட்டதை ஆராஞ்சு தெளிவா சிந்திக்கக்கூடிய நிலைல இருக்கற நீங்களே, இப்படிப் பேசினா எப்ப டிப்பா? கமான் ஐ ஸே... மனசை இன்னும் கொஞ்சம் விசாலப்படுத்திக்கங்க... மஞ்ச கண்ணாடி மாட்டிக்காம எந்த ஒரு பிரச்சினையையும், அடுத்தவங்க கண் ணோட்டத்தோட அணுகி, புரிஞ்சிக்கப்பாருங்க... இப்படி யோசிக்காம அடுத்தவங்களோட செய்கையை விமர்சனம் பண்ணறது நியாயமானதா உங்களுக்கே படுதா?"

"இதுல யோசிச்சு, விமர்சனம் செய்ய என்ன இருக்கு, ஜானா?"

"எவ்வளவோ இருக்கு.. ஸ்வர்ணா திரும்ப கல்யாணம் பண்ணிக்க ஏன் தீர்மானிச்சிருப்பானு நீங்க நினைக்கறீங்க?"

வேணி, நந்தினியைப் பார்த்தாள், அவள் மாலுவை ஏறிட்டாள்.

"ஒவ்வொருத்தரா நீங்க நினைக்கறதைச் சொல் லுங்க... வேணி, முதல்ல நீ..."

"தப்பான ஆள்கிட்ட கேள்வி கேக்கறப்பா... இந்த தாம்பத்யம், ஆணோட அவசியம் இதுலெல்லாம் எனக்கு நம்பிக்கையே கிடையாது. என்னைக் கேட்டா, சுதந்திரமா இருக்க வேண்டியவ, வீணா தன்னை சிறைப் படுத்திக்கறாளேனு சொல்வேன்..."

ஜானா சிரித்தாள்.

"உன்னண்ட போய் அபிப்ராயம் கேட்டேன் பாரு... சரி, நீ சொல்லு, நந்து..."

நந்தினி ஒருசில வினாடிகளுக்கு அழுத்தமாக யோசித்துவிட்டுக் கேட்டாள்.

"செக்ஸ்..."

"மாலு, நீ?"

"ரெண்டு குழந்தைகளை வெச்சுகிட்டுத் தனியா எல்லா பொறுப்பையும் சுமக்கறது ஸ்வர்ணாவுக்குக் கஷ்டமா இருந்திருக்கலாம். முக்கியமா ரெண்டு ஆம்பிளைப் பசங்க... இவங்களை அடக்கி, சரியா கண்டிப்பா வளர்க்க ஒரு ஆண் தேவைனு நினைச்சிருக் கலாம்..."

ஜானா இருக்கையை விட்டு எழுந்தாள். ஆபீஸ் நேரம் முடிந்து விரிச்சோடிக்கிடந்த அறையில், அப் படியும் இப்படியும் நடந்தாள். நின்றாள்.

"நீங்க சொன்ன காரணங்கள் இல்லவே இல்லேனு என்னால ஒதுக்கித் தள்ள முடியல... ஒரு ஆணோட பாதுகாப்பு, அவன் அணைப்பு ரெண்டுமே ஸ்வர்ணா வுக்குத் தேவையா இருக்கும், நா மறுக்கல... ஆனா, இந்த ரெண்டை விட இன்னொரு முக்கியமான காரணம் இருக்கிறதா நா நினைக்கறேன். கம்பேனியன்ஷிப்... தன்னை மதிக்கிற. தான் மதிக்கக்கூடிய ஒரு ஆணோட துணை... இதை எப்படிப்பா நீங்க ரெண்டு பேரும் மறந் தீங்க? வேணியாவது கல்யாணமாகாதவ ஒரு ஆணோட, அருமையான துணையோட இதத்தை அறியாதவ.. ஸோ, அவளை விட்டுடலாம்... ஆனா நீங்க?"



பேசிக்கொண்டே நந்தினியை ஊன்றிப் பார்த் தவள், "ஆறு வருஷமா புருஷனோட வாழற உனக்குக் கூட இந்த துணையோட அவசியம், இதம், தெரி யலைன்னா, அது நீ வாழற வாழ்க்கையோட நிலைமையை தெளிவாக்குது! ஐ'ம் ரியலி ஸாரி, நந்து..." என, அவள் கிண்டலுக்காகப் பேசவில்லை, நிஜமான அக்கறையுடன் பேசுகிறாள் என்பது புரிய, நந்தினி பார்வையை பூமியில் படரவிட்டாள்.

"ஆண் பெண் உறவுன்றது ரொம்ப உசத்தியான சமாச்சாரம்பா... இதை வெறும் உடம்போட சம்பந்தப் படுத்திப் பேசறது அநியாயம், அநாகரிகம்கூட... அதுக்காக, 'ஒரு ஆண், பெண் நடுவுல உடம்பு சம்பந்தமே இருக்கக் கூடாதா'னு கேட்டா, அது இடக்குப் பேச்சு... ஒருத்தரை ஒருத்தர் மதிக்க, மரியாதை, அன்பு குடுக்கக் கத்துகிட்டப்பறம், செக்ஸ் ஈஸ் இன்ஸிடென்டல்- நல்லா புரிஞ்சி கிட்டப்பறம் கூடவே வர்ற செக்ஸூக்கு அலாதி சுகந்தான்! ஆனாலும், உடம்பு தொடர்பே பிரதானமா யிடக்கூடாது. முதல்ல இந்தத் 'துணை' இது ரொம்ப முக்கியம், பாக்கி எல்லாம் - செக்ஸ் பாதுகாப்பு எல்லாம்; அந்தத் 'துணை'க்கு அப்பறம் வர்றதுதான்... புரியுதா? ஸ்வர்ணாவ எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், அவ இந்த கம்பேனியன்ஷிப்புக்குத் தான் ரொம்ப ஏங்கிப்போறா... தனிமையைத் தாங்க முடியாம தவிச்சிட்டு இருந்தா! நல்ல வேளையா சரியான ஆளைத் தேர்ந்தெடுத்து, பிராக்டிகலா ஒரு முடிவுக்கு வந்திருக்கா..."

அவள் கூறிய வார்த்தைகளை அசைபோடுகிற தினுசில், கை நகங்களை ஆராய்ந்தபடி அமர்ந்திருந்து விட்டு, மாலு தணிந்த குரலில் பேசினாள்.

"நீ என்ன சமாதானம் சொன்னாலும், இந்த வயசுல, ரெண்டு குழந்தைக்குத் தாயானவ, ரெண்டாம் கல்யாணம் பண்ணிகிட்டா, மூஞ்சிக்கு முன்னால இல்லாட்டியும், பின்னாலயாவது சிரிக்கத்தான் போறாங்க நிச்சயம்..."

ஜானா நான்கடி நடந்து சென்று, பேசியவளின் தோளில் கை வைத்தாள்.

"எல்லாரும் சிரிக்க மாட்டாங்க, மாலு... வெவரம் புரியாதவங்க, இந்த மாதிரி ஏக்கம் மனசுல இருந்தும் அதைச் சமூகம் என்ன சொல்லுமோன்ற பயத்துல செய்யாம இருக்கறவங்க...னு சில பேர் வேணா சிரிக்கலாம்... அந்த சிரிப்பை யாராலயும் தடுத்து நிறுத்த முடியாது. ஒண்ணு ரெண்டு வருஷம் போயி, ஸ்வர்ணா தன் புருஷனோட நிம்மதியா வாழ்ந்து காட்டிட்டா, அத்தனை கசமுசாவும் அடங்கிடும்! இந்த வம்புக்காரங்க சிரிப்புக்கு பயந்து, நம்ம சந்தோஷத்தைக் கெடுத்துக்கறது சரினு உனக்கு தோணுதா?"

கொஞ்சம் நிறுத்தின ஜானா, எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, மாலுவின் கையைப் பற்றிக்கொண்டாள்.

"புருஷனை இழந்து ஒரு வருஷம்தான் ஆறது. அதுக்குள்ள இவ இப்படிப் பேசறாளேனு அடிபட்டுப் போகாத... உனக்கு வயசு இருபத்தி அஞ்சுதான்... இன்னும் நிறைய வருஷங்கள் நீ வாழ்ந்தாகணும்... அப்படி வாழ றப்போ, என்னிக்காவது தனிமையத் தாங்க முடியாம, ஒரு நல்ல புருஷனோட துணை தேவைனு நீ நினைச்சா, அதுல தப்பு எதுவும் இல்லே... 'ஐயோ, இந்த மாதிரி நினைக்கிறோமே, இது அசிங்கமில்லியா'னு மனசுக் குள்ள பதறாத... பண்பு, கற்பு, பண்பாடுனு எதையாவது நினைச்சுக் குழம்பாதே! இது உன் லைஃப்... அதுக்குத் தேவையானது என்ன, தேவையில்லாதது என்னனு நீதான் தீர்மானிக்கணும்! இப்ப வேணியையே எடுத்துக்க... அவ தன்னால ஒண்டியா இந்த வாழ்க்கைய நடத்த முடியும், யாரோட துணையும் தேவையில்லேனு அழுத்தமா நம்பறா... அவளோட கன்விக்ஷனை நான் மதிக்கறேன். ஆனா, இதே வேணி தன் அம்பதாவது வயசுலே 'நா கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானிச் சிட்டேன், எனக்கு தனி வாழ்க்கை பிடிக்கல, ஐ நீட் கம்பானியன்ஷிப்'னு சொன்னா, அதை கைத் தட்டி வரவேற்கற முதல் ஆள் நானாதான் இருக்கும்..."



இப்போது வேணி குறும்புடன் குறுக்கிட்டாள்.

"ஏம்பா, கல்யாணம் பண்ணிகிட்டாதான் கம்பானியன்ஷிப்பா? மேரேஜ் இல்லாமலேயே அது இருக்கக்கூடாதா?"

அவளுடைய கேலியைப் பொருட்படுத்தாமல் ஜானா தீவிரமாய் பதில் கூறினாள்.

"வொய் நாட்? மனசுல எந்தவித உறுத்தலும் இல்லாம, சம்பந்தப்பட்ட ரெண்டு பேரால நெருக்கமா வாழ முடியும்னா, வொய் நாட்? நா ஏற்கனவே சொன்ன மாதிரி, செய்யற காரியத்துல நமக்கு நம்பிக்கை வேணும், எனக்குத் தேவையானது இதுதான்ற தெளிவு, கன்விக்ஷன் வேணும், இதோட, இந்தச் செய்கை மூலம் நிஜமான சந்தோஷம், நிம்மதியும் கிடைக்கறதுன்னா, எதுவுமே தப்பு இல்லே... தாலி வேணாம், அய்யர் வேணாம், ஒண்ணும் வேணாம்... மனசு அது ஒண்ணு இருந்தாப் போதும்..."

ஜானாவின் பேச்சு தனக்கு 'போர்' அடிப்பதை உணர்த்த, நந்தினி கைகளைத் தலைக்கு.மேல் உயர்த்தி சோம்பல் முறித்தாள்.

"நம்ப நாட்டுக்கும், நம்ப பழக்கவழக்கத்துக்கும் ஒத்துவராத சமாச்சாரங்களைப்பத்திப் பேசி, நேரத்தை வேஸ்ட் பண்றோம்னே நா நினைக்கறேன்... மணி என்னப்பா? மூணு? நாழியாச்சு, நா கிளம்பறேன்..."

கைப்பையை எடுத்தவளை வேணி தடுத்தாள்.

"என்ன அவசரம், நந்து? சனிக்கிழமை, அரை நாள். யார் வீட்டுக்காவது போயி கொஞ்ச நேரம் உக்கார்ந்து பேசிட்டுப் போவோம்னாலும் ஒத்துக்க மாட்டேன்ற... இங்கயே தங்கி, டிபன் வாங்கி சாப்பிட்டு நாலு மணிக்குக் கிளம்பலாம்னாலும்... நாழி ஆச்சுனு பறக்கறே..."

"வீட்டுல வேலை இருக்குப்பா... போறப்ப ரம்யாவ அம்மா வீட்டுலேந்து கூட்டிட்டுப் போகணும்... சமையலுக்கு காய் எதுவும் இல்லே; போய் வாங்கணும்... முடிஞ்சா இட்லிக்கு அரைக்கணும்..."

மூச்சுவாங்க பேசியவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"இப்ப உனக்கு எத்தனாம் மாசம்பா?"

"ஏழு முடிஞ்சாச்சு..."

"நாங்க கரடியா கத்தியாச்சு, ஆனா, நீ லட்சியம் பண்ண மாட்டேங்கறே... சமையலுக்கு ஒரு ஆளை போட்டுக்க, நந்து... அட்லீஸ்ட் பிரசவம் முடியற வரைக்கு மாவது..."



"அட போப்பா... இருக்கற ஆயாவுக்கே கூட பத்து இருவது குடுத்து கூடமாட ஒத்தாசை பண்ணச் சொல லவே வழியில்லாம, அந்த ஆளு அப்படிக் கணக்கு பாக்கறப்போ, சமையலுக்காவது, ஆளாவது... அதெல் லாம் இந்த ஜன்மத்துல நடக்கற விஷயம் இல்ல! விடு... வீணா நந்துவ குறை சொல்லாத..."

"சொல்லாம? எல்லாம் இவளால வந்த வினை! 'எம் புருஷன், எம் புருஷன்'னு ஆகாசத்துலேந்து கொம் போட குதிச்ச மாதிரி தலைல வெச்சுக்கிட்டு கூத் தாடினா... துவக்கத்திலேந்தே நிமிர்ந்து நின்னிருந்தா, இன்னிக்கு இப்படி மரியாதை இல்லாம சீரழிய வேணாம், பாரு..."

ஜானா, பையிலிருந்து சூயிங்கம் பாக்கெட்டை எடுத்து ஆளுக்கொன்று கொடுத்துவிட்டு, தானும் ஒன்றைப் பிரித்து வாயில் போட்டுக்கொண்டாள்.

"இவ ஒண்ணு, அந்த ஸ்ரீவத்ஸ் இன்னொண்ணு... ரெண்டும் சரியான 'பாவம்' கேஸ்... இவளுக்கு புருஷன் குணமில்லே, அவனுக்குப் பொண்டாட்டி சரியில்லே... ரெண்டு பேரும் இன்னிக்கும் உண்மையை ஒத்துக்க மாட்டாங்க! ஏதாவது சொன்னா 'யார் வீட்டுலதான் இல்லே?'னு பதிலுக்கு கேள்வி கேட்டு பூசி மெழுகிடு வாங்க! இவங்க மாதிரி ரோஷம் கெட்டவங்க, சுய மரியாதையைக் காப்பாத்திக்கத் தெரியாதவங்க இருக்கற தாலதான், மோகன், கமலி மாதிரி ஆளுங்க அந்த ஆட்டம் போடறாங்க..."

"அதுக்கா? உறவைக் கத்தரிச்சுகிட்டு வந்துடறது தான் சரினு சொல்றியா, ஜானா?"

"உறவு உறவா இல்லைனா, கத்தரிச்சுக்கறதுதான் நிம்மதிக்கு வழி..."

நந்தினி அலுப்புடன் சிரித்தாள்.

"உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலை, ஜானா... கொஞ்ச நேரம் முன்னால தாம்பத்தியத்துக்காக அப்படி வக்காலத்து வாங்கினே... இப்ப, சரிப்பட்டு வரலைனா விவாகரத்து பண்ணறதுதான் சரினு சொல்றே... எது சரி, எது தப்பு?"

"எதுக்கும் ஒரே அளவுகோலை உபயோகிக்க, சரி தப்பு சொல்ல முடியாது, நந்து... எல்லாம் அந்தந்த சூழ்நிலை, சம்பந்தப்பட்ட மனுஷங்களைப் பொறுத்திருக்கு! ஸ்வர்ணா விஷயத்துல, அவ தன் முதல் கணவனைத் திருத்த, அவனோட சந்தோஷமா வாழ முயற்சி பண்ணினா; பலன் இல்லே.. ஸோ, இவனோட வாழ்ந்து நம்ம நிம்மதியை இழக்கறது அசட்டுத்தனம்னு தீர்மானம் பண்ணி விலகினா... இப்ப தனக்கேத்த ஆண் கண்ணுல தட்டுப்பட்டதும், அந்தத் துணையோட அவசியத்தை உணர்ந்து, அனாவசியமா சமூகத்தைக் கண்டு பயப்படாம இன்னொரு கல்யாணம் பண்ண முன்வந்திருக்கா... அவ தெளிவா இருக்கா! அதனால அவ முடிவை நானும் ஸப்போர்ட் பண்ணறேன்! ஆனா, உன் சமாச்சாரம் வேற... உன்னை உன் புருஷன் புழுவாட்டம் நடத்தறான். இப்படி அவன் உன்னை புழுவா நடத்தறது உனக்குப் பிடிச்சிருக்குனா, அதுல நானோ இல்ல வேற யாருமோ தலையிடவே மாட்டோம், கூடாது! பட், நீ சந்தோஷமாவா இருக்கே? இல்லியே! நிம்மதியே இல்லாம, சதா பயந்து செத்துகிட்டு, தனக்குனு விருப்பு வெறுப்பு இல்லாம, இப்படி இருக்கறவங்கள விட, முடிஞ்சவரைக்கும் முயற்சி பண்ணிட்டு, முடியலைனா நிலைமை புரிஞ்சு 'நீயும் வேணாம். உன் உறவும்



புரிஞ்சு 'நீயும் வேணாம். உன் உறவும் வேணாம்'னு வெளில வர்றவங்க மேல்னுதான் சொல்வேன்..."

நீளமாகப் பேசி அவள் நிறுத்தினதும் யாரும் எதுவும் பதில் கூறாமல் இருக்க, தன் சங்கடமான நிலையை மறைக்கும் பாவனையில்' "நாழியாச்சுப்பா- நா கிளம்பறேன்..." என்றபடி நந்தினி எழுந்து நின்றாள்.



## 20

பயமாக இருந்தது. அதைவிட ரொம்பத் தவிப்பாக இருந்தது.

ஆனாலும், பத்து நாட்களாகப் படும் பயத்தையும், அவஸ்தையையும் நினைக்கையில், என்ன பூகம்பம் வெடித்தாலும் பரவாயில்லை, ஆயிற்று என்று மனசில் நினைப்பதைச் சொல்லிவிடலாமோ என்றும் தோன்றியது.

ரசத்துக்குத் தாளித்துவிட்டு நந்தினி மெதுவாகக் கூடத்துக்கு வந்து எட்டிப்பார்த்தாள்.

பெட்ரூம் ஜன்னலில் கண்ணாடியை மாட்டிவிட்டு, முகம் பூராவும் சோப்பைத் தடவிக் கொண்டு கையில் ரேஸருடன் மோகன் நிற்பது தெரிந்தது.

போய் பேசலாமா?

மூட் எப்படி இருக்கிறது?

சட்டென்று கோபம் வரக்கூடியதாய்?

ஒரு பக்கம் நின்று பார்த்தவரைக்கும் தைரியம் எழாமல் போனதில், நந்தினி மீண்டும் சமையலறைக்குள் வந்தாள்.

ட்ரம்மில் சுத்தமாய் தண்ணீர் தீர்ந்துபோயிருந்தது.

ஆபீஸுக்குப் புறப்படும் முன்னர் நான்கு குடம் கொணர்ந்து கொட்டிவிட்டுப் புறப்பட்டால், சாயங் காலம் அலுத்துப்போய் வந்ததும் பக்கெட்டும் கையுமாய் கீழே மூச்சிறைக்க இறங்கி ஓட வேண்டாம்...

ஆனாலும் இந்த வருஷம் ரொம்பவும்தான் தண்ணீர் கஷ்டம் ஆளைப் பாடாய்ப் படுத்துகிறது.

மேலே குழாய் இருக்கிறது என்கிற பேர்தான். போன மாசம் வரையில் சொட்டு சொட்டாகவாவது வந்து கொண்டிருந்தது. இப்போது சுத்தமாய் நின்று போனதில், குழாயைத் திறந்தால் 'ஷ்ஷோ' என்று காற்று வருகிறது நிறைய...

அதுவும் பதினைந்து இருபது நாட்களாய் சொம்பு ஜலத்துக்குகூட கீழே ஓடி, கை பம்பில் அடித்து எடுத்து வந்தால்தான் உண்டு...

பெரிய சம்சாரமில்லாவிட்டாலும், மூன்று நபர்கள் குளிக்க, குடிக்க, கை கால் கழுவிக்கொள்ள, சமைக்க, பத்துப் பதினைந்து வாளி தண்ணீர்கூட இல்லா விட்டால் எப்படிச் சமாளிப்பது?

ஆயா சரியான கிழம்.

ஒரு வாளித் தண்ணீரை சிந்தி, கொட்டி, அரை வாளியாக்கி தூக்கி வருவதற்குள், மூச்சு முட்டி உன்பாடு



என்பாடு என்று தவித்துப் போகும் கிழவியை, ஈவு இரக்கமில்லாமல் விரட்ட மனசு வரவில்லை...

சரி, ஆயா வேண்டாம்...

அப்புறம் வேறு யார் இருக்கிறார்கள்?

எதிர், அடுத்த வீடுகளிலெல்லாம், வரிந்துகட்டிக் கொண்டு காலையிலும் இரவிலும் ஆண்பிள்ளைகள் தான் மங்கு மங்கென்று பத்து நடை இறங்கி வந்து, ட்ரம்மிலும், தொட்டியிலும் நிரப்பிவைக்கிறார்கள்.

இந்த வீட்டிலும்தான் வாட்டசாட்டமாய் ஓர் ஆண் இருக்கிறார்...

ஆனால், அவராவது, பெரிய மனசு பண்ணி படி களில் இறங்கிப் போய் ஒரு வாளித் தண்ணீர் கொண்டு வருவதாவது!

அப்படி ஏதாவது மனுஷத்தனமாய் செய்து விட் டால்தான், அவர் ஆம்பிள்ளைத்தனம் குறைந்துவிடுமே!

ஐயா சாமி, கன கரிசனத்துடன் என் பெண்டாட்டி, குழந்தைக்கு உதவுகிறேன் என்று மார்தட்டிக் கொண்டு போகாவிட்டாலும் பரவாயில்லை; இவள் முடிந்தும் முடியாமலும் கொண்டு வந்து நிரப்பும் தண்ணீரை யாவது சிக்கனமாய் செலவு செய்கிறாரா என்றால்,

அதுவும் இல்லை.

என்னவோ குழாயில் தபதபவென்று தண்ணீர் கொட்டும் தினுசில் நான்கு வாளித் தண்ணீருக்குக் குறையாமல் வேண்டும், ஐயா தேய்த்துக் குளிக்க...

கக்கூஸுக்குப் போக ஒரு வாளி, சாப்பிட்டுக் கை கழுவ நாலு சொம்பு, முகம் கழுவ அரை வாளி... என்று எல்லாவற்றிலும் வெகு தாராளம்தான்...

கை கழுவ குவளையில் தண்ணீர் தயாராக இருக்க வேண்டும்.

குளிக்கப் போனால், இந்த வெயிலிலும் வாளியில் ஜலம் கொதிக்க வேண்டும்.

இல்லாவிட்டால், போயிற்று!

'ஏய்' என்ற உறுமல்...

தெரு முழுக்க கேட்கும் த்வனியில் 'பொம்பளைனா காலைல எழுந்துப்பா, மளமளனு வேலைகளைக் கவனிப்பா, பாத்திருக்கேன். நீ எங்கேயிருந்து வந்தே எனக்குனு, இத்தனை அசமஞ்சமா? உன்னையும் ஒருத்தி பெத்து வளர்த்திருக்காளே, அவளைச் சொல்லு... வணங்காமுடி... புருஷனுக்கு வேணுங்கறதை கவனிக்க கூட முடியாதபடி, அப்படி என்ன வெட்டி முறிக்கறே? சம்பாரிக்கறோம்ன்ற திமிர் அதானே?' என்று அரை மணிக்குக் குறையாமல் கத்துவான்.

இப்போதெல்லாம் மோகனுடைய அனாவசிய கத்தல், வேண்டாத ஆர்ப்பாட்டம், முரட்டுத்தனம் எல்லாம் அடுத்தவர்களுக்கு நன்றாகவே விளங்குவதில், முன்பு 'வேலை பார்த்து சம்பாதிக்கும் கர்வி' என்று வாய்கிழித்தவர்கள் இன்று, 'ச்சே, பாவம் இது வாயில்லாப் பூச்சி... அந்த ஆளுதான் துஷ்டை' என்று இவள் காதுபடவே முணுமுணுப்பது நிஜம்தான் என்றாலும்... அந்தப் பரிதாபம், பரிவால் இவளுக்கு ஆதாயம் என்ன? ஒன்றுமில்லை.



யாருக்கும் பயப்படாமல் மோகன் அட்டகாசம் பண்ணுவதும், இவள் அந்தக் கத்தலுக்கும், கை நீட்டலுக்கும் பயந்துகொண்டு அடங்கிப்போவதும்தானே இன்றும் நடக்கின்றன!

ஆனால் ஒன்று-

அடிக்கடி வசவும் உதையும் வாங்கிவாங்கி உடம்பு மரத்துவிட்டாலும், மனசு முன்னைவிட இப்போது அதிகமாக ரோஷப்படுவதில், நாலுக்கு இரண்டு தரம் எதிர்த்துப் பேசி செம்மையாக வாங்கிக் கட்டிக்கொள்வதோடு, 'என்ன மனுஷன் இவர்! ஏன் மனிதாபிமானம் கொஞ்சம்கூட இல்லாமல், இப்படி சுயநலம் மிகுந்த மிருகமாக இருக்கிறார்?' என்கிற கசப்பும் இதயத்தை சதாசர்வகாலமும் வியாபிக்கவே செய்கிறது- இல்லையா?

**எ**வர்சில்வர் தவலை இடுப்பிலும், பிளாஸ்டிக் வாளி கையிலுமாய் இறங்கி, நந்தினி கீழே சென்றபோது, பம்பில் கீழ்விட்டுப் பின் போர்ஷனில் குடியிருக்கும் சம்பூர்ணம் தண்ணீர் அடித்துக்கொண்டிருந்தாள்.

"வேலைக்கு நாழி ஆகலியாக்கா?"

"ஆச்சுதான்... ஆனா சொட்டு தண்ணி இல்லே... ரெண்டு நடை கொண்டு போய் ட்ரம்ல கொட்டி வச்சா, சாயங்காலம் வந்ததும் வராததுமா தண்ணி இல்லாம கஷ்டப்பட வேணாம், பாரு..."

சம்பூர்ணம் பாதி நிறைந்திருந்த தன் வாளியை நகர்த்திவிட்டு, "உங்க குடத்தை வையுங்க," என்றாள்.

"நீ அடிச்சுக்க... எனக்கு அவசரமில்ல..."

"அட, வையுங்கக்கா..."

வைத்தாள்.

அவளை பம்பு அடிக்கவிடாமல் சம்பூர்ணமே அடித்தாள்.

"நீ ஏன் வீணா கஷ்டப்படறே, சம்பூர்ணம்-தள்ளு..."

சம்பூர்ணம் கைக்காரியத்தை நிறுத்தாமல் புன்னகைத்தாள்.

"எனக்கென்ன கஷ்டம்? சாப்பிட்டுட்டு பொழுது போகாம வீட்டுல நா உக்கார்ந்திட்டிருக்கேன். உங்க மாதிரியா? ஆபீஸ்லேயும் உழைக்கறீங்க, வீட்டுலேயும் கஷ்டப்படறீங்க... பாவம்க்கா நீங்க..."

"............"

"மூணாவது வீட்ல ராணி, ராணினு ஒரு சின்னப் பொண்ணு வருதுக்கா... காலைல பத்து குடம், சாயங் காலம் பத்து குடம் அடிச்சு, மாடில கொண்டு ரொப்ப மாசம் பத்து ரூபா குடுக்கறாங்களாம்... நீங்களும் இவளை வெச்சிக்கங்களேன்க்கா... நா ஏற்பாடு பண்ணித்தரேன்... பத்து ரூபாதானே?"

நந்தினி அசட்டுச் சிரிப்பொன்றை சிரித்து நிலை மையை சமாளிக்கப் பார்த்தாள்.

"என்னக்கா? பத்து ரூபாய்க்கா பாக்கறீங்க!"

நிறைந்துவிட்ட வாளியை அகற்றி, தவலையை வைத்தவள், பதிலாக ஏதும் பேசாமல் நின்று, அதுவும் நிறைந்த பிறகு, "ரொம்ப தாங்க்ஸ், சம்பூர்ணம்...என்று மட்டும் கூறி, வாளி, தவலையுடன் மெதுவாக நகர்ந்தாள்.



- என்ன இவள், அசடா, அமுக்கா, கருமியா? இல்லை புருஷனுக்கு பயந்தவளா? - என்று புரியாமல் சம்பூர்ணம் புருவத்தை உயர்த்தியபடி விழித்த பார்வை முதுகைப் பிறாண்ட, சட்டென்று தன் நிலை குறித்து நந்தினி வெட்கித்தாள்.

பதினெட்டு வயசு சின்னப்பெண்...

கல்யாணம் ஆகாத பெண்...

இவள் 'பத்து ரூபாய்க்கா பாக்கறீங்க?' என்று வியக்கும் அளவுக்கு என் நிலமை இருக்கிறதே!

கிட்டத்தட்ட இரண்டாயிரம் சம்பாதிப்பவளுக்கு, பத்துரூபாய் கொடுத்து ஆள் வைத்துக்கொள்ள மன சில்லை பார் - என்று இன்று பூராவும் அக்கம்பக்கத்தில் சொல்லிக் கேலி பண்ணத்தான் போகிறாள்... நிச்சயம்.

இத்தனை சம்பாதித்தும், அதிலிருந்து சுவாதீன மாய் பத்து பைசா எடுக்கக்கூட எனக்கு உரிமை இல்லை என்பதைச் சொன்னால், இவள் நம்புவாளா?

ம்ஹூம், கட்டாயம் யாரும் நம்பத்தான் மாட் டார்கள்.

ஆபீஸில் என்றால், இவருக்குத் தெரியாமலேயே ஏதாவது டகல்பாஜா பண்ணி சமாளிக்கலாம்... ஆனால் வீட்டில், இந்த ஆளுக்குத் தெரியாமல் துரும்பை நகர்த்து வதுகூட சாத்தியமில்லாதபோது, பத்து ரூபாய் கொடுத்து தண்ணீர் நிரப்ப என்று வேலைக்காரியாவது, வைத்துக்கொள்வதாவது...

இந்த ஜன்மத்தில் நடக்கும் காரியமா இது!

போன நான்காம் மாசம் ஒரு தரம் லாலிலாலியாய் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருந்த ஒட்டடை களைக் காணச் சகியாமல், வீட்டுக்கார அம்மாளுக்கு அரிசிமூட்டை தூக்கிவந்த ஆளை மேலே அழைத்து, 'கொஞ்சம் ஒட்டடை அடிச்சிட்டுப் போப்பா... உயரத் துல இருக்கு, எட்டலை' என்று சொல்லி, வேலை வாங்கிக்கொண்டு கையில் இரண்டு ரூபாய் பணத்தையும் கொடுக்க...

ஹா! அன்றுதான் வீடு எப்படி இரண்டுபட்டுப் போனது!

"என்னைக் கேட்டியா? அதெப்படி தடிமாடு மாதிரி ஒருத்தனை என்னைக் கேக்காம வீட்டுக்குள்ள விடுவே? கண்டவன்கிட்ட பேசறதையும், இளிச்சிட்டு வேலை வாங்கிக்கறதையும் உன் ஆபீஸோட வெச்சுக்க... இங்க வேணாம்!" என்று அசிங்கமாய் மோகன் கத்தியது பத்தாது என்பது போல, ஊரிலிருந்து பத்து நாட்கள் தங்கிப்போக என வந்திருந்த மாமியாரும், நாத்தி புஷ்பாவும் என்னென்ன தூஷித்தார்கள்!

"அடேயப்பா... ஆனாலும் இவளுக்குத் துணிச்சல் அதிகம்தாம்மா!... முன்பின் தெரியாத ஒரு ஆம்பிளைய டக்குனு உள் வரைக்கும் வர விட்டிருச்சே!" என்று புஷ்பா விஷமமாய் ஆரம்பிக்க.

"அதாண்டி பட்டணத்துப் பொண்ணோட தைரியம்... வேலை பாக்கறாளில்ல, நம்மை எவன் என்ன செஞ்சிடுவான்ற அழுத்தம்! உள்ளார வந்தவன் லபக்குனு காது, மூக்குல இருக்கறதுக்கு ஆசைபட்டுக்கிட்டு எதை யாவது செஞ்சு, ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிருந்



திச்சின்னா? யம்மாடி...குலை நடுங்குதுப்பா! அத விடு, புருஷனை ஒரு வார்த்தை கேக்காம, அஞ்சு நிமிஷம் ஒட்டடை தட்டினதுக்கு ரெண்டு ரூபாய எடுத்து வீச றாளே, அதை நீயும் நானும் செய்வமா? அவ சம் பாரிக்கறா... இது என் பணம்ன்ற அகம்பாவம்! பாவம் தம்பி... அன்னிக்கே முட்டிக்கிட்டேன்... வேலைக்குப் போற பொண்ணு வேணாம்டானு... கேட்டானா? இப்ப சொந்த வீட்டுலேயே மரியாதை கெட்டு தவிக்கிறான்... எல்லாம் அவன் தலை எழுத்துடீம்மா..."

அன்று பூராவும் மாமியார் வாய் ஓயாமல் புலம்பி னதும், முதலில் கிணறு வெட்ட பூதமாய் என்ன இதெல்லாம் என்று நந்தினி அதிர்ந்தாள், பயந்தாள்... பின்னர் 'ச்சீ' என்று மனசு வெறுத்துப் போனாள்.

சுவாதீனமாய் இது என் வீடு என்று ஒரு காரியம் பண்ணக்கூட ஒரு பெண்ணுக்கு உரிமை இல்லை என்றால் பந்தபாசம், குடும்பம், உறவு இதற்கெல்லாம் அர்த்தம் தான் என்ன?

அவர்களைப் பொறுத்தவரை இவள் சம்பா தித்துக் கொட்டும் ஒரு மிஷின்தானா?

இடுப்பு, கை, வயிறு பாரத்தோடு மனபாரமும் சேர்ந்து கொள்ள, நடக்க முடியாமல் படிகளில் ஏறி மாடிக்குப் போனாள்.

சமையலறை ட்ரம்மில் தண்ணீரைக் கொட்டின பிறகு இன்னொரு தரம் இறங்கிப் போக அலுப்பாக இருக்க, இரண்டு நிமிஷங்கள் அப்படியே உட்கார்ந்து கொஞ்சம் ஆஸ்வாசப்படுத்திக்கொண்டாள்.

அத்தனை அலுப்பினூடேயும் பத்து நாளாய் புருஷனிடம் சொல்லவந்த விஷயத்தை இன்று எப்படியாவது கூறியே தீர வேண்டும் என்கிற எண்ணம் எழ, தைரியத்தை சேகரித்துக்கொண்டு மெதுவாய் படுக்கையறையில் எட்டிப் பார்த்தாள்.

ஷேவிங் முடிந்து கண்ணாடியில் தன் அழகை ரசித்துக் கொண்டிருந்த மோகன் திரும்பினான்.

"என்ன?"

"............"

"வெந்நீர் அதுக்குள்ள விளாவிட்டியா? என்ன அவசரம்... டயம் இருக்கே?"

எப்போதும் தன் குளியல், தன் வசதிபற்றித்தான் நினைப்பா?

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..."

என்ன என்கிற மாதிரி அவன் விழிக்க, நந்தினி உதடுகளை நாவால் ஈரப்படுத்திக்கொண்டாள். அவன் கண்களைப் பார்க்காமல் பேசினாள்.

"இந்த முறை பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்குப் போறதுல எனக்கு இஷ்டம் இல்லே..."

"..............."

"தலைச்சனுக்குப் போயாச்சு... இந்த முறையும் போகணும்னா, வெக்கமா இருக்கு... அதனால இங்கயே..."

மோகன் கண்களை இடுக்கிக்கொண்டான்.



"செலவுக்கு பயந்துகிட்டு, இப்படிப் பேசுனு உங்கப்பன் சொல்லிக் குடுத்தானா?"

"அவரை ஏங்க வீணா இழுக்கறீங்க... நானாதான்..."

"ஓ! தானா ஒரு முடிவுக்கு வர்ற அளவுக்கு திமிர் கூடிப் போச்சா?"

"என் வீட்டுலேயே நா இருக்க விரும்பறேன்... இதுல திமிர் என்னங்க?"

"நீ ஆசைப்பட்டா, அது நியாயமாயிடுமா? சம்பிரதாயம், பழக்கவழக்கம்னு ஒண்ணு இருக்கு, இல்லே...?"

"எல்லாம் நாம ஏற்படுத்திக்கிட்டதுதானே?"

"இப்படி வக்கிரமா வாதாட யார் சொல்லிக் குடுத்தா? உன் தத்தாரி சினேகிதியா?"

இப்போது நந்தினி லேசான கோபத்துடன் நிமிர்ந்தாள்.

"யாரும் எதுவும் சொல்லிக்குடுத்து கேக்கற அளவுக்கு என் புத்தி மழுங்கிடலை... அம்மா வீட்டுக்குப் போக எனக்கு விருப்பம் இல்லே... அவ்ளோதான் பொண்டாட்டிக்குப் பிரசவம் பாக்க மனசு, வக்கு இல்லேனு சொல்லறதை விட்டுட்டு, அடுத்தவங்க தலைய..."

அவள் முடிக்குமுன், சுள்ளென்று கன்னத்தில் அறை, விழுந்தது.

தொடர்ந்து முதுகில் குத்து.

பிள்ளைத்தாச்சிப் பெண் என்று நிதானிக்காமல், காலால் ஒரு உதை...

அப்புறம்... வேண்டாம், அந்த ரசாபாசமான விவரங்களெல்லாம் நமக்கு வேண்டாம்.

இத்தனைக்குப் பிறகும், என்னவோ அவள் மன்னிக்கவே முடியாத தினுசில் தப்பு பண்ணிவிட்ட மாதிரி நந்தினி மேல் உண்டான கோபம் சிறிதும் தணி யாததாய், சாப்பிடாமலேயே அன்று மோகன் ஸீனியர் வீட்டுக்குக் கிளம்பிப் போனான்.

அழக்கூடத் தெம்பில்லாமல் எப்படியோ ஆபீஸுக்கு வந்தவள், பிறந்த வீட்டுக்கு அனுப்பாமல் கணவன் விடமாட்டான் என்பதைத் தீர்மானமாகப் புரிந்து கொள்ள முடிய, முதல் தரம் போலக் கையில் காசில் லாமல் பெற்றவருக்குப் பாரமாக இருக்க விரும்பாமல், ஜானா, வேணியை கலந்தாலோசித்த பிறகு, தாலி கட்டினவனுக்குத் தெரியாமல் பிஎஃப்பிலிருந்து கடன் வாங்கி, அப்பா கையில் கொடுத்து, 'அவராலதான் என்னைப் புரிஞ்சுக்க முடியல; நீங்களாவது என்னைப் புரிஞ்சுகிட்டு நா சுயமரியாதையை இழக்காம வாழ உதவி பண்ணுங்கப்பா' என்று தழுதழுத்த குரலில் கெஞ்சின போது, அப்பாவின் எதிரில் உடைந்துபோகாமல் இருக்க ரொம்பவும்தான் சிரமப்பட்டுப் போனாள்.



## 21

"ஆச்சா, ரம்யா? நாலு குட்டிக் கணக்கைப் போட்டு முடிக்க எத்தனை நாழி? மளமளனு போடு! இன்னும்



ஹிந்தி ஹோம்வொர்க் அப்படியே இருக்கு... மணி ஏழு... ம்... ம்..."

சமையல்கட்டிலேயே ஒரு பக்கமாய் கவிழ்ந்து உட்கார்ந்து, பாடங்களைப் படிக்கும் பெண்ணின் அருகில் அமர்ந்து நிதானமாய் கவனிக்க முடியாதபடி, அடுப்பு, வீட்டு வேலைகள் ஒன்றின் பின் ஒன்றாய் வரிசையாய் காத்திருக்க, செய்யும் காரியத்தை விடாமல் அங்கிருந்தே ரம்யாவை நந்தினி விரட்டிக்கொண்டிருந் தாள்.

"கணக்கு போட்டுட்டியா? கொண்டா... ம்ம்ம்... குட்! இத முடிச்சிட்டு, ஹிந்தி நோட்டை எடுத்துக்க. மிஸ் எழுதியிருக்கிற மாதிரியே நீயும் அழகா எழுதணும், மொகத்தை அத்தனை கிட்டக்க வெச்சிக்காத... அப்படி கூன் போட்டா கழுத்து வலிக்கும்... நிமிரு... கால் மணில முடிச்சிட்டுக் குளிக்க வரணும்... அம்மாவோட சமத்துப் பொண்ணு இல்லே?"

பேசிக்கொண்டே, வெந்துவிட்ட காயை எடுத்து வடிதட்டில் கொட்டினாள். முற்றத்தில் கிடந்த காபிப் பாத்திரங்களை அலம்பிக் கவிழ்த்தாள்.

முறத்தில் கொட்டிவைத்திருந்த நான்கு டம்ளர் அரிசியில் கல் பொறுக்குகையில், கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்த ராஜா எதற்கோ அழுவது காதில் விழுந்தது.

செய்து கொண்டிருந்த கைக்காரியத்தை வைத்து விட்டுப் போவதற்குள் அழுகை பெரிதாக, வாச வராண் டாவில் மகனுடன் அமர்ந்திருந்த மாமியாரிடமிருந்து, "என்ன பண்றே அங்க, குழந்தை அழறதுகூடக் காதுல

விழாமா?" என்ற சிடுசிடுப்பு; தொடர்ந்து மோகனின் அடிக் குரல் "ஏய்..."

குத்துக்கல் மாதிரி அம்மாவும், பிள்ளையும் வேலை வெட்டி எதுவும் செய்யாமல் வம்படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்களே, எழுந்து போய், அழும் பிள்ளையைத் தூக்கினால்தான் என்னவாம்?

தபதபவென்று எரிச்சல் மண்ட, நாலடி வைத்தவள் சட்டென்று நின்று, கதவு மேல் சாய்ந்து தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொள்ள முயன்றாள். வேண்டாம்...

இருக்கும் வேலைகள், சங்கடங்களே போதும் - கோபமும், எரிச்சலும் வேறு வேண்டாம்.

என்ன பொங்கினாலும் இவர்கள் ஆயுசுக்கும் இப்படியேதான் சுயநலக் கூட்டமாக இருக்கப் போகிறார்கள்... தலைகீழாக நின்றாலும் இவர்களை மாற்ற நம்மால் ஆகாது.

அப்புறம், கோபம் என்ன, தாபம் என்ன?

கடைசியில், எதிர்பார்ப்பது எதுவுமே நடக்காமல், அழையாத விருந்தாளியாய் வந்திருக்கும் வயிற்றுப்புண் அவஸ்தை அதிகரிப்பதுதான் மிஞ்சும்...

வேண்டாம்.

"ஏய்... கூப்பிடறது காதுல விழலே?"

"விழுது... விழுது... வந்திட்டுதானே இருக்கேன்..."

"பாத்தீங்களாம்மா... குழந்தை கத்தி விரைச்சுப் போவுது... வந்து தூக்குன்னா, எப்படி திமிரா பதில் சொல்றானு?"



அகிலாண்டம் சூள்கொட்டினாள்.

"விடு... விடு... சம்பாரிக்கற பொண் இல்லே? அப்படித் தான் இருப்பா! இப்பத்தான் புதுசா அனுபவிக்கறியா என்ன? எட்டு வருஷமா நடக்கிற கூத்து தானே?"

அந்த நையாண்டிப் பேச்சு எதுவும் காதில் விழாத மாதிரி நந்தினி குனிந்து குழந்தையைத் தூக்கினாள்.

அடித்தொடையில் இரண்டு இடத்தில் சிவந்திருந்தது... எறும்போ, கொசுவோ, ஏதோ ஒன்று கடித்திருக்க வேண்டும்.

அழும் குழந்தையை சமாதானம் செய்தவாறே, அலமாரியிலிருந்து ஸாவ்லான் க்ரீமை எடுத்த சிவந்திருந்த இடங்களில் தடவினாள். ஜன்னலருகில் வைத்துக் கொண்டு 'காக்கா பாரு ராஜா ...கா....க்...கா' என்று பராக்குக் காட்டினாள்.

**கொ**ஞ்சம் அழுகை அடங்கினதும், இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டே வேலைகளைக் கவனிக்கலாம் என்ற தீர்மானத்தில், திரும்பியவளை அகிலாண்டம் அழைத்தாள்.

"ஏய்... இங்க வா..."

அம்மாவுக்குத் தப்பாத பிள்ளை, பிள்ளைக்குத் தப்பாத அம்மா.

வாயில் பேரே வராதா? எப்போதும் ஆடு, மாடை விரட்டுகிற தினுசில் ஏய்...ஏய்...தானா?

அவர்கள் எதிரில் வந்து நிற்கப் பிடிக்காதவளாய், கதவுக்குப் பக்கத்திலேயே நின்று, என்ன என்று கேட்கும் பார்வையாய் பார்த்தாள்.

"ராத்திரி வண்டிக்கு சுபாவும் மாப்பிள்ளையும் வராங்க, நினைப்பிருக்கு இல்லே?"

"ம்."

"என்ன சமைக்கறதா இருக்கே?"

நீங்களே சொல்லுங்கள் என்கிற பாவனையுடன் நந்தினி நிற்க, அகிலாண்டம் தொடர்ந்தாள்.

"மாப்பிள்ளைக்கு சேப்பங்கிழங்கு கார வதக்கல்னா பிரியம். முருங்கக்கா, இல்லே முள்ளங்கி சாம்பார், சேப்பங்கிழங்கு ரோஸ்ட், தக்காளி பருப்பு ரசம் செஞ்சு, அப்பளம், வத்தல், பொறிச்சிடு, பால் இருக்கா? சேமியா பாயஸம் வெக்கலாம்... சுபாக்கு சேமியா பாயஸம்னா உசிரு..."

"இல்லாம என்னம்மா? தெருக்கோடில ஆவின் 'பூத்' இருக்கு. ஒரு லிட்டர் எக்ஸ்ட்ராவா வாங்கிட்டா போச்சு..."

அம்மாவும் பிள்ளையுமாக, இது முடியுமா, முடியாதா என்கிற கவலை இல்லாமல் மெனுவை விவரிக்க, அடங்கி இருந்த எரிச்சல் மீண்டும் நந்தினிக்குள் பிறாண்ட முற்பட்டது.

என்னமோ வராத விருந்தாளி வருகிற மாதிரி, விருந்துக்கு ஏற்பாடு பண்ண இப்போது என்ன முடை? போன வாரம் திருச்சிலிருந்து வந்து நாலு நாட்கள் தங்கி விட்டு, மைசூர் பங்களூர் பார்த்ததே இல்லை என்று



போனவர்கள் திரும்புவதற்கு, என்னத்திற்காக இத்தனை தடபுடல்?

ஞாயிற்றுக்கிழமை என்றாலும் பரவாயில்லை, இன்றோ புதன். பற்றாதகுறைக்கு இந்த வாரம் பூராவும் ஜானா லீவு. அவளுடைய வேலையையும் சேர்த்து கவனிப்பதற்குள், முதுகுத்தண்டு விட்டுப் போய்விடும்.

அங்கு உழைத்துவிட்டு, இங்கும் இடுப்பொடிய வேலை பண்ண வேண்டும் என்றால், நினைப்பே நந்தினிக்கு அலுப்பாக இருந்தது. இதைக்கூட தான் சொல்லித்தான் இவர்கள் உணர வேண்டுமா என்று வருத்தமாக இருந்தது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நிமிர்ந்தாள்.

"இன்னிக்கு இந்த விருந்து அவசியம் வேணுமா? இப்பத்தானே சுபாவும், அவ புருஷனும் வந்து தங்கிட்டு..."

அவள் முடிக்கு முன், "என்னது, என்னது? விருந்து அவசியமாவா? அடியம்மா... அத்தி பூத்தாப்பல நாங்க ஆடிக்கொருதரம், அமாவாசைக்கு ஒரு தரம்னு வரப்பவே இப்படி கேக்கறியே... இன்னும், பிள்ளை வீடு, தம்பி வீடுனு அடிக்கடி ஆசையா இருக்கறப்பல்லாம் வந்து தங்கினா, படி ஏறவே விடாம, அடிச்சி விரட்டிடுவே... அதானே?" என அகிலாண்டம் அங்கலாய்க்க,

"இப்ப நா என்ன சொல்லிட்டேன்னு இப்படி பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?" என்று சின்னக் குரலில் நந்தினி வினவியதும்,

மோகன் கையிலிருந்த பேப்பரைக் கசக்கி எறிந்து விட்டு மனைவி மேல் பாய்ந்தான்.

"என்னடி சொன்னே? திமிர் பிடிச்ச நாயே..."

உறுமியவன் அவள் தலைமுடியை அழுந்தப் பற்றி உலுக்க, நந்தினி வலி பொறுக்காமல் "ஸ்..." என்றாள்.

"இன்னும் என்னடி சொல்லணும்... ஊர்லேந்து வர்ற பொண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் ஆசையா அம்மா விருந்து வெக்கணும்னு சொன்னா, இப்ப அதுக்கு அவசியமா, ஏற்கனவே வந்து போன வங்கதானேனு எடக்கா இல்லே பேசறே?"

"எடக்கு இல்லீங்க... ஆபீஸ்லேந்து நா வர நாழி யாயிடுச்சின்னா, வந்து இத்தனையும் சமைக்க முடியாது னுதான் கேட்டேன்..."

"கஷ்டம்னு தோணிச்சின்னா, ஆபீஸுக்குப் போகாத... லீவு போடு! என்னம்மா?"

அகிலாண்டம் சட்டமாக உட்கார்ந்துகொண்டு, "அதானே!" என, நந்தினி உதட்டைக் கடித்தபடி தலையைக் குனிந்துகொண்டாள்.

ஈன ஜென்மங்கள்...

அடுத்தவரின் கஷ்டநஷ்டம் புரியாத சுயநலப் பிறவிகள்...

இவர்களுடன் பேச நின்றதே தவறு.

பேசாமல் சரி என்று தலையாட்டிவிட்டுப் போயிருந்தால் வம்பே இல்லை.

எப்படியும் இவர்கள் சொல்வது, நினைப்பதுதான் நடக்கும் என்பதால், இப்படிப் பேசிக்கொண்டு நிற்பதில் நேரம்தான் தண்டமாகிறது.



மேற்கொண்டு வாயைத் திறந்தால், மாமியார் எதிரிலேயே அடி, உதை கிடைக்கும் என்பதால் உள்ளே போகத் திரும்பியவளை, மோகன் மறுபடி "ஏய்" என்று அழைத்தான்.

"சுபாக்கு உருளைக்கிழங்கு சிப்ஸ்னா பிடிக்கும். ஒரு கிலோ கிழங்கு வாங்கிட்டுவந்து வறுத்து வை! முடியாட்டி, வர்ற வழிலே 'நீலகிரிஸ்'ல எறங்கி வாங் கிட்டு வா... என் தங்கச்சி எனக்கு உசத்தி... கிள்ளுக் கீரையாட்டம் நினைச்சிடாத! இத்தனை சொல்லியும் மறந்திட்டேங்கனு வந்து விழிச்சின்னா, நா பொல்லாத வனாயிடுவேன்... என்ன?"

மௌனமாய் அத்தனைக்கும் தலையசைத்துவிட்டு வேகமாய் சமையல்கட்டுக்குள் வந்தபோது, நந்தினியின் கண்களில் நீர் திரண்டிருந்தது.

பதில் பேசியதற்கு தண்டனை, இந்த வறுவலின் சேர்க்கை.

நான் ஆண் - நீ பெண்; நான் எஜமானன் - நீ அடிமை; நான் ஆணையிடுவேன் - நீ ஒரு வார்த்தை என்ன என்று கேட்காமல் அடிபணிய வேண்டும் - என்கிற மனோபாவத்தை அழுத்தம் திருத்தமாய், பெற்றவளுக்கு எதிரில் நிலைநிறுத்தும் முரட்டு குணம்...

சட்...

என்ன வாழ்க்கை, என்ன பந்தம் வேண்டிக்கிடக் கிறது.

**க**ன்னத்தில் வழிந்த நீரைத் துடைக்கத் தெரியாமல் நின்றிருந்தவளை, ரம்யா உலுக்கினாள்.

"அழறியாம்மா?"

"............"

"அப்பா, அடிச்சாராம்மா?"

"............"

ரம்யா கிசுகிசுப்பாய் பேசினாள்.

"எனக்கு இந்த அப்பாவப் பிடிக்கவே இல்ல... பாட்டி, அப்பாவ விட மோசம், கோழி முட்ட கண்ணும், குரங்கு மூஞ்சியும்... அய்யே... ஏம்மா, பாட்டி ராட்சஸியாம்மா? அவங்க எப்ப ஊருக்குப் போவாங்க?"

நந்தினி பிரயத்தனப்பட்டு தன்னை சுதாரித்துக் கொண்டாள். குரலைத் தழையவிட்டாள்.

"ஷ்...ஷ்... அப்படியெல்லாம் பெரியவங்களைக் கேவலமா பேசக்கூடாது... தப்பு! நீ ஹிந்திப் பாடத்தை எழுதிட்டியா? குளிக்க வா... நாழி ஆச்சு, பாரு..."

ரம்யாவைத் தயாராக்கி, சமையலை முடித்து, புருஷனைச் சாப்பிட அழைத்து, அவன், "எல்லாம் எங்கம்மா எனக்குப் போடுவாங்க! உன் அவசரத்துல தலைல கொட்டாத தோஷமா நீ பரிமாற வேணாம்!" என்று சிடுசிடுக்க, சாப்பிடப் பிடிக்காமல் ஒரு டம்ளர் காபியை மட்டும் குடித்துவிட்டு, கணவனிடமிருந்து பணத்தை வாங்கி, 'ஒரு லிட்டர் எக்ஸ்ட்ராவா பால் வாங்கி வா, ஆயா' என்று சொல்லி, கையில் இரண்டு ரூபாய் மட்டுமே இருந்ததால் மாலையில் வறுவல் வாங்கிவரவென புருஷனிடம் பத்து ரூபாய் கேட்டு வாங்கிக்கொண்டு ஒரு வழியாய் அலுவலகத்துக்குக்



கிளம்பின நிமிஷத்தில், நந்தினியின் மனசு வழக்கம் போல ரொம்பவும் கசந்துதான் போயிருந்தது.

பஸ்ஸில் கண்டவனோடு இடுக்கில் நசுக்கி, வேண்டாத அசிங்க வார்த்தைகளைக் கேட்டு, ஆபீஸில் நாள் முழுக்க உட்கார அவகாசம் இல்லாமல் வேலை செய்து, ஐந்து மணிக்கு உன்பாடு என்பாடு என்று கிளம்பி, பஸ் கிடைக்காமல் ரொம்ப நேரத்துக்குக் காத்திருந்து, கூட்டத்தில் அரைபட்டு, வறுவல், காய்களை கைக்கொள்ளாமல் தூக்கிக்கொண்டு மூச்சிறைக்க வீட்டுக்குள் ஆறரைமணிக்கு நுழைந்தவளை

"பாரும்மா இந்த ஆயாவ, தலைய சீவிவிடுனு சொன்னா, சீவவே மாட்டேன்றா" என்ற ரம்யாவின் புகாரும், ராஜாவின் அழுகையும்; மாமியாரின் "தலைக்கு மேலே வேலை கிடக்கு, இப்படி ஆடி அசைஞ்சுகிட்டு வந்தா என்ன அர்த்தம்?" என்கிற விறைப்பான பார்வையும்; "தலை வலிக்குது, நா வீட்டுக்குப் பொழுதோட போவணும்" என்ற ஆயாவின் பேச்சும்; "வீட்ல விருந்தாளிங்க இருக்கிற நினைப்பில்லாம எங்க ஊர் சுத்திட்டு வரே? பொறுப்பில்லாம உங்க வீட்டுக்குப்போய் உக்கார்ந்திட்டு வரியா என்ன?" என்ற கணவனின் சிடுசிடுப்பான கேள்வியும் வரவேற்றன.



## 22

**வ**ழக்கம்போல சனிக்கிழமை 'ஜமா' கூடியிருந்தது.

நாயர் வாங்கிவந்திருந்த 'பிஸிபேளா', சன்னா படூரா, குலாப்ஜாமுனை தொட்டுக்கூடப் பார்க்காமல் பிரமை பிடித்த மாதிரி அமர்ந்திருந்த நந்தினியை, வேணி உலுக்கினாள்.

"என்னாச்சு உனக்கு, பசிக்கலை?"

"..........."

"ஹேய்..."

இப்போது நந்தினி சரக்கென்று விழிகளைத் திருப்பினாள்.

"ஏய்... என்னப்பா ஏய்... ஆடு, மாடுகளை கூப்பிடற மாதிரி... எனக்குனு பேர் இருக்கறது உனக்குக் கூடவா மறந்து போச்சு?"

வேணி புருவங்களை உயர்த்தினாள்.

"நா ஏய்-னு கூப்பிடலை, நந்து... ஹேய்-னு சொன்னேன். வாட்ஸ் ராங்க் வித் யூ?"

நந்தினி பதில் கூறாமல் தலையைக் குனிந்து கொள்ள, மற்ற மூவரும் ஒருவரை ஒருவர் என்ன விஷயம் என்பது போலப் பார்த்துக்கொண்டனர்.

சில மாசங்களாகவே நந்தினியின் முகத்தில் சிரிப்பு என்கிற சமாச்சாரம் சாயலுக்குக்கூட இல்லைதான்...

ஆனாலும், இன்று வேறு என்னவோ சேர்ந்து கொண்டிருக்கிறது...

என்ன...?



மாலு கையிலிருந்த ஸ்பூனைக் கீழே வைத்து விட்டு நந்தினியின் அருகில் நாற்காலியை இழுத்துக் கொண்டாள்.

"என்னாச்சு, நந்து?"

"ப்ச்..."

"சொல்லப்போறியா இல்லியா?"

"என்னத்தப்பா சொல்றது? பழைய குருடி கதவைத் திறடீனு, சொன்னதையே எத்தனை தரம் திருப்பித் திருப்பிச் சொல்வா? புதுசா வேற என்ன இருக்கப் போறது! எல்லாம் அவ வீட்டு ப்ராப்ளம்தான்... என்ன, நந்து?"

எதற்கும் பதில் கூறாமல், என்னமோ கூரையே இடிந்து தலையில் விழுந்துவிட்ட துக்கத்துடன் அமர்ந் திருந்தவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இளைத்துப்போன உடம்பு.

டொக்கு விழுந்த கன்னங்கள்.

அவசரத்தில் உடுத்தப்பட்ட சேலை.

அசிரத்தையாய் வாரப்பட்ட தலைமுடி.

சதா அழுதும், தூங்காமலும் இருப்பதில், உப்பி, கருவளையம் கண்ட கண்கள்.

நந்தினியா இது!

வருத்தத்தோடு லேசாகக் கோபமும் சேர்ந்து கொள்ள, ஜானா சாப்பிடுவதை நிறுத்தினாள். ஒரு வாய்

தண்ணீர் குடித்துத் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயன்றாள். சிநேகிதியை அழுத்தமாக ஏறிட்டு, சன்னக் குரலில் வினவினாள்.

“இப்படியே உக்கார்ந்திட்டிருக்கிறதால என்ன பிரயோஜனம், நந்து? ஒண்ணு, என்ன நடந்ததுனு சொல்லி தீர்வு காணப்பாக்கணும். இல்லேன்னா, கிடைக்கிற கொஞ்ச நேரத்தை சந்தோஷமா பேசி, சிரிச்சு கழிச்சிட்டு, வீட்டுக்குக் கிளம்பணும்... ரெண்டையும் செய்யாம அமுக்கா இருக்கிறது ஷியர் வேஸ்ட் ஆஃப் டைம்.. புரியுதாப்பா?”

“..............”

“ஏதாவது புது ப்ராப்ளமா, நந்து?”

“..............”

“எங்களுக்குதான் எல்லாம் தெரியுமேப்பா... சொல்றதுல தயக்கம் என்ன? மனசு விட்டுப் பேசினா கொஞ்சம் ஆறுதலாவாவது இருக்கும், இல்லே?”

மாறிமாறி சினேகிதிகள் இவளது மௌனத்தைப் பாராட்டாமல் நிஜமான அக்கறையுடன் பேச, நந்தினி நீளமாக மூச்சை இழுத்து வெளியிட்டாள்.

“வரவர மனசைவிட்டுப் பேசக்கூடத் தயக்கமாத்தான் இருக்குப்பா.. அம்மாகிட்ட சொன்னா, ‘ஆம்பளைங் கன்னா அப்படித்தான் இருப்பாங்க, நீதான் விட்டுக் குடுத்துப் போகணும்’னு புத்தி சொல்றாங்க... உங்ககிட்ட பேசினா, ஆனாலும் நீ ரொம்பத்தான் தழையறே... அதான் மோகன் அப்படித்துள்ளறார். நிமிர்ந்து நில்லு’னு கண்டிக்கறீங்க... அம்மா சொல்றாங்களேனு தழைஞ்சாலும், குனியக்குனிய குட்டு விழற கதைதான்; நீங்க சொல்ற விதமா எதிர்த்து ‘என்னங்க?’னு கேட்டாலும் கிடைக்கறது அடி, உதைதான்... நா என்ன பண்ணுவேன்? என் நிலை யாருக்குப் புரியுது! அத்தனையும் விட்டுட்டு எங்காவது கண்காணாம ஓடிட்டா தேவலை போல இருக்கு! என்ன குடும்பம், உறவு வேண்டிக்கிடக்கு...”



கொஞ்சம் ஆத்திரம், கொஞ்சம் வேதனையோடு பேசி, முடிவில் சன்னமாக விசும்ப முற்பட, அரை நிமிஷம் சும்மா இருந்துவிட்டு ஜானா அவள் கையைத் தட்டிக் கொடுத்துச் சமாதானப்படுத்தினாள்.

“அழாத, நந்து.. அழறதால ஆகப்போறது ஒண்ணும் இல்லே... வீணா தலைவலிதான் மிஞ்சும்! இப்ப என்ன நடந்திருச்சுனு நீ இப்படி நிலைகுலைஞ்சிபோயிருக்கே? மாமியார், நாத்தனார் எல்லாரும் ஊருக்குப் போயிட்டதுல நீ கொஞ்சம் நிம்மதியா இருப்பேனு இல்லே நினைச்சோம்!”

நந்தினி மூக்கை உறிஞ்சிக்கொண்டாள்.

“அவங்க ஊருக்குப் போறதுக்கு ரெண்டு நாள் முன்னால ஒரு பெரிய அமர்க்களம் நடந்துதுப்பா...”

குறுக்கே பேசாமல் மற்ற மூவரும் எதிர்பார்ப்புடன் அமர்ந்திருக்க நந்தினி தொடர்ந்தாள்.

“சுபாவும் அவ புருஷனும் மைசூர், பங்களூர்லேந்து திரும்பி வந்தாங்க இல்லே? அன்னிக்கு பஸ் கிடைக்காம திண்டாடி, வறுவல், காய்கறிகளை வாங்கிட்டு நா வீட்டுக்குப் போறப்போ நேரம் ஆயிடுச்சுப்பா.. களைச்சு வராளேன்ற அக்கறை துளி இல்லாம ‘அம்மா

வீட்டுக்குப் போய் உக்கார்ந்திட்டு வறியா?'னு கேட்டதும் எனக்குக் கோவம் வந்திருச்சு... தாங்கமாட்டாம, 'ஆமா, சினேகிதிங்களோட ஊர் சுத்திட்டு, அம்மா வீட்டுக்குப் போயிட்டுவரேன்'னு பதில் சொல்லிட்டேன்! அதுக்கு... அதுக்கு..."

"அதுக்கு?"

"பதிலா பேசறேனு அம்மா, வேலைக்காரி, குழந்தைங்க எதிர்லியே என்னை மாட்ட அடிக்கற மாதிரி அடிச்சு..."

அடங்கியிருந்த அழுகை மீண்டும் வெடித்துக் கிளம்ப, நந்தினி கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"மறுநாள் ஆபீஸ் வந்தப்ப, நெத்தில ப்ளாஸ்டர் ஒட்டியிருந்ததுக்கு அந்த அடிதான் காரணமா? பாத்ரூம்ல சறுக்கி விழுந்திட்டதா இல்லே சொன்னே?"

"ஸா... ஸாரிப்பா... என்னை நினைச்சா எனக்கே அவமானமா இருந்தது... அதான் உண்மையச் சொல்லாம மறைச்சிட்டேன்..."

"உன் நிலையப் பாக்கறப்போ, நா இப்படி இருக்கத் தீர்மானிச்சதுதான் சரியான முடிவுனு சந்தோஷமா இருக்கு..."

"யூ ஆர் ராங், வேணி... எல்லா கணவன் மனைவியும் இப்படி இருந்திடறதில்லே! ரகுவையும் என்னையும் பாத்தும் நீ இப்படிப் பேசறது எனக்கு ஆச்சர்யமா இருக்கு! மரியாதை, அன்பு குடுத்து, வாங்கி ஆத்மார்த்தமா இணைஞ்சி வாழறவங்களும் இருக்காங்க...



ஸோ, ஒரு பக்கத்தை மட்டும் பாத்திட்டு உன் முடிவுதான் சரினு முதுகுல தட்டிக்காத... சரி, இந்த டாபிக்கை அப்பறமா பேசுவோம். இவ இப்படி இடிஞ்சி போயிருக்கறதை முதல்ல கவனிக்கலாம். நந்து', நிமிரு... கண்ணத் துடைச்சிக்க... கமான், கேதர் யுவர்செல்ஃப்... அன்னிக்கு அத்தனை பேர் எதிர்ல அடிச்சிட்டார்னா, இன்னிக்கு நீ இப்படி உடைஞ்சிபோயிருக்கே? நோ... நோ... என்னால நம்ப முடியலை... கண்டிப்பா இன்னும் வேற ஏதாவது, உன்னால பொறுக்க முடியாம நடந்திருக்கணும்... மறைக்காம சொல்லு... ம்... ம்..."

ஜானா அதட்டலாய் பேசியதும், கொஞ்சம் தேறி, நந்தினி நிமிர்ந்தாள்.

"நீ சொல்றது சரிதான்... அடுத்தடுத்து புதுசா என்னென்னமோ நடக்கறதாலதான், என்ன பண்ணுவோம்னு நா மிரண்டுபோயிருக்கேன். அன்னிக்கு அந்த அடி அடிச்சு, கத்தினப்புறம் என்னாச்சு தெரியுமா? அத்தனை நடந்ததையும் பாராட்டம, நா வெக்கம் மானத்தை விட்டு சமைச்சதைத் தொட்டுக்கூடப் பாக்காம, மோகன் அவங்க மனுஷங்க பூரா ஹோட்டலுக்குப் போயிட்டாங்க சாப்பிட..."

"உன்னை யாரு சமைக்கச் சொன்னது? மூஞ்சியத் தூக்கிக்கிட்டு ஒரு மூலைல உக்கார்ந்திருந்தேன்னா, தன்னால வழிக்கு வந்து அடங்கியிருப்பாங்க இல்லே?"

வேணி கோபமாகப் பேச, நந்தினி அழுகையை மறந்து அலுப்புடன் சிரித்தாள்.

"அப்படி 'இவங்களுக்கு நா என்ன சமையல்காரியா, வேலைக்காரியா'ன்ற ரோஷத்தோட மறுநாள்

காலைலேந்து நா பேசாம இருந்தப்போ, ஈ காக்கா என் கோவத்தை லட்சியம் பண்ணலை, வேணி... அவங்க பாட்டுக்கு இருந்தாங்க, ஹோட்டல்லேந்து வரவழைச்சு சாப்பிட்டாங்க, ஊருக்குப் புறப்பட்டுப் போனாங்க! என்னையும், குழந்தைகளையும் திரும்பிக்கூடப் பாக்காம, என் வீட்டுலேயே என்னை அலட்சியப்படுத்திகிட்டு... கடவுளே! இதைவிட சித்ரவதை ஒரு பொண்ணுக்கு வேற ஒண்ணும் வேணாம்பா..."

எழுந்த கோபத்தை அடக்கும் பாவனையுடன் ஜானா வாயைத் திறக்காமல் இருக்க, வேணி மளமள வென்று ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். மாலு, கலங்கிவிட்ட கண்களை மறைக்க, தலையைத் திருப்பிக்கொண்டாள்.

"இதையெல்லாம் நீ ஏன் அப்பவே எங்ககிட்ட சொல்லலை?"

"சொல்லியிருந்தா? இப்படி இருக்கிறது தப்புப் பானு அட்வைஸ் பண்ணியிருப்பீங்க, இல்லேன்னா நீங்களும் வேதனைப்பட்டுக்கிட்டு, இப்ப மாதிரி என்ன செய்யறதுனு புரியாம முழிச்சிருப்பீங்க.. போங்கப்பா, ஐ ம் ஃபெட் அப் ஆஃப் எவ்ரிதிங்..."

"சரி, சரி... போனதை விடு... மாமியார் அண்ட் கோ தான் ஊருக்குப் போயாச்சே... இன்னுமா மோகன் கோவம் தணியாம இருக்காரு? நிலைமைல இம்ப்ரூ மெண்ட் இருக்கு, இல்லே?"

நந்தினி ரொம்ப தீனமாக விழித்தாள், 'ம்ஹூம்' என்று தலையசைத்தாள்.



"வொர்ஸ்-பா... இன்னியோட பதினாலு நாளாச்சு, மோகன் என்கிட்ட ஒரு வார்த்தை பேசி... அது மட்டு மல்ல... வந்து... வந்து..."

"அட, சொல்லேம்பா... எதைச் சொல்ல இத்தனை தயக்கம்?"

நந்தினி தயக்கத்துடன் பேசினாள். பார்வை பூமியில் படந்திருந்தது.

"பத்து, பன்னெண்டு நாளா இன்னொரு புது பழக்கம் வந்திருக்கு, ஜானா... ராத்திரி பதினோரு மணிக்குக் குறைஞ்சு வீட்டுக்கு வர்றதில்லே... அதோட..."

"வந்தா என்னப்பா? எப்ப வேணா வரட்டும்னு நீ பேசாம படுத்திட வேண்டியதுதானே?"

கொஞ்சம் நிதானித்துவிட்டுப் பேசியபோது நந்தினியின் குரல் தழுதழுத்திருந்தது.

"கேளுப்பா... வர்றப்போ மனுஷன் நல்லா குடிச் சிட்டு வரார்... குழந்தைங்க எதிர்ல கன்னாபின்னானு நடந்துக்கறார்... பகல்ல பேசாததுக்கெல்லாம் சேர்த்து வெச்சுக் கத்தறார்! கீழ், பக்கத்து வீட்டுக்கெல்லாம் கேக்கற தினுசுலே, என்மேல வேண்டாத புகாரெல்லாம் உரக்கச் சொல்றார்... வந்து... நா... ஒரு தப்பும் பண்ணாதப் போவே வந்து..."

உதடுகள் கோண, நந்தினி கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். சின்னச்சின்னக் கேவல்களாக எழுந்த அழுகை, கவிழ்ந்திருந்த முதுகை அதிரவைக்க, மாலு சட்டென்று எழுந்து அவளை ஆரத்தழுவிக் கொண்டாள்.

"என்ன அக்ரமம்பா இது!"

"தான் ஆம்பிள்ளை-என்ன வேணா செய்ய லாம்ன்ற திமிர்ப்பா..."

"சும்மாசும்மா எல்லா ஆம்பிளைகளையும் ஒட்டு மொத்தமா சாடாத, வேணி... இவ இடம் குடுத்திருக்கா, அவர் ஆட்டம் போடறார்..."

"இவ என்ன பண்ணுவா, ஜானா? அந்த மனுஷன் கிட்ட என்ன,ஏதுனு நியாயமா ஏதாவது கேக்கமுடிஞ்சா தானே! எட்டு வருஷத்துக்கும் மேலயே ஆறது, இன் னிக்கும் அவர் சம்பளம் என்ன, அந்தப் பணத்தை என்ன பண்ணறார்னுகூட இவளுக்குத் தெரியாது. கேட்டா, அடி உதை! பொண்டாட்டி சம்பளத்துல வெக்கம் இல்லாம குடித்தனம் பண்ணறவருக்கு சிகரெட், ட்ரிங்க் ஒண்ணுதான் குறைச்சல்! மனுஷனா அவர், தத்... அனிமல்... வொர்ஸ் தேன் அன் அனிமல்..."

"ஜானா, வேணி... ப்ளீஸ்... இவ ஏற்கனவே நொந்து போயிருக்கா... நீங்க வேற தலைக்குத் தலை மோகனைத் திட்டி வேதனைய அதிகப்படுத்தாதீங்கப்பா... நல்ல விதமா தைரியம் சொல்லி இவளைத் தேத்தற வழியப் பாருங்க ப்ளீஸ்..."

ஜானா எழுந்து நந்தினியின் அருகில் வந்து அவள் தலையை நிமிர்த்தினாள்.

"ஸாரிப்பா... நீ தொடர்ந்து அனுபவிக்கற வேதனையப் பாக்கறப்போ, என்ன கட்டுப்படுத்தியும் கோவம் அடங்க மாட்டேங்குது! ஓகே, மாலு சொல் றாப்பல நடந்ததைப்பத்தி பேசாம, நடக்க வேண்டியது என்னனு பாக்கலாம்- இதுக்கு முன்னாடியே மோகனுக்கு குடிக்கற பழக்கம் உண்டா?"

"எப்பவாவது..."

"இப்ப தினமும் குடிக்கறார். ஆர் யூ ஷ்யூர்?"

"நிச்சயமா... சிவந்த கண்ணும், நிதானமில்லாத பேச்சுமா... மைகாட்... மோகனைக் கண்டாலே ரம்யா எப்படி ஓடி ஒளியறா, தெரியுமா?"

"ம்ம்... ரகுவ விட்டு அவர்கிட்ட பேசச் சொல்ல லாமா?"

"என்னனு?"

"'இதெல்லாம் ஹெல்தி ஹாபிட்ஸ் இல்லேனு..."

"அய்யோ... வேணாம்பா... நா உங்கிட்ட கோள் சொன்னேன்னு கோவம் ஜாஸ்தி ஆயிடும்..."

"அப்புறம்? ஹவ் ஆர் யூ கோயிங் டு ஹாண்டில் ஹிம்? உங்கப்பாகிட்ட சொல்றியா?"

"அய்யய்யோ, ராஜாவப் பிரசவிக்க வந்தப்போ, சீர் சரியா செய்யலைனு அவங்களை வீட்டுப்படி ஏறக் கூடாதுனு சொல்லிட்டாரே, ஜானா?"

"எதுவுமே வேணாம்னா எப்படி, நந்து? நா ஒரு வழி சொல்லட்டுமா? கேப்பியா? அவரொட ஸீனியர்கிட்டப் போய் விவரத்தைச் சொல்லி ஹெல்ப் பண்ணக் கேக்கலாமா?"

இப்போது நந்தினி அதிகமாய் பதறினாள்.

"வேணாம்பா, ப்ளீஸ்... ப்ளீஸ்... அப்படி ஏதாவது செஞ்சா, தன் மானம், மரியாதை போயிடிச்சுன்னு என்னை வெட்டிப் போடக்கூடத் தயங்க மாட்டார்..."

ஜானா கோபத்துடன் நாலடி இப்படியும் அப்படியும் நடந்தாள். நின்றாள். கத்தலாகப் பேசினாள்.

"மண்ணாங்கட்டி மரியாதை! தாலி கட்டின பொண்டாட்டிக்கு மரியாதை குடுத்து அவளை ஒரு மனுஷியா நடத்தத் தெரியாதவருக்கு பெரிய்...ய மானம், மரியாதை! நீயும் ஒண்ணும் செய்யாத... எங்களையும் எதுவும் பண்ணவிடாத! நாளுக்கு நாள் தேஞ்சு அழிஞ்சு போ... நாங்க பாத்துகிட்டு கையக் கட்டிகிட்டு நிக்கறோம்... என்ன?"

"என்னை என்னப்பா பண்ணச்சொல்றே? இதுக்குதான் உங்ககிட்ட எதுவுமே சொல்லாம, ரெண்டு வாரமா உள்ளுக்குள்ளேயே போட்டு வெச்சிருந்தேன்... இன்னிக்கு இப்ப... நா என்னப்பா பண்ணுவேன்?"

துக்கத்தில் முகம் நசுங்கிப்போக பரிதாபமாய் விழித்தவள், கோர்வையாகப் பேச முடியாமல் வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக்கொண்டதோடு, சுயபச்சாதாபம் பிரும்மாண்டமாய் வளர்த்து ஆளை அமுக்கியதில், மூச்சு திணற, பயத்துடன் வாய்விட்டு அழ ஆரம்பித்தாள்.





# 23

ஓங்கிக் கதவைத் தட்டும் ஓசையில் நந்தினி விழித்துக் கொண்டாள்.

சப்தம் பலமாக இருந்திருக்க வேண்டும்.

பக்கத்தில் படுத்திருந்த ரம்யாவும் திடுக்கென்று உட்கார்ந்து திருதிருக்க, "படுத்துக்கம்மா... படுத்துத் தூங்கு..." என்று அவளை சமாதானப்படுத்தினாள்.

இப்போது கதவு மீண்டும் முரட்டுத்தனமாகத் தட்டப்பட்டது. கூடவே, "ஏய்... தூங்குமூஞ்சி, கும்பகர்ணி... ஏய்... எருமைமாடு..." என்ற காட்டுக் கத்தல் கேட்க, வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

கூடத்து விளக்கு வெளிச்சத்தில் கடிகாரம் மணி இரண்டு பத்து என்றது.

இரண்டு பத்தா!

அம்மாடி, அத்தனை நேரமா ஆகிவிட்டது!

பதினொன்றரை வரையில் விழித்துக் கொண்டிருந்தவள், என்னையும் அறியாமல் உறங்கி விட்டேனா!

எத்தனை நேரமாய் தட்டுகிறாரே!

ரொம்பக் கோபமாய் இருக்கிற மாதிரி படுகிறதே!

கடவுளே... இன்றைக்காவது குடிக்காமல் வந்திருக்க வேண்டுமே!

ஓட்டமாய் ஓடி, வராந்தா இருட்டில் நாற்காலியில் ஒரு தரம் இடறி, முட்டி வலியை லட்சியம் பண்ணாமல் நந்தினி கதவைத் திறப்பதற்குள், விடாமல் கத்திக் கொண்டே இருந்தவன் கதவு திறக்கப்பட்டதும் உடனே உள்ளே வராமல் நின்ற இடத்திலிருந்தே அவளை வெறித்தான்.

"சனியனே... தூங்குமூஞ்சி தரித்திரமே! புருஷன் வந்து கதவைத் தட்டறதுகூடத் தெரியாம, அப்படி என்னடீ தூக்கம்?"

பதில் ஏதும் பேசாமல் நந்தினி நிற்க, அவளைத் தள்ளிக்கொண்டு மோகன் உள்ளே நுழைந்தான். செருப்புகளை உதறி இங்கொன்றும் அங்கொன்றுமாக விசிறினான்.

"அரை மணியா தொண்டை தண்ணி போக கத்தறேன், நல்லா கத்தட்டும்னு உள்ளாற படுத்தா தூங்கறே! திமிர் பிடிச்ச நாய்! போனப்போவுது, போனாப் போவுதுனு நா பொறுத்துப்பொறுத்துப்போனா, தலைலியா ஏறரே? உன்னை வெக்கற எடத்துல வெச்சாதாண்டி சரிப்படும்! ஆமா... வெக்கறேன் பாரு... பல்லைப் பிடுங்கி மூலையோட மூலையா போடறேன் பாரு... என்னை யாருனு நினைச்சே? நாய்... நாய்... சம்பாரிக்கற திமிர் பிடிச்ச நாய்..."

குழறலாகப் பேசினவன், கூடத்துக்கு வந்து சோபாவில் தம்மென்று உட்கார்ந்தான்.

கதவைத் தாளிட்டுவிட்டு பின்னோடு வந்து, என்ன செய்வது என்று புரியாமல், நின்றவளைத் தன் சிவந்த விழிகளால் உற்றுப் பார்த்தான்.



"மூஞ்சியப் பாரு... செத்த எலியாட்டம்! மனசு நல்லா இருந்தா இல்லே, முகம் நல்லா இருக்கும்! உள்ளுக்குள்ள அத்தனையும் வெஷம்... அப்புறம் முகம் மட்டும் பளபளனு அழகாவா இருக்கும்! தரித்திரம்... எனக்குனு வந்து வாச்சியே... மூதேவி..."

காரணமே இல்லாமல் அவன் தொடர்ந்து வைவதைக் கேட்கையில், அத்தனை வருத்தத்திலும் ஒரு கணம் நந்தினிக்குச் சிரிக்கத் தோன்றியது.

வீட்டுக்குள் நுழையும் முன்னரே இப்படியிப்படி திட்ட வேண்டும், கலாட்டா செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொள்வாரோ? ஒத்திகை பார்த்துக் கொண்டு வருவாரோ?

அதுதான், காலடி வைத்தும் வைக்காததுமாய் இத்தனை சரளமாய் வசவு வார்த்தைகள் வெளி வருகின்றனவோ!

சிரிப்பைத் தொடர்ந்து, ச்சே-என்ன வாழ்க்கை இது என்கிற சலிப்பும், நான் என்ன பாவம் செய்தேன் இதை அனுபவிக்க என்கிற எரிச்சலும் எழ, நந்தினி பிரயத்தனப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டாள்.

எதுவுமே நடக்காத மாதிரி புருஷனை நிமிர்ந்து பார்த்தாள்.

"சாப்பிடறீங்களா? தட்டு வெக்கட்டுமா?"

இத்தனை திட்டியதற்கு இடிந்துபோவாள், அழுது மாய்மாலம் பண்ணுவாள் என்று எதிர்பார்த்த தினுசில் அவள் நடந்துகொள்ளாமல், மரக்கட்டையாய் எதிரில் நின்று 'சாப்பிட வறீங்களா?' என்றதும், என்னமோ

அவள் ஜெயித்து விட்ட மாதிரியும், தான் தோற்றுவிட்ட மாதிரியுமான ஆத்திரம் உண்டாக, சட்டென்று எதிரில் இருந்த முக்காலியை மோகன் ஓங்கி உதைத்தான்.

இரண்டு தரம் பல்டியடித்து ஓசையுடன் தரையில் உருண்டதை, நந்தினி எடுத்து ஒரு பக்கமாய் வைத்தாள்.

"கீழ்வீட்டுக்காரங்க முழிச்சிக்கப்போறாங்க... இன்னிக்குக் காலைகூட அந்தம்மா கேட்டாங்க... பொழுதோட சாப்ட்டு, பொழுதோட படுக்கற பழக்கம் உங்களுக்குக் கிடையாதானு..."

"கேக்கட்டுமேடீ! இது என் வீடு... என் இஷ்டம் போல வருவேன்... என் இஷ்டம் போல எதையும் உடைப்பேன்... அவ யாரு இதைக் கேக்க?"

"இந்த வீட்டுக்கு சொந்தக்காரங்க..."

"அதுக்காக... அதுக்காக? அவ இஷ்டப்படியெல்லாம் நா ஆடணும்னு எதிர்பாக்கிறாளா, அவ புருஷன் ஆடற மாதிரி? நா ஆம்பிளைடீ... சுத்தமான ஆம்பிளை... தெரிஞ்சுதா? வேலை பாக்கற திமிர் இருக்கிற உன்னையே அடக்கி வெச்சிருக்கேன், அப்பறம் அவ ஜம்பமா என்னண்ட பலிக்கும்? கழுதை... ராங்கிப் பிடிச்ச கழுதை! வீட்டுக்குச் சொந்தக்காரின்னா, என்ன வேணா பேசிடறதா? நாளைக்கு எனக்கெதிர்ல நின்னு இப்படி கேக்கச் சொல்லேன்... பாப்பம்..."

வேண்டுமென்றே குரலெடுத்து அவன் கத்த, கீழ் வீட்டுக்காரர்களின் காதில் விழுந்தால் வம்பு என்று அவசரமாய் இன்னொரு தரம் நந்தினி, "சாப்பிட வாங்க... பசியா இருப்பீங்க..." என்றாள்.



"என்ன சமையல் பண்ணியிருக்கே?"

"மிளகு ரசம், தேங்காய் துவையல்..."

"கொண்டு போய் சாக்கடைல கொட்டு! மனுஷன் சாப்பிடுவானா மிளகு ரசத்தை!"

"............"

"எனக்குத்தான் மிளகு ரசம் பிடிக்காதுனு உனக்குத் தெரியுமே... அப்புறம் ஏண்டீ செஞ்சே? நாம எத செஞ்சாலும் இவன் சொரணையில்லாம கொட்டிப்பான்ற அகம்பாவம்தானே?"

நந்தினி கலைந்திருந்த முடியை ஒதுக்கிவிட்டுக் கொண்டாள். தலைப்பை ஒரு தரம் அவிழ்த்து இழுத்து செருகிக்கொண்டாள்.

நேற்று சாம்பார் பண்ணி வைத்திருந்ததற்கு, 'தினமும் சாம்பார் என்னடி, சாம்பார்? உங்கப்பன் வீட்டு சொத்தா? பருப்பு என்ன வெலை விக்குது தெரியுமா? அலைஞ்சி திரிஞ்சி வர்ற புருஷனுக்கு வாய்க்கு ருசியா மிளகு, சீரகம் தட்டிப் போட்டு ரசத்தை வெப்போம், காரமா ஏதாவது துவையல் அரைச்சி வெப்போம்ன்ற அக்கறையில்லாம, என்ன எழவு சமையல்டீ இது?' என்று கத்தினீர்களே, நினைவு இல்லையா? என்று கேட்டால், எனக்காடி ஞாபகமறதினு சொல்றே?' என்று வாயிலேயே போடுவான் என்பதால், நந்தினி அடி உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றாள்.

"நிக்கறதைப் பாரு, செக்கு உலக்கையாட்டமா! உன் மூஞ்சியப் பாத்தாலே குமட்டிக்கிட்டு வருது! ஏண்டாப்பா வீட்டுக்கு வரோம்னு இருக்கு... பஞ்சத்துல

அடிபட்ட பரதேசி மாதிரி மூஞ்சியும், முகரக்கட்டையும்...! சனியன் உன் வத்தல் மூஞ்சியப் பாக்க வேணாம்னுதானே வீட்டுக்கு எவ்ளோ லேட்டா வரமுடியுமோ, அவ்ளோ தள்ளி வரேன்! உள்ளாரப் போய் தொலையேன்- என்னத்துக்காக விறைச்சிப்போன பொணமாட்டம் இங்கயே நிக்கறே..."

எல்லாம் என் தலையெழுத்து என்கிற பெரு மூச்சோடு, பதில் பேசாமல் உள்ளே போகத் திரும்பிய வளை, "ஏய்..." என்று அழைத்து நிறுத்தினான்.

"ஏனோதானோனு ஆறிப்போன ரசத்தை எடுத்து வெக்காத- சூடு பண்ணு- அப்படியே எண்ணெய் வெச்சி நாலு அப்பளம், வத்தலைப் பொறிச்சி வை... என்ன?"

சமையல்கட்டுக்குள் வந்து விளக்கைப் போட்ட நந்தினிக்கு, முட்டிக்கொண்டு அழவேண்டும் போல ஆத்திரம் ஆத்திரமாக இருந்தது.

தூங்கிக்கொண்டிருந்தவளை எழுப்பி, ராத்திரி இரண்டரை மணிக்கு அப்பளம் வத்தல் பொறிக்க ஆணை...

எந்த வீட்டில் நடக்கும் இந்த அக்கிரமம்?

"அந்த ஆளு எப்ப வேணா வரட்டும்னு நீ இழுத்துப்போத்திகிட்டுப் படுத்திட வேண்டியதுதானே?"

கேள்வி கேட்ட வேணியைத் தரதரவென்று இழுத்து வந்து, 'இந்த மனுஷனை நீ சமாளி!' என்று சவால்விட வேண்டும்போல் எரிச்சல் மண்டியது.

கலங்கிவிட்ட கண்களை இரண்டுதரம் சிமிட்டி, ஊறிவிட்ட நீரைக் கலைத்துவிட்டாள்.



அடுப்பில் சட்டியை வைத்து கொஞ்சமாக எண்ணெயை ஊற்றி, அது காய்ந்ததும் அப்பளம், வத்தலைப் பொறித்து எடுத்தாள்.

ரசத்தைக் கொதிக்கப் பண்ணி, எல்லாவற்றையும் டேபிள் மேல் வைத்துவிட்டு கூடத்துக்கு வந்தபோது, சோபாவிலேயே காலை நீட்டிப் படுத்து மோகன் உறங்கி விட்டது புரிந்தது.

எழுப்பலாமா வேண்டாமா? ஒரு வழியாய் அடங்கினார் என்று விட்டுவிடலாமா?

வேண்டாம். அப்புறம், கொஞ்ச நேரம் கழித்து விழித்துக்கொண்டால், 'பட்டினி போட்டு என்னை சாக அடிக்க எண்ணமாடீ?' என்று அதற்கு வேறு கத்தலாம்.

"என்னங்க?"

"............"

"என்னங்க?"

"ம்?"

"சாப்பிட வாங்க..."

"வேணாம்."

"ரசத்தை சூடு பண்ணி, அப்பளம் பொறிச்சி வெச்சிருக்கேன். வாங்க..."

"என்னடீ, தொணதொணனு..."

எழுந்து சாப்பாட்டு மேஜை முன் வந்து உட்கார்ந்தவனுக்கு நந்தினி பரிமாறினாள்.

சோற்றில் கை வைத்தவன் முகத்தைச் சுளித்தான்.

"இந்த ஆறிப்போன சோத்தைப் போடத்தான் அத்தனை உபசாரமா?"

"ரசம் சூடா இருக்குங்க..."

அப்பளம், வத்தலை வைத்து ரசத்தை அவள் ஊற்றுவதற்கும், அப்பளத்தை எடுக்க மோகன் கை நீட்டியதற்கும் சரியாக இருந்தது. கொதிக்கும் ரசம் புறங்கையைப் பதம் பார்த்து விட...

மோகன் 'ஹா' என்று கத்தினான்.

தட்டைத் தள்ளிவிட்டான்.

"கொதிக்கற ரசத்தை கையிலயா ஊத்தறே? அத்தனை கொழுப்பாடி உனக்கு? உன்னை... உன்னை..."

அலறியவன் ரசப் பாத்திரத்தை எடுத்து, சட்டென்று எதிரில் நின்றவள் மேல் விசிறி அடித்தான்.

"ஐயோ..." என்று அவள் வலியில் பதறுவதை லட்சியம் பண்ணாமல் கையை உதறிக்கொண்டு கூடத்துக்குப் போனான்.

ஒரு நிமிடம் என்ன ஏது என்று புரியாமல் திகைத்து, முகத்தில், கழுத்தில், வயிற்றில்... கொதிக்கும் ரசம் விழுந்து எழுப்பிய எரிச்சல் மெள்ளமெள்ள அதிகமாக, கவிழ்ந்து உட்கார்ந்து அவள் அழ ஆரம்பித்த போது, புருஷனின், "அங்க நின்னிட்டு என்ன வேடிக்கை பாக்கறே... தூங்குமூஞ்சி கொரங்கே... இங்க என்ன வித்தையா காட்டறாங்க? போய் 'மக்'குல தண்ணி எடுத்திட்டு வா..." என்ற அதட்டல் கேட்டது.



யாரை அதட்டுகிறார்?

ரம்யாவையா?

திடுமென நந்தினிக்கு, தான் விழித்துக்கொண்ட போது மகளும் விழித்துக்கொண்டது நினைவுக்கு வந்தது.

அந்தக் குழந்தையை இந்த அர்த்தராத்திரியில் எதற்காக வேலை வாங்குகிறார்?

அவசரமாய் எழுந்து, குழாயைத் திறந்து மேலே கொட்டியிருந்த ரசத்தை மேலாகத் துடைத்து, ஒரு பாத்திரத்தில் ஜலம் பிடித்துக்கொண்டு கூடத்துக்குச் சென்றாள்.

இவள் நீட்டிய பாத்திரத்தை வாங்காமல் மோகன் மீண்டும் கதவோரமாய் நின்றிருந்த மகளைப் பார்த்து உறுமினான்.

"சொல்றது காதுல விழலியா? செவிட்டு மூதேவி... போய் 'மக்' குல தண்ணி எடுத்திட்டு வானு சொல்றேன். இல்லே?"

"அந்தக் குழந்தைய ஏன் வேலை வாங்கறீ..."

நந்தினி முடிக்கும் முன் பளிச்சென்று கன்னத்தில் அறை ஒன்று விழுந்தது.

"உள்ளாரப் போறியா, இல்ல இன்னும் தரட்டுமா? அதிகப்பிரசங்கி நாய்..."

மனைவியிடம் உறுமியவன் மகள் பக்கம் திரும்ப, அப்பாவின் கோபம் புரிந்தவளாய் ரம்யா கதவு மறைவிலிருந்து வெளிப்பட்டாள்.

ஓடிப்போய் பாத்ரூமிலிருந்து ஒரு 'மக்' நிறைய தண்ணீர் கொண்டு வந்து நீட்டினாள். கை தடதட வென்று அதிக பயத்தில் நடுங்கியதில் தண்ணீர் மோகனின் பாண்ட் மேல் சிந்த...

நறுக்கென்று குழந்தையின் தலையில் அவன் குட்டினான்.

"பிசாசே... ஒரு வேலையை ஒழுங்கா செய்யத் தெரியுதா பாரு... எழவெடுத்த சனியன்... கொட்டிக்கச் சொல்லு! தட்டு தட்டா முழுங்க ரெடி..."

கோபம் அடங்காமல் கத்தினவன், என்ன செய் கிறோம் என்கிற நிதானத்தை இழந்து, பாக்கெட்டி லிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தான்.

பயத்தில் உறைந்துபோய் அழக்கூடத் தெரியாமல் நின்றிருந்த மகளை எட்டி இழுந்தான்.

நெருப்பு கனன்றுகொண்டிருந்த சிகரெட்டை அவள் முன் நீட்டி, "உங்கம்மா கொதிக்கற ரசத்தை என் கைல ஊத்தினப்ப எனக்கு எப்படி எரிஞ்சிச்சுனு உனக்குப் புரிய வெக்கட்டுமா?" என்று கண்கள் கொடூரமான எதிர்பார்ப்பில் மின்ன, கேட்டுக் குனிய,

ரம்யா, "அ...ம்மா..." என்று வீறிட்டாள்.

பின், நின்ற இடத்திலேயே மூத்திரம் பெய்து, "அ-அ-அம்மா நா... நா..." என்று அலற, நந்தினி பாய்ந்து சென்று பெண்ணை அணைத்துக்கொள்ள, குழந்தையின் பிஞ்சுக் கையை ஸ்பர்சிக்க இருந்த சிகரெட்டின் வாய் அவள் இடுப்பில் முத்தத்தைப் பதிக்க... இன்னும்... இன்னும்...



மறுநாள் பொழுது விடிகையில் ரம்யாவுக்கு நல்ல ஜுரம் கண்டிருந்தது என்பதோடு, பேசும்போது குழந்தை திக்க ஆரம்பித்ததும் அன்றைக்குத்தான்.



## 24

டெலிபோன் ஆபரேட்டரிடம் ஜானாவுக்குத் தொடர்புகொடுக்கச் சொல்லி, காத்திருந்த நிமிஷத்தில் நந்தினி நகத்தைக் கடித்தாள். நெற்றியில் முளைத்த வேர்வைத் துளிகளைத் தலைப்பில் துடைத்துக்கொண்டாள். சோபாவில் உட்கார்ந்து இவள் யாருடன் என்ன பேசுகிறாள் என்று உன்னிப்பாக கவனித்த எதிர்வீட்டம்மாளை ஓரக்கண் பார்வை பார்த்தாள்.

"ஹலோ..."

"ஜானா? நந்து பேசறேன்..."

"ஹேய், நந்து! எங்கேயிருந்து போன் பண்றே? ஏன் ஆபீஸுக்கு வரல?"

"ஜானா... வந்து..."

"என்னப்பா?"

"வந்து... உன்னால இங்க வர முடியுமா, ஜானா?"

"எங்கப்பா, உன் வீட்டுக்கா?"

“ம்...”

“எப்ப...?”

“இப்ப...”

“இப்பவா? வேலை தலைக்கு மேல இருக்கு... நீயும் வரலை... திடும்னு வான்னா எப்படிப்பா? எனிதிங் ராங், நந்து?”

நந்தினி எதிர்வீட்டாம்மாளை ஒரு தரம் அழுந்தப் பாத்தாள்... குரலை இன்னும் தழையவிட்டாள்.

“ரம்யாவுக்கு உடம்பு சரியில்லே, ஜானா...”

“என்னாச்சு, ஜுரமா?”

“ம்...”

“டாக்டர்கிட்ட காட்டினியா? எவ்ளோ டெம்பரேச்சர்?”

“என்கிட்ட தர்மாமீட்டர் இல்லே... நீ வந்து டாக்டர் கிட்ட கூட்டிக்கிட்டுப் போனா தேவலைனு நினைக்கறேன்...”

“வழக்கமா பக்கத்துத் தெருல ஒரு டாக்டர்கிட்ட போவியே, நந்து?”

“அவர் வேணாம்பா...”

சினேகிதியின் பேச்சு புதிராக இருக்க, ஜானா கொஞ்சம் யோசித்தாள்.

ஆபீஸுக்குப் போன் பண்ணி உடனே வா என்னும் ரகம் நந்து இல்லை.



பழக்கமான டாக்டரிடம் போக வேண்டாம் என்கிறாள்...

ஸோ? அதனால், நிச்சயம் ஏதோ பெரிய விஷயமாகத்தான் இருக்கவேண்டும்...

“ஓகே... சாக்கோகிட்ட செக்‌ஷனைப் பாத்துக்கச் சொல்லிட்டு நா வரேன்... நீ ரெடியா இரு...”

**சொ**ன்னபடி இருபதாம் நிமிடம் ஆட்டோவில் வந்து இறங்கி, அந்த ஆட்டோவையே காத்திருக்கச் சொல்லிவிட்டு மாடிக்கு வந்தாள்.

கதவைத் திறந்ததும் அடக்கமாட்டாமல் நந்தினியின் உதடுகள் கோணி, கண்கள் கலங்க முற்பட...

அவளின் சிவந்து வீங்கின முகத்தைப் பார்த்த ஜானா பரிதவித்தாள்.

“என்னப்பா? ஹேய்... எதுக்காகக் கலங்கறே, நந்து?”

அவள் கையைப் பற்றி நந்தினி உள்ளே அழைத்து வந்தாள்.

“குழந்தை எங்க?”

“பெட்ரூம்ல...”

ஜானா அறைக்குள் நுழைந்து உறங்கிக்கொண்டிருந்த பெண்ணிடம் குனிந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

ஜுரம்தான்... நூற்றி, நூற்றி ஒன்று இருக்கலாம். இதற்கா இத்தனை பதட்டம்?

நினைத்ததைக் கேட்க அவள் வாயைத் திறக்குமுன், நந்தினி மகளின் கையைப் புரட்டிக் காண்பித்தாள்.

தீயினால் சுட்ட மாதிரி மூன்று இடங்களில் தோல் சிவந்து, நீர் கோத்திருந்தது.

என்னது இது என்று கேட்கும் பார்வையுடன் ஜானா நிமிர, நந்தினி திரும்பி, போர்த்தியிருந்த தலைப்பைத் தளர விட்டாள்.

இடுப்பு, கழுத்து, முகத்துப் பகுதியில் இங்கும் அங்குமாய் சிவந்த தீப்புண்கள்.

"என்னாச்சுப்பா?"

நந்தினி உதட்டை ஈரப்படுத்திக்கொண்டாள். தலைப்பு நுனியைத் திருகிக்கொண்டே, சன்னமாக அழுகையினூடே, முதல் நாள் நடந்ததை மெதுவாக விவரித்தாள்.

அத்தனையும் துண்டுதுண்டாய் கூறிவிட்டு, "இத்தனை வருஷங்களில் அவர் என்னென்னமோ பேசியிருக்கார். எப்படியெப்படியோ கேவலமா நடந்திட்டிருக்கார். ஆனா, நேத்து இந்தப் பச்சைக் குழந்தையை சிகரெட்டால சுட்டப்ப, அவர் என் கண்ணுக்கு ஒரு மனுஷனாவேத் தெரியல! இப்படிக் கூடவா கொடூரமா ஒரு பெத்தவர் நடந்துப்பார்? கண்ணால பாத்த என்னாலேயே நம்ப முடியல... கதிகலங்கிப்போன குழந்தை, நின்ன எடத்துலேயே யூ... யூரின் போயிட்டா, ஜானா... வேணாம்பா, வேணாம்பானு கத்தியிருக்கா, பாரு... என் தேகமே ஆடித்தான் போயிடுச்சு! ராத்திரி பூரா மடில போட்டுகிட்டு கூடத்திலேயே உக்கார்ந்திருந்தேன். புலம்பலும் அழுகையும் அடங்கவேயில்லை...



விடிஞ்சா சரியாயிடும்னு நினைச்சேன். இல்லே மோசமாயிட்டது... ஜுரத்தோட உளறலும் இருக்கு... நா... நா என்ன பண்ணப்போறேன், ஜானா?" என்ற போது அந்தப் பரிதாபம் அடிவயிற்றில் முடிச்சுக்களைப் போட, ஜானா அவளைத் தன்னோடு சேர்த்துத் தழுவிக் கொண்டாள்.

இரண்டு நிமிஷங்கள் மௌனமாக நகர்ந்தன.

"ராஜா நர்ஸரிக்குப் போயிட்டானா? மோகன் எங்க?"

"காலைல எழுந்து, ஒரு வார்த்தை பேசல... நா காபி தராததுக்குக்கூட ஒண்ணும் சொல்லல... ஏழு மணிக்கெல்லாம் குளிச்சு ட்ரெஸ் பண்ணிகிட்டு, நீங்கள்ளாம் இருந்தா என்ன, செத்தா என்னன்ற மாதிரி அலட்சியமா ஒரு பார்வை பாத்திட்டு வெளியே போயிட்டார்..."

"ம்ம்... சரி, சரி... அந்த மனுஷன் பேச்சை விடு! ஏன், உன் டாக்டர் வேணாங்கறே?"

"குழந்தைய சிகரெட்டால சுட்ட விஷயம் அக்கம் பக்கத்துக்குத் தெரிய வேணாம்னுதான்..."

ஜானா கண்களை இடுக்கிக்கொண்டாள்.

"உன்மேல ரசத்தைக் கொட்டினது மட்டும் தெரியலாமா?"

"......................."

ஒருவித இயலாமையுடன் நந்தினி விழித்துக் கொண்டு நிற்க, ஜானா ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஐ ம் ஸாரி... நடக்க வேண்டியதைக் கவனிக்காம கோவத்துல நாம் பாட்டுக்கு ஏதோ பேசிட்டிருக்கேன்... கிளம்பு... ரகுவோட கஸின் நுங்கம்பாக்கத்துல க்ளினிக் வெச்சிருக்கார், போயிட்டு வந்துடலாம்..."

கிளம்பினார்கள்.

ஆட்டோவில் போகும்போது, "கு..குளிருதும்மா..." என்று ரம்யா முனக, கையோடு கொண்டுவந்திருந்த போர்வையால் மகளை நந்தினி நன்கு போர்த்தி அணைத்துக்கொண்டாள்.

டாக்டரிடம் ஜானா எதையும் மறைக்கவில்லை.

"இது என் ஃப்ரெண்ட், சம்பத்... என்னோட மாருதி ட்ராவல்ஸ்ல வேலைபாக்கறா... இது ரம்யா... இவ பொண் நேத்து ராத்திரி இவ ஹஸ்பெண்ட் கொஞ்சம் ஓவரா குடிச்சிருப்பார் போல இருக்கு... கொதிக்கிற ரசத்தை இவ மேல எறிஞ்சும் கோபம் அடங்காம சிகரெட்டால, ஒரு பாவமும் அறியாத குழந்தையையும், குறுக்க வந்த இவளையும் சுட்டிருக்கார், குழந்தை பயந்திருக்கணும்... காலைல எழுந்ததுலேந்து நல்ல ஜுரம்..."

தர்மாமீட்டர் வைத்து ஜுரத்தை அளந்து, இதர பரிசோதனைகளைச் செய்கையில், டாக்டர் ரம்யாவிடம் பேச்சுக்கொடுத்தார்.

"உன் பேர் என்ன, பாப்பா?"

ரம்யா அம்மாவை ஏறிட்டாள்.

"ர..ர..ரம்யா..."



"ரம்யாவா? பேரு ஜோரா இருக்கே... படிக்கறியா?"

"ம்..."

"எத்தனாவது?"

"ஸெ...ஸெகண்ட் க்...க்...க்ளாஸ்..."

"வெரிகுட்... இங்க வலிக்குதா?"

"இ...இ...இல்லே..."

ரம்யா, நந்தினியின் காயங்களுக்கு மருந்து போட்டு, மருந்துக்கான ப்ரிஸ்க்ரிப்ஷனை எழுதித் தந்து, "குழந்தையோட ஒரு நிமிஷம் வெளில உக்காருங்க..." என்று அவர்களை அனுப்பிவிட்டு, ஜானாவிடம் தனிமையில் கால் மணிக்கும் மேலாக ஏதோ பேசின பிறகு, டாக்டர் வெளியில் வந்து, "தைரியமா இருங்க, மிஸஸ் நந்தினி! குழந்தைக்கு சாதாரண ஜுரம்தான். ஷி வில் பீ ஒகே!" என்று விடைகொடுக்க, டாக்ஸி ஒன்றைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

வரும் வழியிலேயே வாங்கிக்கொண்டுவந்த மருந்தையும், கொஞ்சம் பாலையும் ரம்யாவுக்கும் கொடுத்து, சில நிமிஷங்களில் அவள் உறங்கிப்போனதும், சினேகிதிகள் இருவரும் கூடத்துக்கு வந்தார்கள்.

"தோசை சாப்பிடறியா, ஜானா? மாவு இருக்கு..."

"நீ உக்காரு... நாம ரெண்டு பேருக்கும் நா வாக்கறேன்..."

வேண்டாம் என்று சொன்னால் ஜானா கேட்க மாட்டாள் என்பதால், மாவு, எண்ணெயை எடுத்துக்

கொடுத்துவிட்டு சமையல்கட்டிலேயே ஒரு பக்கமாய் சுவரில் சாய்ந்தபடி நந்தினி உட்கார்ந்து கொண்டாள்.

கல்லை அடுப்பில் போட்டு, அது காய்ந்ததும் துளி எண்ணையைத் தீற்றி, கொஞ்சமாக மாவை விட்டு குண் டாக முதல் தோசையை வார்த்த பின்னர், அடுத்ததை ஜானா சுழற்றி இழுத்தாள்.

"டாக்டர் என்னண்ட உள்ள தனியா பேசினப்ப என்ன சொன்னார்னு நீ கேக்கவே இல்லியே, நந்து?"

"..............."

"மோகனோட குணத்தைப்பத்தி, உன்னைப் பத்தி கேள்வி கேட்டார், பதில் சொன்னேன். அப்பறம் ரம்யா எப்பவும் இப்படித் திக்கித் திக்கித்தான் பேசுவாளானு கேட்டார்..."

நந்தினி சரக்கென்று நிமிர்ந்தாள்.

காலையிலிருந்தே, இல்லயில்லை, நேற்று இரவு அந்தக் கூத்து நடந்ததிலிருந்தே ரம்யா திக்கிப் பேசுவதைக் கவனித்திருந்தாலும், அதைப்பற்றி டாக்டரிடம் எதுவும் கேட்க, எப்படி மறந்துபோனேன்!

"இல்லப்பா, அவ நல்லா பேசுவா... உனக்குத்தான் தெரியுமே! என்னமோ தெரியலை, இன்னிக்குத்தான்... ஜூர வேகத்துல குழந்தை பலவீனமா இருக்கறப்போ பேசறதைப் போயி திக்குவாய்னா..."

அடுப்பில் இருந்த தோசையை எடுத்துவிட்டு, இன்னொன்றை ஊற்றினவள், இவளைப் பார்க்காம லேயே பேசினாள்.



"ரம்யா, இன்னும் படுக்கைல ஒண்ணுக்குப் போனதையும்கூட சொன்னேன், நந்து... அந்த ஹாபிட், அப்பறம் இப்ப திக்கிப் பேசறது எல்லாமே அடிமனசுல எக்கச் சக்கமா பயம் இருந்தா வரும்னு டாக்டர் சொல்றார்..."

"..............."

நந்தினி பதில் பேசாமல் இருக்க, ஜானா திரும்பி அவளைப் பார்க்க நின்றுகொண்டாள்.

"டாக்டர் என்ன சொல்றார்னு புரியுதா, நந்து? ரம்யா சைகலாஜிகலா அடிபட்டுப் போயிருக்கானு சொல்றார். டூ யூ அண்டர்ஸ்டாண்ட் தட்?"

"..............."

"மனோதத்துவ ரீதியா இந்த மாதிரி கேஸ்களை அணுகணும்னு டாக்டர் சொல்றார்... நிறைய அன்பு, கவனிப்பு, அனுசரணை, கரிசனத்தோட நடந்துகிட்டா, இந்த ரெண்டு பழக்கத்தையுமே நிறுத்திடறது சாத்தியம் தானாம், அப்படி இல்லேன்னா, பெரியவளாக ஆக, உள்மனசோட பாதிப்பு அதிகமாகி, வேற பிரச்சினை களை உண்டாக்கலாம்னும் நினைக்கிறார்... 'உங்க சினேகிதிகிட்ட விவரமா எடுத்துச் சொல்லுங்க... இந்தப் பிரச்சினையை முளையிலேயே கிள்ளறது முக்கியம், வளர விட்டா, குழந்தை பெரியவளானதும் கஷ்டப்படுவானு சொல்லுங்க'னு சொன்னார். சொல்லிட்டேன். நல்லா கேட்டுகிட்டே, இல்லே?"

வார்த்துவிட்ட தோசைகளையும், மிளகாய்த்தூள், எண்ணையையும் ஜானா டேபிள் மேல் வைத்தாள்.

"எழுந்திரு... சாப்பிட வா..."

நந்தினி வேண்டாம் என்று தலையசைத்தாள்.

"பசிக்கலப்பா... எனக்கு காபி மட்டும் போதும்."

"ரோஷத்தை சாப்பாடு மேல காட்டாத, எழுந்து வந்து ஒண்ணாவது எடுத்துக்க..."

"வேணாம், ஜானா..."

"இப்ப எழுந்து வரப்போறியா, இல்லியா?"

குரலை உயர்த்தி ஜானா கேட்டதும், முழங்காலில் முகத்தைப் பதித்துக்கொண்டு நந்தினி அழ ஆரம்பிக்க, கையிலிருந்த கரண்டியைத் தொட்டியில் போட்டு அடுப்பை அணைத்துவிட்டு ஜானா நிமிர்ந்த போது, அவள் முகத்தில் கோபம் எக்கச்சக்கத்துக்கு பளபளத்தது.

"ஏதாவது சொன்னா, மகா கோழையாட்டம் அழ ஆரம்பிச்சிடு... வரவர இதே உனக்கு வேலையா போச்சுப்பா... 'நா என்ன பண்ணுவேன்? நா வாழறதுல அர்த்தம் என்ன?'னு முதுகெலும்பு இல்லாத ஜீவன் மாதிரி சதா இதே பல்லவி... செல்ஃப் ஸிம்பதி உனக்குள்ள பூதமா வளர்ந்திடுச்சு...! அதான், யோசிக்க மறந்து போய், தெளிவா நடந்துக்கத் தெரியாம, குழம்பி, கோழையா அழற... நிமிருப்பா... கண்ணைத் துடைச்சுகிட்டு சென்ஸிபிளா என்ன செய்யணும்னு யோசிக்கப் போறியா, இல்லியா?"

இவள் கத்தலுக்குப் பயப்படாமல் நந்தினி தொடர்ந்து அழ, ஜானா படபடத்தாள்.

"பயந்துபயந்து துக்கத்தை அடக்கி அடக்கி ஏற்கனவே வயத்துல அல்சர் வந்து, உடம்பு அரை



உடம்பாயிடுத்து, இன்னும் உனக்கு புத்தி வரலை... ஸாடிஸ்ட் புருஷனைத் தலைல தூக்கி வெச்சுகிட்டு கூத்தாடினதுக்கு சரியான பலன் கிடைச்சிருக்கு அனுபவி! உனக்கு தனக்காகவும் தெரியாது. சொன்னாலும் புரியாது... உன் மனுஷங்களைக் கறவை மாடா நினைச்சு அந்தாளு மட்டமா நடத்தறதோ, தனக்கொரு நீதி உனக்கொரு நீதினு அடாவடி செய்யறதோ, உன்னை ஒரு மனுஷியா நினைச்சு உன் விருப்பு வெறுப்புக்கு மதிப்பு கொடுக்காததோ, ரெண்டாயிரம் ரூபா சம்பாதிக்கறவளுக்கு சுயமா நாலணா எடுத்துச் செலவு பண்ண உரிமை குடுக்காததோ இன்னிவரைக்கும் உன்னை நிஜமா பாதிக்கலை! பாதிச்சிருந்தா, நீ இப்படிப் புழுவா, தன்மானம் இல்லாம கால்ல மிதிபட சம்மதிக்க மாட்ட... நீதான் தேஞ்சு, அழிஞ்சு மண் மேடாயிட்டே... ஒழி எக்கேடு கெட்டுப் போ! உன்னோட பேசிப்பேசி எங்க தொண்டை தண்ணி வத்திப்போனதுதான் மிச்சம்! ஆனா, உங்களுக்குப் பொண்ணா பிறந்த காரணத்தால இப்ப ரம்யாவையும், நீயும் உன் புருஷனுமா பலி வாங்கறீங்க பாரு... இது சத்தியமா அக்ரமம், அநியாயம்! முதல்ல ரம்யா, அப்பறம் ராஜாவா? தெரியாமத்தான் கேக்கறேன்ப்பா, உங்களுக்கெல்லாம் குழந்தை குட்டி எதுக்குப்பா?"

உணர்ச்சிவசப்பட்டு பேசிக்கொண்டே போன ஜானா நிறுத்தினாள். பானையிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டாள்.

நந்தினியின் அருகில் வந்து தோளில் கை வைத்து, "ஐ ம் ஸாரி, நந்து... நல்ல குழந்தை வீணாயிடப் போறாளேன்ற ஆதங்கத்துல அளவுக்கு மீறி

பேசிட்டேன்... என்னை மன்னிச்சிடு ஆனா, நீ கொஞ்சம் நிதானமா யோசிச்சா தேவலை... உனக்காக இல்லாட்டாலும் உன் பொண்ணுக்காகவாவது... ப்ளீஸ்ப்பா... இதுக்கும் மேல நா என்ன சொல்றது... அவ்ளோதான்! நா வரேன்..." என்றவள் கூடத்திலிருந்த பையை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேற,

ரொம்ப நேரத்துக்கு அவள் சற்றுமுன் பேசின வார்த்தைகள் காதில், நெஞ்சில் அதிர, நந்தினி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.



## 25

"எங்கம்மா, அப்பா திருச்சிலே பிறந்து வளந்தவங்க, படிச்சு வேலை பாக்கற பொண் குடும்பத்துக்கு லாயக்கில்லாதவனு நினைக்கிறவங்க... அதனால, அவங்ககிட்ட நீ பக்குவமா நடந்துக்கணும்..."

"ம்..."

"ம்-னு சொன்னா பத்தாது, வாயத் திறந்து சரிங்கனு சொல்லணும்."

"உங்க விருப்பம் போல் நடந்துக்கறேங்க..."

"என் விருப்பம் மட்டுமில்லை, எங்கம்மா, அப்பா... அக்கா... எல்லார் மனசும் கோணாம நடந்துக்கணும்! ஆமா, எங்கக்காவுக்கு ஏன் அத்தனை மட்டமான



சேலையா வாங்கிக்குடுத்திருக்காரு உங்க அப்பா? அத உடுத்திக்கவேயில்லே தெரியுமா? நாளைக்கே வேற நல்லதா மாத்தித் தந்திட சொல்லு... என்ன?"

"ஏய்... இங்க வா... உங்க அப்பா வீட்டுல இருக்கற 'காஸ்' அடுப்பு நீ வாங்கினதா?"

"அது வந்து..."

"வழவழா கொழகொழானு இழுத்தா எனக்குப் பிடிக்காது... கேட்ட கேள்விக்கு பதில் வேணும்."

"ஆமாங்க-போன ரெண்டாம் வருஷம் ப்ரமோஷன் வந்தப்போ நான்தான் அம்மா கஷ்டப்படறாங்களேனு வாங்கி வெச்சேன்."

"ம்ம்... இதுவரைக்கும் வேற என்னென்ன உன் சம்பாத்தியத்துலேந்து வாங்கித்தந்திருக்கே?"

"பிரமாதமா ஒண்ணும் இல்லீங்க... ஸீலிங் ஃபேன், மிக்ஸி, இதான்... ஏன், ஏன் கேக்கறீங்க?"

"அ? அவசியம் சொல்லித்தான் ஆகணுமோ?"

"இல்லை... தயவு பண்ணி எதையும் எங்கம்மாகிட்ட கேட்டுடாதீ-"

"வாய மூடு... அதிகப்பிரசங்கி... நா எது பேசணும், கூடாதுனு சொல்ற அளவுக்கு நீ பெரிய மனுஷியாயிட்டியா? வாங்கின சம்பளம் பூராவையும் ஒழுங்கா பாங்குல போட்டு வெக்கத் துப்பில்லை, பெரிசா பேச வந்திட்டா! உங்கப்பனைத்தான் சொல்லு... மக சம்பாத்தியத்துல வீடு பூரா சாமான்களை வாங்கி நிரப்பிக்கிட்டு இருக்காரே- தத்... வெக்கங்கெட்ட மனுஷன்... ஆமா,

அத்தனையும் இங்க வரணும்னு சொல்லத்தான் போறேன்... நீ வாய மூடிக்கிட்டு உள்ளே போ... உன் சம்பாதிக்கிற திமிரை என்னண்ட காட்டாதே..."

"ஏய்... என்ன பண்ற அங்க?"

"கூட்டுக்குத் தேங்கா துருவிக்கிட்டிருந்தேன்... என்னங்க?"

"கூப்பிட்டு அரைமணியாவது... இப்பத்தான் ஆடி அசைஞ்சுக்கிட்டு வர முடிஞ்சிதாக்கும்..."

"அதில்லீங்க தேங்கா துருவிக்..."

"போதும் ராமாயணம்... இங்க பாரு... இதென்ன வெந்நீரா இல்ல பச்சத்தண்ணீரா? புருஷனுக்கு வெந்நீர் விளாவி வெக்கக் கூட முடியாம அப்படி என்ன கிழிக்கற..."

"இல்லீங்க... நல்ல சூடாதான் வெச்சேன்... கால்மணி ஆனதுல..."

"ஏதாவது சொன்னா டக்குனு பதில் பேசிடு... திமிர் பிடிச்ச ராஸ்கல்... ஜில்லுனு தண்ணிய ஊத்திக்கிட்டு ஜன்னி பொறந்து நா செத்தா உனக்கு சந்தோஷம் தானே?"

"என்னங்க..."

"என்ன?"

"வந்து... உடம்பு ரொம்ப தள்ளாமையா இருக்குங்க... கொஞ்சம் மார்க்கெட் வரைக்கும் போயி நல்லதா ரெண்டு காய்... ஏதாவது..."



"என்னது... என்னது! மார்க்கெட்டுக்குப் போயி காய்? நா? உன் மனசுல என்னடி நினைச்சிருக்கே? எல்லார் வீட்டு இளிச்சவாயங்க மாதிரி நானும்னு நினைச்சிடாதே! வேலைக்குப் போய் வந்துகிட்டு ஒழுங்கா மத்த பொறுப்புங்களையும் கவனிச்சுக்கறதுனா செய்; இல்லாட்டி வாலை சுருட்டிகிட்டுப் பொம்பளையா லட்சணமா வீட்டோட இரு! உன் சம்பாதிக்கற திமிரை என்னண்ட காட்டாத... ஆமா..."

"ஏய், வா இங்க... என்ன சமையல் சமைச்சிருக்க, உப்பும் இல்லாம, உரப்பும் இல்லாம! நாம எதப் பண்ணிப் போட்டாலும் திங்கற சொரனை கெட்ட ஜன்மம்ன்ற அலட்சியம்தானே?"

"நேத்து, இனிமே காரமே வேணாம்... மூல உபத்திரவம் அதிகமா இருக்குனு சொன்னீங்களேனுதாங்க..."

"போடு வாய்ல, மூதேவி எதித்தா பேசற? போடு... பேசுவியா... இனிமே பதில் பேசுவியா..."

"என்னங்க..."

"என்னடி நிம்மதியா பேப்பர் படிக்க விடாம தொண தொணன்னு..."

"இல்லீங்க... வர்ற மாசம் எங்கப்பாக்கு அறுபது வயசு பூர்த்தியாகுது..."

"அதனால?"

"பிள்ளை இல்லாத அவங்களுக்கு நாமளே தாலி எடுத்து, புடவை, வேட்டி எடுத்து, முன்னால நின்னு நடத்திடலாம்னு..."

"வேற வேல இல்ல... கிழத்துக்கு அறுவதாகியும் ஆசை விடலியா? உன்னைக் கிளப்பிவிட்டுட்டு, வெக்க மில்லாம பெண்கிட்டயிருந்து சாமான்கள் வாங்கி அடுக்கிடலாம்னு கனவு காணறாரா? நடக்காதுடி... நா ஏமாந்த சோணகிரி இல்ல! தெரிஞ்சுக்க..."

"ஏய்... ஆபீஸுக்குக் கிளம்பிட்டியா? வா... இங்க..."

"என்னங்க?"

"வர்ற ஆவணி மாசம் எங்க அம்மாவுக்கு அறுபது வயசாகுது... ஊருக்குப் போயிருந்தப்ப அக்கா சொன்னாங்க... அவங்க பங்குக்கு வேஷ்டியும் பட்டுப்புடவையும் வாங்கப்போறாங்களாம்... அம்மாக்கு முத்து வளையல் செஞ்சிக்கணும்னு ரொம்ப விருப்பம்... இப்ப போட்டுக் காட்டி அப்புறம் எப்பத்தான் போட்டுக்குவாங்க? நீ என்ன பண்றே. இன்னிக்கு ஆபீஸுக்குப் போனதும் ஃப்ரிஜ் வாங்கணும்னு ஐயாயிரம் ரூபா லோனுக்கு அப்ளை பண்ணு... அது சேங்ஷன் ஆயி வந்தப்புறம் வளையலை ஆர்டர் கொடுத்தம்னா, சமயத்துல ஊருக்கு எடுத்திட்டுப் போக சரியா இருக்கும்- என்ன?"

"போன வருஷம் எங்கப்பாவோட அறுபது சமயத்துல 'கிழத்துக்கு என்ன ஆசை'னு கேலி பண்ணீங்களே, இப்ப உங்க அம்மா மட்டும் குமரியா?"

"எ...ன்...ன..து! எதிர்த்தா பேசறே? துப்பு கெட்ட முண்டம்! அத்தனை வாயா உனக்கு? இன்னிக்கு உன்னை வெட்டிப் போட்டுட்டுத்தான் மறுவேல... உன்ன.. உன்ன..."

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..."

"என்ன?"



"இந்த முறை பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்குப் போக எனக்கு சம்மதமில்லே. தலைச்சனுக்குப் போயாச்சு. இந்த முறையும் போகணும்னா வெ... வெக்கமா இருக்கு..."

"செலவுக்குப் பயந்துகிட்டு இப்படிப் பேசுனு உங்கப்பன் சொல்லிக் குடுத்தானா?"

"அவரை ஏன் வீணா இழுக்கறீங்க? நானாத்தான்..."

"ஓ! தானா ஒரு முடிவு எடுக்கற அளவுக்கு திமிர் கூடிப்போச்சா?"

"என் வீட்டுலே இருக்க நா விரும்பறேன்... இதுல திமிர் என்னங்க?"

"இப்படி வக்கிரமா வாதாட யார் சொல்லிக் குடுத்தாங்க... உன் தறுதலை சினேகிதிங்களா?"

"யாரும் எதுவும் சொல்லிக் குடுக்கல, அம்மா வீட்டுக்குப் போக எனக்கு விருப்பம் இல்ல, அவ்ளோதான்... பொண்டாட்டிக்குப் பிரசவம் பாக்க எனக்கு மனசு, வக்கு இல்லேனு சொல்றதை விட்டுட்டு, அடுத்தவங்க தலைய வீணா..."

"எதிர்த்தா பேசற? பேசினா அந்த நாக்கை இழுத்து அறுக்காட்டி நா ஆம்பளை இல்ல... தேவடியா நாயே..."

"ஏய்-ரம்யா செவிட்டுக் கொரங்கே, ... அங்க நின்னுட்டு என்னடி வேடிக்கை பாக்கறே? போய் தண்ணி எடுத்திட்டு வானு சொல்றேன் இல்ல?"

"ஏங்க அந்த சின்னக் குழந்தய இந்த அர்த்தராத்திரிலே வேலை வாங்கறீங்க? இந்தாங்க தண்ணி..."

"நீ போடி உள்ள... சின்னக் குழந்தையாம், குழந்தை! வயசு ஆறு ஆச்சு... தடிமாடாட்டம்... தின்ன சொல்லு, தட்டு தட்டா கொட்டிக்க ரெடி! இன்னும் ராத்திரி படுக்கைல மூத்திரம் பேஞ்சுகிட்டு.. சனியன்.. சனியன்... ஒழுங்கா தண்ணி கொண்டாரத் துப்பில்ல... வாடி இங்க..."

**இ**த்தனை வருஷங்களாக ஊசிஊசியாய், ஆயிரமாயிரம் வார்த்தைகளைக் கொட்டியிருந்தாலும், நாலு பேர் நடுவில் நாயை அடிப்பது போலப் புரட்டிப் புரட்டி எடுத்திருந்தாலும், அத்தனைக்கும் சிகரம் வைக்கும் தினுசில் நெருப்பு கனன்று கொண்டிருந்த சிகரெட்டால் மிரண்டு போயிருந்த சின்னப்பொண்ணைச் சுட்டு, சித்ரவதை பண்ணி...

தெய்வமே.... முருகா... முருகா...

"நீ கோச்சுக்கிட்டாலும் பரவாயில்லை, நந்து, ஐ டோண்ட் கேர்... அம்மா பேச்சைக் கேட்டுக்கிட்டு மோகன் இப்படி உன்னையும் குழந்தையையும் சீர் பத்தலைனு கூட்டிக்காம இருக்கறதை நினைச்சா, எனக்குக் கோவம் பொத்துகிட்டு வருது! பொண்டாட்டி குழந்தையோட பொறுப்பு தன்னுதுன்றதை மறந்து இப்படிக் கூடவா ஒருத்தரால இருக்க முடியும்? மூணு வருஷமா ஒண்ணா வாழற பொண்டாட்டிய, கை நிறைய சம்பாதிக்கறவளை, இத்தனை கேவலமா நடத்தறது எப்படி சாத்தியமாகுது?"

"என்ன? உன் மேல கோச்சுக்கிட்டு மோகன், அக்கா வீட்டுக்குப் போயிட்டாரா! நீ போய் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டாத்தான் வருவாரா? என்ன அக்ரமம்பா இது! செய்யாத ஒரு தப்புக்காக ஒவ்வொரு



முறையும் நீயே தழைஞ்சுபோனா, இதுக்கு ஒரு எல்லையே இல்லாம போயிடும்! சொன்னா கேளுப்பா... மரியாதை குடுத்து மரியாதைய வாங்கணும், செல்ஃப் ரெஸ்பெக்ட் ரொம்ப முக்கியம்! புரிஞ்சு நடந்துக்க, நந்து..."

"ஆண், பெண் உறவுன்றது ரொம்ப உசத்தியான சமாச்சாரம்பா... இதை வெறும் உடம்போட சம்பந்தப் படுத்திப் பேசறது அநியாயம்... அநாகரீகமும்கூட! முதல்ல ஒருத்தரை ஒருத்தர் மதிக்க, மரியாதை, அன்பு குடுக்கக் கத்துக்கணும்."

"கம்பேனியன்ஷிப்-துணை, இது ரொம்ப முக்கியம். பாக்கியெல்லாம், செக்ஸ், பாதுகாப்பு, எல்லாம்-இந்த 'துணை'க்கு அப்பறம்தான்... இதெல்லாம் நினைச்சுப் பாக்காம என் புருஷன், என் புருஷன்னு ஆகாசத்துலேந்து கொம்போட குதிச்ச மாதிரி தலைல வெச்சுகிட்டு, இன்னிக்கு மரியாதை இல்லாம கால்ல மிதிபடறே... நிம்மதியே இல்லாம சதா பயந்து செத்துகிட்டு, தனக்குனு விருப்பு வெறுப்பு இல்லாம அடிமையா வாழ்ந்துகிட்டு... ச்சே... என்ன வாழ்க்கையப்பா இது? என்னக் கேட்டா, சுயமரியாதை இல்லாம இப்படி இருக்கறவங்களைவிட, முடிஞ்சவரைக்கும் முயற்சி பண்ணிட்டு, முடியலைன்னா 'நீயும் வேணாம், உன் உறவும் வேணாம்... என் நிம்மதி, சுயமரியாதை எனக்கு முக்கியம்னு' வெளில வர்றவங்க எவ்வளவோ மேல்னு சொல்வேன்..."

"ரம்யா படுக்கைல மூத்திரம் போறது, இன்னிக்கு திக்கித்திக்கிப் பேசறது எல்லாமே அவ மனசுல எக்கச்சக்கமா பயம் இருக்கறதால்தான்! நிறைய அன்பு,

கரிசனம், கவனிப்போட நடந்துகிட்டா அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம், அப்படி இல்லேன்னா பெரியவளாக ஆக, உள் மனசோட பாதிப்பும் அதிகமாகி, வேற சிக்கல்கள் உண்டாகலாம். உங்க சினேகிதிகிட்ட விவரமா சொல்லுங்கனு டாக்டர் சொன்னார், நந்து... நானும் சொல்லிட்டேன்.. என்ன பண்ணப்போறதா உத்தேசம்? பயந்துபயந்து, துக்கத்தை அடக்கிஅடக்கி வயத்துல ஏற்கனவே அல்சர் வந்து, உடம்பு அரை உடம்பாயிடிச்சு... இன்னும் உனக்கு புத்தி வரலை... ஸாடிஸ்ட் புருஷனை தலைல வெச்சு கூத்தாடினது போதாதா? உன் மனுஷங்களை கறவை மாடா நினைச்சு மோகன் மட்டமா நடத்தறதோட, தனக்கொரு நீதி உனக்கொரு நீதினு அடாவடி செய்ததோ, உன்னை ஒரு மனுஷியா மதிச்சு நடத்தாததோ, ரெண்டாயிரம் ரூபா சம்பாதிக்கறவளுக்கு சுயமா நாலணா எடுத்து செலவு பண்ண உரிமை இல்லாததோ இன்னி வரைக்கும் உன்னை சத்தியமா பாதிக்கல! பாதிச்சிருந்தா இப்படிப் புழுவா மிதிபட சம்மதிக்க மாட்டே... நீதான் தேஞ்சு மண்மேடாயிட்ட -- ஒழி எக்கேடும் கெட்டுப்போ-- ஆனா உங்களுக்குப் பொண்ணாப் பிறந்த காரணத்தால இப்ப ரம்யாவையும் பழிவாங்கறீங்களே, இது ரொம்ப அக்ரமம்ப்பா... முதல்ல ரம்யா, அப்புறம் ராஜாவா? தெரியாமத்தான் கேக்றேன். உங்களுக்கெல்லாம் பிள்ளைக் குட்டி எதுக்குப்பா?"

நீதான் தேஞ்சு மண்மேடாயிட்டே...

முதல்ல ரம்யா, அப்பறம் ராஜாவா?

உங்களுக்கெல்லாம் பிள்ளைக் குட்டி எதுக்குப்பா?



எ...து...க்...கு...ப்...பா?

எட்டு வருஷத்திய பேச்சுக்கள், சம்பவங்களைத் தொடர்ந்து, ஜானா அவ்வப்போதும், சற்று முன்பும், அவளது அவலம் தாளமாட்டாமல் நிஜமான அன்பு, கோபத்துடன் கேட்ட கேள்வியும்- மீண்டும், மீண்டும், மீண்டும் ஒலித்து உடம்பை உதறிப்போட வைக்க-

உணர்ச்சிவசப்படாமல் அழுத்தமாக யோசித்தவள், நாலு மணி சுமாருக்கு ராஜாவைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்த ஆயா 'அம்மா' என்று குரல் கொடுத்ததும், கதவைத் திறக்க எழுந்தபோது ஒரு முடிவிற்கு வந்திருந்தாள்.



## 26

பதட்டம் இல்லை.

ஆயாஸம் இல்லை.

அல்சரின் வலி இல்லை.

கசப்பு இல்லை.

வேதனை இல்லை.

ஒன்றும் இல்லை.

சொல்லவேண்டியது என்ன என்று துல்லியமாகப் புரிந்து போன பிறகு, இத்தனை வாரங்களாக என்ன செய்வேன் என்று சதாசர்வகாலம் ஹா ஹா என்று பதறிய மனசு நிதானப்பட்டுவிட்டது புரிந்தது.

இந்த முடிவை ஏன் முன்பே எடுக்கவில்லை?

இன்றைக்கு இத்தனை தெளிவாக இது வேண்டும், இது வேண்டாம் என்று அடையாளம் கண்டுகொண்டு, ஒரு திடமான தீர்மானத்துக்கு வர முடிந்தது போல, முன்னமே ஏன் செய்யவில்லை?

புரட்டிப் புரட்டி யோசித்தவரைக்கும், பயம்தான் காரணம் என்பது புரிந்தது.

பெண்ணாகிய தன்னால் தனியாக வாழ முடியுமா என்ற பயம்.

பெற்றவர்களும், உற்றவர்களும் என்ன சொல்வார்களோ என்ற பயம்.

ஊர் உலகம் 'புருஷனுக்குச் சரியாக வளைந்து கொடுத்து, குடித்தனம் செய்யத் தெரியாதவள்' என்று ஏசுமே என்கிற பயம்.

பயம்... பயம்... பயம்

இப்போது மட்டும் அந்த பயம் இல்லையா? இருக்கிறது... ஆனால் செய்ய வேண்டிய கடமையின் பளு அந்த பயத்தை விட வலிமை மிக்கதாகப் போய்விட்டது... அவ்வளவே.

ஒரு தராசுத் தட்டில் சுற்றார், உற்றார், சமூகம் என்ன சொல்லுமோ என்கிற பயத்தையும், இன்னொன்றில் கடமை, பொறுப்பையும் வைத்து, சுமை தாளாமல் இரண்டாம் தட்டு தழைந்ததில் இத்தனை காலமாய் என்ன செய்வேன், ஏது செய்வேன் என்று மிரண்டு மருகிய புத்தி இன்று டக்கென்று ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டது.



நீதான் தேஞ்சு மண்மேடாயிட்டே... ஆனா, உங்களுக்குப் பொண்ணா பிறந்த காரணத்தால இப்ப ரம்யாவைப் பழிவாங்கறீங்களே, இது ரொம்ப அக்ரமப்பா... முதல்ல ரம்யா, அப்பறம் ராஜாவா?

இல்லை... ரம்யாவைப் பழிவாங்க விடமாட்டேன். ரம்யா, ராஜா இந்த உலகத்தில் ஜனிக்கக் காரணமானவள் நான். பத்து மாதம் கர்ப்பத்தில் தாங்கி, படாத அவஸ்தைகள் பட்டு, இவர்களைப் பிரசவித்தது வரிசையாய் மோகனின் வக்கிரத்துக்குப் பலி கொடுக்க அல்ல, என் வாழ்க்கை எப்படிப் போனாலும் குழந்தைகளை நல்ல விதமாய் வளர்த்து ஆளாக்க வேண்டியது என் கடமை. மாறுவார், மாறுவார் என்று பொறுத்திருந்தது போதும், குனியக் குனியக் குட்டு வாங்கியது போதும். இனி என் குழந்தைகளின் வளமான எதிர்காலத்தைக் கருதியாவது, நான் என்னை மாற்றிக்கொண்டே ஆகவேண்டும்.

ரம்யா படுக்கையில் மூத்திரம் போறது, இன்னிக்கு திக்கித்திக்கி பேசறது எல்லாமே, அவ மனசுல எக்கச்சக்கமா பயம் இருக்கறதாலதான், நிறைய அன்பு, கரிசனம், கவனிப்போட நடந்துகிட்டா, அந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணலாம். இல்லேன்னா பெரியவளாக ஆக உள் மனசோட பாதிப்பும் அதிகமாகி, வேற சிக்கல்களை உண்டாக்கலாம்... உங்க சினேகிதி கிட்ட விவரமா சொல்லுங்க - னு டாக்டர் சொன்னார்... சொல்லிட்டேன். என்னப் பண்ணப்போறதா உத்தேசம்?

வயசு ஆறு ஆகியும், படுக்கையில், அதட்டினால் நின்ற இடத்திலேயே, இன்னும் மூத்திரம் போகும் ரம்யா

ஆ அம்மா நா... நா... என்று கண்களில் பயம் வெளிச்சம் போட, உதடுகள் நடுங்க பேசும் ரம்யா

ஓ-நோ!

இந்த நிலையை முளையிலேயே கிள்ள வேண் டாமா?

இல்லாவிட்டால் வயசு வந்து பெரியவளானதும் மனோநிலை இன்னும் இன்னும் பாதிக்கப்பட்டு...

கடவுளே!

கற்பனை திடுமென அடிவயிற்றில் முடிச்சுக்களைப் போட, அவசரமாய் எழுந்த நந்தினி பானையிலிருந்து ஜில்லென்று தண்ணீர் எடுத்துக் குடித்தாள்.

வேண்டாம், தேவையில்லாத கற்பனைகளைச் செய்து கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம்.

ஒரு முடிவைத்தான் எடுத்தாகிவிட்டதே? அப் புறமும் இந்தக் கற்பனை, பயம், பதட்டம் எதற்கு?

தெளிந்திருந்த மனம் க்ஷணகாலம் குழம்பி, மீண்டும் தெளிய.

**எ**துவுமே நடக்காத மாதிரி நந்தினி அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகளைச் செய்தாள்.

ஜுரம் விட்டு வியர்த்திருந்த ரம்யாவைத் துடைத்து பவுடர் போட்டாள். சூடாக ஹார்லிக்ஸ், வாட்டின ரொட்டி கொடுத்து சாப்பிடச் செய்து, மீண்டும் படுக்க வைத்தாள்.

பள்ளியிலிருந்து திரும்பிய ராஜாவுக்கு டிபன் கொடுத்து, உடை மாற்றி விளையாட அனுப்பினாள்.



ஆறு மணி அளவில் தானும் முகத்தைக் கழுவி, தலைவாரிக்கொண்டு, ஆயாவிடம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிட்டு எதிர் வீட்டுக்குச் சென்று, அந்த அம்மாள் 'ஒரு நாளைக்கு எத்தினி ட்ரிப் போன் பண்ணுவே' என்று எரிச்சல் பட்டதை லட்சியம் பண்ணாமல், ஜானாவின் வீட்டுக்கு போன் செய்தாள்.

சுற்றிவளைக்காமல் பேசினாள்.

"நீ சொன்னதையெல்லாம் நிதானமா யோசனை பண்ணிப் பாத்தேன், ஜானா... யூ ஆர் ரைட், எதுக்கெடுத் தாலும் குனிஞ்சுகுனிஞ்சு நா மண்மேடாத்தான் ஆயிட்டேன்! போகட்டும். ஆனா நிச்சயம் என் பசங் களை யாரும் பழிவாங்க எடம் குடுக்கப் போறதில்லே... நா ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்... இப்ப நீ வீட்டுலதான் இருப்பியா, இல்லை எங்கயாவது போகத் திட்டம் போட்டிருக்கிங்களா?"

"எங்கயும் போப்போறதில்லே நந்து... நீ இங்க வரலாம்னு இருக்கியா?"

"ஆமா... ஆனா நா மட்டும் இல்லை... என் பசங் களும் தான்..."

ஒரு நொடி ஜானா தயங்கினாள்.

"நல்லா யோசனை பண்ணிட்டுத்தானே இந்த முடிவுக்கு வந்திருக்கே, நந்து?"

"ந...ல்...லா..."

"ஒரு தீர்மானத்தைச் செய்யறதுக்கு முன்னால தெளிவா நல்லது கெட்டதை அலசணும்... செய்தாச் சுன்னா, எதை நினைச்சும் வருத்தப்படக் கூடாது."

"நிச்சயமா வருத்தப்பட மாட்டேன், ஜானா"

"குட்! நீ எடுத்திருக்கற முடிவு ரொம்பச் சரியான துன்னே நா நினைக்கிறேன். எப்ப வரப்போறே?"

"ம்? இன்னும் ஒரு மணி நேரத்துல எனக்கும் குழந்தைகளுக்கும் அவசியமான சில சாமான்களை 'பேக்' பண்ணிகிட்டதும்..."

"ஓகே... நீ ரெடியாகு... ரகுவும் நானும் டாக்ஸி யோட ஏழரைக்கு அங்க வந்து உங்களைக் கூட்டி கிட்டு வறோம்..."

"ம்."

"நந்து..."

"ம்?"

"தைரியமா இரு... எல்லாம் நல்லதுக்குத்தான்..."

நந்தினி எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். 'எட்டிப் பார்க்கட்டுமா, என்று கேட்ட கண்ணீரை, 'உனக்கு இனி இடம் கொடுக்க மாட்டேன்' என்கிற வைராக்கியத்துடன் அடக்கினாள்.

"தைரியமாத்தான் இருக்கேன், ஜானா... சத்தியமா என் மனசுல இப்ப குழப்பம் இல்ல... நீ கவலைப் படாதே..."

ரிஸீவரை வைத்துவிட்டு, எதிர் வீட்டம்மாளின் புருவ தூக்கலைப் பாராட்டாமல் நந்தினி வீட்டுக்கு வந்தாள்.

பெட்டிகளை எடுத்து ஆயாவைத் தூசிதட்டித் தரச் சொன்னாள்.



"எங்கிட்டாவது போகப்போறீங்களாம்மா?" என்று அவள் கேட்டதற்கு பதில் கூறாமல் மிச்ச காரியத்தைக் கவனித்தாள்.

முதலில் துணிமணிகள் - தன்னுடையது, குழந்தை களுடையது...

அப்பா போட்ட நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள்...

குழந்தைக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், ஒரு சில விளையாட்டுச் சாமான்கள்...

ஜானா வீட்டிலேயே ஆயுசுபர்யந்தம் இருக்க முடியாது.

அதனால் சின்னதாகக் குடித்தனம் நடத்த அத்யா வசியமான பாத்திரங்கள்...

இரண்டு அட்டைப் பெட்டிகளில் சொல்பமாகப் பாத்திரங்களை வைத்து நிமிர்ந்த நிமிஷத்தில் தன் னுடைய இந்த முடிவைக் கேட்டால் அம்மா எப்படி கதிகலங்கிப் போவாள் என்ற நினைப்பு எழுந்தது.

சம்மட்டியால் நெற்றிப்பொட்டில் அறைந்த மாதிரி துடித்துத்தான்போவாள், நிச்சயம்.

ஆயிரம் ஆனாலும் மாப்பிள்ளை ஆம்பிளை, நீ பொம்பளை அடங்கித்தான் போகணும், நந்து... புருஷனை விட்டுத் தனியா பிரியற பொம்பளைக்கு சமூகத்துல மதிப்பு கிடையாது, பொண்ணுங்கறவ நாணல் மாதிரி வளைஞ்சு குடுத்தாண்டி வாழ முடியும்! வீட்டுக்கு வீடு வாசப்படி.. அதை நினைவுல வெச்சிக்க! ஒண்ணுமில்லாதத பெரிசுபடுத்தாத...!

கண்களில் நீர் வடிய, பெண்ணாகப் பிறந்தவள் எப்படி தழைந்துபோக வேண்டும், வாயைத் திறக்காமல் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன் புருஷன்தான் என்றெல்லாம் நீளநீளமாய் புத்தி சொல்லுவாள்.

பதறுவாள்.

அழுவாள்...

'என்னங்க... அவளுக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லுங்க' என்று அப்பாவை தன் கட்சியின் சார்பில் பேச வேண்டுவாள்...

அம்மா முந்தின தலைமுறையைச் சார்ந்தவள் ஏற்றமோ, தாழ்வோ, ஒரு பெண் தாலிகட்டியவனை விட்டுப் பிரியக் கூடாது என்பதை வைராக்கியமாக நம்புகிறவள்.

அவளால் என் அவலத்தைப் புரிந்துகொள்ள முடியாது. புரிந்திருந்தால் இத்தனை வருஷங்களாய் ஒரு தரம்கூட இதமாகப் பேசி ஆறுதல் அளிக்காமல் இருந்திருக்கமாட்டாள். சதா 'அடங்கு' என்ற உப தேசத்தைச் செய்திருக்க மாட்டாள்.

எனக்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை, அம்மா; என் குழந்தைகளின் நலனுக்காகவே துணிந் திருக்கிறேன் என்று விளக்கினாலும்கூட, உடனடியாக நிலை புரிந்து அம்மா ஆதரிப்பது சந்தேகம்...

காலப்போக்கில் வேண்டுமானால், நான் எடுத்தத் தீர்மானம் சரியானதுதான் என்று ஒப்புக் கொள்ளலாம்.



அதுவரை அவர்களிடமிருந்து விலகியிருப்பது நல்லதுதான்...

என்னால் யாருக்கும் தொந்தரவு வேண்டாம். நானும் என் குழந்தைகளும் யாருக்கும் பாரமாக இருக்க மாட்டோம்.

சம்பளம் இரண்டாயிரத்து முன்னூறு, பிடித்தம் போக கிட்டத்தட்ட ஆயிரத்து அறுநூறு கைக்கு வருகிறது.

சின்னதாய் ஒரு போர்ஷன் நானூறு ரூபாயில் பார்த்துக்கொண்டால், மிச்சத்தில் இதர செலவுகளைச் சமாளிக்க முடியாதா?

ஏன் முடியாமல்? இப்போதும் மோகன் சம்பா திக்கிறார் என்கிற பேர்தானே ஒழிய, குடும்பம் நடப்பது இவள் சம்பாத்தியத்தில்தானே?

**சொ**ன்னதுபோலவே ஜானாவும் ரகுவும் வந்து விட்டதும், அவர்களைக் கேட்டு நூறு ரூபாய் வாங்கி ஆயாவிடம் கொடுத்தவள், "நாங்க போறோம், ஆயா... இதை வெச்சிக்க.. ஐயா சீக்கிரம் வந்திட்டார்னா 'அம்மா குழந்தைகளை அழைச்சிட்டுப் போயிட்டாங்க'னு சொல்லு, இல்லாட்டி வீட்டப் பூட்டி, சாவிய கீழ்வீட்டுல குடுத்துட்டு நீ போ..." என்று கூறி, 'என்னம்மா... ஏம்மா?' என்று அவள் பதட்டத்துடன் கேட்ட கேள்விகளைக் காதில் வாங்காமல், சாமான்களை ரகு கீழே கொண்டு போக வசதியாய் கூடத்தில் கொணர்ந்து வைத்தாள்.

அத்தனையும் கீழே சென்றதும், ராஜா கையைப் பிடித்துக்கொண்டு ஜானாவும், ரம்யாவை அலாக்காய் தூக்கியபடி ரகுவும் நடக்க...

குனிந்து கைப்பையை எடுத்த நந்தினிக்குள் புது சாய் கேள்வி ஒன்று பின்னியது.

முடிவு எடுத்துவிட்டோம், சரி...

அப்பறம்? இதைத் தொடர்ந்து?

நிமிர்ந்தவளுக்கு தன் கண் முன் மூன்று பாதைகள் நீளுவது புரிந்தது.

சற்றும் எதிர்பாராத விதத்தில் தானும் குழந்தைகளும் வீட்டை விட்டுப் போய்விட்டது ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்து, மோகன் மனம் மாறி, ஒரு நல்ல கணவனாக, தகப்பனாக இருக்க முன்வந்தால், மீண்டும் அவரோடு வாழ முயற்சிக்கலாம்...

ஆனால் மோகனை அறிந்தவரையில், இப்படி நடக்கும் என்று நம்புவது பேராசையே!

அடுத்து-விட்டது சனியன்கள் என்று மோகன் ரோஷத்தோடு ஒதுங்கி, தன் இஷ்டத்துக்கு தனிக்காட்டு ராஜாவாக வாழ நினைக்கலாம்...

அல்லது, பொம்பளைக்கு - இத்தனை திமிரா? உன் கொட்டத்தை அடக்குகிறேன் பார் என்று அடிபட்ட நாகமாய், இவள் ஆபீஸில், ஜானா வீட்டில், புதுசாய் குடித்தனம் போகப் போகும் இடத்தில் வந்து நின்று, கத்தி ஆர்ப்பாட்டம் செய்து, இவள் மானத்தை தலைக்குப்புறக் கவிழ்க்கலாம்...

குழந்தைகளும் இவளும் எந்த நிம்மதியை நாடி வந்தார்களோ அதை ஓட ஓட விரட்டப் பார்க்கலாம்...

ஏதோ ஒன்று நிச்சயம் நடக்கத்தான் போகிறது.



ஆனால்-அது எதுவானாலும் அதை சமாளிப்பேன், எதிர்நோக்குவேன், எனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை இதுதான் என்று ஏற்றுக்கொள்வேன்.

எனக்காக இல்லாவிட்டாலும், என் குழந்தைகளுக்காக... அவர்களின் ஆரோக்கியமான எதிர்காலத்துக்காக...

கடைசியாக வீட்டை ஒரு பார்வை பார்த்துவிட்டு படிகளில் இறங்க ஆரம்பித்தபோது, இத்தனை வருஷங்களாகக் கல்லாய் கனத்த மனசு இன்று தக்கையாய், லேசாய் இருக்கிற மாதிரியே நந்தினிக்குத் தோன்றியது.

முற்றும்



**சிவசங்கரி**

பல்வேறு முகங்களைக் கொண்ட சிவசங்கரி, புதினங்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், குறுநாவல்கள், பயணக்கட்டுரைத் தொடர்கள், வாழ்க்கை வரலாறுகள் ஆகியவற்றின் மூலம் வாசகர்கள் நடுவில் பிரபலமானவர். போதை மருந்தின் தாக்கத்தை மையமாகக் கொண்ட அவரது 'அவன்' என்ற நாவல் பல இந்திய மொழிகளிலும், ஆங்கிலம் மற்றும் உக்ரேனிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் அமைப்பின் '1999 - 2000ம் ஆண்டின் சிறந்த பெண்மணி' என்ற விருதும், மேலும் பல இலக்கியப் பரிசுகளையும் பெற்றுள்ள இவருக்கு மொழியோ, ஊடகங்களின் வேறுபாடோ ஒரு தடையாக நிற்பதில்லை. இவரது 'அம்மா சொன்ன கதைகள்' என்ற குழந்தைகளுக்கான கதைகளைக் கொண்ட புத்தகத்துடன், இவரே அக்கதைகளைச் சொல்லியிருக்கும் ஒலிநாடாவும் இணைந்துள்ளது. போதை மருந்து, குடிநோய், முதியோர் நிலை போன்ற சமூகப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட புதினங்கள் மாநில மற்றும் தேசியத் தொலைக்காட்சிகளில் தொடர்களாக ஒளிபரப்பாகி, அந்தந்த சேனல்களில் முதன்மையிடங்களைப் பெற்றுள்ளன. பல நாவல்கள் தமிழ், கன்னடம் மற்றும் தெலுங்கில் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.

இத்தகைய பின்னணியுடைய சிவசங்கரி, தொலைக்காட்சியிலும் பிரவேசித்துள்ளதில் ஆச்சர்யமேதுமில்லை. பிரபல தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பல வாரங்கள் தொடர்ந்து சமூகப் பிரக்ஞையுடன் 'நேற்று, இன்று, நாளை' என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தியுள்ளார். இதில் பல தலைப்புகளின் முந்தைய, இன்றைய, எதிர்கால நிலைகளை அலசி விவாதித்திருக்கிறார்.

விஷயஞானம் கொண்ட நல்ல பேச்சாளரான இவர், பல பொது நிகழ்ச்சிகளிலும் நிபுணர் குழுக்களிலும் பங்கேற்பவர். குடிநோய், போதை மருந்துப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான 'ராஜாஜி புனர்வாழ்வு மையம்' சென்னை வி.எச்.எஸ். மருத்துவமனையில் துவங்கப்படக் காரணமானவர். 'தனிமனித விழிப்புணர்வு மூலம் சமுதாய மேம்பாடு' என்ற குறிக்கோளைக் கொண்ட 'அக்னி' அறக்கட்டளையின் நிறுவன அறங்காவலர்.